சிவராம கிருஷ்ணன்

வடுவூர்
கே. துரைசாமி ஐயங்கார்
B.A.

சிவராமகிருஷ்ணன்

வடுவூர்
கே. துரைசாமி ஐயங்கார் B.A.

எம்.எஸ்.ராமுலு கம்பெனி
286, எஸ்பிளனேட் — சென்னை-1.

மூன்றாம் பதிப்பு: ஜூலை 1955.
சகல உரிமைகளும் பதிப்பாளருக்கே.

விலை ரூபாய் இரண்டு

ஸ்ரீமகள் அச்சகம். சென்னை-1

பதிப்புரை

நாவலாசிரியர்களிடையே பெரும் புகழ் பெற்றவரும், பல தங்க மெடல்களைப் பரிசுகளாகப் பெற்றவரும், எழுத்துலக மன்னருமாகிய காலஞ்சென்ற வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார் பி. ஏ. அவர்களின் கருத்தோவியங்களில் **"சிவராம கிருஷ்ணன்"** என்ற இந் நாவலும் ஒன்று.

இந்நூல் பல நீதிநெறிகளை அடிப்படையாகக் கொண்டது. உண்டிப் பெட்டிகளிடமும் விபூதிப் பைகளிடமும் மக்கள் செலுத்தும் பக்தியையும், சுவாமி எங்கே? எப்படி இருப்பார்? என்று இயம்பும் குழந்தை உள்ளங்களின் தன்மையையும் சித்தரிக்கும் வடுவூராரின் கற்பனைத் திறனை இதிலும் காணலாம்.

வடுவூரார் தமிழர்களுக்கு அளித்துச் சென்ற **கதைச்செல்வ**ங்களுக்கு புதுவித மூவர்ண முகப்பு அமைத்து, ரசிககோடிகளாகிய உங்களின் ஆதரவை நாடுகின்றோம்.

பதிப்பாளர்கள்.

வடுவூராரின் நாவல்கள்

		ரூ.	அ.
இராஜேந்திரமோகனு	...	2	0
மருங்காபுரி மாயகொலை	...	2	0
முத்துலக்ஷ்மி	...	2	0
நீலலோசனி	...	2	0
சோமசுந்தரம்	...	2	0
நங்கைமடவன்னம்	...	2	0
பச்சைக்காளி	...	2	0
சொக்கன் செட்டி	...	2	0
பூஞ்சோலையம்மாள்	...	2	0
துரைராஜா	...	2	0
சிங்கார சூர்யோதயம்	...	2	0
பூச்சாண்டி எம்மே!	...	2	0
சிவராம கிருஷ்ணன்	...	2	0
பிச்சுமுத்துகோனுன்	...	2	0
பாவாடைச்சாமியார்	...	2	0
நவநீதம்	...	2	0
டாக்டர் சோணசலம்	...	2	0
தங்கம்மாள்	...	2	0
வசந்த கோகிலம்	...	2	0
சமய சஞ்சீவி	...	2	0
கலியாணசுந்தரம்	...	2	0
மாயசுந்தரி	...	2	0

ஸ்ரீமகள் கம்பெனி

சென்னை - மதுரை - கோயம்முத்தூர்

சிவராமகிருஷ்ணன்

1

சந்தனம் கருகினும் தன்மணம் பெருகிடும்

திருமணி என்பது மேற்குச் சமுத்திரக்கரை ஓரத்தில் உள்ள ஒரு சிறிய பட்டினம். மலையாள பாஷை பேசப்படும் நாட்டின் எல்லையும், தமிழ்ப்பாஷை பேசப்படும் நாட்டின் எல்லையும் ஒன்ருய்ச் சேரும் இடத்தில் அவ்வூர் இருந்த தாகையால், அங்கு இரண்டு பாஷைகள் பேசும் ஜனங்களும் சமமாக இருந்தனர். அங்கு சுமார் பதினுயிரம் வீடுகள் இருந்தமையால் ஒரு கிறிஸ்தவப் பாதிரியால் நடத்தப்பட்ட பள்ளிக்கூட மொன்றும், துரைத்தனத்தாரால் நடத்தப்பட்ட பள்ளிக்கூடமொன்றும் இருந்தன. இரண்டு பள்ளிக்கூடங்களிலும் ஏராளமான பிள்ளைகள் படித்து வந்தன ராஞலும், துரைத்தனத்தாரின் பள்ளிக்கூடத்தில் ஹிந்துப் பிள்ளைகளே பெரும்பாலோராயும், பாதிரியின் பள்ளிக்கூடத்தில் கிறிஸ்தவப் பிள்ளைகளே பெரும்பாலோராயும் இருந்தனர்.

ஒருநாள் ஹிந்துக்களின் பள்ளிக்கூடத்தில் நிகழ்ந்த ஒரு சம்சவத்தை நாம் கவனிப்போம். அப்போது காலை பதினெரு மணி சமயம். இரண்டு சாமியார்கள் பள்ளிக்கூடத்திற்குள் நுழைந்தனர். இருவரும் தலையைப் பூர்த்தியாக முண்டனம் செய்துகொண்டு

இடுப்பில் காஷாய வஸ்திர மணிந்திருந்தனர். அவர்களுடைய முகம், தலை, கை, கால், மார்பு முதலிய பாகங்களில் விபூதிப்பூச்சு பளிச்சென்று ஜ்வலித்தது. ஒருவரது கையில் ஓர் உண்டிப் பெட்டி காணப்பட்டது. இன்னொருவர் தமது கையில் ஒரு நோட்டுப் புஸ்தகத்தையும், வெல்வெட்டு விபூதிப் பை ஒன்றையும் வைத்திருந்தார். இவர் மற்றவரைவிட உயரமா யிருந்தார்.

அவர்கள் இருவரும், எதிரில் இருந்த மூன்ருவது வகுப்பை அடைந்து, அங்கிருந்த உபாத்தியாயரை ஆசீர்வதித்தனர். விபூதிப்பைச் சாமியார் பையிலிருந்து ஒரு சிட்டிகை விபூதி எடுத்து, உபாத்தியாயரிடம் கொடுக்க, பின்னவர் அதை வாங்கி நெற்றியில் அணிந்து வாயிலும் போட்டுக் கொண்டார். விபூதி மிக வழுவழுப்பாயும், பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ முதலியவற்றின் மணம் கமழப் பெற்றதாயும் நிரம்பவும் ஜொகுஸா யிருந்தது. விபூதிப்பைச் சாமியார் உபாத்தியாயரிடம் தணிவான குரலில் ஏதோ சில வார்த்தைகள் கூறினர்.

உடனே உபாத்தியாயர் அந்த வகுப்பிலிருந்த மாணவ மாணவிகளைப் பார்த்து, "குழந்தைகளே! இவர்கள் யார் என்பது உங்களுக்குத் தெரியுமா? இவர்கள் பழனியிலுள்ள ஒரு மடத்திலிருந்து வந்திருக்கிருர்கள். அங்கே பழனியாண்டவருக்கு ஒரு பெரிய மண்டபம் கட்டுகிருர்களாம். அதற்கு ஏராளமாகப் பணம் தேவையா யிருக்கிறதாம். அதற்காக இவர்கள் ஊருராய் அலைந்து யாசகம் வாங்கிப் பணம் சேர்க்கிருர்கள். நீங்கள் ஏதாவது தருமம் செய்வதானல் செய்யலாம். உங்களுக்கு நிரம்பவும் புண்ணியம் உண்டாகும்" என்ருர்.

ஒரு பையன்:—ஏன் ஸார், புண்ணியம் என்றால் என்ன ஸார்?

உபாத்தியாயர்:—(சற்றுத் தயங்கிய பிறகு) புண்ணியம் என்றால் என்ன, பாவம் என்றால் என்ன என்பது கூட உனக்குத் தெரியாதா! நீ நல்ல காரியம் செய்தால், கடவுள் அதைக் கவனித்து உன்னை நல்ல நிலைமையில் வைப்பார்; அதைத்தான் புண்ணியம் என்று சொல்லுகிறது; கெட்ட காரியம் செய்தால், அதையும் கடவுள் கவனித்து, அதற்குத் தக்கபடி தண்டனை அளிப்பார். இதைத்தான் பாவம் என்கிறது.

இன்னொரு பையன்:—ஏன் ஸார், நம்மை நல்ல நிலைமையில் வைக்கக் கூடிய கடவுள் தமக்கு ஒரு மண்டபம் கட்டிக்கொள்ள, ஊராரிடமெல்லாம் பிச்சை கேட்கவேண்டிய காரணமென்ன? தம்முடைய சொந்தச் செலவுக்கு அவரிடம் மணமில்லையா ஸார்?

உபாத்தியாயர்:—அவரே நேரில் தம்முடைய உபயோகத்திற்கு மண்டபம் கட்டினால் அவர் நம்மிடம் யாசகம் வாங்கமாட்டார். இந்த அண்ட பகிரண்டமெல்லாம் அவருடைய கோவில்தான். எங்கும் அவர் வாசமாயிருக்கிறார். ஆகையால் அவர் தமக்காக எங்கேயும் கோவிலோ மண்டபமோ கட்டிக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.மனிதராகிய நாம் அவருடைய திவ்ய வடிவத்தை ஓரிடத்தில் வைத்துக் கொண்டாடிப் பூஜிப்பதற்காக, கோவில், மண்டபங்கள் முதலியவை வேண்டியிருக்கின்றன. மனிதர்கள் கோவில் முதலியவைகளை அதற்காகக் கட்டுகிறார்கள், அதற்கு லக்ஷக்கணக்கில் பொருள் தேவையா யிருப்பதால், பலரிடம் யாசகம் வாங்கிக் கட்டுகிறார்கள்.

இன்னொரு பையன்:—நாங்கள் பள்ளிக்கூடத்தில் படிக்கும் சிறுவர்கள்; எங்களிடத்தில் பணம் ஏது ஸார்? நாங்களே ஏதாவது வாக்கித் தின்ன வேண்டுமானால், அம்மாவிடம் அழுதழுது தண்டி காலணா, அல்லது, ஒரு பைசா வாங்க வேண்டி இருக்கிறதே ஸார்.

உபாத்தியாயர்:—இதற்குப் பெரிய தொகையாய்க் கொடுக்க வேண்டுமென்பதில்லை. ஒரு பைசா கொடுத்தால்கூடப் புண்ணியம் உண்டாகும். நாம் ஆழ்ந்து பார்ப்போமானால், உங்களைப்போல் இருக்கும் குழந்தைகள் தின்பண்டங்களுக்காக அரும்பாடுபட்டு வாங்கும் காசை, தின்பண்டம் வாங்காமல் தருமத்திற்குக் கொடுப்பது, ஒரு பணக்காரன் ஆயிரக் கணக்கில் கொடுப்பதைவிடச் சிலாக்கியமானது. ஏனென்றால் சிறியோராகிய நீங்கள் உங்கள் வாயைக் கட்டி மனதை அடக்கிக் கொடுக்கிறீர்களாகையால், அது கடவுளுக்கு நிரம்பவும் உவப்பாயிருக்கும். கடவுள் மிகவும் சந்தோஷமடைவார்.

வேறொரு பையன்:—ஸார் சொல்லுவது நல்ல எத்துதான். சின்னவர்களிட மிருக்கும் காசைப் பிடுங்கிக் கொடுத்துவிட்டு, பெரியவர்கள் சும்மா இருப்பதற்கு இது நல்ல யுக்திதான். அப்படியானால், நீங்கள் பணம் கொடுக்க மாட்டீர்களா ஸார்?

உபாத்தியாயர்:—நான் இதோ கொடுக்கத்தான் போகிறேன்—என்றி கூறியபடி தமது சட்டைப் பையிலிருந்த இரண்டணா பணத்தை எடுத்து உண்டிப் பெட்டியில் போட்டுவிட்டு மாணவ மாணவிகளின் முகத்தைப் பார்த்தபடி சற்றுநேரம் மௌனமாயிருந்தார்.

எந்தப் பையனும் பேசவுமில்லை; தானம் வழங்கவுமில்லை. திருட்டு விழி விழிப்பவரும், பக்கத்தில் முகத்தைத் திருப்பிக் கொள்வோரும், புஸ்தகத்தை மிக ஆவலோடு படிப்போரும், கீழே குனிந்து கொள்வோரும், இருமித் தொண்டையைச் சரிபடுத்திக் கொள்வோருமாய் எல்லோரும் தம்தம் சங்கட நிலைமையை மறைத்துக் கொள்ள முயன்றபடி இருந்தனர். அதற்குமேல் உபாத்தியாயரும் பேசவில்லை.

விபூதிப் பைச் சாமியார் புன்னகை செய்தபடி குழந்தைகளைப் பார்த்து, "இன்று உங்களிடம் காசு இல்லைபோ லிருக்கிறது. நாங்கள் இன்னம் இரண்டு தினங்கள் இந்த ஊரில் இருக்கப் போகிறோம். நாளைக்கும் வருவோம். இன்று நீங்கள் உங்கள் தாய் தகப்பன்மாரிடம் கேட்டு வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். நாளைக்கு நாங்கள் வரும்போது போடலாம்" என்றார். அதற்கும் எவரும் மறுமொழி கொடுக்கவில்லையாதலால், சாமியார்கள் இருவரும் உபாத்தியாயரிடம் செலவு பெற்றுக்கொண்டு அவ்விடத்தை விட்டுப் போய்விட்டனர்.

அப்போது உபாத்தியாயருடைய முகம் ஏமாற்றத்தையும் கோபத்தையும் காட்டியது. அவர் வெறுப்போடு எல்லோரையும் பார்த்து, "வெட்கக் கேடு; வெட்கக் கேடு. ஒருவரிடத்தில்கூட ஒரு பைசா இல்லாமலா வந்திருக்கிறீர்கள்! உங்கள் முகத்தில் விழித்தால்கூடத் தரித்திரம் பிடித்துக் கொள்ளும்போல் இருக்கிறதே!" என்றார்.

ஒரு பையன்:—(விகாரமான முகத்தோடு) என்ன ஸார், படிக்க வரும் நாங்கள் எதற்காக ஸார் காசு

கொண்டு வரப் போகிறோம். கையில் இருந்தால் போட்டிருக்க மாட்டோமா!

உபாத்தியாயர்:—(ஒரு சிறுமியைப் பார்த்து) **காமாட்சி!** நீ வந்து உட்கார்ந்து குனிந்தபோது, உன் சட்டைத் பையிலிருந்து, ஓர் அணா கீழே விழுந்து ஓடியதைப் நான் பார்த்தேனே! அதில் ஒரு பைசாக் கொடுத்திருக்கக் கூடாதா?—என்றார்.

அந்தச் சிறுமியின் வயது சற்றேறக்குறைய எட்டு இருக்கலாம். அதன் முகம் புத்திசாலித் தனத்தையும், அதன் நடைநொடி பாவனைகள் அதிக விநயத்தையும் காட்டுபவைகளா யிருந்தன. உபாத்தியாயர் கூறியதைக் கேட்டவுடன் நிரம்பவும் சஞ்சல மடைந்தவள்போல் காணப்பட்ட அந்தப் பெண், "நான் ஒரு முக்கியமான காரியத்திற்காகத் தினம் ஒரு பைசா வீதம் சேர்த்துக் கொண்டு வருகிறேன் ஸார். அதனால்தான் கொடுக்க வில்லை" என்றாள்.

உபாத்தியாயர்:—(விகாரமான முகத் தோற்றத்தோடு) என்ன முக்கியமான காரியம்?

காமாட்சி:—என் தம்பிக்குச் சட்டை இல்லை. நான் கணை சேர்த்து ஒரு சட்டை தைக்க வேண்டுமென்று தினம் ஒரு பைசாவாய்ச் சேர்க்கிறேன்.

உபாத்தியாயர்:—உன் தம்பிக்குச் சட்டை இல்லாவிட்டால், உன் தகப்பனார் தைத்துக்கொடுக்க மாட்டாரா? நீ ஏன் தைத்துக் கொடுக்க வேண்டும்?

காமாட்சி:—சட்டை வாங்க, என் தகப்பனாரிடம் பணம் இல்லை. அவர் சம்பாதிப்பது எங்களுடைய சாப்பாட்டுக்கே காணுகிறதில்லை.

உபாத்தியாயர்:—(கண் கலக்கத்தோடு) ஹா! அப்படியா! அப்படியானல், உனக்குத் தினம் யார் காசு கொடுக்கிறார்கள்?

காமாட்சி:-ஓர் அம்மாள் கொடுக்கிறார்கள்—என்றாள்.

அப்போது சாமியார்கள் இருவரும் மறுபடியும் அங்கே வந்து சேர்ந்தனர். விபூதிப் பைச் சாமியார் உபாத்தியாயரை நோக்கி, "ஐயா, ஸ்வாமிக்காகச் சேரும் பணத்தில் நாங்கள் எங்கள் சாப்பாட்டிற்குக் கூட எடுப்பதில்லை. எந்தப் புண்ணியாத்மாவாகிலும் ஒரு கவளம் சாதம் கொடுத்தால், அதை வாயில் போட்டுத் தண்ணீர் குடித்துவிட்டு அதோடு ஒரு நாளைய பொழுதைக் கடத்திவிடுவது வழக்கம். எங்களுக்கு இன்றைய சாப்பாட்டிற்குத் தாங்கள் எங்கேயாவது கைகாட்டி விட்டால், தங்களுக்கு நிரம்பவும் புண்ணியம் உண்டு" என்று கூறினர்.

உபாத்தியாயர்:—இருக்கட்டும், சாப்பாட்டைப் பற்றி உங்களுக்குக் கவலைவேண்டாம். என் வீட்டில் ஒருவரும், இன்னோர் உபாத்தியாயர் வீட்டில் இன்னொருவரும் சாப்பிட ஏற்பாடு செய்கிறேன்—என்றார்.

அப்போது காமாட்சி மெல்ல எழுந்து நின்று, "சாமியார் ஐயா" என்றாள்.

அதைக் கேட்டு இரண்டு சாமியார்களும், உபாத்தியாயரும் திடுக்கிட்டு அவளது பக்கம் திரும்பிப் பார்த்தனர்.

உடனே காமாட்சி, "சாமியார் ஐயா, பழனி ஆண்டவருக்கு மண்டபம் கட்ட, நான் உண்டியில் பணம்

போட்டால், அது பழனி ஆண்டவருக்கு எப்படித் தெரியும்?'' என்ருள்.

விபூதிப்பைச் சாமியார்:—ஆண்டவர் நம்முடைய கண்ணுக்குத் தெரியாமல் எங்கும் நிறைந்திருக்கிருர். ஒவ்வொருவரும் செய்யும் காரியமும், நினைக்கும் நினைவும், பேசும் பேச்சும் அவருக்கு உடனே தெரியும்.

காமாட்சி:—நமக்குத் தெரியாமல் எல்லா இடத்திலும் எப்படி இருக்க முடியும்?

வி. சாமியார்:—அதிருக்கட்டும். இப்போது இங்கே காற்று வீசுகிறதே. இதை யார் படைத்த தென்பதை நீ படித்திருக்கிருயா?

காமாட்சி:— படித்திருக்கிறேன். காற்றைக் கடவுள் படைத்தார்.

வி. சாமியார்:— காற்று நம்முடைய கண்ணுக்குத் தெரியாமல் எல்லா இடத்திலும் நிறைந்திருக்கிற தல்லவா? அதைப் படைத்த ஆண்டவர் மனது வைத்தால் காற்றைப் போல் எல்லா இடத்திலும் மறைந்திருக்க முடியு மல்லவா?

காமாட்சி:—சரி; பழனி ஆண்டவர் உங்களோடு பேசுவாரா?

வி. சாமியார்:—நான் எதைப் பற்றியாவது நினைத்தால், அவர் எதன் மூலமாவது குறி காட்டுவார்; இல்லாவிட்டால், யாராவது பேசுவதுபோல் குரல் கேட்கும். நான் கேட்பதற்கு மறுமொழி கிடைக்கும்.

காமாட்சி:—என் தம்பிக்குச் சட்டை தைக்க நான் ஓர் அணு சேர்த்திருக்கிறேன். அதை நான் பழனி ஆண்டவருடைய உண்டியில் போடுகிறேன். என் தகப்ப

ஞர் மகா ஏழை. நீங்கள் பழனி ஆண்டவடருன் பேசி, என் தகப்பனுருக்கு நிறையப் பணம் வரும்படி செய்யச் சொல்லுகிறீர்களா?

வி. சாமியார்:— ஓ! அவசியம் சொல்லுகிறேம். ஆனுல், நீ குழந்தை; பணத்தைப் போட்டுவிட்டு அழு வாயோ என்னவோ?

காமாட்சி:— அழமாட்டேன், நான் ஆசையோடு ஆண்டவருக்குக் கொடுத்துவிட்டு, அதைப்பற்றி அழு தால், அதுவும் அவருக்குத் தெரிந்துவிடுமே. ஆகையால் அழமாட்டேன். இதோ சந்தோஷமாகவே பணத்தைப் போடுகிறேன் — என்று கூறியபடி தன் மடியில் இருந்த ஓர் அணு நாணயத்தை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு, உண்டிப் பெட்டியை வைத்திருந்த சாமியாரண்டை போய், தன் கண்களை மூடிக்கொண்டு, "கடவுளே! பழனி ஆண்டவரே! நீர் எங்கும் நிறைந் திருக்கிறீரே! என் தகப்பனுர் வரும்படி இல்லாமல் கஷ்டப் படுகிறதை நீர் பார்க்கவில்லையா! என் தாயார் பட்டினி கிடப்பது உம்முடைய கண்ணுக்குத் தெரிய வில்லையா! இதோ என்னிடம் இருக்கும் பணத்தை உம்முடைய மண்டபத் திருப்பணிக்குப் போடுகிறேன். இனியாவது என் தகப்பனுர். தாயார் கஷ்டங் களை நீக்கிவிடும் ஸ்வாமீ, ஆண்டவரே. உம்முடைய காலில் ஆயிரம் தரம் கும்பிடுகிறேன்" என்று ஸ்தோத் திரம் செய்து கண்களை விழித்துக்கொண்டு பணத் தைப் பெட்டியில் போட்டுப் பெட்டிக்கும் ஒரு கும்பிடு போட்டாள்.

அந்தப் பெண்ணின் செய்கையையும், சொற்களை யும் கவனித்த உபாத்தியாயர், சாமியார்கள் ஆகியோர்

களுடைய முகமும் கண்களும் கலங்கிப் போயின. அவர்கள் வாய் திறந்து பேசமாட்டாமல், அப்படியே திகைத்து நின்றனர்.

உடனே விபூதிப்பைச் சாமியார், "இந்தப் பெண் வயதில் குழந்தையா யிருந்தாலும் மகா புத்திசாலியா யிருக்கிறாள். பழனியாண்டவர் கிருபை செய்வார்" என்று கூறியபடி தமது பையிலிருந்து ஒரு சிட்டிகை விபூதி எடுத்துக் காமாட்சிக்குக் கொடுக்க, அவள் அதைப் பெற்று நெற்றியில் பூசி, வாயில் போட்டுக் கொண்டு, தன் இடத்திற்குப் போய்ச் சேர்ந்தாள்.

உடனே இரண்டு சாமியார்களும் உபாத்தியாய ரிடம் சொல்லிவிட்டு, அங்கிருந்து வெளிப்பட்டுத் தெரு வோடு சென்றனர். அப்போது அவர்கள் தணிவான குரலில் அடியில் வருமாறு பேசத் துடங்கினர்.

உண்டிப்பெட்டிச் சாமியார்:— இவ்வளவு பளுவான பெட்டியைத் தூக்கித் தூக்கி, கைகள் இற்று விழுந்து விடும்போல் ஆய்விட்டன. பின் கழுத்தெல்லாம் நோவெடுத்துக் கொண்டது. அதுவே கண்ட பலன். இந்த ஊரில் இந்த மூன்று தினங்களில் மொத்தத்தில் எட்டணகூடத் தேறவில்லே. இனி வேறே ஊருக்குப் போவதுதான் நல்லது.

விபூதிப்பை:- என்ன செய்கிறது! நாய்வேஷம்போட் டால் குலேத்துத்தான் தீரவேண்டும். பெட்டியில் பணம் ஏராளமாய் விழுந்திருப்பதாகக் காட்டிக்கொள்ள, கல் துண்டுகளேயும், இரும்புத் துண்டுகளேயும் போட் டோம். பெட்டியின் பளுவைப் பார்க்கிறவர்கள், "இவ் வளவு பணம் சேர்ந்திருக்கையில், நாம் காலணு போடா விட்டால், கெடுதல் வந்துவிடப் போகிறதா" என்று

எண்ணிக்கொண்டு பணம் போடாமல் போய்விடுகிருர் கள்.

உண்டிப்பெட்டி:— நீ செய்த இந்த யுக்தியினல் இந்தப் பெட்டிக்கே அபாயம் வந்துவிடும்போ லிருக் கிறது. நாம் தூங்கும்போது எவனுவது திருடன் இதைத் தூக்கிக்கொண்டு போனுலும் போய்விடுவான்.

விபூதிப்பை:— அப்படியானல், மறைவான இடத் திற்குப் போய்ச் சரக்கை இறக்குமதி செய்துவிடலாம். அதிருக்கட்டும். அதோ தெரிகிறதே வீடு! அதைப் பார்த்தவுடன் எனக்கு ஒரு விஷயம் நினைவிற்கு வரு கிறது. அது மிகவும் ஆச்சரியகரமான விஷயம்.

உண்டிப்பெட்டி:—என்ன ஆச்சரியம் அது!

விபூதிப்பை:— இன்று காலையில் நான் ஆற்றங் கரைக்குப் போய்விட்டுத் திரும்பி வீடுகளின் ஓர மாகவே வந்துகொண் டிருந்தேன். அந்த வீட்டின் காமரா அறையின் ஜன்னலண்டை நான் வந்தபோது, ஜன்னலின் கதவுகளைத் திடீரென்று யாரோ திறந்து விட்டார்கள். நான் கொஞ்சம் பின் வாங்கியதால் தப்பி னேன்; இல்லாவிட்டால், கதவுகள் என் முகத்தில் மோதி, மூக்கு, கண்கள் முதலியவைகளைக் காயப் படுத்தி இருக்கும். நல்ல வேளையாகத் தப்பினேன்.

உண்டிப்பெட்டி:— (புன்சிரிப்போடு) பழனியாண்டவ ருடைய திருத்தொண்டருக்கு அப்படிப்பட்ட அபாயம் நேருவதை எங்கும் நிறைந்துள்ள கடவுள் பார்த்துக் கொண்டிருப்பாரா! அதனுல்தான் நீ தப்பினுய்; இதைத் தான் ஆ, ச்சரியகரமான விஷயம் என்ருயோ?

விபூதிப்பை:—இதை ஆச்சரியமான விஷயம் என்று சொல்லுவேனு! அதுவல்ல. நான் ஜன்னலின் வழியாக என் பார்வையை உள்ளே செலுத்தினேன்! உள்ளே யாரைப் பார்த்திருப்பேன் சொல் பார்க்கலாம்?

உண்டிப்பெட்டி:— அழகான யௌவனக் குமரி எவளாவது நின்று உன்னை உள்ளே அழைத்தாளா?

விபூதிப்பை:—அடே சே அசடே! எல்லாவற்றையும் துறந்து காஷாய வஸ்திரம் கட்டி இருக்கும் என்னைப் பார்த்து எந்தக் குமரி கூப்பிடப் போகிறுள். உன் யூகம் தப்பானது. ஜன்னல் கதவுகளைத் திறந்தவன் உள்ளே நின்றுன். நான் அவனைப் பார்த்தேன். அவன் உன்னைப் போலவே காணப்பட்டான். நீதான் அங்கே வந்து நிற்கிருயோ என்றுகூட நான் சந்தேகித்துவிட்டேன். ஆனுல், உன்னைக் காட்டிலும், அவன் கொஞ்சம் அதிக வயதானவன்போல் இருந்தான். அதுவுமின்றி இடுப்பில் காஷாய வஸ்திரமுமில்லை. அவற்ருல், என் சந்தேகம் விலகியது. அவனேடு நான் இரண்டொரு வார்த்தைகள் பேசிவிட்டு வந்துவிட்டேன்.

உண்டிப்பெட்டி:— ஓகோ! அப்படியா சங்கதி; அப்படியானுல், என் தகப்பனுர் அவனுடைய தாயாருக்கும் புருஷனு யிருக்கலாம்.

விபூதிப்பை:—இன்னெரு மாதிரியாகவும் சொல்லலாமல்லவா? அவனுடைய தகப்பனுர் உன் தாயாருக்கும் புருஷனு யிருக்கவேண்டுமென்று யூகிக்கலாமல்லவா!

உண்டிப்பெட்டி:— அப்படியானுல், நம் இருவருடைய யூகங்களும் தப்பானவை என்றுதான் சொல்ல

வேண்டும். ஏனென்றால் என் தாயாரிடம் அவனுடைய தகப்பனார் எவ்வித சம்பந்தமும் வைத்துக் கொள்வதை நான் விரும்பவில்லை. எங்கள் இருவருக்கும் உள்ள ஒற்றுமை தற்செயலாய் ஏற்பட்டதாய்த்தான் இருக்க வேண்டும்—என்றார்.

அவ்வாறு அவர்கள் இருவரும் சம்பாஷித்துக் கொண்டு அதே வீட்டின் காமரா அறையண்டை போய்ச் சேர்ந்தனர். அப்போது உட்புறத்தில் கூடத்தில் இரண்டு மனிதர்கள் நாற்காலிகளில் உட்கார்ந்து சம்பாஷித்துக்கொண் டிருந்தனர். விபூதிப்பைச் சாமியார், "அதோ பார்; தணிவான நாற்காலியில் உட்கார்ந் திருக்கிறவன் உன்னைப்போல் இருக்கிறான்" என்றார். உண்டிப்பெட்டிச் சாமியார் வியப்போடு அந்த மனிதனைஉற்றுப் பார்த்தபடி ஸ்தம்பித்து நின்றார்.

இங்ஙனம் இவர்களது நிலைமை இப்படி இருக்க, இனி நாம் நம் காமாட்சியைக் கவனிப்போம். சாமியார் புறப்பட்டுச் சென்ற பிறகு உபாத்தியாயர் காமாட்சியின் அருமையான தியாகப் புத்தியைப் பற்றி விஸ்தாரமாகப் பிரசங்கம் செய்வதிலேயே அன்றைய காலைப் பொழுது முழுவதையும் கடத்தி, மற்றவர்களும் வீட்டில் ஒவ்வோரணா வாங்கிக் கொண்டு வரும்படி முடுக்கி விட்டு அனுப்பி வைத்தார்.

பகல் சாப்பாட்டிற்காக காமாட்சி தன் வீட்டிற்கு வந்து சேர்ந்தாள். அவளுடைய வருகையை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்த அவளுடைய தாய், "குழந்தை காமாட்சீ, வீட்டில் அரிசி இல்லை. அதனால் இன்னம் சமையல் ஆகவில்லை. உன்னிடம் இருக்கும் ஓர் அணாவைக் கொடு. அரிசி வாங்கி வந்து இதோ

ஒரு நிமிஷத்தில் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கிறேன். குடித்துவிட்டுப் பள்ளிக்கூடத்திற்குப் போகலாம்" என்ருள்.

காமாட்சி:—(அச்சத்தோடு) என்னிடம் பணம் இல்லையே அம்மா!

தாய்:— என்னிடம் விளையாடுகிருயா! தம்பிக்கு சட்டை தைக்க நீ சேர்ப்பதை நான் எடுத்துக்கொள்வேன் என்று நினைக்காதே .சாயங்காலம் அப்பா பணம் கொண்டு வருவார். உடனே உன் அணாவைக் கொடுத்து விடுகிறேன். எடு, நேரமாகிறது.

காமாட்சி:—நான் பொய் சொல்லவில்லை அம்மா. அதை நான் பழனி ஆண்டவருக்குக் கொடுத்து விட்டேன். என்னிடம் இல்லை. இதோ என் சட்டைப் பையை நீயே பார்த்துக்கொள்.

தாய்:—(கவலையோடு) அடி பைத்தியமே! அணாவை என்னடீ செய்துவிட்டாய்?

காமாட்சி:—அம்மா, அதை நான் வீண் செய்யவில்லை. இரண்டு சாமியார்கள் பள்ளிக்கூடத்துக்கு வந்தார்கள். பழனி ஆண்டவருக்கு மண்டபம் கட்ட அவர்கள் பணம் வசூலிக்கிருர்கள். அதற்கு பணம் தருமம் செய்தால் புண்ணியம் உண்டாகும் என்று உபாத்தியாயர் சொன்னுர், நம் அப்பாவுக்கு ஆண்டவர் அதிகப் பணம் கொடுக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டு நான் பணத்தை உண்டியில் போட்டுவிட்டேன்.

தாய்:—(வியப்போடு) அப்படியா செய்தாய்! நிஜந் தானு?

காமாட்சி:—ஆம்; அம்மா. நான் பொய் சொல்லவில்லை அம்மா. உபாத்தியாயரிடம் வேண்டுமானுல், கேட்டுப்பார் அம்மா.

தாய்:—சரி; பழனி ஆண்டவருக்குத்தானே கொடுத்தாய். நல்ல காரியம்தான் செய்தாய். நீ வீட்டின் கதவை மூடித் தாழிட்டுக்கொண்டு உள்ளேயே இரு. நான் வெளியில் போய்விட்டு ஒரு சண நேரத்தில் திரும்பி வருகிறேன்—என்றாள்.

காமாட்சி அதற்கிணங்க, தாய் உடனே வெளியில் போய்விட்டாள். அவளுக்கு சுமார் 25 வயதே ஆயிருந்தாலும், அவளுடைய கண்கள் குழிவடைந் திருந்தன. உடம்பு மெலிந்துபோ யிருந்தது. புடவை பல இடங்களில் கிழிந்துபோ யிருந்தது. தாலிச்சரட்டைத் தவிர உடம்பில் வேறு நகை எதுவும் காணப்படவில்லை. அவள் நடந்தபோது, குடிகாரன் நடப்பதுபோல், பல இடங்களில் தட்டித் தடுமாறி விழுந்து, மயக்க மடைந்து, கண்களை மூடியபடி சுவர், மரம் முதலியவற்றைப் பிடித்துக்கொண்டு நின்று, மயக்கம் தெளிந்தபின் மேலே சென்றாள்.

சென்றவள், அடுத்த தெருவில் இருந்த ஒரு மாடி வீட்டண்டை போய், அதற்கு எதிரில் இருந்த வீட்டண்டை நின்று, அச்சத்தோடும் சஞ்சலத்தோடும் மாடி வீட்டைச் சிறிது நேரம் பார்த்துக்கொண் டிருந்தபின் திடீரென்று ஏதோ முடிவு செய்துகொண்டு ரஸ்தாவைக் கடந்து, அந்த மாடி வீட்டை யடைந்து தயங்கித் தயங்கி நடைக்குள் ஒரு காலை வைத்தாள். உடனே அவளுடைய மன உறுதி தளர்வடைந்து போயிற்று. ஆகையால் அவள் உடனே வெளியில் போய் எதிர்த்த வீட்டுத் திண்ணையில் சற்று நேரம் சாய்ந்திருக்க, மறுபடி திடீரென்று அவளுக்கு முகத்தெளிவு உண்டாயிற்று. அவள் தன் மனதை திடப் படுத்திக்

கொண்டு, மாடி வீட்டை யடைந்து ஓசை செய்யாத படி நடந்து நடையைக் கடந்து, மிகுந்த திகிலும் சஞ்சலமும் கொண்டவளாய் தாழ்வாரத்திற்குச் சென்ருள். எதிரில் இருந்த கூடத்தில் இரண்டு ஸ்திரீகள் காணப்பட்டனர். ஒருத்தி சுமார் ஐம்பது வயதடைந்தவளாயும், மற்றவள் சுமார் இருபது வயதடைந்தவளாயும் காணப்பட்டனர். இருவரும் ஏராளமான நகைகள், ஜ்வலிப்பான பட்டாடைகள் முதலியவற்றுடன் காணப்பட்டனர். காமாட்சியின் தாய் உள்ளே நுழையவே, அவர்கள் இருவரும் நிமிர்ந்து பார்த்து திடுக்கிட்டு வியப்போடு அவளுடைய முகத்தை உற்று நோக்கினர். காமாட்சியின் தாய், அங்கிருந்த இருவரில் அதிக வயதினளா யிருந்தவளைப் பார்த்துக் கைகளைக் குவித்துத் தலை வணங்கினுள்.

கூடத்தில் இருந்த இருவரும் அவளுடைய அடையாளத்தைத் தெரிந்துகொள்ள மாட்டாமல் மயங்கினவர்கள் போல் காணப்பட்டனர்.

காமாட்சியின் தாய், "என் அடையாளம் உங்களுக்குத் தெரியவில்லையா? என் பெயர் **மங்களம்.** இப்போதாவது நினைவுப் படுத்திக் கொள்ளுங்கள்" என்ருள்.

அதைக் கேட்டவுடன் வயது முதிர்ந்தவள் அருவருப்பாகத் தன் முகத்தைச் சுளித்தபடி கீழே குனிந்துகொண்டாள்.

மங்களம்:— (மேலும் பேசத்தொடங்கி) அம்மா. உங்களுக்கு நினைவுண்டாக வில்லையா, அல்லது, என்னைப் பார்க்க பிடிக்கவில்லையா? எங்கள்மேல் ஏற்பட்ட கோபம் இன்னமும் தணிய வில்லையா? எவ்வளவு

கோப மிருந்தாலும் வீட்டைத் தேடி வந்தவளுக்கு, "எங்கே வந்தாய் நாயே, ஓடு வெளியில்" என்றாவது ஒரு வார்த்தை சொல்லக் கூடாதா? அந்த வசையையே, ஒரு கௌரதையான உபசாரம் என்று நினைத்து நான் சந்தோஷ மடைவேனே. (இன்னொருத்தியை நோக்கி) என்ன **பட்டம்மா,** உனக்குக்கூட எங்களிடம் வர்மமா? நான் உன் அண்ணன் சம்சாரம் என்கிற பாசம் கொஞ் சம்கூட இல்லையா! அம்மாளுக்கு எங்கள் மேல் ஏற்பட் டிருக்கும் கோபம் தணியும்படி நீயாவது ஒரு வார்த்தை சொல்லக்கூடாதா பட்டம்மா! ஆயிரம்தான் தவறு செய்திருந்தாலும், தம் வயிற்றில் பிறந்த பிள்ளையிடம் யாராவது இவ்வளவு கடுமையான குரோதம் பாராட்டு வார்களா?

பட்டம்மாள்:— அண்ணீ, உன் அடையாளமே எனக்குத் தெரியவில்லையே! நீ ஏன் இப்படி அடியோடு உருக்குலைந்து பரதேசி மாதிரி இருக்கிறாய். அண்ணன் இப்போது பணம் சம்பாதிக்கிற தில்லையா? உன்னை சரியானபடி வைத்து சவரக்ஷிக்கிற தில்லையா? நீ இந்த மாதிரி அலங்கோலத்தில் இருக்கிறாயே!

மாமியார்:— (சிடுசிடுத்த முகத்தோடு) பட்டம்மா! என்ன விசாரணை இது! கொழுப்பு சும்மா இருக்க முடியவில்லையா! இவளுடைய குடும்ப க்ஷேமத்தை யெல்லாம் நீ விசாரிக்காதது குறைவா யிருந்ததா? யார் எக்கேடு கெட்டால் உனக்கென்ன? நீ எழுந்து உள்ளே போய், ஏதாவது அலுவல் இருந்தால், அதைக் கவனி.

பட்டம்மாள்:—என்ன அம்மா! உன்னுடைய மரு மகள் இந்த நிலைமையில் இருப்பதைப் பார்க்க, உன்

மனம் இளகவில்லையா! இருந்தாலும், உனக்கு இவ்வளவு குரோதம் ஆகாதம்மா.

மாமியார்:—நீ மகா மருமகளையும், குரோதத்தையும் கண்டவள் தானடீ. மூடடீ வாயை. வரவர, உனக்கு பெரிய தனம் அதிகமாய் விட்டது. நீ சும்மா இரு. (மங்களத்தை முறைத்துப் பார்த்து) எங்கடீ வந்தாய். கந்தைத் துணியைக் கட்டிக்கொண்டு, இப்படித் தெருவில் திண்டாட உனக்கு உடம்பில் சூடு, சுரணை, மானம், வெட்கம் எதுவுமில்லையா? நீ இப்படி வருவதால், எங்களுக்கல்லவா மானக்கேடு. எதற்காக இங்கே வந்தாய்? சங்கதியை ஒரே பேச்சில் சொல். உன்னோடு வீண் கதை பேச எனக்கு நேரமில்லை.

மங்களம்:—உங்கள் விருப்பத்துக்கு விரோதமாய் உங்கள் பிள்ளை பிடிவாதம் பிடித்து என்னைக் கலியாணம் செய்துகொண்டா ரென்பது உண்மையே. ஆனாலும், அதை எவ்வளவு காலந்தான் பாராட்டுகிறது! நான் அயல் வீட்டுப் பெண்; என்மேல் உங்களுக்குப் பிரியம் ஏற்படாவிட்டாலும், உங்கள் வயிற்றில் பிறந்த பிள்ளையைப் பற்றி உங்கள் மனதில் கொஞ்சமாவது பாசம் போராட வில்லையா! நாங்கள் இவ்வளவு கஷ்ட தசையில் இருப்பதை என் அலங்கோலத்தினுல் கண்டும், நீங்கள் கொஞ்சமும் அங்கலாய்ப் பில்லாமல் இப்படிப் பேசுகிறீர்களே! இது எந்த உலகத்தில் அடுக்கும்?

மாமியார்:—(கோபத்தோடு) நீ மகா மனுஷி; என் வீட்டுக் கூடம் வரையில் ஏறி எனக்கு புத்திமதி சொல்ல வந்தாயா! சே, மூடுவாயை. யாசகம் வாங்க வந்த உனக்கு இவ்வளவு வாய்ப் பதற்றமா! அடீ

பட்டு, உள்ளே போய் அரைப்படி அரிசி எடுத்து வந்து இவளிடம் கொடுத்து, வெளியில் கொண்டு போய் விட்டுவிட்டு வா.

மங்களம்:—(பதைபதைத்தவளாய்) அம்மா, மிகவும் நன்று யிருக்கிறது நீங்கள் பேசுவது! என்னைவிட இரண்டு பங்கு வயதான நீங்கள் இப்படிப் பேசுகிறீர்களே! நீங்கள் செய்யும் கொடுமையை இப்போது உணராவிட்டாலும் எப்படியும் ஒரு காலத்தில் உணருவீர்கள். எப்படியாவது நீங்கள் க்ஷேமமா யிருங்கள், நாங்கள் இறந்து போகிறோம். நீங்கள் யாசகம் கொடுப்பதாகச் சொல்லும் அரிசி உங்கள் வீட்டுப் பானையிலேயே இருக்கட்டும். உங்களுக்கு எங்களால், அந்த நஷ்டம்கூட உண்டாக வேண்டாம். பட்டம்மா, நான் வீட்டுக்குப் போகிறேன் தாயே—என்று கூறியபடி கண்ணும் கண்ணீருமாய்த் திரும்பி நடக்க எத்தனித்தாள்.

உடனே மாமியார், "அடீ! மங்களம், என்ன மகா முரைப்பாகப் போகிறாயே! போய் உன் புருஷனிடம் சொல்லி, என் தலையைச் சீவி விடுவாயோ! அடெ! உனக்கு எவ்வளவு கருவம்! பட்டம்மா, போனால் போகிறது. ஒரு படி அரிசி கொடுத்தனுப்பு" என்றாள்.

மங்களம் திரும்பிப் பாராமல் மளமளவென்று நடந்து, அடுத்த நிமிஷம் தெருவை யடைந்து, விசையாக நடந்து, தன் வீட்டை யடைந்து கதவைத் தட்ட, உள்புறத்தில் ஆயத்தமாய்க் காத்திருந்த காமாட்சி உடனே கதவைத் திறந்து விட்டாள். இருவரும் உள்ளே சென்றனர்.

காமாட்சி:— அம்மா, பள்ளிக்கூடத்துக்குப் போக நேரம் ஆய்விட்டதே.

மங்களம்:—கண்ணே! நான் என்ன செய்வேன். வீட்டில் சாதம் இல்லை. சாயங்காலம் அப்பா வந்த பிறகு அரிசி வாங்கித்தான் சமைக்க வேண்டும். காலையில் நீ ஒரு கை பருக்கையும், தண்ணீருமாய்க் குடித்துவிட்டுப் போனாய். உனக்குக் களைப்பா யிருக்கும், நீ இந்த வேளை பள்ளிக்கூடத்துக்குப் போகவேண்டாம். வீட்டிலேயே படுத்துக்கொண்டிரு.

காமாட்சி:—இல்லையம்மா! உபாத்தியாயர் கோபித்துக்கொள்வார். நான் இங்கே உட்கார்ந் திருப்பதற்கு பதில் அங்கேதான் உட்கார்ந் திருக்கிறேனே—என்று கூறியபடி தன் புஸ்தகங்கள், பலகை முதலியவற்றை எடுத்துக்கொண்டு புறப்பட, மங்களம் அதற்கு எவ் வித ஆட்சேபனையும் சொல்லாமையால், காமாட்சி வீதிக்கும் போய்விட்டாள்.

அப்போது வெயில் கடுமையா யிருந்தமையால், காமாட்சி பசியையும், களைப்பையும், வெயிலின் கொடுமையையும் தாங்க மாட்டாமல் மயங்கி மயங்கி வீட்டுத் திண்ணைகளிலும், மர நிழல்களிலும் நின்று நின்று பள்ளிக்கூடத்திற்குப் போய்ச் சேர்ந்தாள்.

காமாட்சி வெளியில் போன பிறகு அதுவரையில் தூங்கிக்கொண் டிருந்த அவளுடைய தம்பியாகிய கைக்குழந்தை விழித்துக்கொண்டு பசியினால் கதறத் தொடங்கவே, மங்களம் அதற்குத் தண்ணீரைக் கொடுத்துத் தட்டிக்கொட்டி அதை ஒரு விதமாய் சமா தானப்படுத்திப் படுக்க வைத்தாள். அவளுக்கும் அடிக் கடி மயக்கத்தினால் கண்கள் இருண்டு போகவே,

அடிக்கடி தண்ணீரைக் குடித்துவிட்டு சோர்ந்து படுத்துக்கொண் டிருந்தாள். மாலை நேரம் வந்தது. காமாட்சி பள்ளிக்கூடத்திலிருந்து தட்டித் தடுமாறி வீட்டிற்கு வந்து சேர்ந்து புஸ்தகங்களை ஒரு பக்கத்தில் வைத்து விட்டு அப்படியே மயங்கி விழுந்து நித்திரையில் ஆழ்ந்து போய்விட்டாள். விளக்கு வைக்கும் நேரம் வந்ததானாலும், எண்ணெய் இல்லாமையால் விளக்கு கொளுத்தப்பட வில்லை. வீடு முழுவதும் இருளடர்ந் திருந்தது. சுமார் ஏழு மணி சமயம் ஆனபோது, அவளுடைய கணவன் **சிவராமகிருஷ்ணன்** வந்து சேர்ந் தான். வீடு இருளடைந்திருந்ததையும், தன் மனைவியும் மக்களும் சோர்ந்து கிடந்ததையும் கண்டு, உடனே கடைக்கு ஓடி அரிசி எண்ணெய் முதலிய சாமான்களை வாங்கிக்கொண்டு ஓட்டோடியும் வந்து, விளக்கேற்ற, மங்களம் உடனே எழுந்து, சமையல் செய்ய ஆரம் பித்தாள்.

அன்றைய பகல் முழுவதும் வேலை செய்து அலுத் துப் போயிருந்த சிவராமகிருஷ்ணன் கால்களை நீட்டிக் கொண்டு கூடத்தில் உட்கார்ந்தபடி, "என்ன மங்களம், இன்றைய தினம் நீங்கள் யாரும் சாப்பிடவே இல் லையா?" என்றான்.

மங்களம்:— குழந்தைகள் இரண்டும் சுத்தப் பட் டினி. எனக்குப் பசி இல்லை.

சிவராம கிருஷ்ணன்:—அடாடா! என்ன பைத்தியக் கார வேலை செய்துவிட்டாய்! நேற்றிரவு என்னுடைய சாப்பாட்டைக் குறைத்து அதில் கொஞ்சம் எடுத்து வைத்திருக்கக் கூடாதா? அடெ கண்டுராவியே! உங்கள் மூவரையும் பார்க்க சகிக்கவில்லையே!

மங்களம்:—என் சாப்பாட்டைக் குறைத்து, கொஞ்சசம் எடுத்து வைத்திருந்தேன். பூனை எப்படியோ சட்டியை உருட்டி எல்லாவற்றையும் தின்றுவிட்டதுபோ லிருக்கிறது. விடியற்காலம் நீங்கள் எழுந்து போய்விட்டீர்களா! பொழுது விடிந்தபின் பார்த்தேன். உடனே எனக்கு பகீரென்று ஆய்விட்டது.

சிவராமகிருஷ்ணன்:—ஐயையோ! **பிச்சைக் கூடையில் சனிபகவான் புகுந்த மாதிரி** ஆய்விட்டதுபோ லிருக்கிறது. அப்படியானல், நம்முடைய தரித்திரக் கொடுமை இன்று குழந்தைகளுக்குக்கூடத் தெரிந்துவிட்டதுபோல் இருக்கிறதே!

மங்களம்:—இவர்களுடைய வேதனையைப் பார்த்து சகிக்காமையால், நான் இன்று உங்கள் தகப்பனருடைய வீட்டிற்குக்கூடப் போனேன். குபேர பட்டணம் கொள்ளை போனலும், நித்திய தரித்திரனுக்கு அடியும் உதையுமே கிடைக்கும் என்பதுபோல் எனக்கு தூஷணையும் அவமானமுமே கிடைத்தன.

சிவராமகிருஷ்ணன்:—அடி அசடே! அங்கே போகவேண்டாமென்று நான் எத்தனையோ தடவைகளில் சொல்லி இருக்கிறேன். அதை தட்டிவிட்டுப் போயிருக்கிருயே! இதுதான் கடைசித் தடவை. இனி நீ அங்கே போனது தெரிந்தால், நான் இந்த வீட்டிற்கும் வர மாட்டேன்; உன் முகத்திலும் விழிக்க மாட்டேன். இது கண்டிப்பாய் உன் நினைவில் இருக்கட்டும். இனி நீ செய்யும் சமையலில் குழந்தைகளுக்கும் உனக்கும் தேவையானதை எடுத்து வைத்துவிடு. மிச்ச மிருந்தால், நான் சாப்பிடுகிறேன். இல்லாவிட்டால், அக்கறை

இல்லை. இனி நீ இல்லை என்று யாரிடத்திலும் எதை யும் கேட்கக் கூடாது.

மங்களம்:— அப்படியே செய்கிறேன். குழந்தை களின் வேதனையைக் காண சகிக்காமல் இன்று போய் விட்டேன். எனக்கு புத்தி வந்துவிட்டது. இனி நான் என் ஜென்மத்திற்கும் வீட்டை விட்டு . எங்கேயும் போக மாட்டேன்—என்றாள்.

அப்போது சமையலும் முடிவடைந்தது. மங்களம் இரண்டு குழந்தைகளையும் எழும்பி, இரண்டு பாத்திரங் களில் சாதத்தைப் பிசைந்து கொண்டுவந்து வைத்து சாப்பிடச் செய்துவிட்டு, சிவராமகிருஷ்ணனை சாப்பாட் டிற்கு அழைக்க, அப்போது யாரோ தெருவில் கத வைத் தட்டி, "சிவராமகிருஷ்ணா, சிவராமகிருஷ்ணா" என்று கூப்பிட்ட ஓசை உண்டாகவே, மங்களம் திடுக் கிட்டு, "யாரோ உங்களைக் கூப்பிடுகிறார்களே! போய்ப் பாருங்கள்" என்றாள்.

உடனே சிவராமகிருஷ்ணன் முன் பக்கம் போய் கதவைத் திறந்து பார்க்க, சுமார் 35 வயது மதிக்கக் கூடியவரான ஒருவர் புன்னகை செய்தபடி நிற்க, அவ ரைக் கண்ட சிவராமகிருஷ்ணன், "அடேடே! **கோபா லனு**! வா அப்பா, வா அப்பா! வா உள்ளே போக லாம்" என்று அன்போடு கூறி உபசரித்து, அந்த மனிதருடைய கையைப் பிடித்து வற்புறுத்தி அழைத் துக்கொண்டு, கதவைத் தாழிட்டுவிட்டு உள்ளே சென்றான். இருவரும் கூடத்தை அடைந்து தரையில் உட்கார்ந்து கொண்டனர்.

சிவராமகிருஷ்ணன்:—கோபாலா! நீ எப்போதும் நாற்காலியில் உட்கார்ந்து பழகினவன். நீ தரையில்

உட்கார்வதைப் பார்க்க, எனக்கு அவமானமா யிருக்கிறது.

கோபாலன்:— அப்படியானல், நாற்காலி இருக்கும் இடத்திற்கு மாத்திரந்தான் நான் போகவேண்டும் என்கிருயா! அது முடியுமா அப்பா! நாற்காலி இல்லாத சிநேகிதர்களும் எனக்கிருக்கையில், நான் அவர்கள் உட்காருமிடத்தில் தானே உட்கார வேண்டும். அதிருக்கட்டும். நீ உன் அடையாளமே தெரியாதபடி சுத்த கிழவன் போல் மாறிவிட்டாயே, என்ன கோலம் இது?

சிவராமகிருஷ்ணன்:— என்னப்பா செய்கிறது, குடும்பக் கவலை மனதை உருக்கிக்கொண்டே இருந்தால், மனிதன் கிழவன் போல் ஆவது ஆச்சரியமா! உன்னுடைய் சாபத்தின் பலனப்பா! நீ என்னை விட்டுப் பிரிந்துபோய் சுமார் 10 வருஷ காலம் ஆயிருக்கும் போல் இருக்கிறது! நீ போனபோது கடைசியாய், நான் உன்னேடு சிநேகனு யிருக்க அருகமற்ற அயோக்கியன் என்று சொல்லி, வயிறெரியப் போனு யல்லவா! அதனுல்தான் நான் இப்படியெல்லாம் கிடந்து தவிக்கிறேன் போலிருக்கிறது. ஆனல், எது எப்படி இருந்தாலும், நீ பழைய சங்கதிகளை யெல்லாம் மறந்து, என் வீடு தேடி வந்தாயே! அதுதான் என் மனம் கொள்ளாத சந்தோஷத்தை உண்டாக்குகிறது. மற்றது எப்படியாவது இருக்கட்டும்.

கோபாலன்:—சிவராமகிருஷ்ணு, பழைய சங்கதிகளை யெல்லாம் ஏன் நினைப்பூட்டுகிருய். அவைகள் வேண்டாம். இப்போது நாம் ஒருவரையொருவர் கண்டு, பிரியம் பாராட்டுகிறேம். இது இப்படியே இருக்கட்டும். அதிருக்கட்டும். உனக்கு எத்தனை குழந்தைகள் பிறந்திருக்கிருர்கள்?

சிவராமகிருஷ்ணன்:— அதோ பார் சாப்பிடுகிருர்களே; ஒரு பெண், ஒரு பையன். உனக்கு எத்தனை குழந்தைகள்?

கோபாலன்:— சரிதான். தோப்பு நிலைக்கவில்லை.. தென்னம் பிள்ளை எத்தனையா! எனக்குக் கலியாணமே ஆகவில்லையே!

சிவராமகிருஷ்ணன்:—அடேடே! ஏனப்பா கலியாணம் இல்லாமல் இருந்துவிட்டாய்! ஒரு பெண்ணைப் பார்த்துக் கட்டிப்போடக் கூடாதா?

கோபாலன்:— எனக்கு இனிமேல் அடுத்த ஜென்மத்தில்தான் கலியாணம், அதிருக்கட்டும். நான் இந்த ஊருக்கு வந்தவுடன் உன்னைப் பற்றித்தான் முதன் முதலில் விசாரித்தேன். உன் குடும்ப விஷயங்களைத் தெரிந்து கொண்டேன். உன்னையும், உன் சம்சாரம் குழந்தைகளையும் பார்க்க வேண்டுமென்ற ஆவல் உண்டாயிற்று. அதனல் உடனே புறப்பட்டு இங்கே வந்தேன்.

சிவராமகிருஷ்ணன்:—சந்தோஷம் அப்பா! நீ பழைய சிநேகிதர்கள் மேல் பட்சம் மாருமல் இருப்பதைக் காண, என் மனம் சந்தோஷத்திளுல் பொங்குகிறது. நேரமாகிறது, எழுந்திரு. கைகால்களை அலம்பிக் கொண்டு சாப்பிடலாம் — என்று கூறியபடி எதிரில் இருந்த செம்பை எடுத்து அவனிடம் நீட்ட அவன் அரை மனதோடு அதைப் பெற்றுக்கொண்டு முற்றத்திற்குச் சென்ருன்.

அப்போது மங்களம் சிவராமகிருஷ்ணனிடம் நெருங்கி வந்து காதில் ஏதோ தணிவாய்க்கூற, உடனே அவன் கோபாலனை நோக்கி, "கோபாலா, வீட்டில்

இலை இல்லையாம்; ஓர் இலை இருந்தது. அதைப் போட்டுக்கொண்டு இப்போதுதான் சாப்பிட்டேன். நான் போய் இலை வாங்கிக் கொண்டு இன்னம் ஒரு நிமிஷத்தில் வருகிறேன்'' என்று கூறியபடி வெளியில் சென்றான்.

அன்றைய தினம் அவன் கொண்டு வந்த பணம் முழுவதையும் செலவிட்டு சாமான்களை வாங்கிவிட்டானகையால், அப்போது அவனிடம் ஒரு பைசாகூட இல்லை. ஆயினும், தான் வழக்கமாய் சாமான்கள் வாங்கும் கடையில் கேட்டு கடனக ஒரு பைசாவுக்கு இலை வாங்கிக்கொண்டு வரலாமென்னும் எண்ணத்துடன் அவன் அந்தக் கடைக்குப் போய் இலை கேட்க, கடையின் சொந்தக்காரன் தேன் ஒழுக ஒழுகப் பேசினாலும், சிவராமகிருஷ்ணனை அதற்குமுன் பார்க்காதவன்போல் நடித்து, "யார் அப்பா நீ! முதலாவது, நான் யாருக்கும் கடனே கொடுப்பதில்லை; இரண்டாவது, நான் இதற்கு முன் உன்னைப் பார்த்ததே இல்லை. மூன்றாவது, ஒரு தம்பிடிக்குக் கடன் கொடுத்துவிட்டு, அதற்காகப் பேரேட்டில் ஒரு பக்கத்தை வீணாக்கவும் நான் விரும்பவில்லை. பக்கத்துக் கடையில் கேட்டுப் பார், அவர்களுக்கு இது ஒரு பொருட்டல்ல; அவர்கள் ஒருவேளை கொடுக்கலாம்'' என்று மிக மரியாதையாக மறுமொழி கொடுத்து அனுப்பி வைத்தான்.

அவ்விடத்தை விட்டு அப்பால் சென்ற சிவராமகிருஷ்ணன் தான் என்ன செய்வது என்பதைப் பற்றி யோசிக்கலானான். தான் எந்த எஜமானனிடம் கூலி வேலை செய்தானே, அவனிடம் சென்று, மறுநாளைய கூலியில் ஒரு காலணா கடன் கேட்டுப் பார்க்கலா

மென்ற எண்ண முண்டாகவே, அவன் ஓட்டமும் நடையுமாய்ச் சென்று, தன் எஜமானனுடைய வீட்டை யடைந்தான். அது ஒரு மாடி வீடு. உள்புறத்தில் பல இடங்களில் விளக்குகள் எரிந்துகொண் டிருந்தன. சிவ ராமகிருஷ்ணன் நடையில் இருந்தபடி, "ஐயா, ஐயா" என்று மிருதுவாக இரண்டு தடவைகள் கூப்பிட்டுப் பார்த்தான். அதற்கு எவ்வித மறுமொழியும் கிடைக்க வில்லை தான் உரக்கக் கூப்பிட்டால், முன் கோடியான தன் எஜமானனுக்குக் கோபம் பிறந்துவிடுமென்ற அச்சம் அவனுடைய மனதில் தோன்றிய தாகையால், அவன் அதற்குமேல் கூப்பிடாமல் தயங்கித் தயங்கித் காலடி ஓசையை அடக்கி மரியாதைக்குப் பழுதில்லாத படி உள்ளே நுழைந்தான்.

அவ்வாறு அவன் திருடனைப்போல் உள்ளே சென்ற போது, பின்பக்கத்தில் வந்த ஒருவர் அவனுடைய முதுகில் வலுவாக ஓர் குத்துக் குத்தவே, அவன் திடுக்கிட்டுத் துள்ளிக் குதித்து சரேலென்று பின் புறம் திரும்பிப் பார்க்க, அவனுடைய எஜமானன் தன் கைகளை முஷ்டி செய்துகொண்டு கோபாவேசத் தோடு அவனைப் பார்த்து, "திருட்டு நாயே! என்ன சாமானை அடித்துக்கொண்டு போவதற்காக இப்படிப் பதுங்கிப் பதுங்கி உள்ளே போகிறாய்? நிஜத்தை ஒப் புக்கொள். இல்லாவிட்டால், அடிக்கிற அடியில் குடல் கும்பியெல்லாம் வெளியில் வந்துவிடும்" என்று அதட் டிக் கூறினான்.

சிவராமகிருஷ்ணன்:—(தனது கோபத்தை அடக்கிக் கொண்டு கண்கலகத்துடன்) எஜமானே! நாளைய கூலியில் ஒரு காலணா கடன் கேட்கலாமென்று வந்

தேன். நடையில் இருந்து கூப்பிட்டுப் பார்த்தேன். அது உங்கள் காதில் விழவில்லைபோ லிருக்கிறது. அதனால் உங்களை நேரில் காணலாமென்று உள்ளே வந்தேன்.

எஜமான்:— (ஆவேசத்தோடு உருட்டி விழித்து) ஒகோ! நல்ல கதை சொல்லுகிறுயே! தென்னை மரத்தில் புல் பிடுங்கப் போன சமாதானம்போல் இருக்கிறதே நீ சொல்வது. கொஞ்ச நேரத்துக்கு முன்னல் நான் உனக்குக் கூலிப் பணம் கொடுத்தனுப்பினேன். இதற்குள் உனக்கு காலணைப் பஞ்சம் உண்டாய் விட்டதோ! நீ சொல்வதை நான் நம்ப முடியாது. நீ இப்பேர்ப்பட்ட அயோக்கியன் என்பது தெரிந்திருந்தால், நான் உன்னை என் வீட்டிலேயே சேர்த்திருக்க மாட்டேன். நாளைய தினம் முதல் உனக்கு இங்கே வேலை இல்லை. போ வெளியில்; மறுபேச்சு வேண்டாம்.

சிவராமகிருஷ்ணன்:— (திடுக்கிட்டு ந டு ந டு ங் கி) ஐயா, நீங்கள் அவசரப்பட்டு என்னைப் பற்றி தப்பான அபிப்பிராயம் கொண்டு, என் முதுகில் அடித்ததுமன்றி வயிற்றிலும் அடிக்கிறீர்கள். நீங்கள் என் உடம்பில் அடிப்பதைப்பற்றி நான் கொஞ்சமும் விசனப்பட மாட்டேன். இன்னம் உங்கள் கைகொண்ட மட்டும் என்னை அடியுங்கள்; எனக்கு புத்தி சொல்லிக் கொடுங்கள். என் வேலையை மாத்திரம் பிடுங்க வேண்டாம். நான் பரம ஏழை. என் மனைவியும், இரண்டு குழந்தைகளும் மகா பரிதாபகரமான நிலைமையி லிருக்கிறுர்கள். எனக்கு இங்கே தொடர்ச்சியாய் வேலை யில்லாவிட்டால், அவர்கள் பட்டினி கிடந்து சாகிறுர்கள். நான் நேற்றிரவு சாப்பிட்டது. இப்போது சாப்பிடப் போன

போது வராத மனிதர் ஒருவர் வந்துவிட்டார். அவருக்கு சாப்பாடு போடவேண்டும்; இலை இல்லை. கடைக்காரனிடம் கடன் கேட்டேன் இல்லை என்று சொல்லிவிட்டான். அதனால் உங்களிடம் காலணா கேட்டு வாங்கிக்கொண்டு போகலாமென்று வந்தேன். இதுவே உண்மை. நீங்கள் கடன் கொடுக்காவிட்டாலும், பரவாயில்லை. என்னை வேலையிலிருந்து மாத்திரம் விலக்க வேண்டாம் பிரபுவே.

எஜமான்:—சபாஷ்! உன் சொல்லே முன்னுக்குப் பின் விரோதமா யிருக்கிறது. இலை யில்லாமல் விருந்தாளி காத்துக்கொண் டிருப்பதாய் முதலில் சொன்னாய் இப்போது இலை இல்லாவிட்டாலும் பரவாயில்லை; வேலை இருக்கட்டும் என்கிறாய். இன்றைக்கு எதிர் பாராத இடையூறு ஏற்பட்டுவிட்டதால், நாளைக்கு சமயம் பார்த்து சொத்துக்களைத் திருடிக்கொண்டு போய் விடலாமென்று உத்தேசிக்கிறாய்போ லிருக்கிறது. எப்போது உன்மேல் எனக்கு சந்தேகம் உண்டாகிவிட்டதோ, இனி நீ என்ன சொன்னாலும் என் சந்தேகம் மாறப்போகிறதில்லை. நீ மரியாதையாய் வெளியில் போய்விடு; இல்லாவிட்டால், உன்னைப் போலீஸாரிடம் ஒப்புவித்துவிடுவேன்—என்றார்.

சிவராமகிருஷ்ணன் உடனே அவருடைய கால்களைப் பிடித்துக்கொண்டு கண்ணீர் விடுத்தபடி கெஞ்சத் தொடங்கினானாலும், கடின இருதய முடையவனான அந்த எஜமானன் சிறிதும் இரக்கமின்றி அவனை பலவந்தமாகப் பிடித்துத் தள்ளி வீதியில் கொண்டு வந்து விட்டுவிட்டு கதவை மூடித் தாழிட்டுக்கொண்டு உள்ளே போய்விட்டான்.

சிவராமகிருஷ்ணன் தான் அப்போது கனவு கண்டதாய் நினைத்தானேயன்றி, அந்த நிகழ்ச்சியை உண்மை என்று நம்பவில்லை. ஆயினும், தன் வீட்டில் கோபாலன் சாப்பாட்டிற்காகக் காத்திருப்பானே என்ற நினைவினால் தூண்டப்பட்டவனாய் அவன் அருகில் இருந்த ஒரு வாழைத் தோட்டத்தை நோக்கி நடந்து, இரண்டு நிமிஷங்களில் தோட்டத்தை யடைந்து, தோட்டங்காரனைக் கண்டு தனக்கு அவசரமாய் ஓர் இலை தேவை யென்று கூறினான்.

தோட்டக்காரன்:—ஓர் இலை அரையணா. எடு காசை.

சிவராமகிருஷ்ணன்:— ஒருவர் சாப்பிடக்கூடிய ஓர் ஏடு எனக்குப் போதுமானது. அதற்கு உள்ள கிரயத்தை நாளைய தினம் சாயங்காலம் கொண்டுவந்து தருகிறேன்.

தோட்டக்காரன்:—அப்படியானால், இலையையும், நாளையதினம் சாயங்காலமே வாங்கிக்கொண்டு போகலாமே. இப்போது இருட்டு வேளை. தோட்டத்தில் பாம்பு, தேள் இருக்கும். நான் உள்ளே போகமுடியாது. போய் நாளைக்கு வெளிச்சத்தோடு வா; வரும்போது காசை எடுத்துக்கொண்டு வா.

சிவராமகிருஷ்ணன்:—ஐயா! வீட்டில், வராத விருந்தாளி யொருவர் வந்து சாப்பிடக் காத்திருக்கிறார். இன்றைக்கு சோதனையாய் என் கையில் ஒரு பைசாகூட இல்லை. உன் வீட்டிற்கு ஒரு விருந்தாளி வந்ததாக நினைத்துக் கொண்டாவது ஒரு கையகலம் இலை கொடப்பா.

தோட்டக்காரன்:—ஒரு கையகலம் இலைதான் இப்போது ஒரு பைசாவுக்கு விற்கிறது. போனால் போகி

றது. உன்னை நம்பி கடனாய் ஒரு பைசாவுக்கு இலை கொடுக்கிறேன். நாளைக்கு சாயங்காலம் மறந்து போகாமல் பைசாவைக் கொண்டுவந்து கொடுத்துவிடு.

சிவராமகிருஷ்ணன்:— அவசியம் கொண்டு வந்து கொடுக்கிறேன்—என்றான். உடனே தோட்டக்காரன் ஒரு முழ நீளமுள்ள ஓர் ஏட்டை அறுத்து சிவராம கிருஷ்ணனிடம் கொடுக்க, அவன் அதை வாங்கிக் கொண்டு ஒரே ஓட்டமாய் ஓடி வீட்டிற்கு வந்துசேர்ந்தான்.

உடனே இலை போடப்பட்டது. சிவராமகிருஷ்ணன் தன் சாப்பாடு ஏற்கனவே முடிந்துவிட்டதென்று மறுபடியும் சொல்லி, கோபாலனை உட்கார வைத்து, தன்னுடைய சாப்பாட்டை அவன் உண்ணும்படி செய்து, அவனுடன் சிறிது நேரம் சம்பாஷித்து அவனுக்கு பாய் தலையணை முதலியவை கொடுத்து நடைத் திண்ணையில் படுக்கச் செய்துவிட்டுத் தான் கூடத்தில் படுத்துக் கொண்டான்.

சிறிது நேரத்திற்குப் பிறகு மங்களம் அவனிடம் வந்து, "எழுந்து சாப்பிட வாருங்கள். அவருக்கெதிரில் நீங்கள் பொய் சொன்னதை நான் மறுக்கக்கூடாதென்று பேசாமல் இருந்தேன். உங்களுக்கு சாதம் காணாதென்கிற எண்ணம்போல் இருக்கிறது. உங்களுக்கும் காணும்; நாளைய மாலைவரையில், குழந்தைகளுக்கும் நமக்கும் காணும். எழுந்து வாருங்கள்" என்றாள்.

சிவராமகிருஷ்ணன்:—உண்மையில் எனக்குப் பசியே இல்லை. கோபாலனிடம் அப்படிச் சொன்னால் அவன் நம்பமாட்டான். அதனால் நான் சாப்பிட்டுவிட்டதாகச்

சொன்னேன். நீ போய் சாப்பிட்டுவிட்டுப் படுத்துக் கொள்.

மங்களம்:—நீங்கள் நேற்றிரவில் சாப்பிட்டது. இன்று முழுவதும் பட்டினி. பசியே இல்லையென்றால், அதை நான் நம்புவேனா! எழுந்து வாருங்கள். கொஞ்சமாயாவது சாப்பிடுங்கள். நாளையதினம் வேலைக்குப் போகவேண்டாமா?

சிவராமகிருஷ்ணன்:—எனக்கு உத்தியோகம் இருந்தாலல்லவா நாளைய தினத்தைப் பற்றிய கவலை.

மங்களம்:—ஐயோ! இதென்ன பேரிடியா யிருக்கிறதே! நீங்கள் இதுவரையில் செய்துவந்த வேலை என்ன ஆயிற்று?—என்றாள்.

உடனே சிவராமகிருஷ்ணன் தான் இலக்காகப் போனபோது நிகழ்ந்த விஷயங்களைக் கூறினான். அதைக் கேட்ட மங்களம் பதறிப்போய், "அடே பாவமே! காலணா கடன் வாங்கப் போய் அடிகளும், திருட்டுப் பட்டமும் பெற வேண்டுமா! ஐயோ, கொடுமையே! ஆகா! என் உயிர் துடிக்கிறதே! போதாக் குறைக்கு நீங்கள் பட்டினியும் கிடக்க வேண்டுமா! வேலை போனால் போகிறது. நான் நான்கு வீடுகளில் பெருக்கி சம்பாதித்துக்கொண்டு வருகிறேன். உங்களுக்கு வேலையைப் பற்றிய கவலை வேண்டாம். எழுந்து வாருங்கள். நீங்கள் சாப்பிடாவிட்டால், நானும் சாப்பிடப் போகிறதில்லை—என்று கூறி அவனைப் பிடித்து பலவந்தமாய்த் தூக்க, அவன் அதற்குமேல் ஆட்சேபனை சொல்லாமல் எழுந்து உள்ளே போய் உட்கார்ந்து கொண்டான். மங்களம் தனக்காக வைத்திருந்த சாதம் முதலியவற்றை யெல்லால் அவனுக்குப் பரிமாறி,

அவனுடைய சாப்பாட்டை முடித்து வெளியில் அனுப்பிவிட்டு, பாத்திரங்களில் ஒட்டிக்கொண்டிருந்த பருக்கைகளைத் தண்ணீர் விட்டுக் கழுவித் தான் குடித்துவிட்டுப் படுத்துக்கொண்டாள்.

சிவராமகிருஷ்ணன் மெல்ல நடைக்குச் சென்று, கோபாலன் தூங்கிவிட்டானா விழித்துக்கொண்டிருந்தானா என்பதை அறியும் பொருட்டு ஒருதரம் மெதுவாகக் கனைத்துக் கொண்டான். உடனே கோபாலன் சரேலென்று எழுந்து உட்கார்ந்துகொண்டு, "என்னப்பா சிவராமகிருஷ்ணா, இப்போதுதான் சாப்பிட்டாய்போல் இருக்கிறது. படுக்கவில்லையா?" என்று **வாழைப் பழத்தில் ஊசியை நுழைப்பதுபோல்** வினவினான்.

சிவராமகிருஷ்ணன்:— ஆமப்பா! என் சம்சாரம் பெரிய உபத்திரவக்காரி; அவளுடைய தொல்லைக்காக கொஞ்சம் சாப்பிட்டேன். உண்மையில் எனக்குப் பசியே இல்லை. அதை உன்னிடம் சொன்னால், நீ தப்பாக நினைத்துக் கொள்வாயென்று நினைத்து, சாப்பிட்டுவிட்டதாகச் சொன்னேன். அவ்வளவே உண்மை.

கோபாலன்:—நீ எனக்கு எதற்காகச் சமாதானம் சொல்லுகிறாய்! வீட்டிற்கு வீடு மண்ணடுப்புதான் என்பது எனக்குத் தெரியாதா? குடும்பம் என்றால் எத்தனையோ அசௌகரியங்கள் இருப்பது சகஜந்தான். அதில் திடீரென்று இரவில் விருந்தாளி வந்துவிட்டால், அந்த நிலைமையைச் சமாளிப்பது பிரயாசைதான். பகலெல்லாம் எங்கேயோ வேலை செய்து அலுத்துவந்த நீ எனக்காகாவெளியில் ஓடி இலை தேடி பிரியத்தோடு விருந்து நடத்தினாய். உன் பிரியத்திற்கும், பிரயாசைக்

கும் என் நன்றியறிதலை எப்படிக் காட்டப் போகிறேன் என்பது தெரியவில்லை. சரி; கதவைப் போட்டுக்கொள். நான் வெளியில் போய்விட்டு, கால் நாழிகையில் திரும்பி வருகிறேன்—என்று கூறியபடி எழுந்து கதவைத் திறந்துகொண்டு வெளியில் சென்றான். சிவராமகிருஷ்ணன் கதவை மூடித் தாழிட்டுக் கொண்டான்.

மங்களமும், சிவராமகிருஷ்ணனும் பேசிக் கொண்டிருந்த செய்திகள் யாவும் கோபாலனுடைய செவிகளில் நன்றாகப் பட்டுவிட்டன வாதலால், அவனுடைய மனம் பதறியது. இலக்காகச் சென்ற இடத்தில் சிவராமகிருஷ்ணன் அடியும், திருட்டுப் பட்டமும், பெற்று வேலையை இழந்து வந்ததான செய்தியே கோபாலனுடைய இருதயத்தைப் பிளந்தது. அதுவன்றி சிவராமகிருஷ்ணன் வீட்டில் போதுமான அளவிற்கு ஆகாரம் இல்லாமையாலேயே தனக்குப் பசி இல்லை என்று சொன்னான் என்பதும், மங்களம் தனது சாப்பாட்டையே தன் புருஷனுக்குப் பரிமாறி இருக்க வேண்டுமென்பதும் அவனுக்கு எளிதில் விளங்கின. ஆகவே, தான் உடனே ஓட்டலுக்குச் சென்று, சாப்பாடு கொண்டு வந்து அவர்களுக்குக் கொடுக்கச் செய்ய வேண்டுமென்ற தீர்மானத்துடன் அவன் வெளியில் சென்றானதலால், ஓட்டல் எந்த இடத்தில் இருந்ததென்பதை விசாரித்துத் தெரிந்துகொண்டு, அடுத்த தெருவை நோக்கிச் சென்றான். அப்போது வழியில் இருந்த ஒரு வீட்டின் முன்புறத்தில் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்த ஆறு பட்டை லாந்தரின் வெளிச்சத்தில் இரண்டு மனிதர்கள் திண்ணையில் உட்கார்ந்து சம்பாஷித்துக்கொண்டிருந்ததைக் கோபாலன் கண்டான். அவன் வந்ததை அந்த வீட்டின் சொந்தக்

காரரும் பார்த்துவிட்டா ராதலால், அவர் ஆவலோடு, "கோபாலா, வந்ததும் வராததுமாய் எங்கே போய் விட்டாய்! நீ சாப்பாட்டுக்கு இங்கே வருவாயென்று நான் எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறேனே!" என்றார்.

கோபாலன்:—நான் என் சிநேகிதன் ஒருவனைப் பார்க்கப் போனேன். அங்கே சாப்பிடும்படி அவன் உபசாரம் செய்தான். நான் சாப்பிட்டுவிட்டேன். நீங்கள் எனக்காகக் காத்திருக்க வேண்டாம். ஓர் அவசர காரியமாய் நான் ஓரிடத்திற்குப் போக வேண்டும். போய் வருகிறேன்—என்று கூறியபடி தெருவோடு போய்விட்டான்.

கோபாலனோடு பேசியவர் தமக் கெதிரில் உட்கார்ந்திருந்த மற்றவரை நோக்கி, "இவர்தான் என் மூத்த சம்சாரத்தின் உடன்பிறந்தான். அநேக வருஷ காலமாய் வெளியூரில் இருந்தான். என் மகளை இவனுக்குக் கட்டிக்கொடுக்க வேண்டு மென்னும் எண்ணத்தோடு, இங்கே வரும்படி இவனுக்குப் பல கடிதங்கள் எழுதினேன். இன்றுதான் வந்தான்" என்றார்.

மற்றவர்:—அடாடா! எனக்குப் போட்டியாக ஒருவர் வந்துவிட்டார்போ லிருக்கிறதே! உங்கள் மகளை எனக்கு விவாகம் செய்துதர வேண்டுமென்று நான் கேட்டபோது, நீங்கள் இந்தச் சங்கதியைச் சொல்லவில்லையே!

வீட்டுக்காரர்:— நான் எழுதின கடிதங்களுக்கு இவன் மறுமொழியே எழுதவில்லை. அதனால், இவன் வரமாட்டான் என்று எண்ணிக்கொண் டிருந்தேன்.

மற்றவர்:—அது எப்படி இருந்தாலும் இருக்கட்டும். எனக்குப் பெண்ணைக் கொடுக்க சம்மதித்தவர்

கள் போல் நீங்கள் பேசி, என் மனதில் நம்பிக்கையை உண்டாக்கி விட்டீர்கள். இனி மாறக் கூடாது. பெண் எனக்கு வாழ்க்கைப் படுவதில் உங்களுக்கும் பெண் ணுக்கும் பல அநுகூலங்கள் உண்டாகும். எல்லா வற்றையும் ஆற அமர யோசித்து ஒரு முடிவிற்கு வரு வீர்கள் என்று நினைக்கிறேன்—என்றார்.

இவ்வாறு இவர்கள் சம்பாஷித்துக்கொண் டிருக்க, கோபாலன் அடுத்த தெருவை யடைந்து, அங்கிருந்த ஒட்டலில் ஒரு சாப்பாட்டிற்குப் பணம் கொடுத்து, அதை ஒரு பையன் பாத்திரங்களில் எடுத்துக்கொண்டு வரும்படி செய்து, அவனுடன் சிவராமகிருஷ்ண னுடைய வீட்டிற்கு வந்து கதவைத் தட்ட, நடைத் திண்ணையில் இருந்த சிவராமகிருஷ்ணன் கதவைத் திறந்துவிட்டான்.

திறந்து விட்டவன், சாப்பாடு உள்ள பாத்திர அடுக்கோடு ஒரு பையனும் வந்து நின்றதைக் கண்டு, "யாருக்குச் சாப்பாடு வந்திருக்கிறது?" என்று வியப் போடு வினவினன்.

கோபாலன்:— சிவராமகிருஷ்ணு! உன் சம்சாரம் இன்னம் சாப்பிடவில்லை. இதைக் கொண்டுபோய் உள்ளே வைத்துக்கொண்டு அடுக்கைக் கொண்டு வந்து கொடு.

சிவராமகிருஷ்ணன்:— (ஆச்சரியத்தோடு) என்ன கோபாலா! இதற்காகவா வெளியில் போனுய்? என் சம்சாரம் சாப்பிட்டாய் விட்டதே! என்ன வேடிக்கை இது!

கோபாலன்:—இல்லையப்பா உன் சம்சாரம் சாப் பிடவே இல்லை. அது உனக்குத் தெரியாது. நான்

பணம் கொடுத்து வரவழைத்து விட்டேன். இனித் திருப்பி அனுப்புவது சாத்தியமானதல்ல. இதை வாங்கிக்கொண்டு போய் மங்களத்தினிடம் கொடு — என்றான்.

சிவராமகிருஷ்ணன் அதை மீற மாட்டாமல், அடுக்கைப் பெற்றுக்கொண்டு போய்த் தன் மனைவியை எழுப்பி, அவளிடம் கொடுத்துச் சங்கதிகளைச் சொல்ல, அவள் மிகுந்த கிலேச மடைந்தா ளானாலும், அரை மனதோடு அதைப் பெற்றுக்கொண்டு போய் வீட்டிலிருந்த பாத்திரங்களில் வைத்துக்கொண்டு அடுக்கை அலம்பி சுத்தப்படுத்தி கொணர்ந்து கொடுக்க, ஒட்டல் பையன் அதைப் பெற்றுக்கொண்டு போய்விட்டான். கோபாலனும், தான் மறு நாளைய காலையில் வருவதாய்ச் சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

ஒட்டலில் இருந்து வந்த சாப்பாடு இரண்டு பெரிய ஆட்களுக்குக் காணத் தக்கதா யிருந்த தாகையால், மங்களம் மறுபடியும் சிவராமகிருஷ்ணனை சாப்பிடும்படி உபசரிக்க, அவன் தனக்கு வேண்டாமென்று மறுத்து, அவள் சாப்பிட வேண்டுமென்று வற்புறுத்த, அவள் தன் குழந்தைகள் இரண்டையும் எழுப்பி, அவைகளுக்கு காய், கறி, அப்பளம் முதலியவற்றோடு, குழம்பு முதலியவற்றால் பிசையப்பட்ட சாதத்தைக் கொடுத்து திருப்திகரமாய் உண்பித்துப் படுக்க வைத்துவிட்டு, தானும் தன் சாப்பாட்டை முடித்துக் கொண்டு சிவராமகிருஷ்ணனிடம் வந்து உட்கார்ந்து கொண்டு, அவனுடைய கால்கள் முழுதையும் தடவிக் கொடுத்து வருடிவிட்டபடி, மறுநாள் முதல் தாங்கள் ஜீவனத்திற்கு என்ன செய்வது என்பதைப் பற்றிப் பிரஸ்தாபிக்கத் தொடங்கினாள்.

மங்களம்:— கையில் இருக்கும் சாப்பாடு நாளை முழுதிற்கும் நம் எல்லோருக்கும் காணும். நான் நாளைய தினம் முதல் எங்கேயாவது வீட்டு வேலைக்குப் போகலாமென்று நினைக்கிறேன்.

சிவராமகிருஷ்ணன்:— நான் உயிருடன் இருக்கும் வரையில் உன்னை நான் அந்த நிலைமைக்கு விடமாட்டேன். என் வேலையைப் பற்றியாவது சம்பாத்தியத்தைப் பற்றியாவது நீ கவலைப்பட வேண்டாம். அது என்னைச் சேர்ந்த பொறுப்பல்லவா! எப்படியாவது நான் பணம் சம்பாதித்து வந்து உங்களை சவரக்ஷிக்கிறேன். அதிருக்கட்டும். இந்தக் கோபாலன் நாம் பேசிக்கொண்டதை யெல்லாம் கேட்டு விட்டான் என்பது நிச்சயமாய்த் தெரிகிறது. நாம் நாளைய தினம் இவனைச் சாப்பாட்டிற்குக் கூப்பிடாமல் இருப்பது சரியல்ல.

மங்களம்:— நம்முடைய நிலைமையை அறிந்து கொண்டவர் இனி நீங்கள் எவ்வளவுதான் கூப்பிட்டாலும், இங்கே சாப்பாட்டிற்கு வரப்போகிறாரா?

சிவராமகிருஷ்ணன்:— சரி; நடக்க நடக்கப் பார்த்துக் கொள்ளுவோம். நேரமாகிறது. தூங்கலாம்—என்றான்.

அவ்வளவோடு அவர்களுடைய சம்பாஷணை ஓய்ந்தது. இருவரும் படுத்துத் தூங்கினர். பொழுது விடிந்தது. இருவரும் ஏக்கத்தோடு சோர்வாக எழுந்தனர். தங்களுடைய காலக்ஷேபத்தைப் பற்றிய கவலையைக் காட்டிலும். கோபாலன் வந்துவிட்டால் அவனுக்கு உபசார வார்த்தை கூறி விருந்து நடத்த வேண்டுமே என்னும் கவலையே அவர்களுடைய மனதைப் புண்

படுத்தியபடி இருந்தது. குழந்தைகள் இரண்டும், வழக்கத்திற்கு மாருய் அன்று அதிக முகத்தெளிவோடும், உற்சாகத்தோடும், சந்தோஷத்தோடும் எழுந்தனர்.

அப்போது கோபாலன் அங்கே வந்து சேர்ந்தான். அவனுடைய கையில் ஒரு பெரிய பொட்டலமும், ஒரு கூஜா நிறைய காப்பியும் இருந்தன. அவன் சிவராம கிருஷ்ணனைப் பார்த்து, "நான் ஓட்டலில் காப்பி முதலியவை சாப்பிட்டேன்; உங்களுடைய நினைவு உண்டாயிற்று. நீங்கள் சிரம தசையில் இருக்கிறீர்களாகையால், இங்கே நிலைமை எப்படி இருக்குமோ என்று நினைத்து, உங்களுக்கும் கொஞ்சம் பலகாரம் வாங்கி வந்தேன். கொண்டுபோய் எல்லாருக்கும் கொடுத்து நீயும் சாப்பிடு" என்று கூறி எல்லாவற்றையும் கூடத்தில் வைத்தான்.

சிவராமகிருஷ்ணன் மிகுந்த சஞ்சல மடைந்தவனாய்த் தன் மனைவியின் முகத்தைப் பார்க்க, அவள், "வீட்டிற்கு வரும் விருந்தாளிக்கு நாம் விருந்து நடத்த வேண்டியதற்கு மாருக, விருந்தாளிகள் நமக்கு விருந்து நடத்துகிற மாதிரி இருக்கிறதே! இது உலகத்திலேயே இல்லாத வேடிக்கையா யிருக்கிறதே!" என்ருள்.

உடனே கோபாலன், "மங்களம், அப்படி யெல்லாம் வித்தியாசமாய் நினைக்காதே! குழந்தைகள் இருக்கும் இடத்திற்கு விருந்தாளிகள் வெறுங் கையோடு வருவதுண்டா! என் கையில் கிடைக்கும் வஸ்துவை நான் கொண்டுவந்து கொடுத்தால், உங்களால் கடைமைப் பட்டதை நீங்களும் எனக்குச் செய்யுங்கள். நான் சந்தோஷமாய்ப் பெற்றுக்கொள்ளுகிறேன். எடுத்துக் கொண்டுபோய் எல்லோரும் சாப்பிடுங்கள்" என்று அன்பாக வற்புறுத்திக் கூறினன்.

உடனே சிவராமகிருஷ்ணன், "கோபாலன் நம்முடைய ஏழ்மை நிலைமையைக் கண்டு, நம்மைப் பரிகாசம் செய்கிறான்போல் இருக்கிறது. சிநேகிதன் பரிகாசம் செய்தாலும், அதுவும் நமக்கு உவப்பானதுதான். சரி, எடுத்துக்கொண்டு போ" என்றான்.

உடனே மங்களம் அரை மனதோடு வந்து, பொட்டலம், காப்பி முதலியவற்றை எடுத்துக்கொண்டுபோய் உள்ளே வைக்க, சிவராமகிருஷ்ணன் குழந்தைகளுடன் உள்ளே சென்றான். அவர்கள் நால்வருக்கும் வயிறு நிரம்பியது. குழந்தைகள் இரண்டும் துள்ளி விளையாடிக்கொண்டு கூடத்திற்கு ஓடி வர, அங்கே இருந்த கோபாலன் ஆசையோடு அவர்களை அழைத்து வைத்துக் கொண்டு விளையாடி அவர்களுடன் கொஞ்சிக் குலாவத் தொடங்கவே, இரண்டு குழந்தைகளும் அவனோடு வித்தியாசமின்றிப் பழகி சந்தோஷமா யிருக்க ஆரம்பித்தனர்.

அப்போது கோபாலன் திடீரென்று எதையோ நினைத்துக்கொண்டு, "சிவராமகிருஷ்ணா, காலை வேளையில் காற்று நன்றாய் அடிக்கிறது. குழந்தைகளை வெளியில் கொஞ்ச தூரம் அழைத்துக்கொண்டு போய் வேடிக்கை காட்டிவிட்டு அழைத்துக்கொண்டு வருகிறேன்" என்றான்.

சிவராமகிருஷ்ணன், "சரி; உன் இஷ்டம்போல் செய். நீ இன்று மத்தியானம் இங்கேதான் சாப்பிட வேண்டும். வேறு எங்கேயும் போகக்கூடாது" என்றான்,

கோபாலன்:—நேற்றிரவே நான் சாப்பிட வரவில்லை என்று என் மைத்துனர் கோபித்துக் கொண்டார். இன்று அவர்களுடைய வீட்டில் சாப்பிடுவதாய்

சொல்லி விட்டேன். உன் சாப்பாட்டிற் கென்ன! இது என் சொந்த வீட்டு சாப்பாடு மாதிரி. எனக்கு வேண்டியபோது கேட்டு உரிமையாக வாங்கிச் சாப்பிடு வேன். அதைப்பற்றி நீ வித்தியாசமாய் எண்ணுதே" என்று கூறியபடி இரண்டு குழந்தைகளையும் அழைத் துக்கொண்டு வெளியில் சென்றுன். பெண் குழந்தை யான காமாட்சி அவளுடைய தாயின் சாயலாகவே இருந்தாளாதலால், அவளைப் பார்த்தபோ தெல்லாம், கோபாலனுடைய கண்களில் கண்ணீர் பொங்கியது. அவன் அடிக்கடி கண்களைத் துடைத்துக் கொண்ட தைக் கண்ட காமாட்சி, "ஏன் மாமா, அழுகிறீர்கள்?" என்றுள்.

கோபாலன், "நான் அழுகிறேனு! யார் சொன் னது அப்படி? நீ என்னை அடித்தாயா? நான் எதற் காக அழுகிறேன்! கண்களில் தூசி விழுந்தது. அத ஞல் கண்களில் ஜலம் வருகிறது; துடைத்துக்கொள் கிறேன்" என்று மறுமொழி கூறியபடி, ஒரு ஜவுளிக் கடைக்குச் சென்றுன். அங்கு பாவாடை, சட்டைகள் முதலியவை பல அளவுகளில் தைத்து விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. காமாட்சிக்கு பாவாடை, சட்டை, கவுன் ஆகியவற்றில் வகைக்கு நான்கு வீதமும் பைய னுக்கு சட்டை, நிஜார் ஆகியவற்றில் வகைக்கு நான்கு வீதமும் வாங்கி, ஒவ்வொன்றை அணிவித்து, மற் றவைகளையும் பழைய உடுப்புகளையும் மூட்டையாகக் கட்டிக் கையில் எடுத்துக்கொண்டு, அவர்களுடன் வீட் டிற்குத் திரும்பி வந்துகொண் டிருந்தான். குழந்தைகள் இருவரும் புதிய உடைகளைப் பார்த்தபடியே சந்தோ ஷப் பெருக்குடன் வந்துகொண் டிருந்தனர்.

அப்போது எதிர்ப்பட்ட ஒரு மனிதன் கோபால னைப் பார்த்துத் திடுக்கிட்டு, "அடேடே! கோபாலனு! உன்னைப் பார்த்து சரியாய் ஒரு மாமாங்கம் இருக்கும் போல் இருக்கிறதே! எப்போது வந்தாய்?" என்றான்.

கோபாலன்:—ஓஹோ! நாதமுனியா! நேற்று வந்தே னப்பா! சௌக்கியமா யிருக்கிறாயா?

நாதமுனி:—உன் தயவில் சௌக்கியந்தான் கோபாலா! இத்தனை வருஷ காலமாய் எங்கே இருந் தாய்? ஏதாவது உத்தியோகம் உண்டா?

கோபாலன்:—நான் படிப்பாளியா யிருந்தா லல்லவா எனக்கு உத்தியோகம் கிடைக்கும். நான் ஊர் ஊராய் யாத்திரை போயக்கொண் டிருந்தேன்.

நாதமுனி:—இந்தக் குழந்தைகள் இரண்டும் உன் னுடைய குழந்தைகள்தானே! உனக்கு எத்தனை குழந்தைகள் கோபாலா?

கோபாலன்:—எனக்கு இன்னம் கலியாணமே ஆக வில்லை. இந்தக் குழந்தைகளை நீ இதற்குமுன் பார்த்த தில்லையா?

நாதமுனி:—உன்னுடைய குழந்தைகள் அல்லவா! இவர்கள் இந்த ஊரில் யாருடைய குழந்தைள்? எனக்கு நினைவுண்டாக வில்லையே!

கோபாலன்:—சிவராமகிருஷ்ணனுடைய குழந்தைக ளப்பா!

நாதமுனி:— எந்த சிவராமகிருஷ்ணன்! மங்களம என்னும் பெண்ணை நீ கலியாணம் செய்துகொள்ள ஆசைப்பட்டாய். உன்னை ஏமாற்றிவிட்டுக் கல்யாணம் செய்து கொண்டானே, அந்த சிவராமகிருஷ்ணன் தானே?

கோபாலன்:—அவனு என்னை ஏமாற்றினன்! நானும் மங்களமும் பரஸ்பரம் பிரியம் கொண்டிருந்தோமென்பது அவனுக்குத் தெரியாது. அவன் தனக்கு அந்தப் பெண்ணைக் கொடுக்க வேண்டுமென்று ஆள் மூலம் கேட்டனுப்பினன். அவனுடைய பெற்ருேர்கள் நல்ல பணக்காரர்கள். மங்களத்தின் தகப்பன் ஏழை. எனக்கு வாக்குக் கொடுத்திருந்ததை மீறி அவன் தன் பெண்ணைச் சிவராமகிருஷ்ணனுக்குக் கொடுப்பதாய் லக்னப் பத்திரிகை எழுதிக் கொடுத்து விட்டான். அதன்மேல், நான் விரக்தி யடைந்து இந்த ஊரை விட்டே போய்விட்டேன். இந்த விஷயத்தில் சிவராம கிருஷ்ணன்மேலாவது, மங்களத்தின் மேலாவது எவ்வித மான தவறு மில்லையே!

நாதமுனி:— (காமாட்சியை உற்றுப் பார்த்து) ஆமப்பா! இந்தப் பெண் மங்களத்தின் சாயலாகவே இருக்கிறது! குழந்தைகளுக்குப் புதிதாய் உடைகள் வாங்கிக்கொடுத்து அழைத்துக் கொண்டு போகிருய் போல் இருக்கிறது! செய்யப்பா! நல்ல வேலைதான்! அம்மாளின்மேல் வைத்த மோகமெல்லாம் அம்மாளின் குழந்தைகளின்மேல் திரும்புகிறதுபோ லிருக்கிறது! இதுவும் ஒரு நல்ல எத்துதான்!

கோபாலன்:—என்ன நாதமுனி, பைத்தியம் போல் உளறுகிருயே! நமக்கு ஆப்த நண்பர்களா யிருந்தவர்களுடைய குழந்தைகளைக் கண்டால், யாருக்கும் பிரியம் உண்டாவது இயற்கைதானே! இதில் எத்து என்ன இருக்கிறது?

நாதமுனி:—என்ன எத்து என்பது உன் மனதிற்குத் தெரியாதா! இதையெல்லாம் பகிரங்கமாய்ச் சொல்லுவார்களா!

கோபாலன்:—என்ன நாதமுனீ! நீ சொல்லுவது எனக்கு விளங்கவே இல்லையே!

நாதமுனி:—விளங்காமல் என்ன! என் வாயை ஏன் அநாவசியமாய்க் கிளறுகிறாய்? சிவராமகிருஷ்ணன் இப்போது ஏழ்மை நிலைமையி லிருக்கிறான். இப்படியெல்லாம் குழந்தைகளுக்கு நீ உடைகள் வாங்கிக்கொடுத்துப் பணக்காரன் மாதிரிக் காட்டிக்கொண்டால், மங்களத்தின் மனதில் மறைந்து கிடக்கும் பழைய மோகம் மறுபடியும் தலையெடுக்கும்.

கோபாலன்:—அடெ முட்டாளே! நீ புத்திசாலி என்று நினைத்தேன். இவ்வளவு அசட்டுத்தனமாய்ப் பேசுகிறாயே! ஒருவனுக்கு மனைவியாகி இரண்டு குழந்தைகள் பெற்ற ஸ்திரீயின் மனதில் துர்மோகத்தை நான் உண்டாக்குவது நியாயமா? அது அவ்வளவு சுலபமான காரியமா? இந்த உலகில் வேறு புத்தம் புதிய பெண்கள் இல்லாமல் போய்விட்டார்களா! எனக்குப் பெண்களின்மேல் ஆசை இருந்தால், இந்நேரம் கலியாணம் செய்துகொண் டிருக்க மாட்டேனா! இப்படியெல்லாம் பைத்தியக்காரன் மாதிரி இன்னொரு தரம் உளறாதே! எனக்கு கோபம் வந்தால், நான் யாரென்றும் பார்க்க மாட்டேன்.

நாதமுனி:— அடேயப்பா! நீ அவ்வளவு வெண்ணெய் வெட்டி சிப்பாயியா! அதையும்தான் பார்த்துவிடுகிறேன். நான் பைத்தியக்காரன் மாதிரியா பேசுகிறேன்! இருக்கும் அப்பா இருக்கும். உன் மனதில் உள்ள திருட்டு நினைவை நான் அறிந்து சொல்லிவிட்டே னல்லவா! அதற்காக நான் பைத்தியக்காரன் ஆகவேண்டியதுதான். அடெ போடா திருட்டு நாயே! நீ செய்யும் காரியங்களி லிருந்து உன் திருட்டெண்ணம்

மடையனுக்குக்கூடத் தெரியும். அப்படி இருக்க, எனக்குப் பைத்தியக்காரப் பட்டம் கட்டுகிருயே! (காமாட்சியைப் பார்த்து) அடீ குழந்தை! நீ வீட்டுக்குப் போனவுடன், உன் அப்பாவிடம் ஒரு சங்கதி சொல்லுகிருயா?

காமாட்சி:—என்ன சங்கதி?

நாதமுனி:—இந்த மனிதன் சுத்த அயோக்கியன். இவன் உங்களுடைய அம்மாளை உங்களுக்குத் தெரியாமல் இந்த ஊரை விட்டே அழைத்துக்கொண்டு போகிறதற்காக இப்படியெல்லாம் வேஷம் போடுகிருன். இந்தச் சங்கதியை மறந்து போகாமல் நீ உன் அப்பாவிடம் சொல். நாதமுனி மாமா சொல்லச்சொன்னர் என்றும் சொல். தெரிகிறதா—என்ருன்.

அதுவரையில் அமைதியாயிருந்த கோபாலன் சரேலென்று தன் பொறுமையை இழந்து ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து தன் வலது கையை முஷ்டி செய்து நாதமுனியின் தோளில் இரண்டு மூன்று குத்துகள் தீன் தீன் என்று விடவே, மூர்க்கனை நாதமுனிக்கும் உடனே வீராவேசம் கிளம்பிவிட்டது. அவனும் கோபாலனை அடிக்கவும் குத்தவும் ஆரம்பித்து விட்டான். இருவரும் கட்டிப் புரண்டு மாறி மாறி அடித்துக்கொண்டும் குத்திக்கொண்டும் கீழே கிடக்கவே, குழந்தைகள் இரண்டும், "ஐயோ! ஐயோ" என்று உரக்கக் கூச்சலிட்டு அலறி அச்சத்துடன் அங்குமிங்கும் ஓடத் துடங்கினர்.

அந்தக் கூச்சலைக் கேட்டு ஏராளமான ஜனங்களும், சில போலீஸ் ஜெவான்களும் அங்கே வந்து கூடி அவர்களை விலக்கி விட்டனர். அவர்கள் இருவரும் சர்க்கார்

ரஸ்தாவில் சண்டையிட்டுக் கலகம் விளைவித்த குற்றத்திற்காக ஜெவான்கள் அவர்கள் இருவரையும் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு சென்றனர்.

அப்போது கோபாலன் காமாட்சியை நோக்கி, “நீ பயப்படாமல் தம்பியை அழைத்துக்கொண்டு வீட்டுக்குப் போ; நான் பின்னால் வருகிறேன் என்று அப்பாவிடம் சொல். துணி மூட்டையைப் பத்திரமாய் வீட்டில் கொண்டு போய்ச் சேர்” என்றான்.

துணி மூட்டையோடிருந்த காமாட்சி தன் தம்பியின் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு வீட்டை நோக்கிச் செல்லலானாள்.

2

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

அவர்கள் அந்தத் தெருவின் கோடியில் போன சமயத்தில் எதிரில் சாமியார்கள் இருவரும் அவர்களுடைய பழைய கோலத்தில் எதிர்ப்பட்டனர். அவர்களைக் கண்டவுடன் காமாட்சி தன் மூட்டையைக் கீழே வைத்துவிட்டு, "சாமியார் ஐயா, நமஸ்காரம்" என்று இருவரையும் நோக்கிக் கைகுவித்து வணங்கினாள். இரண்டு சாமியார்களும் அவளைப் பார்த்து வியப்படைந்து ஸ்தம்பித்து நின்றனர்.

விபூதிப்பைச் சாமியார்:— யார் அம்மா நீ? பழனி யாண்டவருடைய உண்டியில் பணம் போடப் போகிறாயா?

காமாட்சி:—என்னுடைய அடையாளம் உங்களுக்குத் தெரியவில்லையா! நேற்றுக் காலையில் நீங்கள் பள்ளிக்கூடத்துக்கு வந்திருந்தபோது, நான் ஓர் அணா பணம் உண்டியில் பேட்டேனே!

விபூதிப்பை:—ஓகோ! அந்தப் பெண்ணா! இவன் தான் உன் தம்பியா?

காமாட்சி:—ஆம். ஐயா, நான் என் அணாவைப் போட்டதற்குப் பழனியாண்டவர் உடனே கைமேல் பலன் கொடுத்து விட்டார். நேற்றிரவு முதல் எங்களுக்குக் காய், கறி, அப்பளம், பலகாரம், காப்பி முதலியவைகள் சாப்பிடக் கிடைத்தன. இதோ பாருங்கள் எனக்கு எத்தனை கவுன்கள், எத்தனை தாவணிகள், என் தம்பிக்கு எத்தனை சட்டைகள் புதிதாய்க் கிடைத்

திருக்கின்றன பாருங்கள்! எல்லாரும் சொல்லுகிறது போல், பழனி ஆண்டவர் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்து, நன்மைக்கு நல்ல பலனும், தீமைக் குக் கெட்ட பலனையும் தருகிறார் என்பது நிஜமாய் விட்டது.

விபூதிப்பை:— (பிரமித்துப்போய்) அப்படியா ! நீ சொல்வது ஆச்சரியமாய்த்தான் இருக்கிறது! ஆண்ட வர் உனக்குக் கைமேல் பலன் கொடுத்துவிட்டார். நாங் கள் எத்தனையோ நாட்களாய் அவருக்காகப் பாடுபடு கிறோம், எங்களுக்கு அவர் ஒரு பலனையும் காட்டவில் லையே!

உண்டிப்பெட்டி:— நீ போட்ட ஓர் அணு இன்ன மும் எங்கள் பெட்டியில்தானே இருக்கிறது. அது பழனியாண்டவருக்குப் போகிறதற்கு முன் அவர் உனக்கு எப்படி நன்மை செய்தார்?

காமாட்சி:—அவர் காற்றைப்போல் எங்கும் நிறைந் துள்ளவர் என்று நேற்று நீங்களே சொன்னீர்களே! நான் அணுபோட்டது அவருக்குத் தெரியாதா? உங்க ளுக்கு அவர் நல்ல பலன் காட்டவில்லை என்றால், உங்கள்மேல் அவருக்குக் கோபம் உண்டாயிருக்கலாம். அவருடைய பணத்தை நீங்கள் எடுத்துக்கொண்டீர் களோ என்னவோ? அதனால் அவருக்குக் கோபம்போல் இருக்கிறது!

உண்டிப்பெட்டி:— அப்படியெல்லாம் நாங்கள் ஆண்டவரின் பணத்தை எடுத்துக்கொள்வதே இல் லையே!

காமாட்சி:— எடுத்துக்கொண்டால், அதுவும் அவ ருக்குத் தெரியும். அவருக்குக் கண் இல்லை என்று

நினைத்து, அவருடைய பணத்தை எடுத்துக்கொண்டால் அவர் நம்முடைய கண்ணை அவித்து விடுவார் என்று என் தாயார் நேற்றுச் சொன்னார்கள். சரி; எங்களுக்கு நேரமாகிறது. வீட்டுக்குப் போக வேண்டும். நமஸ்காரம் சாமியார் ஐயா—என்று கூறி இருவருக்கும் கும்பிடு போட்டுவிட்டு மூட்டையை எடுத்துக்கொண்டு தன் தம்பியுடன் அப்பால் சென்றாள்.

காமாட்சி கூறிய சொற்களைக் கேட்ட விபூதிப்பைச் சாமியார் அப்போதே தமது கண் பார்வையை இழந்து விட்டவர்போல் தமது இரண்டு கண்களையும் மூடி நெற்றியில் விரலை வைத்தபடி அப்படியே பிரமித்து நின்று விட்டார்.

உண்டிப் பெட்டிச் சாமியார், "நேரமாகிறது; வா போகலாம், ஏன் கண்களை மூடிக்கொண்டாய்? கண் அவிந்துபோனால், அந்த சுகம் எப்படி இருக்குமென்று பரீட்சை பார்க்கிறாயா?" என்றார்.

விபூதிப்பை:— இவ்வளவு சிறிய குழந்தை இவ்வளவு மேலான தத்துவத்தை எடுத்துச் சொன்னதை நீ இதுவரையில் எங்கேயாவது கேட்டிருக்கிறாயா! கடவுளே நம்மை இந்தப் பெண்ணின் வாக்கினால் எச்சரிக்கிறார் என்னும் சந்தேகமே எனக்கு உண்டாகிறது. என் மனதில் பெரிய திகில் எழுந்து என்னைக் கலக்குகிறது. நாம் இந்தத் தொழில் செய்தது போதும்; இதோடு நிறுத்தி விடுவோம்.

உண்டிப்பெட்டி:— அடே பைத்தியக்காரா போடா! சாமியாவது பூதமாவது! மனிதனே பிரத்தியக்ஷ தெய்வம். அவன் வைத்ததுதான் சட்டம். மனிதர்கள் உபயோகிக்கும் வெள்ளிப் பணத்தையும் தாமிரக் காசை

யும்பற்றிக் கடவுள் மகா கவலைப்படுகிற மாதிரிப் பேசுகிறரே! இவைகள் மனிதருக்குத்தான் அருமையானவை. கடவுள் தங்கத்தையும், வைரத்தையும் மலைமலையாகச் சிருஷ்டித்து, மண்ணிலும் கேவலமாய் மதித்து மண்ணுக்குள் போட்டு வைத்திருக்கிறார். அதை யார் எடுத்துக்கொண்டால், அவருக்கு அதனல் குற்றம் என்னடா! அவர் ஏன் இதையெல்லாம் பொருட்படுத்தப் போகிறர்.

விபூதிப்பை:— கடவுளுக்குப் பணமும், மண்ணும் ஒன்றுதான். ஆனலும், நாம் நியாயமான வழியில் பாடுபட்டுச் சொத்தைத் தேடாமல், மோசம் செய்து பலரை ஏமாற்றுகிற குற்றம் இருக்கிறதல்லவா. அதற்கு நாம் கடவுளுக்கு உத்தரவாதம் சொல்ல வேண்டாமா?

உண்டிப்பெட்டி:— அந்த விதமான குற்றங்களை யெல்லாம் பரிசீலனை செய்ய, மனிதருடைய நீதிஸ்தலங்களே முடிவான அதிகார முடையவை. அவர்களிடம் அகப்பட்டுக் கொள்ளாமல் தந்திரமாய் நாம் நம் காரியத்தை நடத்திக்கொண்டு போவதே முக்கியமானது. அதற்குமேல் நம்மைக் கேட்கிறவர்கள் யாருமில்லை.

விபூதிப்பை:—மனிதருடைய நீதி ஸ்தலத்தில் தண்டனை பெறமல் தப்புகிறவர்களைக் கடவுள் தண்டிக்கிறதில்லை என்கிறயா?

உண்டிப்பெட்டி:— அதை யெல்லாம் அவர் நோட் புஸ்தகத்தில் எழுதி வைத்துக் கொள்ளுகிறர் என்று பார்த்தாயா? அதெல்லாம் ஒன்றுமில்லை—என்றர்.

இவ்வாறு இரண்டு சாமியார்களும் ஒருவருக்கொருவர் சம்பாஷித்தபடி தெருவோடு சென்றனர்.

அவர்களை விட்டுச் சென்ற காமாட்சி மேலும் சிறிது தூரம் நடக்க, எதிரில் வந்த பட்டம்மாள் முக மலர்ச்சியோடு காமாட்சியையும் அவளுடைய தம்பி யையும் பார்த்து, இருவரையும் மாறி மாறி அணைத் துக்கொண்டு, "காமாட்சீ, காலை வேளையில் எங்கே போய் வருகிறீர்கள்? கையில் என்ன மூட்டை வைத் திருக்கிறாய்?" என்று அன்பாக வினவினாள்.

காமாட்சி:—அம்மா, நீங்கள் எனக்குத் தினம் தினம் கொடுத்துக் கொண்டு வரும் ஒரு பைசாவை நான் சேர்த்து ஓர் அணா ஆக்கி வைத்திருந்தேன். தம்பிக்குச் சட்டை தைக்க வேண்டுமென்று நினைத்துக்கொண் டிருந்தேன். நேற்றுப் பள்ளிக்கூடத்துக்கும் இரண்டு சாமியார்கள் வந்து, பழனியாண்டவருக்குத் தருமம் செய்யும்படி கேட்டார்கள்; நன்மை செய்பவருக்கு ஆண்டவர் நன்மையைச் செய்வா ரென்றும், தீமை செய்பவரை ஆண்டவர் தண்டிப்பார் என்றும் அவர் கள் சொன்னார்கள். நான் என்னிடம் இருந்த அணாவை உண்டியில் போட்டு, என் தகப்பனாருக்கு நிறையப் பணம் கொடுக்கும்படி பழனி ஆண்டவரிடம் வேண் டிக் கொண்டேன். உடனே அது கைமேல் பலித்து விட்டது. நேற்றிரவு முதல் எங்களுக்கு நல்ல சாப்பாடு, பலகாரம், காப்பி எல்லாம் கிடைத்தன. இதோ பாருங் கள் எத்தனை புதுப் பாவாடைகள், எத்தனை தாவணி கள். எத்தனை சட்டைகள்!" என்று சந்தோஷ உற் சாகத்தோடு மூட்டையைப் பிரித்து அதிலிருந்த புது ஆடைகளைக் காட்ட, பட்டம்மாள் அவைகளைக் கண்டு வியப்படைந்தவளாய், "இவைகளை யெல்லாம் யார் கண்ணூ வாங்கிக் கொடுத்தது?" என்றாள்.

காமாட்சி:—பழனியாண்டவர் யாரோ ஓர் ஐயாவை அனுப்பி இருக்கிறார். அவர் வந்து வாங்கிக் கொடுத்தார். எல்லாம் உங்களால்தான் கிடைக்கிறதம்மா. நீங்கள் கொடுத்த அணவை நான் தருமத்துக்கு வழங்கியதால்தான், எங்களுக்குப் பழனியாண்டவருடைய கிருபை உண்டாயிற்று. நீங்கள் செய்த புண்ணியம் வீணய்ப் போகாது. உங்களுக்கும் பழனி ஆண்டவர் கொடுப்பார்.

பட்டம்மாள்:— (கண் கலக்கத்தோடு) ஆகா! அப்படியா! சந்தோஷம் கண்ணு! நான் இதுவரையில் தினம் உனக்குக் காசு கொடுத்துக்கொண்டு வந்தது உன் அப்பாவுக்கும் அம்மாளுக்கும் தெரியுமா?

காமாட்சி:—எனக்குக் காசு எங்கிருந்து வருகிறது என்று அம்மாள் கேட்டார்கள். நான் பள்ளிக்கூடத்துக்குப் போகும்போது தெருவின் முடக்கில் எனக்காக ஓர் அம்மாள் காத்திருந்து காசு கொடுப்பதாக நான் சொன்னேன். 'அந்த அம்மா தாம் யார் என்று சொல்லவில்லையா?' என்று கேட்டார்கள். இல்லை என்று நான் சொன்னேன். அப்பா ஒருநாள் மறைவாக எனக்குப் பின்னல் வந்து தூரத்தில் இருந்து, நீங்கள் காசு கொடுத்தபோது, உங்களைப் பார்த்துவிட்டுப் போனர்.

பட்டம்மாள்:—அதற்குப் பிறகு அப்பா உன்னிடம் ஒன்றும் சொல்லவில்லையா?

காமாட்சி:—சொல்லவில்லை- அப்படியானல், நீங்கள் யாரம்மா? என் அப்பாவுக்கு நீங்கள் தெரிந்தவர்களா? எனக்குத் தினம் நீங்கள் ஏன் இவ்வளவு பிரியமாய்க் காசு கொடுக்கிறீர்கள்?

பட்டம்மாள்:— (தன் சஞ்சலத்தை மறைத்துக் கொண்டு) நான் இப்போது அவசரமாய்ப் போகவேண்டும். இன்னொரு சமயம் உன்னைப் பார்க்கும்போது எல்லாச் சங்கதிகளையும் சொல்லுகிறேன். இனிமேல் நான் அடிக்கடி இங்கே வரமுடியாது. இந்தா, மொத்தமாய் உனக்கு ஒரு ரூபாய் தருகிறேன். இதை வைத்துக்கொண்டு நீயும் தம்பியும் தின்பண்டம் வாங்கிக் கொள்ளுங்கள் — என்று கூறியபடி ஒரு ரூபாய் பணத்தை எடுத்துக் காமாட்சியிடம் கொடுத்துவிட்டு சரேலென்று அவ்விடத்தை விட்டு நடக்கத் தொடங்கினாள்.

திடீரென்று தன் கைக்கு வந்த ஒரு ரூபாயைக் கண்ட காமாட்சி பிரமித்துப்போய்த் தன் ஆனந்தத்தைக் தாங்க மாட்டாமல் ஒரு நிமிஷ நேரம் ஸ்தம்பித்து நின்றபின், "ஸ்வாமீ, பழனியாண்டவரே, கேவலம் ஓர் அணாவை நான் உண்டியில் போட்டதைப் பற்றி உமக்கு என்மேல் இவ்வளவு பிரியம் உண்டாய்விட்டதா! ஐயோ, இந்த சந்தோஷம் என்னால் தாங்க முடியவில்லையே. இவைகளை யெல்லாம் பார்த்து அப்பாவும் அம்மாளும் நிரம்பவும் சந்தோஷப் படுவார்கள்" என்று நினைத்தபடி, "தம்பீ, வேகமாய் நட; நாம் சீக்கிரம் வீட்டுக்குப் போவோம்" என்று கூறித் தன் தம்பியுடன் விரைவாக வீட்டை நோக்கி நடக்கலானாள்.

அவ்விடத்தை விட்டுச் சென்ற பட்டம்மாளை இனி நாம் கவனிப்போம். அவள் தெருவில் எந்தப் பக்கமும் திரும்பிப் பார்க்காமல் ஓட்டமும் நடையுமாய் நடந்து, தங்கள் வீட்டின் பக்கத்திலிருந்த சந்தின் வழியாகச் சென்று, வீட்டின் பின்புறத்திலிருந்த தோட்டத்தை அடைந்து, அங்கு அவளால் ஏற்கனவே

திறந்து வைக்கப்பட் டிருந்த பின்புற வாசற்படியின் வழியாக உள்ளே நுழைந்து கதவை மறுபடி மூடித் தாழிட்டுக்கொண்டு, வீட்டிற்குள் போய்விட்டாள்.

அப்போது மாடியின்மேல் ஊஞ்சல் பலகையில் உட்கார்ந்துகொண் டிருந்தவரான அவளுடைய தந்தை, "பட்டு, பட்டு, கொஞ்சம் காப்பி கொண்டுவா" என்ருர்.

அடுத்த நிமிஷம் பட்டம்மாள் காப்பியுடன் அவரிடம் வர, அவர் அதைப் பெற்றுச் சாப்பிட்ட பிறகு பாத்திரத்தை வாங்கிக்கொண்ட பட்டம்மாள், "அப்பா, நீங்களும், அம்மாளும், அண்ணன் மேலும் அண்ணி மேலும் இன்னம் எவ்வளவு காலத்துக்கு வர்மம் பாராட்டப் போகிறீர்கள்! அநியாயமாய் அவர்கள் கஷ்டப்படுகிருர்களே! அவர்களை இங்கே அழைத்துக் கொள்ளுவோமே அப்பா" என்று நிரம்பவும் உருக்கமாகக் கூறினள்.

கிழவர்:—என்ன பட்டு, இந்தப் பெரியதனமெல்லாம் உனக்கு எதற்கு? நாங்கள் மூடத்தனமாய்ச் செய்வோமா! அந்தப் பாவிக்கு நாங்கள் வேறோர் இடத்தில் பெண் பார்த்திருந்தோம். அங்கே கலியாணம் நடந்திருந்தால், ஒரு லக்ஷம் பெறுமான சொத்து நமக்கு வந்திருக்கும். நாங்கள் சொன்னதை அவன் அலட்சியம் செய்து, அழகா யிருக்கிறு ளென்று நித்திய தரித்திரமான இந்த மங்களத்தைக் கலியாணம் செய்துகொண்டான். பெயர்தான் மங்களமே ஒழிய, அவர்களுடைய முகத்தில் விழித்தாலே தரித்திரம் ஒட்டிக்கொள்ளும். அவனுடைய முட்டாள் தனத்திற்கு, அவன் பட்டு அநுபவிக்கவேண்டு மென்பதே எங்கள் எண்ணம். நீ

அவர்களைப் பற்றிக் கவலைப்படாமல் உன் காரியத்தைப் பார்த்துக்கொண்டு சும்மா இரு.

பட்டம்மாள்:— (கண் கலக்கத்துடன்) அப்பா, அண்ணன் ஏதோ தப்பான காரியம் செய்துவிட்டாலும் பெரியவர்களான நீங்கள் அதை க்ஷமித்துக் கொள்ளத் தான் வேண்டும். அண்ணன் உங்களுடைய பிள்ளை யல்லவா.

கிழவர்:—சரி; போதும். அந்தப் பேச்சு வேண்டாம், அம்மாளுடைய காதில் பட்டால், நம் இருவருடைய மண்டையையும் உடைத்து விடுவாள். அவனுடைய பேச்சு இருக்கட்டும். உன்னுடைய சொந்த விஷயத்தைப் பற்றிப் பேசு. உன் புருஷரிடமிருந்து வந்த கடிதத்தின் சங்கதியைத் தெரிந்துகொண்டா யல்லவா. அவன் கொஞ்சமும் யோசனை இல்லாமல் மூர்க்கத்தனமாய் எழுதி இருக்கிறானே! அவனுக்கு நான் ஏதாவது தக்க வேலை செய்து கொடுக்கா விட்டால், நீ இனி இங்கேயே இருந்துவிட வேண்டுமாம். இது என்ன பயமுறுத்தல்? உனக்கு சாப்பாடு போட என்னால் முடியாதென்று எண்ணிக்கொண்டான்போ லிருக்கிறது. அவனுக்கு வயது 35-க்கு மேல் ஆகிறது. அவனுக்கு இனி சர்க்கார் உத்தியோகம் எப்படிக் கிடைக்கும். வேலை செய்து வைப்பது என் கையில் அடங்கியதா?

பட்டம்மாள்:—எப்படியாவது நீங்கள்தான் முயற்சி எடுத்து வேலை செய்து வைக்க வேண்டும். நான் இங்கேயே இருந்தால், நீங்கள் என்னைப் பட்டினி போட மாட்டீர்கள். ஆனாலும், அண்டை வீட்டுக்காரர்கள், எதிர்த்த வீட்டுக்காரர்கள் முதலியோருடைய வாய் சும்மா இருக்குமா? என்னுடைய கெட்ட நடவடிக்கை யைக் கண்டு, அவர் என்னைத் துரத்தி விட்டார் என்

றல்லவா சொல்லுவார்கள்; நேற்றுச் சிலர் வம்பு வளர்த்துக்கொண் டிருந்தது என் காதில் விழுந் தது. என் உடம்பு குன்றிப்போய்விட்டது.

கிழவர்:—யார் என்ன பேசினார்கள்?

பட்டம்மாள்:—எதிர்த்த வீட்டுத் திண்ணையில் யாரோ சிலர் உட்கார்ந்து, என்னைப் பற்றித் தாறுமாறாய்ப் பேசிக்கொண் டிருந்தார்கள். நான் ஏதோ கெட்ட காரியம் செய்ததை என் புருஷர் கண்டு என்னை அடித்துத் துரத்திவிட்டாராம்; நான் இங்கே வேறே ஆள் பார்த்துக்கொண் டிருக்கிறேனாம். இப்படியெல் லாம் தாறுமாறாய் உளறினார்கள்.

கிழவர்:—(ஆத்திரத்தோடு) ஒகோ! எதிர்த்த வீட்டுக் காரனுக்கு அவ்வளவு கொழுப்பா! இருக்கட்டும். நான் அவனைக் கண்டிக்கிறேன்—என்றார்.

அவ்வளவோடு அவர்களுடைய சம்பாஷணை முடி வடைந்தது. அன்றைய பகல் போஜனம் ஆனபிறகு பட்டம்மாள் தான் அதே தெருவில் உள்ள ஓர் அம்மா ளிடம் ஒரு பாட்டைப்பற்றிச் சந்தேகம் தெளிவித்துக் கொண்டு வருவதாய்த் தன் தாயிடம் சொல்லிவிட்டு வெளியில் சென்றாள்.

சென்றவள் அதே தெருவின் கடைசியில் இருந்த ஒரு வீட்டின் கதவைத் தட்ட, கதவு உடனே திறந்து விடப்பட்டது. உள்புறத்தில் ஒரு மனிதர் காணப்பட் டார். அவருடைய வயது நாற்பதிற் குள்ளாகவே இருக்கலாம். அவர் மறுபடியும் கதவை மூடித் தாழிட் டுக்கொண்டு அவளுடன் கூடத்தை யடைந்து, ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு பட்டம்மாளை

நோக்கி, "என்ன செய்தி? கிழவன் என்ன சொல்லு கிறான்?" என்று அமர்த்தலாய் வினவினான்.

பட்டம்மாள்:— நீங்கள் சொல்லிக்கொடுத்த மாதிரியே நான் சொன்னேன். உங்கள் காரியம் சீக்கிரம் அநுகூலப்படலாம்.

புருஷன்:— எனக்கு உத்தியோகம் கிடைப்பது மாத்திரம் போதாது. இவர்களுடைய சொத்து முழுதும் எப்படியும் உனக்கேதான் சேரப் போகிறது. எல்லாவற்றையும் இப்போதே உன்மேல் எழுதி வைத்து விடும்படி நீ செய்ய வேண்டும்.

பட்டம்மாள்:— நியாயமாய் எல்லாம் என் அண்ணனுக்குத்தானே சேரவேண்டும்! நாம் அவ்வளவு தூரம் அக்கிரமத்தில் இறங்கினால், அது கடவுளுக்குச் சம்மதமா யிருக்குமா? அவர்களாய்ப் பார்த்து எனக்குக் கொடுப்பதை நாம் வாங்கிக்கொள்ள வேண்டும்.

புருஷன்:— அது உன்னுடைய இஷ்டத்தைப் பொறுத்ததல்ல; என்னுடைய இஷ்டப்படி நீ நடக்காவிட்டால், உன்னைக் குத்திக் கொல்லுகிறதற்கு நான் இதோ பீச்சாங் கத்தி தயாராய் வைத்துக்கொண்டிருக்கிறேன்.

பட்டம்மாள்:— (அச்சத்தினால் நடுங்கி) உங்கள் இஷ்டப்படி நான் இதுவரையில் நடந்து வந்திருக்கிறேன்; இனியும் அப்படியே தான் நடப்பேன். ஊர் நியாயத்தை உங்களுக்கு நினைப்பூட்டினேன்; அவ்வளவே தவிர வேறொன்றுமில்லை. நீங்கள் என்மேல் கோபம் கொண்டு என்னைக் கத்தியால் குத்திக் கொல்லும்படி நான் ஒருநாளும் நடந்துகொள்ள மாட்டேன்.

புருஷன்:—சரி; ஜாக்கிரதை. உன் அண்ணனுக்கு ஒரு துரும்புகூடப் போகாமல் எல்லாம் உன் பெயருக்கு வந்துவிட வேண்டும். அதை நீ இப்போது முதல் கவனித்துச் சீக்கிரம் நிறைவேற்றும்படி செய்ய வேண்டும். இல்லாவிட்டால், உன்னைப் பலி போட்டுவிடுவேன்.

பட்டம்மாள்:—நீங்கள் என்னை அடித்தாலும், கொன்றாலும் நீங்கள்தான் எனக்குப் புகலிடம். உங்களைத்தவிர முறையிட எனக்கு வேறே யார் இருக்கிறார்கள். ஆனாலும் எல்லாச் சொத்துக்களையும், நாம் எடுத்துக் கொண்டு என்ன செய்யப்போகிறோம். அண்ணன் இல்லாக் கொடுமையால் நிரம்பவும் துன்பப்படுகிறார். நேற்றுக்கூட அண்ணி இங்கே வந்திருந்தாள். அவளுடைய கோலத்தைக் காண எனக்கு வயிறு பகீரென்று பற்றியது.

புருஷன்:—அடி பைத்தியக்காரி அவர்கள் வெளி வேஷம் போடுகிறார்கள். உன் அண்ணன் ஏராளமாய்ப் பணம் சம்பாதிக்கிறான். அவனுக்கென்ன குறைச்சல். அவர்களைப்பற்றிய கவலை உனக்கு வேண்டியதேஇல்லை. அவனைப் பெற்ற சொந்தத் தாய் தகப்பன்மாரே அவர்களை வெறுத்து விலக்கும்போது, உனக்கு மாத்திரம் அவ்வளவு கனிகரம் வந்துவிட்டதோ! இனி நீ அவர்களுடைய பேச்சை எடுத்தால், எனக்குக் கோபம் வந்துவிடும். அப்போது உனக்கு அடி விழுவது நிச்சயம். அதனால் கை முறியுமோ, கால் முறியுமோ அதை இப்போது சொல்ல முடியாது. ஓடு நாயே, என்முன் நிற்காதே. காரியத்தை நான் சொன்னபடி பூர்த்தியாக ஒழுங்கு படுத்திக்கொண்டுதான் நீ இனி என்னிடம் வரவேண்டும். இல்லாவிட்டால், என்னிடம் வரவேண்டாம். நீ போகலாம்—என்றான்.

அவனுடைய மூர்க்கத்தனத்தைக் கண்டு அஞ்சி நடுங்கிய பட்டம்மாள் அதற்குமேல் மறுத்துப் பேச அஞ்சியவளாய் வெளியில் போய்விட்டாள். அவன் கதவைத் திறந்துவிட்டு மறுபடி தாழிட்டுக் கொண்டு உள்ளே செல்ல முயன்ற காலத்தில், யாரோ கதவைத் தட்டவே, மறுபடி பட்டம்மாளின் புருஷன் கதவைத் திறந்து பார்த்தான். ஒரு மனிதன் தன் கையில்கொணர்ந்திருந்த ஒரு கடிதத்தை அவனிடம் கொடுத்தான். பட்டம்மாளின் புருஷன் அதை ஆவலோடு பிரித்துப் படிக்க அது அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

ம-ா-ா-ஸ்ரீ, கலியாண சுந்தரம்

அவர்களுக்கு,

ஐயா,

நான் நன்ருக யோசனை செய்து என் முடிவான தீர்மானத்தைத தெரிவிப்பதாகச் சொன்னேனல்லவா! என் மைத்துனன் கோபாலனுக்கே என் பெண்ணைக் கொடுக்க வேண்டுமென்று என் மனைவி முதலியோர் விரும்புகிருர்கள். அவர்களுடைய அபிப்பிராயத்துக்கு மாருய் நான் நடந்து கொள்வது அவ்வளவு உச்சிதமாகப் படவில்லை. ஆகையால் நான் உங்களுடைய கோரிக்கையை நிறைவேற்றி வைக்கக்கூடவில்லை என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மன்னிக்கவும்.

இப்படிக்கு,

சோமசுந்தரம்

என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தைப் படித்த கலியாணசுந்தரம், அதைச் சுக்கல் சுக்கலாய்க் கிழித்து ஆத்திரமாய்த் தூர எறிந்துவிட்டு, அதைக் கொண்டுவந்த ஆளை நோக்கி, "சரி; போகலாம்" என்று அமர்த்தலாகக்

கூறினன். உடனே ஆள் போய்விட்டான். அவர் ஆத்திரத்தோடு உள்ளே போய்க் கூண்டில் அடைபட்ட காட்டு மிருகம் போல் மூர்க்கா வேசத்தோடு அங்கு மிங்கும் உலாவியபடி இருந்தான்.

அவ்விடத்தை விட்டுச் சென்ற பட்டம்மாள் தங்கள் வீட்டை அடைந்து, அன்று முழுதும் அழுதுகொண்டே ஒரு மூலையில் படுத்திருந்தாள். அவளுடைய தாயான **அமிர்தம்மாள்** அவளுக்கு அடிக்கடி சமாதான வார்த்தைகள் சொல்வதும், மாறி மாறித் தன் புருஷருடைய மூடத்தனத்தைப் பற்றியும், மாப்பிள்ளையின் மூர்க்கத் தனத்தைப் பற்றியும் அவர்களைத் தூற்றுவதுமாய் அங்குமிங்கும் போய் வந்துகொண் டிருந்தாள். அன்றைய இராப்பொழுது வந்தது; அமிர்தம்மாளின் புருஷர் வெளியிலிருந்து வர, அவருக்கும் அமிர்தம்மாளுக்கும் மிக மும்மரமான வாக்குவாதம் ஆரம்பமாயிற்று மாப்பிள்ளைக்கு வேலை சம்பாதித்துக் கொடுக்கும் விஷயத்தில் உள்ள இடையூறுகளைப் பற்றியும் பட்டம்மாளை மாப்பிள்ளை தான் அழைத்துக்கொள்ள முடியாதென்று கடிதத்தில் எழுதியிருந்த விஷயத்தைப் பற்றியும் இருவரும் மாறி மாறி ஒன்றுக்கொன்று முரண்பட்ட அபிப்பிராயங்களைத் தெரிவித்து, வாக்குவாதம் செய்தபடி இராச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு படுத்துக்கொண்டனர். பட்டம்மாள் தனக்குப் பசி இல்லை யென்று சொல்லி, தாயின் வற்புறுத்தலால் அரை வயிறு சாப்பிட்டுவிட்டுப் படுத்துக்கொண்டாள்.

எல்லோரும் அயர்ந்து தூங்கிக்கொண் டிருக்க, இரவு ஒரு மணி சமயத்தில், நான்கு திருடர்கள் காமரா அறையின் ஜன்னல் கம்பிகளை விலக்கிவிட்டு, உள்ளே நுழைந்தனர். ஒருவன் தன் கையில் வைத்திருந்த மின்

சாரக் கை விளக்கின் வெளிச்சத்தைக் காட்ட, எல்லோரும், அந்த வீட்டின் உட்புற அமைப்பையும், அங்கங்கு இன்னின்ன சாமான்கள் இருந்தன என்பதையும், தெரிந்துகொண்டு, எதிரிலிருந்த சேலைகள், வேஷ்டிகள் முதலிய விலை பெற்ற பொருள்களை எடுத்து மூட்டையை வெளியில் கொண்டுபோய் வைத்துவிட்டு, தனிமையில் தூரத்தில் படுத்திருந்த பட்டம்மாளின்மேல் வெளிச்சத்தைத் திருப்பிப் பார்த்தனர். அவளுடைய காதுகளில் வைரக் கம்மல்கள் காணப்பட்டன. கழுத்து, கைகள் முதலியவற்றிலும் ஏராளமான நகைகள் காணப்பட்டன; திருடர் அவளுடைய கழுத்து நகைகளைக் கழற்ற முயலவே, அவள் விழித்துக்கொண்டு திடுக்கிட்டுக் கூச்சலிட ஆரம்பித்தாள்.

அந்தக் கூச்சலைக் கேட்டு ஜனங்கள் வந்து கூடிவிடுவார்கள் என்ற அச்சம் திருடருக்கு உண்டாகவே, அவர்கள் பட்டம்மாளின் காதுகளில் இருந்த வைரக் கம்மல்களைப் பலவந்தமாய்ப் பிடித்து இழுக்க, இரண்டு காதுகளின் கம்மல் துவாரங்களை அறுத்துக்கொண்டு அவைகள் வந்துவிட்டன. திருடர்கள் உடனே ஓட்டம் பிடித்தனர்.

பட்டம்மாள் அச்சத்தினாலும், தன் காதுகளின் நோவைப் பொறுக்க மாட்டாமலும், "ஐயோ! ஐயோ! திருடர்! திருடர்!" என்று அலறிக் கூச்சலிடவே, அவளுடைய தாய் தகப்பன்மார் இருவரும் திடுக்கிட்டு விழித்து எழுந்து விளக்கை ஏற்றிக்கொண்டு ஓடி வந்தனர். அதற்குள் அண்டை வீட்டுக்காரர்களும் எழுந்து ஓடி வரவே, அங்கு பெரிய கும்பல் கூடிவிட்டது. திருடர்கள் சாமான்களுடன் மாயமாய் மறைந்து போயினர். ஜனங்கள் பல திக்குகளிலும் ஓடிப் பார்த்தனராயு

லும், திருடர்கள் காணப்படவில்லை. சற்று நேரத்தில் போலீஸாரும் அங்கே வந்து சேர்ந்தனர். அமிர்தம் மாளும், அவளுடைய புருஷரும் விளக்குகளை வைத்துக் கொண்டு எல்லா இடங்களையும் பார்த்து, இன்னின்ன சாமான்கள் களவாடப்பட்டுப் போயின என்று கூற, போலீஸார் அவைகளுக்கு ஜாப்தா தயாரித்து ஒரு மக ஜர் எழுதி, அதில் எல்லோருடைய கையெழுத்து களையும் பெற்றுக்கொண்டு போய்ச் சேர்ந்தனர். ஜனங் களும் தம் தம் வீட்டிற்குச் சென்றனர். களவுபோன சொத்துகள் சுமார் இரண்டாயிரம் ரூபா பெறுமென்று வீட்டுக்காரர் மதிப்பிட்டார். அவரும், அமிர்தம்மா ளும் சொத்துக்கள் போனதைப் பற்றி வருந்தியதைக் காட்டிலும், அதிகமாய், பட்டம்மாளுடைய காதுகள் அறுந்து போனதைப் பற்றி விசனித்து, உடனே டாக் டரை வரவழைத்து மருந்து வைத்து கட்டுகள் போடச் செய்தனர். இரவு முழுதும் அதன் வேதனையைச் சகிக்க மாட்டாதவளாய்த் தவித்திருந்த பட்டம்மாள் பொழுது விடிந்தபின் தான் ஸ்திரீகளின் ஆஸ்பத்திரிக்குப் போய் மருந்து போட்டுக்கொண்டு வருவதாய்ச் சொல்லிவிட்டு வெளியில் செல்ல முயன்றாள்.

அமிர்தம்மாள்:—அறுந்துபோன காதுகளோடு வெளி யில் போவது உனக்கு வெட்கமாயில்லையா? நேற்று வந்த டாக்டரை இங்கேயே வரவழைப்போமே!

பட்டம்மாள்:— திருட்டுப்போன பொருள்களுக்கு வட்டியா! இன்னம் டாக்டருக்கு வேறே கொடுக்க வேண்டுமா? இதோ ஓர் அடியில் ஆஸ்பத்திரி இருக் கிறது. திருடர்கள் வந்து காதுகளை அறுத்துவிட்டால், அதனால், என்ன அவமானம் வந்துவிடப் போகிறது. அதற்காக யாரும் என்னைப் பற்றி இழிவாக நினைக்க

மாட்டார்கள்—என்று கூறிவிட்டு வெளிப்பட்டுத் தன் புருஷன் மறைவாக இருந்த வீட்டை யடைந்து, கதவைத் தட்ட, அவன் கதவைத் திறந்து மறுபடி தாழிட்டுக் கொண்டு அவளுடன் உள்ளே சென்றான். இருவரும் கூடத்தை அடைந்தனர்.

கலியாணசுந்தரம்:— நேற்றிரவு உங்கள் வீட்டில் திருடன் புகுந்து சொத்துக்களை யெல்லாம் கொண்டு போய் விட்டானமே! எவ்வளவு சொத்துப் போயிருக்கும்?

பட்டம்மாள்:—சுமார் இரண்டாயிரம் ரூபாய் பெறுமானமுடைய சொத்துக்கள் போய்விட்டன. இதோ பாருங்கள், என் காதுத்துளைகளை அறுத்து வைரக் கம்மல்களையும் கொண்டுபோய் விட்டார்கள்.

கலியாணசுந்தரம்:—அடி பாவி! நமக்கு வரவேண்டிய சொத்துக்களில் இரண்டாயிரம் ரூபா பெறக்கூடிய சொத்துக்கள் போய்விட்டனவா! கம்மல்கள் ஆயிரம் ரூபாய் பெறுமே! அவர்கள் காதை அறுக்கும் வரையில் நீ எருமை மாடுபோல் தூங்கினயா?

பட்டம்மாள்:— நான் விழித்துக்கொண்டு கத்தினேன். அதற்கு மேல்தான் அவர்கள் என் கம்மலைப் பிடித்து இழுத்துப் பிடுங்கிக்கொண்டு போனார்கள்.

கலியாணசுந்தரம்:— அடாடா! சும்மாவா போய் விட்டார்கள். எல்லாரும் உன்னைப் போட்டுச் சாணி துவைப்பதுபோல் துவைக்காமல் போய்விட்டார்களே! அவர்கள் அப்படிச் செய்திருந்தால் உன் கொழுப்பு அடங்கி இருக்கும். அநியாயமாய் உன்னைச் சும்மாவா விட்டுப் போய்விட்டார்கள். அடாடா, அப்போது நான் அங்கே இல்லாமல் போய்விட்டேனே! இருந்

திருந்தால் உன்னை மர்த்தனம் பண்ணும்படி திருடர்களிடம் சிபார்சு செய்திருப்பேன்.

பட்டம்மாள்:—என்னைக் கீழே போட்டு மர்த்தனம் பண்ண வேண்டுமென்ற ஆசை உங்களுக்கிருந்தால், அதை நீங்களே செய்யுங்களேன்; அன்னிய புருஷர்களான முரட்டுத் திருடர்கள் என்னைத் தொட்டு வதைப்பதைப் பார்த்துச் சந்தோஷமடைய வேண்டுமா?

கலியாணசுந்தரம்:—ஆம். அடைய வேண்டும். அதிருக்கட்டும். நீ இப்போது இங்கே எதற்காக வந்தாய்? இனியும் சொத்துக்கள் நமக்குச் சொந்தமாகாவிட்டால், மறுபடியும் திருடர் வந்து இன்னமும் சொத்துகளை எடுத்துக்கொண்டு போனால், நமக்கு மேன்மேலும் நஷ்டம் உண்டாகும் என்பது உன் மனதில் படுகிறதா?

பட்டம்மாள்:—நான் இந்தச் சங்கதியை உங்களிடம் தெரிவித்துவிட்டுப் போகவேண்டுமென்று நினைத்து மருந்து போட்டுக்கொள்ள ஆஸ்பத்திரிக்குப் போவதாய்ச் சொல்லிவிட்டு இங்கே ஓடி வந்தேன். என் காதுகள் அறுபட்டது நமக்குக் கடவுளின் தண்டனை என்ற எண்ணம் என் மனதில் உண்டாகிறது. நாம் அக்கிரமமாய் என் அண்ணனுடைய சொத்துக்களை அபகரிக்க எண்ணுவதற்காகக் கடவுள் இந்தத் தண்டனையைக் காட்டி நம்மை எச்சரிக்கிறார்போல் இருக்கிறது! என் மனதில் பெரிதும் அச்சம் உண்டாகிறது. நமக்கு அந்த அநியாயச் சொத்து வேண்டாம். அவர்களாய்ப் பார்த்து மனதாரக் கொடுக்கும் ஒரு பாகத்தோடு நாம் திருப்தியடைவோம்.

கலியாணசுந்தரம்:—ஆ! என்ன சொன்னாய்! எனக்கு நீ வேதாந்தமா போதிக்கிறாய்! உனக்கு அவ்வளவு

தைரியமா நாயே!—என்று கூறியபடி தனது வலது கையை முஷ்டி செய்துகொண்டு ஓங்கி அவளுடைய முதுகில் ஒரு குத்து விடவே, அவள், "ஐயோ, இல்லை இல்லை, நான் இனி ஒன்றும் சொல்லமாட்டேன். உங்கள் விருப்பத்தை உடனே நிறைவேற்றுகிறேன். நீங்கள் அடிக்கும் அதிர்ச்சியினால், காதுப் புண்களில் நோவுண்டாகிறது. காதுப் புண்கள் ஆறினபின், உங்கள் கைகொண்ட மட்டும் அடியுங்கள்; சந்தோஷமாய் ஏற்றுக் கொள்ளுகிறேன்" என்று மிக நயமாய் வேண்டிக்கொண்டாள்.

கலியாணசுந்தரம்:—புத்தி கெட்ட கழுதை! எனக்கு நீயா புத்திசொல்ல வருகிறாய்! புருஷனுடைய பேச்சை இதுவரையில் தட்டிய குற்றத்திற்காக அல்லவா கடவுள் உன் காதுகளை அறுத்துத் தண்டித்தார். ஓடு நாயே! எனக்கெதிரில் நிற்காதே! காரியத்தை முடிக்காமல் எனக்கெதிரில் வந்தால், உன் தலையை சிரைத்து மொட்டை யடித்து சாணியை அப்பி, வெளியில் துரத்தி விடுவேன். ஓடடீ காதறுபட்ட மூளீ—என்று கூறியபடி அவளுடைய கழுத்தைப் பிடித்துத் தள்ளிக் கொண்டு போய்க் கதவைத் திறந்து அவளை வெளியில் அனுப்பிவிட்டு, கதவை மூடிக்கொண்டு மறுபடி உள்ளே போய்விட்டான்.

பட்டம்மாள் ஆஸ்பத்திரிக்கு ஓடி மருந்து போட்டுக்கொண்டு வீட்டிற்குப் போய் விசனத்தோடு ஒரு மூலையில் படுத்துக்கொண் டிருந்தாள்.

அன்றைய தினம் மாலையில் அந்த வீட்டின் முன்புறத்தில் ஒரு வண்டி வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய கலியாணசுந்தரம் அப்போதே ஊரிலிருந்து

வருகிறவன்போல் உள்ளே வர, அவனைக் கண்ட மாமனார் சந்தோஷத்தோடு அவனை வரவேற்று உபசரித்தார். அமிர்தம்மாளும் ஓடி ஓடி மாப்பிள்ளைக்கு ஆக வேண்டிய உபசரணைகளைச் செய்தாள். திடீரென்று தன் கணவன் வந்ததைக் கண்ட பட்டம்மாள் அவனுடைய கருத்தை யூகித்தறிய மாட்டாமல், திகிலும் அச்சமும் கொண்டு வேதனையி லாழ்ந்திருந்தாள்.

கலியாணசுந்தரம் மாமியாரால் உதவப்பட்ட பலகாரம் காப்பி முதலியவற்றை அலட்சியமாய் ஒதுக்கித் தள்ளிவிட்டு, தான் வந்தால் வழக்கமாய்ப் படுத்துக் கொள்ளும் ஓர் தனியான அறைக்குப் போய் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, பட்டம்மாளைக் கூப்பிட, அவள் மிகுந்த நடுக்கத்துடன் அவனிடம் போய்ச் சேர்ந்தாள். அப்போது அமிர்தம்மாள் சற்று தூரத்தில் சுவரின் மறைவில் இருந்தா ளென்பது கலியாணசுந்தரத்துக்குத் தெரியுமானாலும், அதை அறியாதவன் போல் நடிக்கத் துடங்கி, "காதறுந்த மூளீ! வா இப்படி! நான் இப்போது கேட்பதற்கு அடக்கமாகப் பதில் சொல்ல வேண்டும். நாம் பேசுவது மாமியின் காதில் விழக்கூடாது" என்று கூறி, அவளது தலைப் பின்னலை கெட்டியாய்ப் பிடித்துத் தன்னருகில் இழுத்து, "உன் கள்ளப் புருஷன் உன் காதுக் கம்மல்களைக் கேட்டானும். நீ கொடுக்க மாட்டே னென்று மறுத்தாயாம். அவன் பல ஆள்களுடன் வந்து உன் கம்மல்களைப் பிடுங்கிக்கொண்டு போய்விட்டானும். யாரோ திருடர்கள் வந்ததாக மற்றவர்கள் நினைத்துக் கொள்ளட்டுமென்று வேறு சில சாமான்களையும் அவர்கள் எடுத்துக்கொண்டு போனார்களாம். ஊரார் இப்படிச் சொல்லுகிறார்களே! நீ என்ன சொல்லுகிறாய்? கள்ளப் புருஷனோடு பழகு

வதற்காக தாய் வீட்டில் வந்திருக்க விரும்புகிற நீ எனக்கு எதற்காக வாழ்க்கைப் பட்டாய்? உன் சம்பந்தத்தை அறுத்துக் கொண்டு போவதற்காக நான் இப்போது இங்கே வந்திருக்கிறேன்—என்றான்.

பட்டம்மாள்:— ஐயோ! இது பெரிய இடியாயிருக்கிறதே! நான் உங்களைத் தவிர வேறு அன்னிய மனிதனை மனதாலும் நினைக்கவில்லை. ஜனங்கள் சொல்வது அபாண்டமான புளுகு. நான் இனி ஒரு க்ஷணமும் இங்கே இருக்க மாட்டேன். உங்களோடு வந்துவிடுகிறேன். அழைத்துக் கொண்டு போங்கள்.

கலியாணசுந்தரம்:—ஹத், நாயே! இவ்வளவு தூரம் கெட்டழிந்துபோன கழுதையை நான் இனி அழைத்துக்கொண்டு போவேனா!—என்று அதட்டியபடி அவளுடைய முதுகில் ஓர் அறை அறைந்து, "உன் அப்பன் எனக்கு வேலை செய்து கொடுக்காமல் மோசம் செய்து விட்டான். நான் உன்னைக் கொண்டுபோய் வைத்துக் கொண்டால், நீதான் சம்பாதித்து குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும். அங்கேயும் விபச்சாரிக் கடை வைக்கலாமென்று நினைக்கிறாயா? உதவாது. நான் இன்னம் மூன்று தினங்கள் இங்கே இருக்கப் போகிறேன். அதற்குள் உன் அப்பன் எனக்கு வேலை சம்பாதித்துக் கொடுக்காவிட்டால், இந்தக் கத்தியால் உன்னை வெட்டிவிட்டு நானும் வெட்டிக்கொண்டு செத்துப்போகப் போகிறேன். இதுவே முடிவு; போ நாயே; எனக்கெதிரில் நிற்காதே" என்று கூறி, அவளுடைய முதுகில் பளீரென்று இன்னோர் அடி கொடுத்தான்.

அங்கு நடந்தவைகளை யெல்லாம் கவனித்துக் கொண்டு ஒளிந்துநின்ற அமிர்தம்மாள் அவர்களுக்கெதி

ரில் வந்து, "பட்டு; இங்கே திடீரென்று ஓசை கேட்டதே! என்ன அது?" என்றாள்.

பட்டம்மாள்:—(வியப்போடு) இங்கே எவ்வித ஓசையும் உண்டாக வில்லையே! நாங்கள் சந்தோஷமாய்த் தானே பேசிக்கொண் டிருக்கிறோம்.

அமிர்தம்மாள்:—என்ன, பட்டு, நீ பேசுவது ஆச்சசரியமா யிருக்கிறதே! உனக்கு அடி விழுந்த மாதிரி ஓசை கேட்டது! நீ இல்லை என்கிறாயே! மாப்பிள்ளை உன்னை அடித்தார்போல் இருக்கிறது!

பட்டம்மாள்:— என் எஜமானர் என்னை அடித்தால் அடிக்கட்டுமே. அதனால் என் உடம்பு உருகிப் போய் விடுமா! புருஷர் சந்தோஷமாய்க் கொஞ்சும்போது அதை எவ்வளவு ஆனந்தமாய் ஏற்றுக்கொள்ளுவேமோ அது போலவே, அவர்கள் அடிப்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அடிக்க உரிமை உடையவர்கள் அடித்ததாகவே வைத்துக் கொண்டாலும், அதைக் கேட்பதற்கு யாருக்கும் அதிகாரமில்லை. நீ போய் உன் வேலையைப்பார்.

அமிர்தம்மாள்:—மாப்பிள்ளை! பட்டம்மா. அறியாத பேதை. அவளிடம் கோபம் காட்டவேண்டாம். உங்கள் பிரியம்போல் காரியத்தை சீக்கிரம் முடிக்க நான் ஏற்பாடு செய்கிறேன். குழந்தையும் நீங்களும் சிரிப்பும் விளையாட்டுமாய் இருங்கள். அதுதான் எங்களுக்கும் சந்தோஷத்தை உண்டாக்கும். பட்டு, வா கண்ணா. மாப்பிள்ளைக்கு ஹல்வா செய்து வைத்திருக்கிறேன். எடுத்துக்கொண்டு வந்து கொடுத்து, அவர்களுக்கு சந்தோஷம் உண்டாகும்படி நடந்துகொள்—என்று கூறி விட்டு பட்டம்மாளை அழைத்துக்கொண்டு அப்பால்

போய்விட்டாள். அதன் பிறகு பட்டம்மாள் ஒரு வெள்ளிப் பாத்திரத்தில் ஹல்வா எடுத்துக்கொண்டு போய், கலியாணசுந்தரத்துக்குக் கொடுக்க முயலவே, அவன் ஹல்வா முழுதையும் எடுத்துச் சாக்கடையில் எறிந்துவிட்டு, தட்டைத் தூக்கி சுமார் பத்து கஜ தூரத்தில் எறிந்து, அவளுடைய கழுத்தில் கையைக் கொடுத்து வெளியில் தள்ளிவிட்டான். அந்தச் சம்பவத்தையும் அமிர்தம்மாள் கவனித்துக்கொண் டிருந்தாள்.

வெளியில் போயிருந்த கிழவர் மாலையில் வீட்டிற்கு வந்து சேர்ந்தார். அமிர்தம்மாள் அவருடன் முகம் கொடுத்துப் பேசாமல் வெறுப்போடு தூர உட்கார்ந்திருந்தாள். அப்போது அவர்களுடைய வேலைக்காரி அங்கே வந்து, "எஜமானே, நேற்று இங்கே திருட்டு நடந்ததைப் பற்றியும் உங்கள் பிள்ளை இப்போதுதான் கேள்வியுற்றாராம். பட்டம்மாளைப் பார்க்கவேண்டுமென்ற ஆக்லாதம் உண்டாயிற்றாம். அதற்காக அவரும், உங்கள் மருமகளும் வந்து வாசலில் காத்திருக்கிறார்கள். பட்டம்மாளைப் பார்த்து இரண்டு வார்த்தைகள் பேசிவிட்டுப் போகவேண்டுமாம். வேறு எதற்காகவும் அவர்கள் வரவில்லையாம். உள்ளே வரலாமா என்று கேட்டுக்கொண்டு வரச்சொன்னார்கள்" என்றாள்.

'அதைக்கேட்ட கிழவர் ரௌத்திராகாரமான கோபத்தோடு துள்ளி எழுந்து, "ஹா! அவர்களா வந்திருக்கிறார்கள்! அவர்கள் விசாரிக்காததுதான் எங்களுக்குக் குறையா யிருந்ததோ! அவர்களுக்கு யார் அழைப்புச் சீட்டு அனுப்பினார்கள்! அவர்களுக்கும் எங்களுக்கும் எவ்வித சம்பந்தமும், உரிமையும் இல்லை என்றும், எங்களுடைய ஆயுள் முடிகிற வரையில் அவர்கள் எங்களுடைய முகத்தில் விழிக்கக் கூடாதென்றும் சொல்லி,

உடனே போகச் சொல்'' என்று மறுமொழி கூறி யனுப்பினர்.

அங்கு நடந்த சம்பாஷணையைக் கேட்டுக்கொண் டிருந்த அமிர்தம்மாள் வேலைக்காரியை நோக்கி, "அடீ, அவர்கள் எங்களுடைய சம்மதி இல்லாமல் வீட்டிற்குள் அடி வைத்தால், துடைப்பக்கட்டை அடி கிடைக்கும் என்று நான் சொன்னதாகச் சொல்'' என்றாள்.

வேலைக்காரி உடனே வெளியில் போய், பெரியோர் இருவரும் கூறிய மறுமொழிகளைக் கூற, சிவராமகிருஷ்ணன் பரிதாபகரமான பார்வையாக மங்களத்தின் முகத்தைப் பார்த்தான்.

மங்களம், "ஐயோ! மகா பாவியாகிய என்னை ஏன் நீங்கள் கலியாணம் செய்து கொண்டீர்கள்! என் பொருட்டுத் தாயையும், தகப்பனாரையும், சகோதரியையும், சொத்துக்களையும் இழந்து பரிதவிக்கிறீர்களே! நான் என் உயிரை மாய்த்துக்கொண்டால், அப்போதாவது இவர்களுடைய கோபம் தணியுமோ என்னவோ தெரியவில்லையே! ஆ! கொடுமையே! கொடுமையே!'' என்று கூற, அவளுடைய கண்களில் இருந்து கண்ணீர் பொங்கி வழிந்தது. சிவராமகிருஷ்ணன் குனிந்த தலையை நிமிர்த்தாமல், "வா, மங்களம், போகலாம்'' என்று அன்பான குரலில் கூறி, விரக்தியோடும் சோர்வாகவும் நடக்க, மங்களம் அவனைத் தொடர்ந்து சென்றாள்.

அன்றைய தினம் இரவு சுமார் எட்டு மணி வரையில் வெளியில் போயிருந்த கலியாணசுந்தரம் தான் வேறிடத்தில் சாப்பிட்டு விட்டதாகவும், தன்னை அநாவசியமாய் உபத்திரவிக்க வேண்டாமென்றும் சொல்லி

விட்டுப் படுத்துக்கொண்டான். பட்டம்மாளும் அவனுக்குச் சற்று தூரத்தில் படுத்துக்கொண்டாள்.

அமிர்தம்மாளும், அவளுடைய கணவனுமான கிழவரும் தமக்குத்தாமே தனியான குரலில் முணுமுணுத்துக்கொண்டு மேன்மாடத்தில் இருந்தனர்.

அமிர்தம்மாள்:—வயது குட்டிச் சுவருக்கு ஆனமாதிரி ஆய்விட்டது. கடிதம் வந்ததுமுதல் நான் கிளிப்பிள்ளைக்குச் சொல்வதுபோல் சொல்லிக்கொண்டே இருக்கிறேன். எவனுக்காவது ஆயிரம் ஐந்நூறு லஞ்சம் கொடுத்தாவது மாப்பிள்ளைக்கு ஓர் உத்தியோகம் சம்பாதித்துக் கொடுங்கள் என்று சொல்லுகிறேன். எருமை மாட்டின் முதுகில் மழை பெய்த மாதிரி இருந்தால், அநியாயமாய்ப் பெண் நரக வேதனைப்படுகிறது.

கிழவர்:— வேலை காலி இருந்தால், லஞ்சம் கொடுத்து முயற்சி செய்து பார்க்கலாம். எந்த ஆபீஸிலும் வேலை காலி இல்லையே! யார் என்ன செய்கிறது! எந்த உத்தியோகஸ்தனுக்காவது வாந்திபோதி வர வேண்டுமென்று வேண்டிக்கொள்.

அமிர்தம்மாள்:—என்ன இருந்தாலும், உங்களுக்கு திறமை போதாது. நான் ஆண்பிள்ளையாயிருந்தால், இந்த ஊரையே கட்டி மேய்த்துவிடுவேன்.

கிழவர்:—அப்படித்தான் ஒவ்வொருவரும் நினைத்துக் கொள்வது வழக்கம். அதெல்லாம் உப்புக்காகிறதா, புளிக்காகிறதா?

அமிர்தம்மாள்:—சரி; என் பேச்சு எதற்கும் உதவாததென்றே வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் காரியத்திற்கு உதவக்கூடிய பேச்சாய்ப் பேசுங்கள். மாப்பிள்ளை மூன்று நாள்கள் பொறுத்துப் பார்க்கப் போகிறார்.

அதற்குள் வேலே செய்து வைக்காவிட்டால், கத்தியால் பெண்ணேயும் குத்திப் போட்டுவிட்டு, அவரும் தம்மைக் குத்திக் கொன்று கொள்ளப் போகிருராம். அதைத் தடுக்க நீங்கள் என்ன செய்யப் போகிருர்கள்?

கிழவர்:—எனக்கு ஒன்றும் தோன்றவில்லே. நீ எதை வேண்டுமானுலும் செய்துகொள். மணி பத்தாகிறது. பசி வயிற்றைக் கிள்ளுகிறது. எழுந்து போய்ச் சாப்பாடு பரிமாறு.

அமிர்தம்மாள்:—வீடு தேடி வந்த மாப்பிள்ளே இங்கே சாப்பிடவில்லே. உங்களுக்கு மாத்திரம் சாப்பாடு வேண்டி யிருக்கிறதா? உங்களுக்கும் சாப்பாடு வேண்டாம். அவருடைய மனஸ்தாபம் தீரும்படி ஏதாவது நீங்கள் ஏற்பாடு செய்கிற வரையில் உங்களுக்கு இந்த வீட்டில் சாப்பாடு கிடைக்காது.

கிழவர்:—சரி; அதுதான் நல்ல வேலே. மாப்பிள்ளேயும் பெண்ணும் வெட்டிக்கொண்டு மடிவதைப் பார்க்காமல் அதற்குமுன் நான் பச்சைப் பல்லக்கில் ஏறிவிடுவேன். அதற்குப் பிறகு தெரியும் உன் வாழ்வு.

அமிர்தம்மாள்:—இதெல்லாம் யாரை ஏமாற்றுகிற வித்தை. இறந்துபோய் விடுவதாய்ப் பயமுறுத்தினுல், உடனே சோறு கிடைத்துவிடுமென்கிற எண்ணம்போல் இருக்கிறது. அது என்னிடம் பலிக்காது. சமையலறையைப் பூட்டிச் சாவியை என் கையில் வைத்துக்கொண்டிருக்கிறேன். பணப் பெட்டியின் சாவியும் என்னிடம் இருக்கிறது. உங்களுக்கு இன்று பூர்த்தியான விரத தினம். பட்டினி கிடந்தால்தான் மூர்க்க குணம் படிமானத்துக்கு வரும். நீங்கள் இங்கேயே இருங்கள். நான்

போய்ப் படுத்துக் கொள்ளுகிறேன்— என்றுகூறியபடி அப்பால் செல்லத் துடங்கினாள்.

கிழவர்:—அடி பாவி! நான் நல்ல அறிவோடு திடகாத்திரமா யிருக்கும்போதே, என்னை நீ பட்டினி போட்டு, பணப் பெட்டியின் சாவியையும் எடுத்துக் கொண்டு, என்னை உயிரோடு கொல்லப் பார்க்கிறாயே! எனக்குத் தள்ளாமை வந்துவிட்டால், என் நிலைமை என்னவாகுமோ தெரியவில்லையே!

அமிர்தம்மாள்:— நான்தான் வீட்டிற்கு அதிகாரி என் இஷ்டப்படி நீங்கள் நடந்துகொள்ளா விட்டால், உங்களை வீதியில் துரத்திவிடுவேன்.

கிழவர்:—எல்லாச் சொத்துக்களும் என்னால் சம்மாதிக்கப் பட்டவை; நீ உன் தகப்பன் வீட்டிலிருந்து ஒரு துரும்புகூடக் கொண்டுவர வில்லையே! எல்லா அதிகாரமும் உனக்கு எங்கிருந்து வந்தது?

அமிர்தம்மாள்:— இத்தனை வருஷ காலமாய் உங்களுடைய உடம்பைப் பொன்போலக் காப்பாற்றி, நீங்கள் ஓடியாடிப் பொருள் தேடக்கூடியபடி உங்களை ஆரோக்கியமாய் வைத்து, பணம் சம்பாதிக்க யுக்திகள் சொல்லிக் கொடுத்தவள் நானல்லவா. நீங்கள் வெளியில் போய் ஆடும் வெறும் பொம்மை; சூத்திரக் கயிற்றை வைத்துக் கொண்டு உங்களை ஆட்டியவள் நான். ஆகையால், நான்தான் எல்லாச் சொத்துக்களுக்கும் உண்மையான அதிகாரி.

கிழவர்:—ஓகோ! அப்படியா! சரி; நீயே அதிகாரியாயிரு. சமையலறையின் கதவைப் பூட்ட உனக்கு அதிகாரமிருந்தால், அதை உடைக்க எனக்கு அதிகாரம் உண்டு என்பதை இப்போதாவது தெரிந்துகொள். இதோ நான்

போய் பூட்டை உடைத்துக் கதவைத் திறந்து நானே சாப்பாட்டை எடுத்துப் பரிமாறிக்கொண்டு சாப்பிடப் போகிறேன்.

அமிர்தம்மாள்:— ஓகோ! பூட்டை உடைப்பதாய்ச் சொல்ல உங்களுக்கு அவ்வளவு தைரியம் உண்டாய் விட்டதா? சமையலறைக்குப் போகும் முன் அறைக் கதவையும் இதோ பூட்டிவிடுகிறேன். நீங்கள் இரண்டு பூட்டுகளையும் உடையுங்கள் பார்க்கலாம்-என்று கூறிய படி முன் அறையின் கதவை மூடி ஒரு பெரிய பூட்டால் பூட்டிவிட்டு அப்பால் போய்விட்டாள்.

அதைக் கண்டு முற்றிலும் திகைப்படைந்த கிழவர் அவ்விடத்திலேயே சற்று நேரம் உட்கார்ந்திருந்த பிறகு எழுந்து உலாவத் தொடங்கினர். அவ்வாறு அவர் சுமார் பத்து நிமிஷ காலம் உலாவிய பின் எதையோ நினைத் துக்கொண்டு படிகளின் வழியாக இறங்கி வீட்டின் கீழ்ப்பாகத்தை அடைந்தார்.

அப்போது பட்டம்மாள் மறைவான ஓரிடத்தில் படுத்துத் தூங்கிக்கொண் டிருந்தாள். கலியாணசுந்தரம் கூடத்தில் உலாவிக்கொண் டிருந்தான். மாமனரைக் கண்டவுடன் அவன், "இன்னும் படுத்துக்கொள்ள வில்லையா? அகால வேளை ஆய்விட்டதே! நீங்கள் இன் னம் சாப்பிடவில்லைபோ லிருக்கிறதே! உடம்பு அசௌக்கியமா?" என்று மிக நயமாக வினவினன்.

கிழவர்:— உடம்பில் கொஞ்சம் கோளாறுதான். அதனல்தான் லங்கணம் போடத் தீர்மானித்தேன்.

கலியாணசுந்தரம்:— லங்கணம் பரம ஔஷதம் என்று சொல்லுவார்கள். அதை அநுசரிக்கிறீர்கள்போ லிருக்

கிறது அது நல்லதுதான். உடம்பு சீக்கிரம் ஆரோக்கிய நிலைமையை அடைந்துவிடும்.

கிழவர்:— நிரம்பவும் வாஸ்தவம். அதிருக்கட்டும். உங்களிடம் கையில் சில்லறை இருக்கிறதா? நான்கணு இருந்தால் கொடுங்கள். காலையில் நோட் மாற்றித் தரு கிறேன்.

கலியாணசுந்தரம்:— (தன் பணப்பையை எடுத்து வைத்துக்கொண்டு) நான்கணுக் போதுமா? இல்லாவிட் டால், ஒரு ரூபா தரட்டுமா?

கிழவர்:— நான்கணுவே போதுமானது. பொழுது விடிந்தவுடன் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்.

கலியாணசுந்தரம்:— நீங்கள் நான்கணுவைக் கவனத் தில் வைத்துக்கொண்டு திருப்பிக் கொடுக்க வேண்டுமா? நீங்கள் இதைத் திருப்பிக் கொடுக்க வேண்டாம்— என்றார்.

அதே சமயத்தில் ஓசை செய்யாமல் மெத்தைப் படியில் வந்து நின்ற அமிர்தம்மாள், "அங்கே என்ன செய்கிறீர்கள்? அவசரமாய் ஒரு சேதி சொல்ல வேண் டும். இப்படி வாருங்கள்" என்றாள்.

கிழவர் திடுக்கிட்டு அச்சமும் நடுக்கமும் அடைந்து கலியாணசுந்தரத்தினிடம் பணத்தை வாங்காமல், அதை வைத்துக்கொள்ளும்படி ஊமை ஜாடை காட்டிவிட்டு அங்கிருந்து படிக்கட்டண்டை போய்த் தணிவான குர லில், "என்ன காரியம்? ஏன் கூப்பிடுகிறாய்?" என்றார்.

அமிர்தம்மாள்:— கீழே என்ன செய்கிறீர்கள்?

கிழவர்:— நான் எக்கேடு கெட்டால் உனக்கென்ன? நீ போய்த் தூங்கு.

அமிர்தமாள்:— மாப்பிள்ளையிடம் நான்கணு கடன் கேட்டது எனக்குத் தெரியாதென்று நினைத்துக்கொண்டீர்களா? அதை எடுத்துக் கொண்டுபோய் ஓட்டலில் சாப்பிட உத்தேசமா? அப்படியாவது இந்தப் பாழும் வயிற்றை நிரப்பாவிட்டால், இந்த உயிர் போய்விடுமா? என்ன மானங்கெட்ட பிழைப்பு இது! கொஞ்சங்கூட மானம் ஈனம் இல்லையா?

கிழவர்:—உனக்கு நிரம்பவும் புண்ணியம் உண்டு. நிறுத்திக்கொள் உன் பிரசங்கத்தை. மாப்பிள்ளைக்குத் தெரியப் போகிறது. உன்னை யார் கீழே இறங்கி வரச் சொன்னது. போ மேலே.

அமிர்தம்மாள்:— ஓகோகோ! நீங்கள் இப்படியெல்லாம் மிரட்டினல் நான் போய்விடுவேன் என்கிற எண்ணம் போல் இருக்கிறது. அது பலிக்காது. வாருங்கள் மேலே: நீங்கள் கீழே இருக்கக்கூடாது.

கிழவர்:—பசி காதை அடைக்கிறது! அந்த வேதனையை என்னல் சகிக்க முடியவில்லை. நீ சாப்பாடு போடுகிறதா யிருந்தால் நான் மேலே வருகிறேன். இல்லாவிட்டால், நான் வெளியில் போய்விட்டுத்தான் வரப்போகிறேன்.

அமிர்தம்மாள்:— (கோபப் பார்வையாக உருட்டி விழித்து) ஓகோ! உங்களுக்கு அவ்வளவு தைரியம் வந்துவிட்டதா! வாருங்கள் மேலே போய்ச் சாப்பாடு போடுகிறேன்—என்ருள்.

கிழவர் அதற்குமேல் பேசாமல் அவளுடன் மேன்மாடத்திற்குப் போய், தாம் அதற்குமுன் இருந்த இடத்தில் உட்கார்ந்து கொண்டார். அமிர்தம்மாள் மேன்மாடப் படிகளின் உச்சியில் இருந்த கதவை மெல்ல

மூடி உட்புறத்தில் பூட்டிக்கொண்டு, அப்பால் போய் விட்டாள். அதைத் தெரிந்துகொண்ட கிழவர் அவளுடைய வருகைக்காக சிறிது நேரம் பொறுத்துப் பார்த்தார். அவள் வரவில்லை. அவள் தமக்குச் சாப்பாடுபோட உத்தேசிக்கவில்லை என்பது அவருக்கு உடனே விளங்கிவிட்டது. "ஐயோ! வேதனையே! அடெ தெய்வமே! என்ன சங்கடம் இது" என்று எண்ணியபடியே நாற்காலியில் புரண்டு புரண்டு படுத்து அப்படியே உறக்கத்தில் ஆழ்ந்துபோனார்.

அப்போது அங்கேவந்த அமிர்தம்மாள், "படுக்கையில் படுக்காமல் ஏன் நாற்காலியைப் போட்டு இப்படி மூறிக்கவேண்டும். எழுந்திருங்கள்" என்று கூறி நாற்காலியைப் பிடித்து உலுக்கினாள்.

கிழவர்:— (திடுக்கிட்டு விழித்துக்கொண்டு) கீழே இருந்த என்னை எதற்காக அழைத்துக்கொண்டு வந்தாய்? சாப்படு போடுவதாகச் சொன்னயே! ஏதாவது உண்டா இல்லையா?

அமிர்தம்மாள்:—மாப்பிள்ளைக்கு உத்தியோகம் உண்டா இல்லையா?

கிழவர்:—உத்தியோகம் எங்கேயும் காலி இல்லை. இருந்தால் உடனே செய்து வைப்பேன்.

அமிர்தம்மாள்:—உத்தியோகம் காலியாகிற வரையில் மாப்பிள்ளை சாப்பாட்டுக்கு என்ன செய்வார்?

கிழவர்:—அதுவரையில் நீயே சாப்பாடு போடு.

அமிர்தம்மாள்:—அது அவருக்கு அகெளரதை என்கிறார். சொத்துக்களை எல்லாம் நாம் பட்டம்மாளுக்குத் தானே கொடுக்கப் போகிறோம். இப்போதே அவள்

பேரில் எழுதி வைத்துவிடுங்கள். அதற்குப் பிறகு மாப் பிள்ளை இங்கே இருப்பார்.

கிழவர்:—நல்ல யோசனை. சொத்துக்கள் அவர்களுக் குப் போய்விட்டால் நாம் அவர்களுடைய விருந்தாளி களாய் இருப்போம். அது நமக்கு அகௌரதை இல் லையா? நமக்குப் பிறகு சொத்துக்கள் பெண்ணுக்குச் சேருமென்று நாம் எழுதிக் கொடுக்கலாம். அதோடு திருப்தி அடைந்து அவன் இங்கே இருக்கட்டுமே!

அமிர்தம்மாள்:—அவர் இருக்கமாட்டார்.

கிழவர்:—அப்படியானல் போகட்டும். பெண் மாத் திரம் இருக்கட்டும்.

அமிர்தம்மாள்:—அவர் மூன்று தினங்கள் வாய்தா வைத்திருக்கிறார். அதற்குள் நாம் ஒரு வழி செய்யா விட்டால், அவர் பெண்ணையும் கத்தியால் குத்திப் போட்டு விட்டுத் தாமும் குத்திக் கொன்று கொள்ளப் போகிறாராம். அந்த முக்கியமான சங்கதியைக் கவனிக் காமல் நீங்கள் முரட்டுத்தனமாய்ப் பேசுகிறீர்களே!

கிழவர்:—திடீரென்று சொத்துக்களை யெல்லாம் ஒரு வர் பேரில் எழுதி வைப்பதென்றால், அது பிரமாதமான காரியம். இதைப்பற்றி நன்றாக யோசனை செய்துதான் ஒரு முடிவிற்கு வரவேண்டும்.

அமிர்தம்மாள்:— அந்த யோசனையை இப்போது தான் செய்யுங்களேன். இன்னம் அரை மணிக் குள் முடிவு சொல்லுங்கள்.

கிழவர்:—நீ சுத்தப் பைத்தியக்காரத் தனமாய்ப் பேசுகிறாயே! அவன் அவ்வளவு முட்டாளல்ல. அந்த மாதிரி அவன் கத்திக் குத்தில் ஒருநாளும் இறங்கமாட் டான். நீ அதைப் பற்றிக் கவலைப்படாதே!

அமிர்தம்மாள்:—இதைத்தான் விஷப்பரீட்சை யென்பது. திடீரென்று அவர் பெண்ணைக் கொன்றுவிட்டால் என்ன செய்கிறது. பெண் போனால் வருவாளா? சொத்து போனால், வரும்.

கிழவர்:—எனக்கு வயதாய் விட்டது. இனி எனக்கு எங்கிருந்து சொத்து வரப் போகிறது? தள்ளாத காலத்தில் நாம் சோற்றுக்கும் துணிக்கும் அயலாருடைய கையைப் பார்த்துத் தொண்ணூந்து நிற்கவேண்டுமென்கிறாயா?

அமிர்தம்மாள் :— சொத்துக்களை நாம் நம்முடைய பெண்ணுக்குத்தானே கொடுக்கப் போகிறோம். சொத்துக்கள் எங்கேயோ போய்விடும் என்று ஏன் நாம் அஞ்சவேண்டும். நம்முடைய வயிற்றில் பிறந்த பெண் நம்முடைய சொத்துக்களை யெல்லாம் வாங்கிக் கொண்டு நமக்குச் சாப்பாடு போடாமல் இருப்பாளா! அவள் ஒழுங்கான மனப்போக்குடையவள் அல்லவா! அவளைப்பற்றி நீங்கள் இப்படி யெல்லாம் சந்தேகப்படுவது சரியேயல்ல.

கிழவர்:—எனக்கு அடங்கி நடக்க வேண்டியவளான நீயே இதோ பிரத்தியக்ஷமாய் என்னைப் பட்டினி போட்டுக் கொல்கிறாயே! உன் வயிற்றில் பிறந்த பெண் தன் புருஷனுடைய போதனையின்மேல் இதே போல் ஏன் செய்யமாட்டாள்?

அமிர்தம்மாள்:— சரி; நான் சொல்வதை நீங்கள் கேட்கமாட்டேனென்கிறீர்கள். நீங்கள் இந்தக் காரியத்தை முடிக்கிற வரையில் நான் உங்களுக்குச் சாப்பாடும் போடப்போகிறதில்லை; காசும் கொடுக்கப் போகிறதில்லை; மாதக் கணக்கில் நீங்கள் பட்டினி கிடந்தாலும், நான் கவனிக்கப் போகிறதில்லை.

கிழவர்:—சரி; அப்படியே செய். என்னோடு பேச வேண்டாம். எனக்குத் தூக்கம் வருகிறது. நான் படுத்துக்கொள்கிறேன் — என்று கூறியபடி, தமது படுக்கையை எடுத்துப் பிரிக்க முயன்றார்.

அமிர்தம்மாள்:—சின்னக் குழந்தை பாவம். இதற்குள் தூக்கம் வந்துவிட்டதோ. நீங்கள் இன்று தூங்கும்படி நான் விடவே போகிறதில்லை—என்று கூறியபடி படுக்கையைப் பிடுங்கிப் பக்கத்து அறைக்குள் வீசி எறிந்தாள்.

அதைக் கண்ட கிழவர் திகைத்துப்போய், "அடி பாவீ, என்னை ஏனடி இப்படி உயிரோடு கொல்லுகிறாய்! நமக்கு ஏதோ அழிவுகாலம் வந்துவிட்டதுபோலிருக்கிறது. அதனால்தான் உனக்கு இப்படிப்பட்ட துர்ப்புத்தி உண்டாயிருக்கிறது.

அமிர்தம்மாள்:—நமக்கு ஒருநாளும் அழிவு காலம் வராது. நீங்கள் அநாவசியமாய்ப் பயப்படுகிறீர்கள். நீங்கள் இப்போது முடிவாய் என்ன சொல்கிறீர்கள். சொத்துக்களைப் பட்டம்மாளின்மேல் எழுதி வைக்கப் போகிறீர்களா இல்லையா? எழுதி வைக்கிற வரையில் நீங்கள் சாப்பிடவும் விடமாட்டேன்; தூங்கவும் விடமாட்டேன்.

கிழவர்:—அடீ, ராக்ஷஸீ, ஏனடீ என்னைப் போட்டு வதைக்கிறாய்! நீ எனக்குச் சாப்பாடு போடாவிட்டாலும், அக்கறை இல்லை. நீ போ. நான் படுத்துத் தூங்கவேண்டும். என் பிராணன் போகிறதடீ.

அமிர்தம்மாள்:—முடியவே முடியாது. நான் போகமாட்டேன்.

கிழவர்:—அடி பாவீ, இப்போது என்னடீ செய்யச் சொல்லுகிறாய்?

அமிர்தம்மாள்:— நம்முடைய சொத்துக்களை யெல்லாம் பட்டம்மாள் பேரில் எழுதி வைக்க வேண்டும்.

கிழவர்:—சரி; எழுதி வைக்கிறேன். இன்னம் என்ன செய்யச் சொல்லுகிறாய்?

அமிர்தம்மாள்:—இனி நீங்கள் சாப்பிடலாம்; ஆனல் குழம்பு பதார்த்தங்கள் எதுவும் மிச்சமில்லை. தண்ணீரில் போட்ட சாதந்தான் இருக்கிறது.

கிழவர்:—ஏன் அப்படிச் செய்தாய்? நான் சாப்பிட மாட்டேன் என்று நினைத்துக் கொண்டாயா?

அமிர்தம்மாள்:—உங்கள் மனதை மாற்றுவதற்குள் பொழுது விடிந்து போகுமென்று நினைத்தேன். அதற்குள் சாதம் கெட்டுப் போகுமென்று தண்ணீர் விட்டு வைத்தேன். மிச்சமிருந்த குழம்பு முதலியவைகளை வேலைக்காரிக்குக் கொடுத்து விட்டேன்—என்றாள்.

கிழவர்:—சரி; சாதத்திற்குக் கொஞ்சம் உப்பாவது போடுவா யல்லவா—என்று கூறியபடி எழுந்தார்.

இருவரும் உடனே சமையலறைக்குச் செல்ல, அங்கு கிழவருடைய சாப்பாடு முடிவடைந்தது. அவர் செத்தோம் பிழைத்தோமென்று அங்கிருந்து தமது படுக்கையறைக்கு வந்து சேர்ந்தார். சொத்துக்களைப் பட்டம்மாளின்மேல் எழுதி வைத்துவிட்டதாக ஒரு காகிதத்தில் கிழவர் அப்போதே ஒரு நகல் தயாரித்தார். அதைப் பெற்றுக்கொண்ட பிறகே, அமிர்தம்மாள் அவரைப் படுக்க விட்டு விட்டுத் தான் வேறிடத்தில் படுத்துக் கொண்டாள்.

மறுநாளைய பகலில் அதேபோல் ஒரு பத்திரம் எழுதி ரிஜிஸ்டர் செய்யப்பட்டு, பட்டம்மாளினது கைக்குப் போய்ச் சேர்ந்தது. அவள் அபாரமான சந்தோஷமடைந்தவளாய் அதைக் கொண்டுபோய்த் தன் புருஷனிடம் காட்ட, அதைப் படித்துப் பார்த்த கலியாண சுந்தரம், "சபாஷ்! இப்போதுதான் நீ என் கண்ணாட்டி உண்மையில் நீ எனக்கு இனி பட்டம்மாள்தான். உன்னை இனி நான் அடிக்கவும் மாட்டேன், வையவும் மாட்டேன்; உன்னைப் பிரியமாக நடத்தப் போகிறேன்' என்று கூறி அவளை வாரி அணைத்து முத்தமிட்டு அவளுடன் கொஞ்சிக் குலாவி ஸரஸ ஸல்லாபம் செய்யத் துடங்கினான்.

அதுவரையில் புருஷன் தன்னிடம் அவ்வளவு ஆசையோடு நடந்ததை அறியாத பட்டம்மாள் ஆநந்தத்தினால் பொங்கிப் போனவளாய், "சரி; இப்போது உங்கள் மனதுக்குத் திருப்திதானே? இனிமேலும் உத்தியோகம் பார்க்க விரும்புகிறீர்களா?" என்றாள்.

கலியாண சுந்தரம் :—இனி நீ சொல்வதை நான் கேட்கிறேன். நான் ஏதாவது உத்தியோகம் வகித்துப் பொருள் சம்பாதிக்க வேண்டுமென்று நீ விரும்பினால், நான் அப்படியே செய்கிறேன்.

பட்டம்மாள்:—இனி உங்களுக்கு எதற்காக உத்தியோகம். நமக்கு ஏராளமான சொத்துக்கள் இருக்கின்றன. சொத்துக்களை மேற்பார்வை பார்ப்பதற்கு உங்களுக்குப் பாடு சரியாயிருக்குமே!

கலியாணசுந்தரம்:--ஓகோ! உன் சொத்துக்களையெல்லாம் நானே கவனித்துக் கொள்ளவேண்டுமென்கிறாயா? இதுவரையில் செய்தது போல் உன் தகப்பனாரே அதைக்

கவனிக்கமாட்டாரா? ஆனாலும் அவருக்கு வயதாய்விட்டது! அவரை உட்கார வைத்துப் பூஜிதையாய் நடத்துவதே நல்லது! இவ்வளவு விலைபெற்ற சொத்துக்களை உனக்குக் கொடுத்தவர்களான உன் தாயையும் தகப்பனையும் நாம் கடைசி வரையில் கௌரதையாய் வைத்து நடத்த வேண்டும். அதில் நீ தவறக்கூடாது.

பட்டம்மாள்:— நான் தவறுவேனா! எனக்கு அவ்வளவு தூரம் தெரியாதா! அது மாத்திரம் அல்ல. இந்தச் சொத்துகள் நியாயமாய் என் அண்ணனுக்குத்தான் சேர வேண்டும். அவர்களுடைய வயிறெரிய நாம் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டால் நமக்குக் கடவுள் கிருபை செய்யமாட்டார். ஆகையால் சொத்துக்களில் ஏதாவது ஒரு பாகத்தை என் அண்ணனுக்கு நாம் கொடுக்க வேண்டுமென்று நினைக்கிறேன்.

கலியாண சுந்தரம்:— உன் எண்ணம் போலவே செய்து விடலாம். அதைப்பற்றிக் கவலைப் படாதே! அவர் யார்? என் மைத்துனர் அல்லவா? உன்னிடம் நான் வைத்திருக்கும் பிரியம்போல் அவரிடத்திலும் எனக்குப் பிரியம் உண்டு.

பட்டம்மாள்:—சந்தோஷம். இப்போதுதான் உண்மையில் என் மனம் குளிர்ந்தது. அதிருக்கட்டும். நான் இனி என் அண்ணன், அண்ணி முதலியோரிடம் சிநேகமாயிருக்கலா மல்லவா !

கலியாண சுந்தரம்:— ஓ, இருக்கலாம். தடையே இல்லை. இனி உன் சித்தம் என் சட்டம் என்பதை நீ மனதில் நிச்சயமாய்ப் பதிய வைத்துக்கொள்.

பட்டம்மாள்:—உங்களை நான் இதுவரையில் புலியோ கரடியோ என்று எண்ணித் திகில்கொண் டிருந்தேன்.

இப்போதுதான் உங்களுடைய உண்மையான குணம் தெரிகிறது. இனி நான் உங்களுக்கு அடிமை! என் சொத்துக்களை யெல்லாம் நீங்கள் உங்களுடையவைகள் என்று எண்ணிச் செலவிடலாம். உங்களுக்குப் பணம் தேவையாகும்போ தெல்லாம் என்னிடம் கேளுங்கள். வேண்டிய பணம் தருகிறேன்.

கலியாண சுந்தரம்:— எனக்கு எதற்காகப் பணம் வேண்டும். நீதான் எனக்குத் தனம்; உன் பிரியம்தான் என் பொக்கிஷம். ஆனல் என் மனதில் ஒரு சந்தேகம் உண்டாகிறது. நான் உன் சொத்துக்களை நிர்வகிக்க ஆரம்பித்தால், பண்ணை ஆட்கள் என் சொல்லைக் கேட்பார்களோ மாட்டார்களோ. ஆகையால், நான் சொத்துக்களை நிர்வகிக்க என்க்கு அதிகாரம் கொடுத்து ஒரு பத்திரம் எழுதிக் கொடு.

பட்டம்மாள்:—அதிகாரப் பத்திரம் எழுதிக் கொடுத்தால், அது நீங்கள் எனக்குக் கீழ்ப்பட்டவர் என்ற அர்த்தத்தைக் கொடுக்கும். அந்த மாதிரியான இழிவு உங்களுக்கு உண்டாகக் கூடாது. ஆகையால் சொத்துக்களை யெல்லாம் உங்கள் பேருக்கே மாற்றிவிடுகிறேனே! நாம் இருவரும் உயிருக்குயிரா யிருக்கிறவர்கள். சொத்துக்கள் என்பேரில் இருப்பதும் உங்கள்பேரில் இருப்பதும் இரண்டும் ஒன்றுதான்.

கலியாணசுந்தரம் :— கண்ணே! நீ என்மேல் இவ்வளவு பிரியம் வைத்திருக்கிரு யென்பது இப்போது தான் தெரிகிறது. உனக்கு இந்த ராஜ்யத்தையே சன்மானம் வழங்குவதுகூடப் போதாதென்று நினைக்கிறேன். என் பேரில் சொத்துக்களை எழுதி வைப்பதாய் நீ சொல்லுகிருயே. உன் அப்பா, அம்மாள் அதற்குச் சம்மதிக்கவே மாட்டார்கள். அப்படிச் செய்ய மனப்

பூர்வமாய் உனக்கு விருப்பம் இருந்தால், அவர்களுக்குத் தெரியாமல் பத்திரம் எழுதி ரிஜிஸ்டர்செய்து கொடுத்து விட்டுப் பிறகு நீ அவர்களிடம் சொல்ல வேண்டும்.

பட்டம்மாள்:— முதலிலேயே நான் அவர்களிடம் சொன்னால், அவர்கள் தடுக்கமாட்டார்கள்.

கலியாணசுந்தரம்:— இல்லை: அவர்கள் அவசியம் தடுப்பார்கள்.

பட்டம்மாள்:—அப்படியானால், நான் அவர்களுக்குத் தெரியாமலேயே அதை முடித்து விடுகிறேன்—என்றாள்.

அதைக் கேட்ட கலியாணசுந்தரம் அவளிடம் அபாரமான பிரியம் காட்டி, அதற்குமுன் நடந்து கொண்டதற்கு மாறாய் அவளைக் கட்டித் தழுவி முத்த மிட்டு சிற்றின்ப விளையாடல்கள் நடத்தவே, அவள் முற்றிலும் ஏமாறிப்போய் சகலமான விஷயங்களிலும் அவனுடைய விருப்பத்தின்படி தான் நடந்துகொள்ள வேண்டுமென்ற தீர்மானத்திற்கு வந்துவிட்டாள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு அவர்கள் இருவரும் ஏதோ சாக்கைச் சொல்லிவிட்டு வெளியில் போய், அவன் மறைவாக இறங்கி இருந்த வீட்டை யடைந்து, பட்டம்மாள் பேரில் மாற்றப்பட்ட சொத்துக்களை அவள் கலியாணசுந்தரத்தின் பேரில் மாற்றிவிட்டதாகப் பத்திரம் தயாரிக்கச் செய்து, அதை ரிஜிஸ்டர் செய்துகொண்டனர். பாத்திரம் கலியாணசுந்தரத்தின் வசத்திற்குப் போய்ச் சேர்ந்தது.

தம்பதிகள் இருவரும் வீட்டிற்கு வந்து சேர்ந்தனர். உடனே கலியாணசுந்தரம் தன் மாமனரை நோக்கி, "டேய், கிழக்கோட்டானே! இது வரையில்

இது உன் ராஜ்யமா யிருந்தது. பட்டம்மாள் எல்லாச் சொத்துக்களையும் என்பேரில் எழுதி ரிஜிஸ்டர் செய்து கொடுத்துவிட்டாள். உனக்கு நான் இதன் மூலம் நோட்டீஸ் கொடுக்கிறேன். இன்னம் ஒரு மணி நேரத்திற்குள் நீ கிழவியை அழைத்துக்கொண்டு இடுப்புத் துணிகளோடு வெளியில் போய்விட வேண்டும். நான் இங்கே இருக்க இஷ்டப்படாவிட்டால், போய்விடும்படி நீ கிழவியிடம் நேற்றிரவு சொன்னவ னல்லவா. இப்போது நீயே நட வெளியில். உன்னோடு எப்போதும் சண்டை போட்டுக்கொண்டே இருப்பதற்குக் கிழவியையும் அழைத்துக்கொண்டு போ'' என்றான்.

அதைக் கேட்டு, மாமனார், மாமியார், பட்டம்மாள் ஆகிய மூவரும் அபாரமான வியப்பும், திகிலும், கலக்கமும் அடைய, பட்டம்மாள், "என்ன இது? இதற்காகவா சொத்துக்களை யெல்லாம் நான் உங்கள் பேரில் எழுதி வைத்தேன்'' என்றாள்.

கலியாணசுந்தரம், "அடி, காதறுந்த செருப்பே! உன்னை யார் நடுவில் பேசச் சொன்னது! நீயும் இவர்களோடு பரதேசம் புறப்பட வேண்டுமா? போகச் சொல் இரண்டு கிழக் கோட்டான்களையும் வெளியில். இல்லாவிட்டால், உன் மூக்கையும் அறுத்து வெளியில் துரத்துவேன்; என்ன சொல்லுகிறாய்'' என்று அதட்டலாகவும் உறுதியாகவும் கூறினான்.

அவனுடைய சொற்களைக் கேட்ட மாமனாரும், அமிர்தம்மாளும், அபாரமான திகிலும் திகைப்புமடைந்து, தாம் என்ன பேசுவ தென்பதை அறியாமல் பயங்கரமாக விழித்தனர். அப்போது பட்டம்மாள் தன் கணவனைப் பார்த்து, "என்ன விளையாட்டு இது! பெரியவர்களிடம் இப்படியா விளையாடுகிறது! அவர்

கள் இருவரும் ஆயிசு காலம் முழுதும் பாடுபட்டுத் தேடிய சொத்துக்களை யெல்லாம் மனதார நமக்குக் கொடுத்தார்கள். அவர்களுக்கு நம் நன்றியறிதலைத் தெரிவித்து அவர்களைப் பூஜிதையாய் நடத்த வேண்டியதை விட்டு, கன்ன கடூரமான சொற்களைச் சொல்லலாமா! இனி இந்த மாதிரிச் சொல்ல வேண்டாம்" என்றாள்.

கலியாணசுந்தரம்:— (மிகுந்த கோபங் கொண்டவனாய்ப் பாய்ந்து பட்டம்மாளின் தலை மயிரை இறுகப் பிடித்துக்கொண்டு அவளுடைய தலையை உலுக்கிக் கன்னத்தில் ஓர் அறை கொடுத்து,) நாயே, என்னோடு எதிர்த்து வாயாட அவ்வளவு தைரியம் உனக்கு உண்டாகிவிட்டதா! நான் இவர்களோடு பேசும்போது இனி நீ குறுக்கில் பேசினால், இதோ என் மடியில் இருக்கும் பீச்சாங்கத்தியால், உன்னைக் குத்திக் கொன்று விடுவேன்—என்று கூறி, அவளை விசையாகத் தள்ளிவிட, அவள் போய்ச் சுவரில் முட்டிக்கொண்டாள்.

மாமனார்:— மாப்பிள்ளை! உமக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதா? என்ன அக்கிரமக் காரியம் இது? இப்பேர்ப்பட்ட துஷ்ட மனிதன் என்பது தெரிந்திருந்தால், நான் சொத்துக்களை எழுதி வைத்திருக்க மாட்டேனே!

மாப்பிள்ளை:—மூடடா வாயைக் கிழநாயே! நீயாடா எனக்குச் சொத்தை எழுதி வைத்தாய்! உன் முகத்தை யார் கண்டது! நீதான் உன் மகள் பேரிலேகூட எழுதி வைக்கமாட்டேனென்று இரவெல்லாம் கிழவியோடு போராடினையே! பட்டம்மாள் மாப்பிள்ளைக்கு ஆசைப் பட்டு எழுதி வைத்தாள். அதைப் பற்றி நான் உன் விஷயத்தில் தயாளம் காட்டக் கடமைப்பட்டவனே

அன்று. நீ இப்போது கிழவியோடு வெளியில் போகப் போகிறாயா இல்லையா?

மாமனார்:—அப்பா, நீ பேசுவது நிரம்பவும் ஒழுங்காக இருக்கிறது! இந்த மாதிரி யெல்லாம் நடக்குமென்று நான் எதிர்பார்த்ததுதான். அது கைமேல் பலிக்கிறது! அப்பா, கலியாணசுந்தரம், நீ செய்யும் காரியம் மகா பாபகரமானது; அநியாயமாய்க் கடவுளின் கோபத்திற்கு இலக்காகாதே! கடவுளின் கிருபையால் கிடைத்துள்ள பெருஞ் செல்வத்தை வைத்துக் கொண்டு, அதன் சொந்தக்காரர்களுடைய வயிறு எரியாதபடி ஒழுங்காய் நடந்துகொள். கடவுளின் கிருபை மேன்மேலும் உண்டாகும். இல்லாவிட்டால், கூடிய சீக்கிரம் அழிவு ஏற்படுவது நிச்சயம்.

கலியாணசுந்தரம்:— ஆகா! என்ன சொன்னாய்! யாருக்கடா அழிவு உண்டாகும்! அழிவு என்னும் சொல்லை மறுபடி நீ சொன்னால், உன் பல் உதிர்ந்து போவது நிச்சயம். மரியாதையாய் எழுந்து கிழவியை அழைத்துக்கொண்டு வெளியில் போகப் போகிறாயா? இல்லாவிட்டால், உதைத்துக் கழுத்தைப் பிடித்து வெளியில் தள்ளட்டுமா?—என்று கூறினான்.

அதுவரையில் சும்மா இருந்த அமிர்தம்மாள், "என்ன மாப்பிள்ளை, நீங்கள் பேசுவது இந்த உலகத்திலேயே இல்லாத அதிசயமா யிருக்கிறதே! இதற்காகவா நான் அரும் பாடுபட்டுச் சொத்துக்களைப் பட்டம்மாளின் பேரில் எழுதி வைக்கச் செய்தேன்" என்றாள்.

கலியாணசுந்தரம்:— அவள் பேரில் தானே எழுதி வைக்கச் செய்தாய்; என் பேரில் எழுதி வைக்கச் செய்யவில்லையே! என்னிடம் கேட்க உனக்கு என்ன அதிகார

மிருக்கிறது! கேட்க வேண்டியதை உன் பெண்ணி னிடம் கேள்.

அமிர்தம்மாள்:—அடெ பாவீ, ஒன்றையு மறியாத அசட்டுப் பெண்ணை ஏமாற்றி எங்களுக்குத் தெரியாமல் சொத்துக்களை எழுதிக் கொண்டால், எல்லாம் உனக்குச் சொந்தமாய்விடும் என்று எண்ணிக் கொண்டாயா? அது ஒருநாளும் செல்லாது. நாங்கள் ஆசைப்பட்டுப் பெண்ணுக்குக் கொடுத்தோமே யன்றி உனக்குக் கொடுக்கவில்லை. எங்களை வெளியில் அனுப்ப, பெண் ணுக்கும் அதிகாரமில்லை; உனக்கும் அதிகாரமில்லை— என்ருள்.

அதுவரையில் தூர நின்ற பட்டம்மாள் கிட்ட நெருங்கி வந்து, "வேண்டாம். இந்த மாதிரி அநியாயம் செய்யாதீர்கள். நீங்கள் உங்களுடைய கௌரவத்திற்குக் குறைவில்லாமல் இங்கேயே இருக்க வேண்டுமென்ற பிரியத்தினல் இவர்கள் என் பேரில் சொத்துக்களை எழுதி வைத்தார்கள். இப்போது இவர்கள் சொத்துக் களைக் கேட்கவில்லையே! இவர்கள் தள்ளாத காலத்தில் எங்கே போவார்கள்; சாப்பாட்டுக்கு என்ன செய்வார் கள். இவர்களுக்கு இரண்டு வேளை சாப்பாடு போட்டால், அதோடு திருப்தி யடைந்து நீங்கள் காட்டும் இடத்தில் இருக்கப் போகிருர்கள்; இவர்களால் உங்களுக்கு எவ் விதமான க்ஷ்டமோ, அதிகச் செலவோ ஏற்படப் போகிறதில்லை. அநாவசியமாய் இவர்களுடைய மனம் புண்படும்படி செய்ய வேண்டாம்" என்ருள்.

கலியாணசுந்தரம்:—இவர்களை நான் இங்கே வைத் துக்கொள்ள மாட்டேன். இவர்கள் வீடு வீடாய்ப் பிச்சை யெடுத்துச் சத்திரம் சாவடியில் படுக்கட்டும். அதைப்பற்றி எனக்கு அக்கரை இல்லை.

பட்டம்மாள்:— அதைப் பார்க்கும் ஊர் ஜனங்கள் உங்களைப் பற்றி எவ்வளவு இழிவாக நினைப்பார்கள். அதையாவது நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டாமா?

கலியாணசுந்தரம்:—அந்தக் கவலை உனக்கு எதற்கு? ஊரான் எனக்கு அண்ணனுவியோ! எவனுவது என்னைப் பற்றி இழிவாகப் பேசினுல் செருப்பைக் கழற்றி அடித்தனுப்புவேன். நான் சொல்வதை இப்போது இவர்கள் கேளாவிட்டால், அதே மரியாதைதான் இவர் களுக்கும் கிடைக்கப் போகிறது.

மாமனுர்:—(மனைவியை நோக்கி)ஆகா! சொத்துக்களை யெல்லாம் கொடுத்ததற்கு எவ்வளவு பெரிய மரியாதை கிடைக்கிறது பார்த்தாயா? நீ வைத்த வினையல்லவா இது! கேட்டுக்கொண்டு நிற்கிருயோ! போய் எங்கேயா வது கிணற்றில் விழுந்து சாகாமல் இருக்கிருயே! ஐயா, மாப்பிள்ளைத் துரையே! நீர் இவள் செய்ததற்கு வாயால் சொல்வது போதாது. கழுத்தைப் பிடித்து இவளை வெளியில் கொண்டுபோய் விடும். அப்போதுதான் விவேகம் உதயமாகும்.

கலியாணசுந்தரம்:— உங்கள் இரண்டு பேருக்குமே நான் அந்த மரியாதையை இதோ நடத்தப்போ கிறேன்—என்று கூறியபடி ஆவேசத்தோடு மாமனுர்க் கருகில் ஓட, அவர், “ஐயா, அவ்வளவு பிரயாசை உனக்கு வேண்டாம். இதோ நானே வெளியில் போய் விடுகிறேன்; என் கிட்ட வரவேண்டாம்'' என்று கூறிய படி சரேலென்று எழுந்திருந்தார்.

அமிர்தம்மாள்:—எங்கே போகிறீர்கள்? இவன் சொல்லுகிருனென்று வெளியில் போகப் போகிறீர் களா! இவனை வெளியில் போகச் சொல்லுங்கள். சொத்

துக்களை நாம் இவனுக்கும் கொடுக்க வேண்டாம். பட்டம்மாளுக்கும் கொடுக்க வேண்டாம்—என்றாள்.

மாமனார்:—அடி பைத்தியமே! உன் அசட்டுத்தனம் இன்னம் போகமாட்டேனென்கிறதே! நமக்கேதடீ இனிச் சொத்து! உண்டு இல்லை என்று உத்தரவிட நமக்கு இனி அதிகாரம் ஏது! உன் அசட்டுத்தனத்தினால் நானும் புத்தி கெட்டு இந்த நிலைமைக்கு ஆளானேன். நீ எக்கேடு கெட்டால் எனக்கென்ன! இனி நான் சந்நியாசம் வாங்கிக் கொண்டு எங்கேயாவது போகிறேன்.

அமிர்தம்மாள்:—அடே பயங்கொள்ளித் தனமே! நம்முடைய சொத்துக்களை அக்கிரமமாய் அபகரிக்கப் பார்க்கும் திருடனை வெளியில் ஓட்டத் தைரியம் இல்லையா! நீங்கள் ஆண்பிள்ளைதானா?

மாமனார்:—யார் சொன்னது அப்படி. என்னை நீ பெண்பிள்ளையாக்கி நீயே ஆண்பிள்ளையா யிருந்து வந்திருக்கிறாயே! அப்படி இருக்க, இப்போது மாத்திரம் திடீரென்று எனக்கு ஆண்பிள்ளைத்தனம் எங்கிருந்து வரும்? நீ என்னிடத்தில் காட்டும் சூரத்தனத்தை இப்போது கொஞ்சம் காட்டு பார்க்கலாம்.

கலியாணசுந்தரம்:—அடே பெண்பிள்ளையே! நீங்கள் இருவரும் பேசியது போதும். வெளியில் போய் உங்கள் தகராறை வீதியில் தீர்த்துக் கொள்ளுங்கள்.

மாமனார்:—வேண்டாமப்பா, இது கடவுளுக்குச் சம்மதமா யிராது!

கலியாணசுந்தரம்:—அடே சே போ வெளியில்—என்று கூறிக் கோபத்தோடு பாய்ந்து மாமனாருடைய கன்னத்தில் ஓர் அறை கொடுத்து அவரைப் பிடித்துப் பலவந்தமாய் வெளியில் தள்ள முயல, அதைக் கண்ட

அமிர்தம்மாள் குறுக்கில் விழுந்து தடுக்க, அவன் இருவரையும் மாறி மாறிக் குத்தியும் அடித்தும் வெளியில் கொண்டுபோய்த் தள்ளினுன்.

இருவரும் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு கலியாணசுந்தரத்தைத் தூற்றியபடி உள்ளே வர முயல, அவன் ஆவேசத்தோடு அவர்களை வீதியில் தள்ளிவிட்டுக் கதவை மூடித் தாழிட்டுக்கொண்டு உள்ளே போய்விட்டான்.

அந்தக் கூக்குரலைக் கேட்டு, அண்டை வீட்டாரும், வீதியில் போன ஜனங்களும் அங்கே வந்து கூடிச் சுலபத்தில் உண்மையைத் தெரிந்து கொண்டனர். சிலர் அமிர்தம்மாளுக்கும் கிழவருக்கும் தைரிய மொழிகள் கூறி அவர்களைத் திண்ணையில் உட்காரச் செய்தனர். சிலர் கதவைத் தட்டி, "மாப்பிள்ளை, மாப்பிள்ளை, கதவைத் திறவும்" என்றனர்.

உள்ளே சென்ற கலியாணசுந்தரம் பட்டம்மாளை பலவந்தமாய்த் தூக்கி ஓர் அறைக்குள் போட்டுக் கதவை வெளியில் தாழிட்டுவிட்டு, ஊஞ்சற் பலகையில் உட்கார்ந்து சந்தோஷமாய்ப் பாடத் தொடங்கினுன். வெளியில் கதவு தட்டப்பபட்ட ஓசை அவனுடைய செவிகளில் பட்டதாலுைம், அவன் அதை இலட்சியம் செய்யாமல் உற்சாகமாயும் ஆனந்தமாயும் பாடிக் கொண் டிருந்தான்.

அண்டை வீட்டுக்காரர்கள் சிறிது நேரம் அங்கேயே இருந்து கிழவருக்கும் அமிர்தம்மாளுக்கும் ஆறுதல் மொழிகள் கூறிவிட்டு, அவ்விடத்தைவிட்டு ஒவ்வொருவராய்ப் போய்விட்டனர். அவர்கள் தங்கள் சொந்த மகனை அநியாயமாய் விலக்கி நிரம்பவும் பரிதாபகர

மான நிலைமையில் வைத்திருந்தனர் என்பதை எல்லோரும் அறிந்திருந்தனராதலால், எவரும் உண்மையில் அவர்கள் விஷயத்தில் இரக்கம் கொள்ளாமல் மெல்ல நழுவிவிட்டனர்.

வயோதிகர் இருவரும் அன்றைய தினம் மாலையில் விளக்கு வைக்கும் நேரம் வரையில் திண்ணையிலேயே படுத்திருந்து பார்த்தனர். அதுவரையில் கதவு திறக்கப் படவில்லை. அமிர்தம்மாள் எழுந்து கதவண்டை சென்று, "பட்டு, பட்டு" என்று பல தடவைகள் கதவைத் தட்டிப் பார்த்தாள். மறுமொழி கிடைக்கவில்லை. அமிர்தம்மாள் கதவின் பக்கத்திலேயே சற்று நேரம் நின்றபின் மறுபடியும் கதவைத் தட்ட, உடனே கலியாணசுந்தரம், "மரியாதையாய் நீங்கள் போகிறீர்களா? இல்லாவிட்டால், போலீஸாரை அழைத்துவந்து, நீங்கள் இங்கே கலகம் செய்வதற்காக அவர்களிடம் ஒப்புவிக்கட்டுமா?" என்றான்.

உடனே அமிர்தம்மாள் பயந்து அதற்குமேல் கதவைத் தட்டாமல் கிழவரண்டை போய் உட்கார்ந்து கொண்டு, "இது கேள்வி முறையற்ற ஊராயிருக்கிறதே! நீங்களும் இப்படி நிஷ்டையில் இருந்தால், நாம் போகிற வழிதானென்ன?" என்றாள்.

கிழவர்:—என்னை ஏன் கேட்கிறாய். இரவு முழுதும் பட்டினி போட்டுப் படுக்க விடாமல் கொன்று என்னிடம் எழுதி வாங்கினாய். அப்போது நான் சொன்னதை நீ காதில் வாங்கவில்லை, அப்படியெல்லாம் பிடிவாதம் பிடித்து என்னை இந்த நிலைமைக்கு நீ கொண்டுவந்து உட்கார வைத்தாய். இப்போது போகிற வழியை நீயல்லவா காட்ட வேண்டும்.

அமிர்தம்மாள்:—நான் சொத்துக்களை எழுதி வைக்கச் சொன்னால், நமக்குச் சோற்றுக்குக்கூட ஏற்பாடு செய்யாமல் அடியோடு யார் எழுதிக்கொடுக்கச் சொன்னது? நீங்கள் செய்தது முட்டாள் வேலை. ஆகையால் இப்போது எனக்கு நீங்கள்தான் வழி சொல்ல வேண்டும்.

கிழவர்:—ஓகோ! அப்படி மடக்குகிறாயா! சரிதான். வழி வழி என்று அவஸ்தைப் படுகிறாயே! இதோ எதிரில் ரஸ்தா இருக்கிறது; இரண்டு திசைகளிலும் கண்ணுக் கெட்டிய தூரம் வரையில் போகிறது. நீ ஒரு திசையில் போ; நான் ஒரு திசையில் போகிறேன். நம்முடைய வழிகள் இதோடு பிரிகின்றன.

அமிதம்மாள்:—ஓகோ! வழி பிரிகிறதா! பிரியும், பிரியும். என்னை விட்டுப் போய்விடலா மென்கிற எண்ணமோ! அது ஒருநாளும் பலிக்காது. நீங்கள் போகும் இடத்திற் கெல்லாம் நானும் வந்தேதான் தீருவேன்.

கிழவர்:—எனக்கு உலகத்தில் விரக்தி உண்டாகி விட்டது. நான் சந்நியாசம் வாங்கிக்கொண்டு இலை தழைகளைத் தின்று உயிரை விடப்போகிறேன்.

அமிர்தம்மாள் :—சரி ; நானும் அப்படியே செய்கிறேன்.

கிழவர் :—ராமேசுவரத்திற்குப் போனாலும், சநீசுவரனையும்கூட அழைத்துக்கொண்டு போகவேண்டுமா? நீ இங்கேயே இரு. உன் பெண் எப்படியும் உன்னை அழைத்துக் கொள்வாள். நான் போகிறேன்—என்று கூறியபடி எழுந்து தெருவோடு செல்லத் துடங்கினார்.

அமிர்தம்மாள், "நானும் உங்களோடுதான் வருவேன்" என்று கூறியபடி அவருக்குப் பின்னால் செல்லலானாள்.

கிழவர், “ஐயோ தெய்வமே! பெட்டி நிறையப் பணம் இருக்க, கையில் காலணாகூட இல்லாமல் இப்படிப் பரதேசியாய்ப் போக நேர்ந்ததே! கடவுளே! உனக்குக் கருணை இல்லையா” என்று கூறியபடி சென்றார்.

கிழவி, “நானும் இன்று ஒரு பெரிய முட்டாள் வேலை செய்துவிட்டேன். எண்ணெய் தேய்த்துக் கொண்டு ஸ்நானம் செய்வதற்காக நகைகளையெல்லாம் கழற்றிப் பெட்டியில் வைத்தேன். மறுபடியும் அவைகளைப் பூட்டிக் கொள்வதற்குள், நமக்கு இந்தக் கதி நேர்ந்து விட்டதே! என் உடம்பில் ஒரு பொன் திருகு கூட இல்லாமல் போய்விட்டதே! அடே கொடுமையே!” என்று கூறியபடி பின்னால் நடந்தாள்.

அத்தியாயம்—3

நனைந்த கிழவி வந்தால் இருந்த விறகும் சேதம்

நாம் இவர்கள் இருவரையும் சற்று நேரம் தெருவில் நடக்க விடுத்து, நமது இரட்டைச் சாமியார்களை கவனிப்போம். காமாட்சி தன் தம்பியுடன் கடையிலிருந்து வந்தபோது, அவளைச் சந்தித்து, அவளுடன் சம்பாஷித்த பிறகு அவளை விடுத்துச் சென்ற சாமியார்கள் இருவரும் ஒருவரோ டொருவர் சச்சரவிட்டுக் கொண்டே நடந்தனர்.

இளம் பிராயத்தினளான காமாட்சியின் தெய்வ பக்தியும், உறுதியான தெய்வப் பற்றுதலும் தொற்று வியாதி போல் விபூதிப்பைச் சாமியாருடைய மனதை ஒரே நொடியில் மாற்றி, அவ்வுணர்ச்சிகளை அவரும் கொள்ளும்படி செய்துவிட்டன வாதலால், தாம் ஸ்வாமியின் பெயரைச் சொல்லி, ஜனங்களை வஞ்சித்து பணம் பறிப்பது பாபகரமான செய்கை என்னும் எண்ணம் அவருடைய மனதில் உறுதியாக உண்டாகி விட்டது. உண்டிப்பெட்டிச் சாமியார் அழுத்தமான சுபாவமுடையவ ராதலால், தாம் செய்தது சரியான வேலை என்னும் அபிப்பிராயம் உடையவராகவே அவர் இருந்தார். அந்த நிலைமையில் அவர்கள் இருவரும் அந்த ஊரின் கோடியிலிருந்த ஒரு தெருவில் வாடகைக்கு எடுத்துக்கொண் டிருந்த வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தனர்.

மூடப்பட்டிருந்த தெருக் கதவை ஒருவர் தட்ட, அடுத்த நிமிஷம் கதவு திறக்கப் பட்டது. உள்புறத்தில்

சுமார் இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒரு ஸ்திரீ காணப்பட்டாள். அவள் யௌவனப் பிராயத்தின ளாயும், அழகான அங்க அமைப்புடையவளாயும், சிவப் பான நிறமுடையவளாயும் காணப்பட்டாள். ஆனால், அவளுடைய உடம்பில் எவ்வித நகையும் காணப்பட வில்லை. அவள் இரவிக்கை அணியாமல், ஒரு வெள்ளைப் புடவையை மாத்திரம் உடுத்தி, நெற்றியில் விபூதி பூசிக் கொண் டிருந்தாள். அவளுடைய தோற்றம் அவள் விதவை என்பதை நிச்சயமாய்க் காட்டியது. அதற்குத் தக்கபடி அவளுடைய முகம் சாந்தம், விசனம், செய லற்ற தன்மை முதலிய உணர்ச்சிகளைக் காட்டுவதா யிருந்தது. அவளை நாம் **குஞ்சரியம்மாள்** என்று குறிப் போம்.

இரண்டு சாமியார்களும் உள்ளே நுழைந்தவுடன், குஞ்சரியம்மாள் கதவை மறுபடி மூடித் தாழிட்டுக் கொண்டு அவர்களோடு உள்ளே சென்றாள்.

அவ்வாறு சென்றவள், வழக்கத்திற்கு மாறாய் அவர்க ளிருவருடைய முகமும், ஒருவருக் கொருவர் மாறுபட்டு மனஸ்தாபம் கொண்டிருந்தார்கள் என்ப தைக் காட்டியதாக உணர்ந்து கவலையும் சஞ்சலமும் கொண்டவளாய்க் கூடத்தை யடைந்தாள்.

உண்டிப் பெட்டிச் சாமியார் தமது வழக்கப்படி காஷாய வஸ்திரத்தை விலக்கிச் சாதாரண ஆடையை அணிந்துகொண்டு, மறைவான ஓரிடத்தில் வைக் கப்பட் டிருந்த ஒரு திறவுகோலை எடுத்து உற்சாகத் தோடு உண்டிப் பெட்டியைத் திறந்து, உள்ளே இருந்த காசு, பணம் முதலியவற்றை எடுத்து எண்ணத் துடங்கினர்.

விபூதிப்பைச் சாமியார் தமது ஆடையை மாற்ருமல் அயர்வாகக் கூடத்தில் உட்கார்ந்து எதைப் பற்றியோ சிந்தனை செய்தபடி சுவரில் சாய்ந்துகொண்டார்.

உடனே குஞ்சரியம்மாள் விபூதிப்பைச் சாமியாரை நோக்கி, "அண்ணு, உடையை மாற்றிக்கொண்டு சாப்பாட்டுக்கு வராமல், சோர்ந்து உட்கார்ந்து கொண்டீர்களே. பசி எடுக்க வில்லையா?" என்ருள்.

விபூதிப்பைச்சாமியார்:—இல்லை தங்கைச்சீ, நான் இனி எப்போதும் காஷாய வஸ்திரத்தோடுதான் இருக்கப் போகிறேன். நான் இனி வெள்ளை வஸ்திரம் கட்டப் போகிறதில்லை.

குஞ்சரி:—ஏன் அண்ணு? காரணம் என்ன?

உண்டிப்பெட்டிச் சாமியார்:— உன் அண்ணனுக்குத் திடீரென்று வேதாந்தப் பித்துப் பிடித்திருக்கிறது. வரும் வழியில் என்னேடு சண்டை போட்டுக்கொண்டே வந்தான்.

குஞ்சரி:—ஏன் மாமா, எதற்காக அண்ணன் உங்களோடு சண்டையிட்டார்?

உண்டிப்பெட்டி:— நாம் சொத்துக்களை யெல்லாம் இழந்து ஏழைகள் ஆனதுமுதல், நாங்கள் இருவரும் பரதேசிகள் போல் வேஷம் போட்டு ஊரூராய் அலைந்து யாசகம் வாங்கிக் காலக்ஷேபம் செய்து வருகிருேம். அப்படிக் கிடைக்கும் ஜீவனத்தையும் உன் அண்ணன் கெடுத்துக் கொள்ளப் பார்க்கிருன்.

குஞ்சரி:—அண்ணு, மாமன் உங்கள்மேல் ஏன் இப்படிப் புகார் சொல்லுகிருர்?

விபூதிப்பை:—தங்கச்சீ, நாங்கள் வெளியில் சாதாரணமாய் யாசகம் வாங்கி வருகிறோமென்று நீ நினைத்துக்கொண் டிருக்கிறாய். வெளியில் நாங்கள் செய்து வரும் மோசத்தை நீ அறியவில்லை. பழனியில் ஸ்வாமிக்கு ஒரு மண்டபம் கட்டப் போகிறோமென்றும், நாங்கள் அந்த ஊரில் இருக்கும் ஒரு மடத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் சொல்லி ஜனங்களை ஏமாற்றி உண்டியின் மூலம் பணம் சம்பாதித்து வருகிறோம். அந்த மாதிரிக் கடவுளையும், மனிதரையும் ஏமாற்றி நாம் வயிறு வளர்ப்பது பெரிய பாபச்செய்கை என்று என் மனம் இடித்துக்கொண்டே இருந்தது. இன்று ஒரு சிறு பெண் என் கண்ணைப் பூர்த்தியாகத் திறந்துவிட்டாள். ஆகையால், இனி நாம் இந்த வழியில் பணம் சம்பாதிப்பதை நிறுத்திவிட வேண்டு மென்பது என் கட்சி. ஸ்வாமியாவது பூதமாவது, புத்திசாலித் தனத்தினால் எந்த விதமான மோசம் செய்தாவது நாம் பிழைக்கலாம் என்கிறார் நம் மாமன்.

குஞ்சரி:—என்ன மாமா, நாம் என்ன பாவம் செய்தோமோ, நம்மிட மிருந்த ஏராளமான சொத்துகளை யெல்லாம் இழந்து பரதேசிகளாய் ஊரூராய்த் திண்டாடிப் பிச்சை எடுக்கிறோம், ஸ்வாமியின் பெயரைச் சொல்லி. ஜனங்களை ஏமாற்றி இன்னமும் பாவ மூட்டையை அதிகப் படுத்திக் கொள்ள வேண்டுமா? அண்ணன் சொல்வது நியாயமான விஷயந்தானே மாமா.

உண்டிப்பெட்டி:—ஓகோ நீயும் உன் அண்ணனோடு சேர்ந்து கொண்டாயா! இனிக் குடித்தனம் உருப்பட்ட மாதிரிதான். இந்த மாதிரிப் பொய் சொல்லி, நாம் இது வரையில் மானமாய் ஜீவனம் செய்து வருகிறோம்.

அதைவிட்டு, சாதாரணமாய் யாசகம் கேட்டால், நாம் காலணாவைக்கூடக் கண்ணால் காண முடியாது. நாங்கள் இருவரும் தெருவு தெருவாய் அலைந்து கதறிக் கதறி மானபங்க மடைந்து மிகச் சீக்கிரத்தில் சாக வேண்டியதே முடிவாய்விடும். அதன்பிறகு உன் பாடுதான் திண்டாட்டமாகி விடும்.

விபூதிப்பை:— ஊரில் எத்தனையோ கோடானு கோடி ஜனங்கள் மானமாய் ஜீவனம் நடத்துகிறார்களே! எல்லாரும் பழனியாண்டவர் பெயரைச் சொல்லி ஜனங்களை ஏமாற்றித்தான் பிழைக்கிறார்களா? மற்றவர்கள் இறந்தா போய்விட்டார்கள்?

குஞ்சரி:—இது நியாயமான கேள்விதானே மாமா! ஒழுங்கான வழியில் போய், சம்பாதித்து, வந்த வரையில் திருப்தி யடையலாமே!

விபூதிப்பை:— அதைத்தான் நானும் சொல்லுகிறேன் தங்கைச்சீ! இன்று பெட்டியில் வசூலா யிருப்பதைப் பழனியாண்டவர் தேவஸ்தானத்துக்கு மணியார்டர் செய்துவிடும்படி நான் சொல்லுகிறேன். மாமன் உதவாதென்கிறான்.

குஞ்சரி:—ஏன் மாமா, இன்று வசூல் எவ்வளவு?

உண்டிப்பெட்டி:—ஒன்றே கால் ரூபா வசூலா யிருக்கிறது. இதை அனுப்பி விட்டால், நாளைய சாப்பாட்டுக்குத் தேவையான சாமான்களுக்கு என்ன செய்கிறது?

விபூதிப்பை:—நாம் வேறு வழியில் முயற்சி செய்வோம்; பணம் கிடைத்தால் சாப்பிடுவோம்; இல்லாவிட்டால், பட்டினி இருப்போம்.

உண்டிப்பெட்டி:— முடியவே முடியாது. இத்தனை நாட்கள் நாம் பழனி ஆண்டவர் பணத்தைச் சாப்பிட

யில்லையா. நமக்கு என்ன கெடுதல் வந்துவிட்டது, இன்றைய ஒருநாள் பணத்தை அனுப்பாவிட்டால். மோசம் வந்துவிடாது. பழைய பாவக் கணக்கோடு இந்தப் பாவக் கணக்கும் சேரட்டும்.

குஞ்சரி:—ஆம், அண்ணா, இந்தப் பணம் இருக்கட்டும். இனி அந்த வழியில் பணம் சம்பாதிக்க வேண்டாம்.

விபூதிப்பை:— நீங்கள் எதை வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். நான் இதுவரையில் பொய்ச் சாமியாராய் இருந்தேன். இனி நான் உண்மையில் சாமியாராய் விட்டேன். நான் அங்கங்கு கூட்டம் கூட்டி ஜனங்களுக்கு சன்மார்க்க போதனை செய்யப் போகிறேன். அதன் மூலம் எனக்குக் கிடைக்கும் சொற்ப பணத்தை நான் கொண்டு வருகிறேன். அதைக் கொண்டேதான் என் சப்பாடு நடக்க வேண்டும்.

உண்டிப்பெட்டி:—அதில் தொள்ளாயிரம் ரூபா வந்து குவிந்து விடும். சுகமாய்ச் சாப்பிடலாம். நீ எப்படியாவது செய். அதைப் பற்றி எனக்கு அக்கரை இல்லை. நம்முடைய அபாரமான சொத்தை அயலார் அபகரித்துக் கொண்டு நம்மை ஒட்டாண்டி ஆக்கி விட்டார்கள் ஆகையால், நாம் அயலாருடைய சொத்தை, பொய்யினாலோ, புரட்டினாலோ, திருட்டினாலோ அபகரித்துத் தீர வேண்டும். அந்த வழியில் தான் நான் போகப் போகிறேன். யார் சொன்னாலும் நான் கேட்கப் போகிறதில்லை—என்றார்.

மற்றவர் இருவரும் அவர் கூறியதை ஆமோதிக்கவில்லை யானாலும், அதற்குமேல் தகராறை வளர்த்தாமல் அதோடு நிறுத்தி விட்டனர், உடனே அவர்க

ளுடைய சாப்பாடு நிறைவேறியது. விபூதிப்பைச் சாமியார் எப்போதும் தமது காஷாய வஸ்திரத்தோடு இருந்ததன்றி, தம் மாமனுடன் பண வசூலுக்கு வெளியில் போவதை விடுத்து, தாம் மாத்திரம் தனிமையில் சென்று கோவில், பொது மண்டபங்கள் முதலிய இடங்களில் நின்று ஜனங்களுக்கு நல்வழி போதிக்கத் துடங்கினர்.

உண்டிப்பெட்டிச் சாமியார் சுயேச்சையாகத் துன்மார்க்கங்களில் இறங்கி அதன்மூலமே பொருள் தேடத் தலைப்பட்டார். இந்த நிலைமையில் நாம் இவர்களை விடுத்து, கலியாணசுந்தரத்தால் வீட்டை விட்டுத் துரத்தப்பட்ட வயோதிகர் இருவரையும் துடர்ந்து செல்வோம்.

விளக்கு வைக்கும் நேரத்தில் வெளிப்பட்ட அவர்கள் இருவரும் இரண்டொரு தெருவுகளைக் கடந்து செல்ல, எதிரில் ஒரு கோவில் காணப்பட்டது. அப்போது கோவிலில் சாயரக்ஷை பூஜைக்காக கண்டாமணி அடிக்கப்பட்ட ஓசை உண்டாகவே, அமிர்தம்மாள் ஸ்வாமி தரிசனம் செய்து தங்களுக்கு நேர்ந்த அக்கிரமத்தைப் பற்றிக் கடவுளிடம் முறையிட்டுவிட்டு வரவேண்டுமென்று கூற, கிழவர் மறுமொழி கூருமல் பைத்தியம் கொண்டவர்போல் அவளுக்குப் பின்னுகச் சென்ருர். அமிர்தம்மாள் ஸ்வாமி சந்நிதியில் விழுந்து வணங்கி தங்கள் துன்பத்தைக்கூறி அதை விலக்க வேண்டுமாய்ப் பிரார்த்தனை செய்துகொண்டிருக்க, கிழவர் ஒரு மண்டபத்தில் நின்றுவிட்டார். ஏனென்ருல், அங்கு நமது விபூதிப்பைச் சாமியார் சில ஜனங்களை நிற்கவைத்துக்கொண்டு இதோபதேசம் செய்துகொண்டிருந்தார். உலகத்தில் விரக்திகொண்டு சித்தப்

பிரமை பிடித்தவர்போல் நின்ற கிழவருடைய செவிகளில் சாமியாருடைய சொற்கள் பசுமரத்தாணிபோல் பாய்ந்தன வாதலால், அவர் தமது கவனத்தை அதில் செலுத்தியபடி அங்கே நின்றூர்.

சாமியார் அடியில் வருமாறு உபந்நியாசம் புரியலானூர்:—

"ஆகையால் இந்த சரீரம் அழிந்து போகக் கூடியது. இது ஜடப்பொருளால் ஆனது. இது அறிவற்றது; சிந்தனை யற்றது. 'நான்' என்பது இந்த உடம்பல்ல. இந்த உடம்பில் இருந்தும் இதோடு சம்பந்தப்படாமல் தாமரை இலைத் தண்ணீர்த் துளிபோல் இருப்பதே நான் என்னும் வஸ்து. அதைத்தான் நாம் **ஆத்மன்** என்று குறிக்கிறோம். நாம் அணிந்து கொள்ளும் சட்டை, துணி முதலியவை நைந்து இற்றுப்போனல், நாம் புதிய சட்டை துணி முதலியவைகளை அணிந்துகொள்வதுபோல், ஆத்மாவின் சடப் போர்வையான உடம்பு அழிவதும், புதிதாய் உண்டாவதுமா யிருக்கிறது. இதையே நாம் இறப்பு பிறப்பு என்கிறோம். துணிச்சட்டை சில வருஷங்களில் மலின மடைகிறது. உடம்போ ஐம்பது, அறுபது வருஷங்களில் மலின மடைகிறது. அழியாமல் எப்போதும் நிலைத்து நிற்பது ஆத்மா ஒன்றுதான். இந்தச் சட்டை இல்லாமல் ஆத்மா நிர்வாணமா யிருப்பதே மோக்ஷம் என்று சொல்லப் படுகிறது. ஆத்மா சரீரத்தின் உதவியால், பாவச் செய்கைகளைச் செய்தால், அதன் பலனாய் மறுபடி பிறப்புண்டாகிறது. புண்ணியச் செய்கைகளைச் செய்து, சுத்தமான ஆகாரம், ஆசாரம் முதலியவைகளால் திரிகரணசுத்தியாய் மனிதன் சன்மார்க்கத்தில் ஒழுகினல், சடச்சட்டை மிகச் சீக்கிரத்

தில் ஒழிய மோக்ஷம் கிடைக்கிறது. இதை யறி யாமல் மனிதர் 'நான்' என்பது உடம்பே என்று கருதி அதைப் போஷித்து அதற்கு ஆகவேண்டிய சுகபோகங்களைத் தேடுவதிலேயே ஆயுளைக் கடத்து கிறார்கள். ஆத்மாவைச் சுத்தமாக்கக் கூடிய சன் மார்க்க நெறிகளைக் கடைப்பிடிப்பதில்லை

—என்று விபூதிப்பைச் சாமியார் செய்த பிரசங்கத்தைக் கேட்ட நமது கிழவர் (அமிர்தம்மாளின் கணவர்) அத னல் கவரப்பட்டு அவ்விடத்திலேயே நின்றுவிட்டார்.

சாமியார் மேலும் கூறியதாவது:—

ஆகையால் உடலபிமானமே நமது முதல் சத்துரு. அதை நாம் விலக்க வேண்டும். குடும்பஸ்தனு யிருந்துகொண்டு உடலபிமானத்தைப் போக்குவ தென்பது நிரம்பவும் துர்லபமான காரியம். மனிதன் குடும்பத்தில் சம்பந்தப் பட்டால் அதைப் போஷிக்க வேண்டிய கடமை அவனைச் சாருகிறது. அதற்கு அத்யாவசியமான அவனுடைய உடம்பை அவன் போஷித்து நல்ல நிலைமையில் வைத்துக்கொள்ள வேண்டியது அவனுடைய முதன்மையான கடமை யாகிவிடுகிறது. ஆகையால், குடும்பஸ்தனு யிருந்து உடலபிமானத்தை விலக்குவதைவிட சந்நியாசியா யிருந்து உலகைத் துறந்து உடலபிமானம், உயிரபி மானம், தமரபிமானம் முதலியவற்றை விலக்குவது மிக எளிது. ஆகையால், மனிதன் மாறி மாறி உலகில் பிறந்து இறந்து குடும்பத்தில் உழலும் துன்பத்தைப் போக்குவதற்கு சந்நியாசமே சுலபமான மார்க்கம்

—என்று கூறிய சமயத்தில் அமிர்தம்மாள் வந்து கிழ வரை வற்புறுத்தி அழைத்துக்கொண்டு வெளியில் சென்றுவிட்டா ளாதலால், அதற்குப் பிறகு நடத்த பிர

சங்கத்தை அவர் கேட்க முடியாமல் போய்விட்டது. ஆயினும், அவர் கேட்ட வரையில் அந்தப் பிரசங்கத்தின் விஷயம் அவருடைய மனதில் பசுமரத்தாணி போல் மிக சுலபத்தில் பதிந்து போயிற்று. தாம் சந்நியாசம் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று அன்று பகலில் தம் மனைவியிடம் சொன்னதற்கு மேற்படி பிரசங்கம் அநுகுணமா யிருந்தமையால், அந்த எண்ணம் அவருடைய மனதில் உறுதிப்பட்டுவிட்டது. அந்த நிலைமையில் அவர் தமது மனைவியுடன் கோவிலைவிட்டு வெளிப்பட்டு, சந்நிதித் தெருவில் சௌகரியமா யிருந்த ஒரு திண்ணையை அடைந்தார். பசியும், அலுப்பும், மனவேதனையும் அவர்களது மன மெய்களை அபாரமாய் அழுத்தின வாகையால், இருவரும் போக்கிடமற்று அந்தத் திண்ணையில் படுத்துக்கொண்டனர்.

சற்று நேரத்தில் இருவரும் தூக்கத்தில் ஆழ்ந்து போயினர். ஆயினும், இரவு பதினொரு மணி சமயத்தில் கிழவர் பசி வேதனையைத் தாங்கமாட்டாதவராய் விழித்துக்கொண்டு எழுந்து உட்கார்ந்து கொண்டு, "கடவுளே! அப்பனே! சாகிற காலத்தில் எனக்கு என்ன வேதனையை வைத்துவிட்டாய்!" என்று கூறியபடி சற்று மௌனமா யிருந்தபின், "அடீ, அமிர்தம், அமிர்தம்" என்று மெதுவாக இரண்டு தடவைகள் அழைத்துப் பார்த்தார். அமிர்தம்மாள் உண்மையில் கடுமையான துயிலில் ஆழ்ந்திருந்தமையால், அதற்கு மறுமொழி கொடுக்கவில்லை அவர் உடனே எழுந்தார். "சரி; இந்தச் சாமியார் சொன்னதுபோல், என்னுடைய குடும்பத் துன்பங்கள் அடியோடு ஒழிவதற்கு சந்நியாசமே மருந்து. நான் இந்தப் பீடையின் சம்பந்தத்தை இவ்வளவோடு அறுத்துக்கொண்டு போய்விடுகிறேன்.

இவள் எங்கேயாவது கிடந்து சாகட்டும்'' என்று தமக்குள் எண்ணியபடி மெதுவாய் நடந்து வீதியை அடைந்தார்.

தாம் மறைந்து போவதற்குள் அவள் விழித்துக் கொண்டு எழுந்தால் தமது பாடு துன்பகரமாகிவிடுமென்ற அச்சம் அவரை வருத்திய தாகையால், அடிக்கடி திரும்பித் திரும்பி பார்த்தபடி நான்கைந்து வீடுகள் வரையில் சென்று விட்டார். சென்றவர் எதையோ நினைத்துக்கொண்டு சட்டென்று நின்று திரும்பித் தன் மனைவியைப் பார்த்தார். அப்போது அவருடைய மனதில் பழைய நினைவுகள் குபீரென்று பொங்கி எழுந்தன. தாம் தமது மனைவியோடு நெடுங்காலம் பிணைக்கப்பட்டிருந்த காலத்தில் நிகழ்ந்த விஷயங்கள் யாவும் ஒன்றன் பின் னொன்ருய் நினைவிற்கு வரவே, ஒருவிதமான பாசம் எழுந்து போராடத் தொடங்கியது. அவள் சில சந்தர்ப்பங்களில் தம்மிடம் மூர்க்கமாயும், மூடத்தனமாயும், பிடிவாதமாயும் நடந்துகொண் டிருந்தாலும், அவள் தம்மையே உயிருக்குயிராய் மதித்து ஒரே உறுதியாய்த் தம்மோடு ஒன்றுபட்டு வாழ்க்கை நடத்தினவள் என்ற எண்ணம் உண்டாகவே, அவளை விட்டுப் பிரியமாட்டாதவராய் மிகுந்த சஞ்சலமடைந்து மறுபடி திரும்பி இரண்டொரு வீடுகள் வரையில் வந்தார்; அந்த உணர்ச்சி அடங்கவே, உடனே நின்ருர். "நாம் ஏராளமான செல்வத்தில் இருந்தபோதே, நம்மைச் சூத்திரப் பாவைபோல் இவள் ஆட்டி வைத்தாளே. இப்போது எல்லாவற்றையும் இழந்து ஏழ்மை நிலைமையில் இருக்கையில், நாம் இவளிடம் அகப்பட்டுக் குரங்கின் கைப் பூமாலையாய்த் தவிக்கவேண்டும். அதை நினைக்க, திகில் நடுக்குவிக்கிறது. ஆகையால் இவளை விட்டுப் பிரிந்து

போய் சந்நியாசம் வாங்கிக்கொள்வதே நிம்மதியானது. நானோ கிழவன்; திடீரென்று நான் இறந்துபோனால், இவள் என்ன செய்வாளோ அதை இப்போது செய்து கொள்ளட்டும்" என்று தீர்மானித்துக்கொண்டு அதற்கு மேல் திரும்பிப் பாராமல் விசையாக நடந்து தெரு வோடு சென்று மறைந்து போய்விட்டார்.

அதற்கு மேல் அரை நாழிகை செல்ல, கடும் பசியி னால் அமிர்தம்மாளுடைய கைகால்கள் இழுக்க வாரம் பிக்கவே, அவள் விழித்துக்கொண்டு எழுந்து உட் கார்ந்து, இரண்டு பக்கங்களிலும் பார்த்தாள்; தன் புரு ஷர் இல்லை என்பது தெரியவே, அவள் திடுக்கிட்டுத் திகிலும், கலக்கமு மடைந்து திண்ணையை விட்டுக் கீழே இறங்கி, சுற்றுமுற்றும் பார்த்தாள். எங்கும் அவர் காணப்படவில்லை. தங்களுக்குள் எவ்வளவுதான் மனஸ்தாபமோ, சண்டையோ ஏற்பட்டாலும், தன் புருஷர் தன்னை அநாதையாய் விட்டுப் பிரிந்து போக மாட்டார் என்ற நினைவும், தான் அவருக்கு இன்றி யமையாத துணைவி என்ற நினைவும் அவளுடைய மன தில் உறுதியாய் ஏற்பட்டிருந்தமையால், அவர் ஏதா வது கருத்துடன் எங்கேயாவது போயிருப்பாரோ என்று ஐயங்கொண்டவளாய் அவள் மேலும் அரை நாழிகை காலம் பொறுமையாய் அங்கே காத்திருந்தாள். அவர் வரவில்லை. ஆகையால், அவள் தெருவின் ஒரு கோடி வரையில் போய்த் தேடிப் பார்த்துவிட்டு இன் னொரு கோடி வரையில் போய்த் தேடினாள். அவர் எங்கும் அகப்படவில்லை. ஒருகால் அவர் ஏதேனும் உத் தேசத்துடன் தங்களுடைய வீட்டிற்கே மறுபடியும் போயிருக்கலாம் என்னும் சந்தேகம் உண்டாகவே, அவள் அவ்விடத்தை விட்டு விரைவாக நடந்து தங்கள் வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தாள்.

வீட்டுத் திண்ணையில் யாரோ ஒரு ஸ்திரீ தலைவிரி கோலமாய்ப் படுத்திருந்தது தெரிந்தது. தெருவில் இருந்த **முனிஸிபாலிட்டி** விளக்கின் வெளிச்சம் அங்கு நன்ருகப் பிரகாசித்த தாகையால், அமிர்தம்மாள் கிட்ட நெருங்கிப் பார்த்து, அங்கே படுத்திருந்தவள் பட்டம் மாள் என்பதைத் தெரிந்துகொண்டாள். உடனே அமிர்தம்மாளது மனம் பதறியது. உடம்பு கிடுகி டென்று ஆடியது. அவளுடைய தலைமயிர் தாறுமாருய்ச் சிக்கல் அடைந்து கிடந்ததையும், உடம்பில் ஒரு திரு காணிகூட காணப்படாததும், அவளுடைய திகிலையும் கவலையையும் அதிகப்படுத்தின. அவளுடைய புருஷன் அவளுடைய நகைகளைப் பிடுங்கிக்கொண்டு தலைமயி ரைப் பிடித்துச் சச்சரவிட்டுப் பலவந்தமாய் வெளியில் கொண்டு வந்து தள்ளிவிட்டுக் கதவை மூடிக்கொண்டு போயிருக்க வேண்டு மென்பது எளிதில் தெரிந்தது. அவள் உடனே பட்டம்மாளின் அருகில் போய், அவ ளைத் தட்டி எழுப்ப, அவள் விழித்துக்கொண்டு எழுந்து, "ஐயோ! அம்மா! நான் உங்களுக்காகப் பரிந்து பேசினேன். என் நகைகளைப் பிடுங்கிக்கொண்டு என்னையும் வெளியில் தள்ளிக் கதவை மூடிவிட்டார்" என்ருள்.

அமிதம்மாள்:— அடெ பாவி! இப்படியும் செய் வானு! ஐயோ நீ முட்டாள் வேலை செய்து எல்லாரை யும் அதோகதிக்கு ஆளாக்கி விட்டாயே! நாங்கள்தான் கெட்டோ மென்ருல், உனக்குமா இந்தக் கதி நேர வேண்டும்!

பட்டம்மாள்:—உங்களுக்கே வரும்போது, எனக்கு வரக்கூடாதா; நியாயமாய்ப் பார்த்தால், என் முட்டாள் தனத்திற்கு எனக்குத்தான் தண்டனை கிடைக்க வேண்

டும். தள்ளாத காலத்தில் நீங்கள் ஏன் இப்படித் திண்டாடித் தவிக்க வேண்டும். அப்பா எங்கே அம்மா?

அமிர்தம்மாள்:—நானும் அவரும் ஒரு திண்ணையில் படுத்துக் தூங்கிக்கொண் டிருந்தோம். அவர் எழுந்து எனக்குத் தெரியாமல் எங்கேயோ போய்விட்டாரம்மா. எங்கே போய் எப்படித் தவிக்கிருரோ தெரியவில்லையே! ஐயோ! என் வயிறு பற்றி எரிகிறதே! என்ன செய்வேன்! அவர் ஒருவேளை இங்கே வந்திருப்பாரோ என்றல்லவா நினைத்தேன்.

பட்டம்மாள்:—அவர் இங்கே வரவில்லையே! வேறே எங்கே போயிருப்பார்?

அமிர்தம்மாள் :— வேறே இடமேது! சத்திரமோ சாவடியோ எங்கே போய்ப் படுத்துக்கொண் டிருக்கிருரோ!

பட்டம்மாள் :— அடே அநியாயமே! திடீரென்று எப்பேர்ப்பட்ட பேரிடி விழுந்து விட்டது! ஐயோ!—இருக்கட்டும். நான் மறுபடியும் கதவைத் தட்டிப் பார்க்கிறேன்—என்று கூறியபடி எழுந்து கதவை தட தடவென்று பல தடவைகள் இடித்தாள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு கலியாணசுந்தரம் கதவண்டை வந்து, "அடி பிசாசே! இனிமேல் கதவை இடித்தால், வந்து உன்னை ரிவால்வரால் சுட்டுப்போட்டு விடுவேன். மரியாதையாய்ப் போகிருயா இல்லையா?" என்ருன்.

உடனே பட்டம்மாள், "அம்மாளைவிட்டு, அப்பா எங்கேயோ போய்விட்டார்கள். அவரைத் தேட வேண்டும். கதவைத் திறவுங்கள்" என்ருள்.

கலியாணசுந்தரம் :—யார் எங்கோ போனால் எனக் கென்ன! உன் அப்பா செய்தது சரியான வேலை. நீங்கள் இருவரும் அவரைத் தேடிக்கொண்டு போங்கள். இனி கதவை இடித்தால், நான் உன் மண்டையை உடைப் பது நிச்சயம்.

பட்டம்மாள் :—பரவாயில்லை; திறவுங்கள். நீங்கள் என்னை எப்படி அடித்து இம்சித்தாலும் அது சம்மதந் தான். வீட்டிற்குள் வைத்துக்கொண்டு எதை வேண்டு மானாலும் செய்யுங்கள். இந்த இருளில் வெளியில் இருப்பது எனக்கு அச்சமா யிருக்கிறது—என்றுகூறிய படி மறுபடி கதவைத் தட்ட, அதற்கு எவ்வித மறு மொழியும் கிடைக்கவில்லை. அவன் கதவைத் திறக்க மாட்டா னென்பது சந்தேகமற விளங்கிவிட்டது.

பட்டம்மாள் :— (சற்று யோசித்த பிறகு) ஏன் அம்மா நாம் ஒரு காரியம் செய்தால் என்ன? நாம் இரு வரும் உடனே அண்ணன் வீட்டிற்குப் போய், நடந்த வைகளைச் சொன்னால், அவர் ஆகவேண்டியதைச் செய் வார். அங்கே போகலாமே.

அமிர்தம்மாள்:—ஆம். அதுதான் சரியான யோசனை. வா போகலாம்—என்றாள்.

உடனே இருவரும் எழுந்து நடந்து சிறிது நேரத் தில் சிவராமகிருஷ்ணனுடைய வீட்டை யடைந்தனர். பட்டம்மாள் உடனே கதவைத் தட்டினாள். அடுத்த நிமிஷம் கதவு திறக்கப்பட்டது. உட்புறத்தில் மங்களம் ஒரு கையில் லாந்தரோடு நின்றுகொண் டிருந்தாள். அவளுடைய முகம் நிரம்பவும் விசனகரமாகவும், வாட்ட மாகவும் இருந்தது. வந்திருந்தவர்கள் இருவரையும் பார்த்த மங்களம் திடுக்கிட்டாள். அவளுடைய முகம்

உடனே தெளிவடைந்து விரிந்ததானாலும், அடுத்த க்ஷணத்தில் அது சோர்ந்து போயிற்று. அவள் உடனே கதவை மூடி உட்புறத்தில் தாழிட்டாள்.

வெளியில் நின்றவர்களான அமிர்தம்மாளும் பட்டம்மாளும் அவமானமும் ஏமாற்றமும் அடைந்து ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டனர். உடனே அமிர்தம்மாள், "பட்டு, பார்த்தாயா இவளுடைய திமிரை. நம்மைக் கண்டவுடன் ஒரு வார்த்தைகூடப் பேசாமல் உடனே கதவை மூடிவிட்டாளே! நாம் இவர்களை இதுவரையில் வெறுத்து விலக்கிவிட்டு இப்போது இங்கே வந்ததே தவறு. வா, நாம் போவோம்" என்றாள்.

பட்டம்மாள் :— அண்ணிக்கு நம்மேல் ஆத்திரம் உண்டாவது இயற்கைதானே! அன்றைய தினம்கூட அண்ணியும், அண்ணனும் என்னைப் பார்க்க வந்தார்கள். நீயும் அப்பாவும் தூஷணையாய்ப் பேசி அனுப்பினீர்கள். அப்படி இருக்க, நாம் வந்தவுடன் அண்ணி சந்தோஷத்தோடு நம்மை எதிர்கொள்ள வேண்டுமென்று நாம் எதிர்பார்ப்பது சரியல்ல. இருக்கட்டும், மறுபடியும் நான் அண்ணியைக் கூப்பிட்டு நமக்கு நேர்ந்துள்ள அபாயத்தைத் தெரிவிக்கிறேன். அதற்கு மேல் என்ன நடக்கிறதென்று பார்க்கலாம். நாம் இவர்களுக்குச் செய்த துரோகம் இப்போது நம்மை பாதிக்கிறது. இனிமேலும் நாம் இவர்களிடம் வர்மம் பாராட்டுவது சரியல்ல. இனி நமக்கு இந்த வீட்டைத் தவிர வேறு புகலிடம் இல்லை. நான் மறுபடியும் கூப்பிடுகிறேன்—என்றாள்.

அப்போது கதவு மறுபடி திறக்கப்பட்டது. மங்களம் பட்டம்மாளை நோக்கி, "என்ன பட்டு, நீங்கள்

எங்களுக்கு ஏதோ கெடுதல் செய்ய வந்திருப்பீர்களோ என்று பயந்து நான் கதவை மூடினேன். இப்போது நீங்கள் இருவரும் பேசியது என் காதில் விழுந்தது. உங்களுக்கு என்ன அபாயம் நேர்ந்தது? அதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் உண்டாகிறது. சொல் லம்மா" என்றாள்.

உடனே பட்டம்மாள், நிகழ்ந்த விஷயங்களை சுருக்கமாய்க் கூற, அதைக் கேட்ட மங்களம் பதறிப் போய், "ஐயோ, இதைக் கேட்கச் சகிக்க வில்லையே! சொத்து எங்களுக்கு இல்லாவிட்டாலும், என் புருஷ ருக்கு உயிருக்குயிரான பெற்றோர், சகோதரி ஆகியவர் கள் அதை வைத்து அனுபவிக்கிறார்கள் என்ற ஒரு திருப்தியாவது இருந்ததே! அதற்கும் கெடுதல் வந்து விட்டதா! உள்ளே வாருங்கள்" என்று அன்பாக மறு மொழி கூறி, அவர்கள் இருவரையும் உள்ளே அழைத் துக்கொண்டு சென்றாள்.

மூவரும் கூடத்தை அடைந்தனர். அங்கு ஒரு பாயில் சிவராமகிருஷ்ணன் பிரக்ஞை யற்றவன்போல் படுத்துக்கொண் டிருந்தான். அவன்மேல் ஒரு கம்பளி போர்த்தப்பட் டிருந்தது.

அதைக் கண்ட பட்டம்மாள், "அண்ணீ, அண்ண னுக்கு உடம்பு சரியாயில்லையா என்ன?" என்றாள்.

மங்களம்:—ஆம்; இரண்டு தினங்களாய் கடுமை யான ஜுரம் அடிக்கிறது. கண்களைத் திறந்து பார்க காமலேயே படுத்திருக்கிறார்.

பட்டம்மாள் :— (விசனகரமாக) அடெ கஷ்ட காலமே! சநியன் நம் எல்லோரையும் ஒரே காலத்தில் பிடித்து ஆட்டுகிறதே! எங்களுக்கு நேரிட்ட அபாய

சமயத்தில், அண்ணன் உதவி செய்வார் என்றல்லவா நினைத்தோம். எங்கள் பீடை உங்களையும் பாதித்து விட்டதுபோ லிருக்கிறதே.

அமிர்தம்மாள்:— மருந்து எதுவும் கொடுக்க வில்லையா? நீ தனியாயிருந்து எப்படி இந்த நிலைமையைச் சமாளிக்கிறாய்? எங்களுக்காவது செய்தி சொல்லி அனுப்பலாகாதா?

மங்களம்:—இவருடைய சிநேகிதர் ஒருவர் இங்கே வந்திருக்கிறார். அவர்தான் இவரை வைத்தியரிடம் அழைத்துக்கொண்டு போய்க் காட்டி அழைத்து வந்தார்; மருந்து வாங்கிக்கொண்டு வந்து கொடுக்கிறார்.

அமிர்தம்மாள்:—ஓ அப்படியா! அந்த மனிதர் இப்போது இங்கே இல்லையா?

மங்களம்:—மூன்று மணிக்கு ஒரு தரம் மருந்து கொடுக்கும்படி வைத்தியர் ஒரு ஸீஸாவில் திராவகம். கொடுத்திருந்தார். கொஞ்ச நேரத்திற்குமுன் மருந்து கொடுக்க எடுத்தபோது, கை தவறியதால் ஸீஸா கீழே விழுந்து உடைந்து போய்விட்டது. மறுபடியும் மருந்து வாங்கிக்கொண்டு வரும்பொருட்டு அவர் வெளியில் போயிருக்கிறார். அவருக்காகத்தான் நான் நடையில் காத்திருந்தேன். நீங்கள் கதவைத் தட்டினீர்கள்.

பட்டம்மாள்—அடெ சங்கடமே! இவ்வளவு கஷ்ட நிலைமையில் மருந்து ஸீஸா உடைந்து போக வேண்டுமா? எல்லாம் பொருத்தமாகத்தான் இருக்கிறது!— என்றாள்.

மங்களம், "எங்களுக்கு இது தினம் சகஜமாய் நடக்கிற விஷயந்தான். புதுமை இல்லை. நீங்கள் ஏன் நிற்கிறீர்கள். உட்காருங்கள்" என்றாள்.

உடனே பட்டம்மாள், "அண்ணீ, உள்ளே சாதம் மிச்சமிருக்குமா? அம்மாள் காலையில் சாப்பிட்டது; சுத்தப் பட்டினி!" என்றாள்.

அமிர்தம்மாள், பட்டம்மாளும் பட்டினி தான். சாதம் கொஞ்ச மிருந்தாலும் இருப்பதை இருவரும் பங்கு போட்டுக்கொள்ளுவோம்" என்றாள்.

அதைக் கேட்கவே, மங்களத்தின் முகம் பரம விகாரமானதாய் மாறியது. அவளது நிலைமை நிரம்பவும் சங்கடமானதாயிற்று. அவர்களுக்குத் தான் என்ன மறு மொழி சொல்வ தென்பதை அறியாமல் தத்தளித்த மங்களம், "ஐயோ! என்றைக்கும் வராத நீங்கள் வந்து சாதம் கேட்கிறீர்கள். எங்களைக் கடவுள் பலவிதங்களில் சோதனை செய்கிறார். நேற்றிரவு சமைத்தது. இன்று முழுதும் குழந்தைகளுக்குப் பழைய சாதமே சாப்பாடு. நான் சுத்தப் பட்டினி.

பட்டம்மாள்:— ஐயோ! பாவம்! அண்ணன் படுத் திருப்பதனால் கவலைப்பட்டுச் சமையல் செய்யவில்லைபோ லிருக்கிறது. அரிசி சாமான்களை எடுத்து இப்படிக் கொடு. நான் சீக்கிரம் சமையல் செய்கிறேன். அம்மா ளுக்குக் காதை அடைக்கிற தென்கிறாள். நீயும் பட்டினி. இரண்டுபேரும் சாப்பிடலாம்.

மங்களம்:—(கண்ணீரும் கண்ணுமாய்) பட்டம்மா. நாங்கள் மகா கேவலமான நிலைமையி லிருக்கிறோம். வீட் டில் அரிசி இருந்தால் நான் சமைக்காமல் பட்டினி கிடப் பேனா? குழந்தைகளுக்குத்தான் பழைய சாதத்தைப் போடுவேனா?

பட்டம்மாள்:— ஆ! அப்படியா! அவ்வளவு கஷ்ட மான நிலையிலா நீங்கள் இருக்கிறீர்கள்! கேட்க சகிக்க

வில்லையே! அண்ணன் வேலை செய்து பணம் சம்பாதிக்கிறதில்லையா?

மங்களம்:—அவருக்கு எங்கேயும் வேலை அகப்படவில்லை. இரண்டு தினங்களாய் ஜுரத்தில் படுத்துக் கொண்டார். யாரோ ஓர் அம்மாள் காமாட்சிக்கு ஒரு ரூபாய் கொடுத்தார்களாம். அதை வைத்தியருக்கும் மருந்துக்கும் செலவிட்டு விட்டேன். என் கையில் விள்ளாமல் விரியாமல் காலணு இருக்கிறது. பொழுதுவிடிந்தால், அடுப்பு எப்படித்தான் புகையுமோ! குழந்தைகள் எதைத்தான் சாப்பிடுமோ! கடவுளுக்குத்தான் தெரிய வேண்டும்.

அமிர்தம்மாள்:— ஓகோ! அப்பேர்ப்பட்ட கஷ்டதசையில் நீங்கள் இருக்கும்போது நாங்களும் வந்து சேர்ந்தோம்போல் இருக்கிறது. ஒரு நாளைய தரித்திரம் எங்களால் தாங்க முடியாததா யிருக்கிறதே. நீங்கள் தினம் இப்படியே இருந்து, இதை எப்படித்தான் சகிக்கிறீர்களோ தெரியவில்லை. சரி; இருக்கட்டும். நாங்கள் இருவரும் போய் மறுபடி நாளைக்கு வருகிறோம்.

மங்களம்:—ஆ! இந்த இரவில் நீங்கள் எங்கே போகிறது. போகவேண்டாம், இருங்கள். இவருடைய சிநேகிதர் வந்துவிடுவார். அவரை அனுப்பி பெரியவரைத் தேடச் செய்யலாம். அவர் மூலமாய் உங்கள் சாப்பாட்டுக்கும் நான் ஏதாவது வழி செய்கிறேன்—என்றாள்.

அப்போது வெளிக்கதவு தட்டப்பட்ட ஓசை உண்டாகவே, மங்களம் விரைவாகச் சென்று கதவைத் திறந்துவிட, கோபாலன் கையில் மருந்து ஸீஸாவுடன் உள்ளே வந்து சேர்ந்தான். அவனைப்பற்றி நாம் இங்கு ஒரு விஷயத்தைக் குறிப்பிட வேண்டும். அவனையும் நாதமுனியையும் போலீஸார் பிடித்துக்கொண்டு

போனூர்களல்லவா. அவனை ஜாமீனில் விட்டுவிட்டமை யால், அவன் உடனே சிவராமகிருஷ்ணனிடம் வந்து விட்டான். அதுமுதல் இங்கேயே இருந்து வந்தான். கூடத்தில் இருந்த விருந்தாளிக ளிருவரையும் காணவே, அவனுடைய முகம் விகாரமாய் மாறியது. அவன் பிர மித்து ஸ்தம்பித்து அப்படியே கல்போல் நின்றான்.

அவனைக் கண்டவுடன் பட்டம்மாள் அவ்விடத்தை விட் டெழுந்து மறைவான இடத்திற்குப் போய்விட் டாள். அமிர்தம்மாள் அவனை உற்றுப் பார்த்து, "ஓகோ! கோபாலனா! வேறே யாரோ என்றல்லவா நினைத்துவிட் டேன். நீயா இவர்களோ டிருக்கிறாய்! ஊரில் இருந்து எப்போது வந்தாய்?" என்றாள். அவளுக்கு மறுமொழி தரவோ, அவளோடு பேசவோ, கோபாலனுடைய மனம் சம்மதிக்கவில்லை. ஏனென்றால் சிவராமகிருஷ்ண னது விஷயத்தில், அவளும், அவளுடைய புருஷரும் மிகவும் கொடுமையாக நடந்து அவனைத் தரித்திர நிலை மையில் வைத்திருக்கிறார்கள் என்பது அவனுக்கு நன்றா கத் தெரியு மாதலால், அத்தகைய துஷ்டையைக் கண்ட வுடன் அவளைக் கொன்றுவிடவேண்டு மென்றும் ஆத் திரம் பொங்கியதே யன்றி அவளுக்கு அமரிக்கையான மறுமொழி தரவேண்டுமென்ற எண்ண முண்டாக வில்லை. ஆகையால் அவன், "நான் ஊரிலிருந்து எப் போதுதான் வந்தால் என்ன? உங்களால் அநாதையாய் விடப்பட்ட உங்கள் பிள்ளைக்கு நல்ல தருணத்தில் நான் என்னாலான உதவியைச் செய்கிறேன். ஏது நீங்கள் உங்களுடைய உன்னத பதவியை விட்டு இந்தக் குடி சைக்கு விஜயம் செய்தது?" என்றான்.

அமிர்தம்மாள்:—(கோபம் கொண்டவளாய்) ஏதப்பா நீ பேச ஆரம்பிக்கும்போதே சண்டையில் ஆரம்பிக்கி

ரூய். எங்கள் குடும்பவிஷயம் ஆயிரம் இருக்கும். அதைப் பற்றி அயலார் கேட்பதற்கு என்ன அதிகாரமிருக்கிறது. என் எஜமானர் திடீரென்று எங்கேயோ காணமல் போய்விட்டார். சிவராமகிருஷ்ணனை விட்டு அவரைத் தேட செய்யலாமென்று வந்துவிட்டேன். நான் இங்கே வந்தது தப்புதான். போகும்படி நீ உத்தரவிட்டால் நாங்கள் இதோ போய்விடுகிறோம். நீ மங்களத்துக்கு பழைய சிநேகிதன் என்பது எனக்குத் தெரியும். அதனல், எங்களைவிட உனக்கு இந்த வீட்டில் உரிமை அதிகம்தான். யார் இல்லை என்கிறார்கள்.

கோபாலன்:— அடாடா! சிவராமகிருஷ்ணனுடைய கதி பெரியவருக்கும் வந்துவிட்டதா! உங்கள் மாப்பிள்ளை இல்லையா? அவரை அனுப்பி தேடச் செய்யக் கூடாதா?

அமிர்தம்மாள்:— (அசடுவழிந்த முகத்தோடு) மாப்பிள்ளைக்கும் எங்களுக்கும் மனஸ்தாபம். அதனல் அவரை அனுப்ப முடியவில்லை. நீதான் கொஞ்சம் வெளியில் போய்த் தேடிப் பார்க்கக்கூடாதா? எங்களுக்காகப் போகாவிட்டாலும், சிவராமகிருஷ்ணனுக்காகவாவது போகக்கூடாதா! இவன் இப்போது நல்ல நிலைமையிலிருந்தால், போவானல்லவா?

கோபாலன்:— இவன் நல்ல நிலைமையிலிருந்தால் தகப்பனைரைத் தேடவேண்டுமென்ற அக்கரை என்ன? இவனை இவனுடைய தகப்பனரோ, தாயாரோ இதுவரையில் தேடினர்களா? நான் இப்போது இவனை விட்டுப் போகமாட்டேன். இவனுடைய நிலைமையை கவனித்திருந்து அடிக்கடி மருந்து வாங்கிக்கொண்டு வர வேண்டும். பொழுது விடிந்தபின் போய்த் தேடலாம்.

அமிர்தம்மாள்:—நாங்கள் மூன்று பேர்கள் இருக்கிறோம். இவனைப் பார்த்துக்கொள்ள மாட்டோமா! இப்போதுதான் மருந்து வந்துவிட்டதே! இனி உனக்கு இங்கே என்ன அவசர வேலை ஏற்படப் போகிறது.

கோபாலன்:— இவ்வளவு அதிகாரத்தோடு எனக்கு உத்தரவிட உங்களுக்கு என்ன உரிமை வந்ததென்பது தெரியவில்லை. சிநேகத்தை உத்தேசித்து நான் இவனுக்கு உதவியா யிருக்கிறேன். இவனுடைய தகப்பனைரத் தேடவேண்டுமென்ற அக்கரை எனக்கெதற்கு?

அமிர்தம்மாள்:—என்னப்பா கோபாலா, நீ பேசுவது ஒழுங்கா யில்லையே! சிநேகிதனுடைய தகப்பனுருக்கு ஓர் ஆபத்து வந்தால், அந்த சமயத்தில் நீ உதவக் கூடாதா.

கோபாலன்:—என் சிநேகிதனை அவனுடைய தகப்பனும் தாயாரும் பகைவனுய் நினைத்திருக்கையில், நானும் அவர்களுக்குப் பகைவனே! ஆகையால், என் பகைவரை நான் ஏன் தேடுவேன்?

அமிர்தம்மாள்:—அப்பா, கோபாலா, பூனை கண்ணை மூடிக்கொண்டு பாலைக் குடிக்கிற கதையாய் நீ பேசினுல், அது எனக்குத் தெரியாமல் போகாது. நீ ஏற்கனவே மங்களத்தினிடம் சிநேகமா யிருந்தவன். எங்கள் பையன் இப்போது தொலைந்துபோனுல், இவளை அழைத்துக் கொள்ளலாமென்று நீ எண்ணுகிருய்போலிருக்கிறது. அதற்காக மருந்தென்று விஷத்தை கொடுத்து பையனைக் கொல்லப் பார்க்கிருயோ என்னவோ! உன்மேல் எங்களுக்கு நிரம்பவும் சந்தேகம் உண்டாய் விட்டது, ஆகையால் சிறு பெண் இருக்கும் வீட்டில் அன்னியனுன நீ இருக்கக் கூடாது. போ வெளியில்—என்ருள்.

அதை கேட்கவே பட்டம்மாள், மங்களம் ஆகியோருடைய முகம் விகாரமாக மாறியது. மங்களம் கோபாவேசம் கொண்டு பதறினாளாயினும், தன்னை அடக்கிக்கொண்டு மௌனமாய் நின்றாள்.

உடனே கோபாலன் கோபத்தினால் சிவந்த விழிகளோடு அமிர்தம்மாளை நோக்கி, "ஓகோ! உன்னைப் போல் என்னையும் நினைத்துக்கொண்டாயா? உன் பிள்ளையைக் கொல்லக்கூடியவள் நீதான். என் காலடியை மிதித்தவனுக்குக்கூட அந்த புத்தி வராது. நீ இங்கே இருக்கும்போது, நான் இங்கே இருப்பது சரியல்ல. நான் போகிறேன்—என்று கூறியபடி மருந்து ஸீஸாவைக் கீழே வைத்துவிட்டு சரேலென்று வெளியில் போய்விட்டான்.

சற்று தூரத்தில் நின்று அங்கே நிகழ்ந்த சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்த மங்களம் மிகுந்த கலவரமும், விசனமும் அடைந்து, " நீங்கள் போக வேண்டாம்; நில்லுங்கள் " என்று கூறியபடி வெளியில் சென்று பார்க்க, அதற்குள் கோபாலன் ஐந்தாறு வீடுகளுக்கப்பால் போய்விட்டானதலால், மங்களம் அழைத்தது அவனுடைய செவிகளில் படவில்லை. அதற்குமேல் உரக்கக் கூப்பிடாமல் மங்களம் சற்று நின்றபின் ஏக்கத்தோடும் சஞ்சலத்தோடும் உள்ளே வந்து சேர்ந்தாள்.

அமிர்தம்மாள்:—போய்விட்டானா?

மங்களம்:—அம்மா, என்ன வேலை செய்தீர்கள்? இந்த சங்கடமான நிலைமையில் நமக்கு உதவி செய்யக் கூடிய உபகாரியின் மனதைப் புண்படுத்தி அனுப்பி விட்டீர்களே! உங்கள் பிள்ளை என்னையல்லவா கோபித்துக் கொள்ளுவார்.

அமிர்தம்மாள்:—அவனை யார் போகச் சொன்னது? நானு போகச் சொன்னேன்? சாதாரணமாய்ப் பேசும் போதே அவ்வளவு முறைப்பாகப் பேசி விறைத்துக் கொண்டு போய்விட்டானே! அவன் செய்யும் வேலையை நானும் பட்டுவும் செய்கிறோம். நீ கவலைப்படாதே! உன் புருஷன் கேட்டால் நான் சமாதானம் சொல்லுகிறேன். உங்களுடைய கஷ்ட தசையில், இவனுக்குக்கூட நீ ஏன் சாப்பாடு போடவேண்டும்.

மங்களம்:— அம்மா, அவர் இங்கே சாப்பிடுகிற தில்லை. அவருடைய சாப்பாட்டைத்தான் நாங்கள் நான்கு நாட்களாய்ச் சாப்பிட்டோம்.

பட்டம்மாள்:—அம்மா, என்ன இருந்தாலும் உன் வாய்த்துடுக்கை நீ விடுகிறதில்லை. உன் அதிகாரம் உன் வீட்டிலேயே செல்லாமல் போய்விட்டது. வந்த இடத் தில் தாறுமாருய்ப் பேசி, இவர்களுக்கு அபகாரம் செய் கிருயே! அவரிடம் சமாதானமாகப் பேசி, உண்மையான தகவல்களைச் சொல்லி யிருந்தால், அவர் நமக்கு ஆக வேண்டிய உதவிகளைச் செய்வார்; அப்பாவையும் தேடு வார். அவர் இவர்களுக்கு உதவி செய்வதும் உன்னுல் இல்லாமல் போய்விட்டது.

அமிர்தம்மாள்:— சரி; என் புத்தியைச் செருப்பால் அடித்துக்கொள்ள வேண்டும். நான் இங்கே வந்ததே முதல் பிசகு—என்ருள்.

அதற்குமேல் அவர்கள் சம்பாஷிக்கவில்லை. மங்க ளம் மருந்து ஸீஸாவை எடுத்து, அதில் ஒரு பங்கை ஒரு கண்ணுடிப் பாத்திரத்தில் கொட்டி, அதைக் கையில் வைத்துக்கொண்டு சிவராமகிருஷ்ணனுடைய தலைப் பக்கத்தில் உட்கார்ந்து, "வாயைத் திறவுங்கள். மருந்து

சாப்பிட வேண்டும்" என்று இரண்டு தடவைகள் கூறினாள்.

அவன் கண்களைத் திறக்கவில்லை. மங்களம் அவனைத் தொட்டு மெதுவாக உலுக்கி, "வாயைத் திறவுங்கள். மருந்து விடுகிறேன்" என்று பன்முறை வற்புறுத்திக் கூற, சிவராமகிருஷ்ணன், "ஆ! மருந்தா!" என்று கிணற்றிற்குள் ளிருந்து பேசுகிறவன்போல் கேட்டபடி வாயை மாத்திரம் திறந்தான். அவள் மருந்தை விட, அவன் அதைப் பருகினன்.

உடனே மங்களம், "கொஞ்சம் கண்ணைத் திறந்து பாருங்கள். இதோ அம்மாளும், பட்டம்மாளும் வந்திருக்கிறார்கள்" என்றாள்.

சிவராமகிருஷ்ணன் :— இப்போதுதான என்னிடம் நீ விளையாடுகிறது! அவர்கள் நம்மிடம் வரும்படியான பாக்யம் நாம் செய்யவில்லையே! வேறே யார் வந்திருப்பதாகச் சொன்னாலும், நான் நம்புவேன்; அவர்கள் வந்ததாகச் சொல்வதை நான நம்புகிறவன்—என்றான்.

உடனே பட்டம்மாள், "ஆம் அண்ணா, நிஜமாகவே நாங்கள் வந்திருக்கிறோம். அண்ணி பொய் சொல்லவில்லை" என்றாள்.

அந்தப் புதுக் குரலைக் கேட்டவுடன் சிவராமகிருஷ்ணன் மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தான். அவனுக்கு எதிரில் அமிர்தம்மாளும், பட்டம்மாளும் நின்றனராதலால், அது அவனுடைய திருஷ்டியில் பட்டது. அவன் தனது உணர்ச்சிகளைத் தாங்கமாட்டாமல் தத்தளிக்க, அவனுடைய கண்கள் தாமாக மூடிக்கொண்டன. அவன், "ஆகா! நான் கனவு காண்கிறேன்போ லிருக்

கிறதே!" என்றான். அந்தக் குரல் அவனுடைய அடித் தொண்டையில் இருந்து வந்ததுபோல் தோன்றியது.

உடனே அமிர்தம்மாள், "அப்பா, சிவராம கிருஷ்ணா! கண்ணைத் திறந்து பார்; உம்பில் என்ன கோளாறு? என்றாள்.

அதற்குமேல் அவனுடைய சொற்கள் அடங்கிவிட்டன. வாயும் மூடிக்கொண்டது. அவன் அயர்வினால் தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டான். அமிர்தம்மாள் சற்று பொறுத்துப் பார்த்தபின், "சரி, தூங்குகின்றான்போலிருக்கிறது. மறுபடியும் விழித்துக்கொண்ட பிறகு பேசலாம். நாமும் படுத்துக் கொள்வோம்" என்றாள்.

அதன் பிறகு மூன்று ஸ்ரீகளும் திக்காலுக்கொருவராய்ப் படுத்துக் கொண்டனர்.

அந்த இரவு கழிய, காலை நேரம் வந்தது. சிவராம கிருஷ்ணன் கண்களைத் திறக்காமல் பிரக்ஞையற்றுப் படுத்திருந்தான். காமாட்சியும், அவளுடைய தம்பியும் எழுந்து புதிதாக வந்திருந்த இரண்டு ஸ்திரீகளையும் பார்த்தனர். காமாட்சி பட்டம்மாளைப் பார்த்தவுடன் திடுக்கிட்டு முகமலர்ச்சி அடைந்து, "அம்மா, நீங்கள் எப்போது இங்கே வந்தீர்கள்?" எங்கள் வீடு உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்றாள்.

மங்களம் :— (கோபத்தோடு) காமாட்சீ, என்ன குறும்புத்தனம் இது! அத்தையை நீ இதுவரையில் பார்த்ததில்லை. அவர்களிடம் மரியாதையாய் நடந்து கொள்ளாமல், தாறுமாறாய்ப் பேசுகிறாயே!

காமாட்சி:— (திடுக்கிட்டு) யார்! அத்தையா! யார் என் அத்தை! இந்த அம்மாள்தான் தெருவு முடக்கில் இருந்து எனக்கு தினம் தினம் காசு கொடுத்தவர்கள்!

அன்றைய தினம் ஒரு ரூபா கொடுத்ததும் இவர்கள் தான்—என்றாள்.

அதைக் கேட்டவுடன் அமிர்தம்மாளுடைய முகம் வியப்பாக மாறியது. மங்களம் புன்னகை செய்தபடி காமாட்சியின் முகத்தையும் பட்டம்மாளுடைய முகத்தையும் உற்று நோக்கினாள்.

அமிர்தம்மாள், "என்ன பட்டு, நீ இதற்குமுன் இந்தக் குழந்தையைப் பார்த்திருக்கிறாயா! அடேடே! எங்களுக்குத் தெரியாமல் நீ என்னென்னவோ காரியம் செய்திக்கிறாயே!" என்றாள்.

பட்டம்மாள் மறுமொழி கூறாமல் புன்னகை செய்தாள்.

மங்களம், "பட்டு, எங்களுடைய இத்தனை துர்ப்பாக்கியங்களிலும், உன் அந்தரங்க அன்பை மாத்திரம் நாங்கள் இழக்காமல் இருந்தோம்! உன் ஒரு ரூபாதான் என் புருஷருடைய உயிரை இதுவரையில் காப்பாற்றியது! அந்த ஒரு ரூபா ஒரு லக்ஷத்திற்கு சமானம்" என்றாள்.

காமாட்சி:— (மங்களத்தை நோக்கி) அம்மா, இவர்கள் உண்மையில் யார் அம்மா?

மங்களம்:—உனக்குப் பணம் கொடுத்த இந்த அம்மாள் உன் அப்பாவுக்குத் தங்கச்சீ. இந்தப் பெரிய அம்மாள் உன் அப்பாவுக்குத் தாயார்.

காமாட்சி:—அடேடே! அப்பாவுக்கு அம்மாகூடவா இருக்கிறார்கள்! அப்பாவுக்கு அப்பாகூட இருக்கிறார்களா?

மங்களம்:—ஓ! இருக்கிறார்களே!

காமாட்சி:—அவர்கள் ஏன் வரவில்லை?

மங்களம்:—இனிமேல் வருவார்கள்.

காமாட்சி:— (பட்டம்மாளிடம் ஓடி) அத்தை இது. வரையில் நீங்கள் என் அத்தை என்று சொல்லாமலே இருந்துவிட்டீர்களே. ஏன் அத்தை?—என்றாள்.

பட்டம்மாள் அதற்கு மறுமொழி கூற அறியாமல் திகைத்து சந்தோஷத்தோடு காமாட்சியைப் பிடித்து அணைத்துக்கொண்டாள்.

அப்போது அமிர்தம்மாள் காமாட்சியை நோக்கி, "நீயே கண்டு பிடிக்கிறாயா என்று பார்த்தாள். அதனால், சொல்லவில்லை" என்றாள்.

காமாட்சி:— பாட்டீ, நீங்களும், அத்தையும் ஏன் இதுவரையில் எங்களைப் பார்க்க வரவில்லை?—என்றாள்.

அதைக் கேட்ட அமிர்தம்மாள் வெட்கிப் போய்' மறுமொழி கூறாமல் பல் விளக்கப் போகிறவள்போல் பின்பக்கம் போய்விட்டாள்.

பட்டம்மாள்:— (காமாட்சியை நோக்கி) கண்ணா, நீ என்னோடு வெளியில் வருகிறாயா? உன்னுடைய தாத்தாவை அழைத்துக்கொண்டு வருவோம்.

காமாட்சி :— நான் பள்ளிகூடத்துக்குப் போக வேண்டும். அம்மாள் கோபித்துக் கொள்வாள்.

பட்டம்மாள் :— பள்ளிக்கூடத்துக்குப் போவதற்கு முன்னாகவே வந்துவிடலாம். உன்னைக் கோபிக்காமல் இருக்கும்படி நான் அம்மாளிடம் கேட்டுக் கொள்ளு கிறேன்—என்றாள்.

உடனே காமாட்சி மங்களத்தின் முகத்தைத் பார்க்க, பின்னவள் தலையை அசைத்துத் தன் சம்மதி யைத் தெரிவித்தாதாள். அதைப் பட்டம்பாளும் கவ

னித்தா ளாதலால், காமாட்சியுடன் பின்பக்கத்திற்குச் சென்றாள்.

அங்கு இருவரும் பல்தேய்த்து முகத்தைச் சுத்தி செய்து உள்ளே வர, பட்டம்மாள் தன் தகப்பனரைத் தேடிப் பார்த்துவிட்டு வருவதாய் மங்களத்தினிடம் சொல்லிவிட்டு காமாட்சியை அழைத்துக்கொண்டு வெளியில் போய்விட்டாள்.

காலை சுமார் எட்டு மணி சமயம். அமிர்தம்மாள் பின்புறத்தில் இருந்த கிணற்றடியில் ஸ்நானம் செய்து கொண்டிருந்தாள். மங்களம் தன் கணவன் படுத்திருந்த இடத்திற் கருகில் உட்கார்ந்து கண்களை மூடி சுவரில் சாய்ந்துகொண் டிருந்தாள். அவளுடைய தோற்றம் முற்றிலும் சோர்வையும், அதீதமான விசனத்தையும் காட்டியது.

இரண்டு தினங்களாய் மருந்து கொடுத்து வந்ததில் சிவராமகிருஷ்ணனுடைய ஜுரம் 104 டிக்ரியிலிருந்து 100-க்கு இறங்கியிருந்தது. சுமார் எட்டு மணிக்கு அவன் மெதுவாகக் கண்களைத் திறந்துகொண்டு சுற்று முற்றும் பார்த்து சமீபத்தில் மங்களம் மாத்திரம் இருந்ததை உணர்ந்தான்.

சிவராமகிருஷ்ணன்:—மங்களம், கோபாலன் இருந்தால் கூப்பிடு.

மங்களம்:— (நகர்ந்து அவனுக்கருகில் வந்து உட்கார்ந்துகொண்டு) அவர் இங்கே இல்லை; நேற்றிரவே வெளியில் போய்விட்டார். ஏன் உங்களுக்கு என்ன வேண்டும்?

சிவராமகிருஷ்ணன்:— அம்மாளும், பட்டம்மாளும் இங்கே வந்திருந்த மாதிரி நான் கனவு கண்டேன்.

மங்களம்:—நீங்கள் கண்டது கனவல்ல. நிஜமாகவே அவர்கள் இங்கே வந்திருக்கின்றார்கள்.

சிவராமகிருஷ்ணன்:—அவர்கள் எங்கே இருக்கிறார் கள்?

மங்களம்:— அம்மாள் கிணற்றண்டை குளித்துக் கொண் டிருக்கிறார்கள். பட்டம்மாள் காமாட்சியை அழைத்துக்கொண்டு வெளியில் போயிருக்கிறாள்.

சிவராமகிருஷ்ணன்:—அப்பா ஏன் வரவில்லை?

மங்களம்:— அதிருக்கட்டும். உங்களுடைய சிநேகி தரைப்பற்றி விசாரித்தீர்களே! ஏதாவது காரியம் ஆக வேண்டுமா?

சிவராமகிருஷ்ணன்:—ஆம். ஒரு காரணத்தினால்தான் கேட்டேன். அதிருக்கட்டும். நான்கு தினங்கலாய் நீ சாப்பாட்டுக்கு என்ன செய்கிறாய்? மருந்துச் செல வுக்கு யார் பணம் கொடுக்கிறார்கள்? கோபாலன் பணம் கொடுத்தானா?

மங்களம்:—நம்முடைய தரித்திர நிலைமையை நான் அவரிடம் சொல்லவில்லை. அன்றைய தினம் காமாட்சி கொண்டு வந்த ஒரு ரூபாயை வைத்தியருக்கும் மருந் துக்கும் செலவிட்டேன். உங்கள் சிநேகிதர் காமாட்சிக் கும், பையனுக்கும் வாங்கிக் கொடுத்த புது உடைகளை அடுத்த வீட்டில் ஈடாக வைத்து எட்டணா வாங்கி னேன். அதனால் இதுவரையில் காலக்ஷேபம் நடந்தது.

சிவராமகிருஷ்ணன்:—அப்படியானால், இப்போது உன் கையில் ஒன்று மிருக்காது.

மங்களம்:—இருக்கிறதோ இல்லையோ; எப்படியோ கடவுள் தயவினால் காரியம் நடந்துகொண்டே போகி றது. நீங்கள் அதைப் பற்றிக் கவலைப்பட்டு உடம்பை

அலட்டிக் கொள்ள வேண்டாம். இன்னம் மூன்று வேளை மருந்து கையில் இருக்கிறது. அதையும் நீங்கள் சாப்பிட்டால், ஜுரம் பூர்த்தியாய் விட்டுப்போகும். பிறகு ஆகவேண்டியதைப் பற்றி நீங்கள் கவலைப்படலாம். பேசாமல் படுத்திருங்கள்.

சிவராமகிருஷ்ணன்:—எனக்கு இப்போது உடம்பில் ஜுரம் இல்லை. நான் பழைய நிலைமைக்கு வந்துவிட்டேன். என் உடம்பைப் பற்றிக் கவலை வேண்டாம். அப்பா ஏன் வரவில்லை? அம்மா என்ன சொன்னார்கள்? கோபாலன் ஏன் போய்விட்டான்? எதையும் என்னிடம் மறைக்காமல் நீ உண்மையைச் சொல்—என்று அன்பாக வற்புறுத்திக் கேட்க, மங்களம் அவனுடைய கோரிக்கையை மறுக்க மாட்டாமல் நிகழ்ந்த சம்பவங்களை யெல்லாம் தெரிவித்தாள். அதைக் கேட்ட சிவராமகிருஷ்ணன் திடுக்கிட்டு விசனமும், ஆச்சரியமும் அடைந்து, "ஐயோ! என்ன அநியாயம் இது! அப்பா, அம்மா முதலியவர்களுக்கு கடைசியில் இப்படிப்பட்ட கஷ்டமா நேரவேண்டும். இந்த இக்கட்டான நிலைமையில், நமக்குப் பல விதங்களில் கோபாலன் அநுகூலமாயிருப்பானே! அவனையும் அம்மாள் தன் இயற்கையான துடுக்குப் பேச்சினால் துரத்திவிட்டாளே! ஆகா! என்ன தர்மசங்கடம் இது!" என்று கூறியபடி மெல்ல எழுந்து உட்கார்ந்து சுவரில் சாய்ந்துகொண்டு, "எனக்கு உடம்பு சரிப்பட்டுவிட்டது. இனி எனக்கு மருந்துகூடத் தேவையில்லை. நான் வெளியில் போய், அப்பாவைத் தேடிப் பார்க்கிறேன். அதுவு மல்லாமல், நம் எல்லோருடைய சாப்பாட்டுக்கும் ஆகவேண்டிய ஏற்பாட்டைச் செய்கிறேன்" என்று கூறியபடி தட்டித் தடுமாறி எழுந்தான்.

மங்களம், "வேண்டாம், வேண்டாம்; நீங்கள் வெளியில் போக வேண்டாம். உங்கள் உடம்பு இன்னம்

சரியான நிலைமைக்கு வரவில்லை'' என்று கூறித் தடுத் தாள்.

அவன் அதை இலட்சியாமல் எழுந்து, ஒரு மூலை யில் இருந்த ஊன்றுகோலை எடுத்துப் பிடித்துக் கொண்டு நடையை நோக்கிச் செல்லத் தொடங்கினன்.

மங்களம் பதறியபடி பின்பக்கத்திற்கு ஓடி தன் மாமியாரிடம் விஷயத்தைச் சொல்ல அவளும் விரை வாக வந்து சிவராமகிருஷ்ணனை நிறுத்த முயன்றாள். அவன், தனக்கு உடம்பு நன்றாய்த் தேறிவிட்டதென்று அவர்களுக்கு தைரிய மொழி கூறியபடி தெருவிற்கும் போய்விட்டான். அதற்குமேல் அவனைத் தடுக்க மாட் டாதவர்களாய் ஸ்திரீகள் இருவரும் வீட்டிற்குள் வந்து விட்டனர்.

அவன் தைரியமாகத் தெருவை யடைந்து தடியை ஊன்றி சிறிது தூரம் நடக்கவே, அவனுடைய உடம்பு கட்டிலடங்காமல் தாறுமாறாய்ச் சாயத் துடங்கியது. நாம் ஏற்கனவே குறித்தபடி. அவனுக்கு அப்போதும் 100 டிக்ரி ஜுரம் ஏற்பட் டிருந்தது. அவனுடைய உடம்பு மெலிந்து துர்பலமான நிலைமையில் இருந்தது. கண்கள் அடிக்கடி இருண்டு போயின. அறிவும், பிரக் ஞையும் அடிக்கடி மறைய வாரம்பித்தன. கால்கள் உதம்பின் பளுவைத் தாங்க மாட்டாமல் துவண்டு தள்ளாடின. நான்கைந்து வீடுகளுக் கப்பால் போன தற்குமுன், அவனுடைய நிலைமை சமாளிக்க முடியாத தாகி விட்டது. தான் திரும்பி வீட்டிற்குப் போய்விட லாமா வென்று அவன் எண்ணினை னுலும், அவ்வாறு செய்ய அவனுல் இயலவில்லை. ஆகவே, அவன் தட்டித் தடுமாறி பக்கத்திலிருந்த ஒரு திண்ணையை அடைந்து, அதன்மேல் ஏறிப் படுத்துக்கொள்ள, அவனுடைய பிரக்ஞை உடனே மறைந்து போய்விட்டது. அவன் தன்னையும் உலகையும் மறந்து அதே நிலைமையில் வீழ்ந்து கிடந்தான்.

—

அத்தியாயம்—4

பெருவாரியில் வந்தது தெருவாரியில் சென்றது

நாம் அவனை விடுத்து, அவனுடைய நண்பனை கோபாலனைக் கவனிப்போம். அமிர்தம்மாளின் சொல்லம்பினுல் தாக்கப்பட்டு, சிவராமகிருஷ்ணனுடைய வீட்டை விட்டு வெளிப்பட்ட கோபாலன் சிந்தனையிலாழ்ந்தபடி தெருவின் கடைசி வரையில் சென்றான். சிவராமகிருஷ்ணனை அவ்வித நிலைமையில் விட்டுப் பிரிந்து போக அவனுடைய மனம் இசையவில்லையாதலால், கால்கள் நடக்க மறுத்தன. ஆகவே, அவன் திரும்பி நடந்து சிவராமகிருஷ்ணனுடைய வீட்டின் வரையில் வந்தான். கதவு தாழிடப்பெற்றிருந்ததைக் காணவே, அவனுடைய எண்ணம் மாறுதலடைந்தது. தான் வாங்கிக் கொடுத்த மருந்து மறுநாளைய மாலை வரையில் வருமாதலாலும், அதோடு ஜுரம் பூர்த்தியாய் இறங்கிவிடுமென்று டாக்டர் கூறினுராதலாலும், அது வரையில்தான் சிவராமகிருஷ்ணனுக்குச் செய்யக்கூடிய உதவி எதுவுமில்லை என்னும் எண்ணம் அவனுடைய மனதில் உண்டாயிற்று. அதுவன்றி, தான் அங்கிருந்தால், துர்முகியான அமிர்தம்மாள் தன் மனது புண்படும்படியான சொற்களைச் சொல்லுவாளாதலால், தான் அங்கே இருப்பது உசிதமானதல்லவென்று நினைத்து மறுபடி திரும்பிச் செல்லலானுன்.

அப்போது அவன் அடியில் வருமாறு எண்ணமிட்டபடி சென்றான். "இத்தனை வருஷ காலமாய் இவர்களை வெறுத்து விலக்கி, இவர்களுடைய முகத்தையும் பார்க்காமல் இருந்தவர்கள் இப்போது திடீரென்று

வந்தது ஆச்சரியத்திலும் ஆச்சரியமே! கிழவரைத் தேடுவதற்கு மாத்திரம் சிவராமகிருஷ்ணன் பிள்ளைபோலிருக்கிறது; மற்ற சமயங்களில் விரோதி. இவர்களுடைய நியாயம் ஒழுங்கா யிருக்கிறது. இந்தக் கிழவர் காணுமல் போனதும் கடவுள் செயலாகத்தா னிருக்க வேண்டும். இந்த சந்தர்ப்பத்திலாவது, இவர்கள் சிவராமகிருஷ்ணனுடைய வீட்டிற்கு வந்து அவனுடைய குடும்பத்தின் பரிதாப நிலைமையைத் தெரிந்து கொள்ளட்டும் என்கிற கருத்தோடு கடவுள் இப்படிச் செய்திருக்க வேண்டும்'' என்று எண்ணமிட்டபடி, தன் சகோதரியின் புருஷரான சோமசுந்தரத்தின் வீட்டை யடைந்து முன்புறக் கதவை இரண்டு மூன்று தடவைகள் தட்டிவிட்டுச் சுமார் கால் நாழிகை நேரம் காத்திருக்க, கதவின் இடுக்கால் வெளிச்சம் தெரிந்தது. யாரோ விளக்கோடு உட்புறத்தில் வந்தார்கள் என்பது கோபாலனுக்கு நிச்சயப்பட்டது.

அடுத்த விநாடியில், "யார் கதவைத் தட்டுகிறது?" என்று ஒரு பெண் கேட்ட குரலோசை உண்டாயிற்று. உடனே கோபாலன், "நான்தான் மாமன்; கதவைத் திற **கல்யாணீ** என்று அன்பாக மறுமொழி கூற, உடனே கதவு திறக்கப்பட்டது. உட்புறத்தில் லாந்தரும் கையுமாய் நின்ற யௌவன மடந்தையான கலியாணி மிகுந்த கிலேசமும், நாணமும் கொண்டவளாய்க் கீழே குனிவதும், கோபாலனுடைய முகத்தைப் பார்ப்பதுமாய்த் தத்தளித்தாள். அவளுக்கு கிட்டத்தட்ட 22 வயதா யிருக்கலா மென்பது சுலபத்தில் தெரிந்தது.

கோபாலன்:—அப்பா இருக்கிருரா?

கல்யாணி :— இருக்கிருர்; தூங்குகிருர். எழுப்பட்டுமா?

கோபாலன்:— முக்கியமான காரியம் எதுவுமில்லை. நான் படுத்துத் தூங்கவேண்டும். அதுதான் காரியம்— என்று கூறியபடி உள்ளே நுழைந்து கதவை மூடித் தாழிட்டான்.

உடனே கலியாணி லாந்தரை நடைத் திண்ணையின் மேல் வைத்துவிட்டு, மேன்மாடத்திற்குச் சென்றாள். சற்று நேரத்தில் சோமசுந்தரம் தமது கண்களைத் துடைத்துவிட்டுக்கொண்டு சந்தோஷப் புன்னகையோடு அவனுக் கெதிரில் வந்து, "வாப்பா கோபாலா! மாடிக்குப் போவோம் வா" என்று உவப்போடு உபசரித்து அவனை அழைத்துக்கொண்டு லாந்தரோடு மேலே சென்றார்.

இருவரும் கூடத்தை யடைந்தவுடன் சோமசுந்தரம், "இலை போடச் சொல்லுகிறேன், அதோ குழா யிருக்கிறது. கைகால்களை அலம்பிக்கொள்" என்றார்.

கோபாலன்:—நான் எட்டு மணிக்கே சாப்பிட்டு விட்டேன். இந்த நடு இரவில் சாப்பாடு எதற்கு? வேண் டாம். நீங்கள் படுத்துக் கொள்ளுங்கள்; நானும் முன் தாழ்வாரத்தில் படுத்துக் கொள்ளுகிறேன்—என்றான்.

உடனே சோமசுந்தரம் அவனுக்குத் தேவையான பாய் தலையணை முதலியவைகளைக் கொடுக்க, அவன் தாழ்வாரத்தில் படுத்துக் கொண்டான் மற்றவர் இருவரும் தம் தம் இடத்தில் படுத்துக் கொண்டனர்.

மறுநாளைய காலையில் கோபாலனுக்கு அங்கேயே சிற்றுண்டி, காப்பி முதலியவைகள் கிடைத்தன. சோமசுந்தரம் நிரம்பவும் ஆசையோடு அவனுக்கு உபசரணைகள் புரிந்து இடையில் குடும்ப விஷயங்களைப் பற்றி அவனுடன் சம்பாஷிக்கலானார்.

சோமசுந்தரம்:—சில தினங்களுக்கு முன் நாதமுனிக்கும் உனக்கும் சண்டை நடந்ததாம். இருவரும் போலீஸ் ஸ்டேஷன் வரையில் போனீர்களாமே?

கோபாலன்:—நான் சாதாரணமாய்ப் பேசிக்கொண்டிருக்கும்போது, அவன் குறும்பாகவும் அயோக்கியத்தனமாகவும் பேசினன். அதனல் இருவருக்கும் சண்டை நடந்தது. அவன் என்னைப் பற்றி உங்களிடம் புகார் சொல்லிக் கொண்டானு?

சோமசுந்தரம்:—அவன சொன்னல் எனக்கு உன் மேல் விரோதம் உண்டாகிவிடுமா? அவன் என் தங்கை மகன்; நீ சம்சாரத்தின் சகோதரன். இருவரும் எனக்கு சமமானவர்கள். உண்மையில் பார்த்தால், எனக்கு உன்னிடம்தான் பற்றுதல் அதிகம். நம்முடைய கலியாணியை நாதமுனிக்குக் கலியாணம் செய்து கொடுக்க வேண்டுமென்று என் தங்கை அடிக்கடி கேட்டு என்னை வதைத்துக்கொண்டே இருக்கிருள். உன் தமக்கை இறந்து போனபோது, இவளை உனக்கே கொடுக்க வேண்டுமென்று கடைசி வேண்டுகோளாய் என்னிடம் கேட்டுக்கொண்டு இறந்தாள். அதை உத்தேசித்து, நான் இத்தனை வருஷ காலமாய் இவளுக்குக் கலியாணம் நடத்தாமல் உன் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தேன். அந்த ஆத்திரத்தினல் நாதமுனி உன்னை சண்டைக்கு இழுத்திருப்பான். இதிலெல்லாமா அநுகூலம் ஏற்படப் போகிறது. அதிருக்கட்டும். நீ இந்த ஊருக்கு வத்து நான்கைந்து நாட்களாகின்றன. இங்கே தங்க வேண்டுமென்ற ஆசை யில்லாமல் எங்கேயோ போவதும் வருவதுமா யிருக்கிருயே!

கோபாலன்:—அதைப் பற்றி வித்தியாசமாய் நினைக்க வேண்டாம் அத்தான். என்னுடைய சிநேகிதனைப்

பார்த்தேன். அவனுக்கு திடீரென்று உடம்பு அசௌக்கியப்பட்டுவிட்டது. அதனால் நான் அவனை விட்டு வரக்கூடாத அசந்தர்ப்பம் ஏற்பட்டுவிட்டது. அவ்வளவே விஷயம்.

சோமசுந்தரம்:— சரி; நீ செய்தது உபகாரமான காரியந்தான். அதிருக்கட்டும். கலியாணிக்கு இப்போது வயது 22 ஆகிறது. உன்னைப் பற்றி இத்தனை வருஷங்களாய் அவளை நான் கன்னிகையாய் வைத்திருக்கிறேன். இனியும் அவள் இதே நிலைமையில் இருப்பது உனக்கு சம்மதமா? நீ ஏன் இப்படி எங்களிடம் பற்றுதல் இல்லாமல் அன்னியன்போல் நடந்து கொள்ளுகிறாய்? முகூர்த்த நாள் பார்க்கலாமா? நீ இனி எவ்வித ஆட்சேபனையும் சொல்லக் கூடாது.

கோபாலன்:— அத்தான், கொஞ்சம் பொறுங்கள். இது பெரிய விஷயம். நான் உலகத்தில் விரக்திகொண்டு சந்நியாசிபோல் எதிலும் பற்றுதல் இல்லாமல் இருந்து வருகிறேன். என் மனதிற்கு மாறாய்க் கலியாணியைக் கட்டிக்கொண்டு அவளை விசனத்தில் ஆழ்த்த நான் விரும்பவில்லை. நான் ஆர அமர யோசித்துச் சொல்லுகிறேன். கொஞ்சம் அவகாசம் கொடுங்கள்.

சோமசுந்தரம்:—(முகமாறுபா டடைந்து) சரி; உன் இஷ்டம். எப்படியாவது நீ கூடிய சீக்கிரம் இதை முடித்துக்கொள். நான் கொஞ்சம் வெளியில் போய் விட்டு வருகிறேன். நீ எங்கேயும் போய்விடாதே இங்கேயே இரு—என்று கூறிவிட்டு எழுந்து விரைவாக வெளியில் போய்விட்டார்.

அப்போது ஒரு சாய்மான நாற்காலியில் உட்கார்ந்திருந்த கோபாலன் அப்படியே சிந்தனையி லாழ்ந்து

விட்டான். கலியாணி வீட்டின் கீழ்பாகத்தில் இருந்து, விருந்து தயாரிப்பதற்குரிய ஏற்பாடுகளை வேலைக்காரி யுடன் செய்துகொண் டிருந்தாள். சற்று நேரத்தில் அங்கே நாதமுனியின் தாய் வந்து சேர்ந்தாள். அவள் கலியாணியின் அத்தை யென்பது ஏற்கனவே குறிப் பிடப்பட் டிருக்கிறது.

அவளைக் கண்டவுடன் கலியாணி, "வாருங்கள் அத்தை; உட்காருங்கள்" என்று கூறி வரவேற்றாள்.

அத்தை, "வருகிறேன் கண்ணு. எங்கே அப்பா? மேலே இருக்கிறாரா?" என்றாள்.

கலியாணி:—இப்போதுதான் வெளியில் போனார் கள்.

அத்தை:—திரும்பிவர அதிக நேரம் பிடிக்குமோ?

கலியாணி:— அது எனக்குத் தெரியாதே அத்தை. ஏன் ஏதாவது அவசரமான காரியம் இருக்கிறதா?

அத்தை:—ஆம். கண்ணு. அவசர காரியந்தான். உன் கலியாண விஷயத்தைப் பற்றி உண்டு இல்லை என் பதை நிச்சயமாய்த் தெரிந்துகொண்டு போகலாமென்று வந்தேன். அது அவசர காரிய மில்லையா? உனக்கு ஏற் கனவே கலியாணம் நடந்திருந்தால், மூன்று நான்கு குழந்தைகளுக்குத் தாயா யிருப்பாயே! அந்தந்தப் பருவத்துக்குரிய சுகத்தை நீ அனுபவிக்க வேண்டாமா கண்ணு! அப்பாதான் சும்மா இருந்தால், நீயும் இப்படி நிம்மதியா யிருக்கிறாயே! நீ இந்தக் காலத்துப் பெண்ணு இல்லையே! திரேதாயுகத்துப் பெண்ணாய் இருக்கிறாயே! இந்த உலகத்தில் இவ்வளவு வயதான பெண்கள் சூது வாதில்லாமல் இப்படி நிஷ்களங்கமா யிருக்கவே மாட் டார்கள். நீ ஒன்றையுமறியாத சுத்த சுயம்புவா யிருக்

கிறாய். அது ஒரு விதத்தில் கண்டுராவியா யிருக்கிறது; ஒரு விதத்தில் சந்தோஷத்தை உண்டாக்குகிறது— என்றாள்.

அதைக் கேட்ட கலியாணி சங்கடமாகப் புன்னகை செய்தபடி மறுமொழி கொடாமல் மௌனமாய் நின்றாள்.

அத்தை:—என்ன கண்ணூ, நான் சொல்வதற்கு பதிலே சொல்லாமல் சும்மா சிரிக்கிறாயே!

கலியாணி:— பெரியவர்களான நீங்கள் பேசும் போது அதற்கு மாறாக நான் என்ன சொல்லுகிறது? அப்பா வருகிற வரையில் இருந்து, கேட்கவேண்டியதை யெல்லாம் அவரிடமே கேளுங்களேன். நான் எம்மாத்திரம்.

அத்தை:— (தரையில் உட்கார்ந்துகொண்டு) நான் இருந்து இன்று இதை முடிவு கட்டிக்கொண்டுதான் போகப்போகிறேன். (ஏராளமான சமையல் சாமான் களைப் பார்த்துவிட்டு) என்ன விசேஷம் கலியாணீ! விருந்துக்கு தடபுடலாக ஏற்பாடுகள் நடக்கின்றனவே! (புன்சிரிப்புடன்) நான் இன்று வந்து தாம்பூலம் மாற்ற வேண்டுமென்று சொல்லி இருந்தேன். அதைக் கருதித்தான் அப்பா விருந்துக்கு ஏற்பாடு செய்திருக் கிறார்போ லிருக்கிறது. அப்பா என்னைத் தேடிக் கொண்டு என் வீட்டிற்குப் போயிருப்பாரோ?

கலியாணி:— அப்பா எங்கே போனார்க ளென்பது எனக்குத் தெரியாது. என் மாமனார் ஊரில் இருந்து வந் திருக்கிறார். அவருக்காக விருந்து தயார்ப்படுத்தும்படி அப்பா சொன்னார்.

அத்தை:— (விகாரமான முகத்தோடு) ஓகோகோ! அவனுக்கா விருந்து! சரிதான்! அப்படியானல் நீ எங்கள் வீட்டிற்கு வரமாட்டாய்போ லிருக்கிறது?

கலியாணி:— காப்பிகொண்டு வருகிறேன்; சாப்பிடு கிறீர்களா?

அத்தை:—உனக்கு பதிலாக காப்பியைக் கொடுத்து என்னை ஏமாற்றி விடலாமென்று நினைக்கிருயா? வெறும் உபசாரக் காப்பியால் நான் திருப்தி யடைகிற வள் அன்று—என்ருள்.

அப்போது அங்கே வந்து சேர்ந்த சோமசுந்தரம், "தங்கைச்சீ, என்ன கலியாணியோடு சண்டை போட் டுக்கொண் டிருக்கிருய்?" என்ருள்.

தங்கை:— நான் ஏன் இவளோடு சண்டை போடு வேன் நீ ஒருவேளை என்னேடு சண்டை போட நினைக் கிருயோ என்னவோ! நான், எங்கள் வீட்டுக்கு வரப் போகிருயா இல்லையா என்று ஆசையோடு கேட்கிறேன் அண்ணு; வேறென்றும் வித்தியாசமில்லை. நீ முடிவாக என்ன சொல்லுகிருய்? கலியாணியை என் வீட்டுக்கு அனுப்பப் போகிருயா, இல்லையா?

சோமசுந்தரம்:—தங்கைச்சீ, என் நிலைமை தர்ம சங் கடமான தா யிருக்கிறது. இவருடைய தாயார் இறந்த போது நடந்த சம்பவம் உனக்குத் தெரியும். இவளு டைய மாமனும் ஊரிலிருந்து வந்துவிட்டான்.

தங்கை:—அப்படியானல் கலியாணி என் வீட்டுக்கு வரப்போகிறதில்லை.

சோமசுந்தரம்:— (புன்னகையோடு) ஏன் வரமாட் டாள். நீ எப்போது கூப்பிட்டாலும், இவள் வந்து விட்டு வருவாள்.

தங்கை:—இதுதான் என்னிடம் விளையாடும் சமயம் போல் இருக்கிறது! நான் கேட்பதென்ன, நீ சொல்வ தென்ன! உன் பெண்ணும் இப்படித்தான் சாமர்த்திய மாய்ப் பதில் சொன்னாள்; நீ வரமாட்டாயா என்றால் காப்பி தரட்டுமா என்று இப்போதுதான் கேட்டாள். இரண்டு பேரும் சாமர்த்தியசாலிகள்தான்.

சோமசுந்தரம்:—தங்கைச்சீ; பதறாதே! நடக்க நடக்க யோசிப்போம். பிரமாணிக்க விஷயத்தை நிறைவேற்ற முயற்சித்துப் பார்ப்போம். அது முடியாவிட்டால், பிறகு கலியாணி உன் மருமகள்தான்; தடையே இல்லை. அதுவரையில் மனதைப் புண்படுத்திக் கொள்ளாமல் இரு.

தங்கை:—அப்படியானால் முதல் மரியாதை உன் சம்சாரத்தின் வேண்டுகோளுக்குத்தான்போ லிருக் கிறது. நீ சொல்வது நன்றா யிருக்கிறது அண்ணா. சம் சாரத்தைவிடக் கூடப்பிறந்த தங்கச்சிக்கு உரிமை அதிகம். அதுவு மல்லாமல், இறந்துபோகிறவள் கோரு வதைவிட, உயிரோ டிருக்கிறவர் கோருவதையே கௌரவிக்க வேண்டும். இரண்டு வகைகளிலும் நீ என்னைப் புறக்கணிக்கிறாய்!

சோமசுந்தரம்:—நீ தங்கைக்குத்தான் உரிமை அதி கம் என்கிறாயே! உன் புருஷர் அவருடைய தங்கைக்கு ஏதாவது ஒரு துரும்பைக் கொடுத்தாலும் நீ உடனே குறுக்கில் விழுந்து தடுக்கிறாயே! அப்போது யாருக்கு உரிமை அதிகம். உனக்குத்தானே! அதை மனதில் வைத்துப் பேசு. தனக்கொரு நியாயமும், பிறருக்கொரு நியாயமும் பேசுவது சரியல்ல. சம்சாரம் சில விஷயங் களில் முதல் பாத்தியதை யுடையவள். சில விஷயங்

களில் தங்கை முதல் பாத்தியதை உடையவள். ஆகையால் அதைப் பற்றி நாம் இப்போது அநாவசியமாய் வம்பு வளர்த்து மனஸ்தாபம் உண்டாக்கிக் கொள்வது சரியல்ல. எல்லாவற்றிற்கும் நீ இன்னம் கொஞ்சம் பொறுத்துக்கொள். நான் சீக்கிரம் ஒரு முடிவிற்கு வருகிறேன்.

தங்கை:—சரி: நீ விதண்டா வாதமெல்லாம் பேசுகிறாய். உனக்கு சமதையாய்ப் பேச என்னால் ஆகிறதா அண்ணா! இவ்வளவுதான் நம் பாந்தவ்வியம். இதோடு தீர்ந்து போய்விட்டது. நான் போகிறேன் அண்ணா—என்று நிஷ்டூரமாய்ப் பேசியபடி அவ்விடத்தை விட்டுச் செல்ல முயன்றாள்.

சோமசுந்தரம்:—தங்கைச்சீ, ஏன் இப்படிக் கோபமாய்ப் போகிறாயே! இரு, சாப்பிட்டுவிட்டுப் போகலாம். நீ பேசுவதைப் பார்த்தால் உனக்கும் எனக்கும் கலியாணியினால்தான் உறவுபோ லிருக்கிறதே! நீ உடன் பிறந்தவள் என்று உரிமை கொண்டாடுகிறாய்! கல்யாணி பிறப்பதற்கு முன்னா லிருந்தே அந்த பாந்தவ்வியம் ஏற்பட் டிருக்கிறது. கல்யாணி பிறக்காம லிருந்தாலும், நீ தங்கச்சிதானே.

தங்கை:—அப்படியானால், இவளைக் கோபாலனுக்குக் கொடுத்துவிட்டு, இவள் பிறக்கவில்லை என்று நினைத்துக் கொள்ளும்படி எனக்கு இதோபதேசம் பண்ணப் போகிறாயா?

சோமசுந்தரம்:— அப்படியேதான் இவள் கோபாலனுக்கு வாழ்க்கைப்பட்டு விட்டால், உலகம் அஸ்தமித்துப் போய்விடுமா! உலகத்தில் எத்தனையோ பெண்கள் இருக்கிறார்கள். நானே ஒரு பெண் பார்த்து உன்மகனுக்

குக் கட்டி வைக்கிறேன். அந்தப் பெண்ணைப் பார்த்தால் பிறகு நீ கல்யாணியை மறந்துபோவாய்.

தங்கை:—வேறே பெண் பார்க்க வேண்டுமானால், நாங்களே பார்க்கமாட்டோமா! உனக்கு நாங்கள் ஏன் அந்தப் பிரயாசையைக் கொடுக்கிறோம். நீ பிடிகொடாமல் இவ்வளவு சாமர்த்தியமாய்ப் பேசிக் கழித்துவிடும் போது எனக்கு இங்கே என்ன வேலை. நான் போகிறேன்—என்று கூறியபடி திரும்பிப் பாராமல் மளமளவென்று வெளியில் போய்விட்டாள். சோமசுந்தரம் அவளை மேன்மேலும் கூட்பிட்ட தெல்லாம் வீணாகி விடவே, அவர் அங்கிருந்து மேன்மாடத்தை யடைந்தார்.

கீழே நடந்த சம்பாஷணை கோபாலனுடைய செவிகளில் பட்டதாகையால், அவன் அதைப்பற்றி சிந்தனை செய்தபடி இருக்க, அப்போது அவனிடம் சென்ற சோமசுந்தரம், "ஏனப்பா, கோபாலா, எழுந்து ஸ்நானம் செய்; சாப்பாட்டிற்கு உட்காரலாம்" என்றார்.

கோபாலன் தன் மன நிலைமையை வெளியில் காட்டிக் கொள்ளாமல் எழுந்து போய்த் தன் நீராட்டத்தை முடித்துக்கொண்டான். அதன் பிறகு விருந்துச் சாப்பாடு மிக சம்பிரமமாய் நடைபெற்றது. விருந்து நடந்ததைப்பற்றியாவது, தான் கலியாணியை விவாகம் செய்துகொள்ளும்படி வேண்டப்பட்டதைப் பற்றியாவது, கோபாலன் அவ்வளவாக சந்தோஷமோ பூரிப்போ காட்டாமல் சாதாரணமாகவே நடந்து கொண்டான்.

அவனது நிலைமையைக் கவனித்த சோமசுந்தரம், "அப்பா, கோபாலா, இன்று மாலையில் கலியாணி உன்னையும் அழைத்துக் கொண்டு ஸினிமா பார்க்கப்

போகவேண்டுமென்று ஆசைப் படுகிருள். அது $8\frac{1}{2}$ மணிக்கு முடிந்து போகும். பிறகு வந்து நாம் சாப் பாட்டை முடித்துக் கொள்ளலாம்'' என்ருர்.

கோபாலன்:—ஸினிமா, நாடகம் முதலிய வேடிக்கை கள் எதிலும் என் மனது செல்வதே இல்லை. ஆகையால், நான் அவைகளுக்குப் போகிறதே இல்லை. எனக்காகக் கொடுக்கப்படும் பணம் வீண் விரயம்தான்.

சோமசுந்தரம்:—பணத்தைப் பற்றி அக்கரை இல்லை. நீ எங்களோடு வருவது எங்களுக்கு ஒரு சந்தோஷம் அதற்காகவாவது நீ எங்களோடு வரத்தான் வேண்டும்— என்ருர்.

கோபாலன் அரைமனதோடு அதற்கு இசைந்தான். தாங்கள் ஸினிமாக் கொட்டகைக்குப் போய் வருவதற் காக சோமசுந்தரம் தமது நண்பர் ஒருவரது மோட்டார் வண்டியை மாலையில் அனுப்பும்படி சொல்லிவிட்டு வந்திருந்தா ராதலால், மணிக் கணக்கின்படி மோட்டார் வண்டி வந்து சேர்ந்தது. வீட்டை வேலைக்காரி பார்த் துக்கொண் டிருக்கும்படி திட்டப்படுத்திவிட்டு, சோம சுந்தரம் மற்ற இருவருடன் வண்டியில் ஏறிக்கொண்டு கொட்டகைக்குப் போய்ச் சேர்ந்தார். மூவரும் உள்ளே சென்று ஆட்டத்தைப் பார்த்துவிட்டு வரும் வரையில் மோட்டார் வண்டி வெளியில் காத்திருந்தது.

அவர்கள் சுமார் $8\frac{1}{2}$-மணிக்கு வெளியில் வந்து மோட்டார் வண்டியில் ஏறிக்கொள்ள, அது புறப்பட் டது; சாப்பாட்டிற்கு நேரமாய்விட்ட தென்ற எண்ணத் திஞல் சோமசுந்தரம் வண்டியைச் சீக்கிரம் விடும்படி சாரதியிடம் கூற, அவன் மணிக்கு முப்பது மைல் வேகத்தில் விட்டுக் கொண்டு சென்ருன். அது முன்

னிரவு காலமாதலால், எங்கும் இருள் நிறைந்திருந்தது. அரை பர்லாங்கு தூரத்திற்கு ஒரு லாந்தர் கம்பம் நின்று வெளிச்சம் கொடுத்துக்கொண்டிருந்தது. தூர தூரத்தில் வீடுகள் இருந்தன. அநேகமாய் வீடுகளின் கதவுகள் மூடப்பட்டு உட்புறத்தில் தாழிடப்பெற்றிருந்தன. வழியில் ஜனப் போக்கு காணப்படவில்லை. அவர்கள் கொட்டகையிலிருந்து சுமார் ஒரு மைல் தூரம் போக வேண்டியிருந்த தாகையால், வண்டி விசையாக போய்க் கொண்டிருந்தபோது, சற்று தூரத்தில் ஒரு மனிதன் ஆடி விழுந்துகொண்டு போனது அவர்களுக்குத் தெரிந்தது. அவன் குடி மயக்கத்தால் அப்படித் தாறுமாருய் நடந்து போகிறுன் என்று அவர்கள் யூகித்துக் கொண்டனர்.

அடுத்த நிமிஷம் மோட்டார் வண்டி அந்த மனிதனைக் கடந்துசெல்ல முயன்றபோது, அவன் மோட்டார் வண்டிக்குமுன் இரண்டு அடிகள் நகர்ந்து சாய்ந்துவிடவே, வண்டி அவன்மீது விசையாய் மோதிவிட்டது. அவன் வேரற்ற மரம்போல் கீழே சாய்ந்தான்.

அதைக் கவனித்த வண்டியோட்டி திகில் கொண்டு வண்டியை விசையாய் ஓட்ட, உடனே கோபாலன், "நிறுத்து; நிறுத்து; ஓட்டாதே! அவனை நாம் இந்த நிலைமையில் விட்டு ஓட்டுவது தர்மமல்ல. அடி பலமாய்ப் பட்டிருந்தால் அவனை ஆஸ்பத்திரியில் கொண்டுபோய் விட்டுவிடுவோம்" என்றுன்.

வண்டியோட்டி:—ஐயோ! நாம் அப்படிச் செய்தால், போலீஸார் எனக்குத் தண்டனை செய்து வைப்பார்கள். நீங்கள் மூவரும் சாட்சிகளாய்க் கச்சேரிக்கு வர நேரிடும்.

கோபாலன்:—அதைப்பற்றி அக்கறை இல்லை. நாங்கள் வந்து உன்மேல் தவறு இல்லையென்றும், அவனே

குடிமயக்கத்தில் வந்து விழுந்தா னென்றும் வாக்கு மூலம் கொடுக்கிறோம். வண்டியைத் திருப்பு.

சோமசுந்தரம்:—ஆம், அப்பா; வண்டியைத் திருப்பு— என்றார்.

உடனே சாரதி மோட்டார் வண்டியைப் பின்புற மாகவே விடுத்துக்கொண்டு, அந்த மனிதன் கிடந்த இடத்தண்டை வந்து சேர்ந்தான். உடனே மூன்று ஆண்பிள்ளைகளும் கீழே இறங்கி அந்த மனிதனைப் பார்த்தனர். சோமசுந்தரமும், கோபாலனும் உடனே அவனுடைய அடையாளத்தைக் கண்டுகொண்டனர்.

சோமசுந்தரம்:— அடேடே! இவராவிழுந்து கிடக் கிறார்!

கோபாலன்:—இவரை நீங்கள் இதற்குமுன் பார்த் திருக்கிறீர்களோ? இவருடைய பெயரென்ன?

சோமசுந்தரம்:—இவருடைய பெயர் கலியாணசுந்த ரம் என்பது. இவர் நம்முடைய கலியாணியைத் தமக்கு விவாகம் செய்து கொடுக்க வேண்டுமென்று சில தினங் களுக்கு முன்கூட் என்னிடம் கேட்டார். நான் முடியா தென்று சொல்லிவிட்டேன்.

கோபாலன்:—அடே! இவனுக்கு ஏற்கனவே கலி யாணம் ஆயிருக்கிறது. இவ்னுடைய சம்சாரம் இதே ஊரில் இப்போதுகூட இருக்கிறாளே!

சோமசுந்தரம்:—அது உனக்கு எப்படித் தெரியும்?

கோபாலன்:—இவனுடைய சம்சாரம் என் சிநேகித னுடைய தங்கைச்சி. அவளை நேற்றுகூட நான் என் சிநேகிதனுடைய வீட்டில் பார்த்தேன்.

சோமசுந்தரம்:—ஓகோ! அப்படியா! ஒரு சம்சாரம் இருக்கையில், இவனுக்கு இன்னொரு சம்சாரம் தேவையோ! நல்ல வேளை நான் ஏமாறாமல் தப்பினேன்.

இவனுடைய வாயிலிருந்து சீமைச்சாராய வாசனை குபீ ரென்று வீசுகிறதே. குடித்துவிட்டுப் போகிறான்போ லிருக்கிறது. இவ்வளவு யோக்கியனை இவன் உடம்பில் ரத்தக் காயத்தைக் காணேம். இவனை நாம் ஆஸ்பத்திரிக் குக்கொண்டுபோக வேண்டாம்; இவனுடைய வீட்டில் கொண்டுபோய் விட்டு விடுவோம்.

கோபாலன்:—இவனுடைய மாமனார் வீடு எனக்குத் தெரியும். இவனுடைய மாமியாரும் சம்சாரமும் நேற் றிரவு என் சிநேகிதனுடைய வீட்டில் இருந்தார்கள். இன்று தங்கள் வீட்டிற்கு வந்திருப்பார்கள். அங்கே கொண்டு போய் விட்டுவிடலாம்—என்றான்.

சோமசுந்தரம் அதற்கு இணங்க, சாரதியும் கோபாலனும், கலியாணசுந்தரத்தைப் பிடித்துக் தூக்கி வண்டிக்குள் போட்டுவிட்டு, ஏறி உட்கார்ந்து கொண் டனர்.

சோமசுந்தம்ர:— (சாரதியை நோக்கி) முன்னால், எங் கள் வீட்டுக்கு விடு. நானும் கலியாணியும் இறங்கி விடு கிறோம். அதற்குமேல் நீங்கள் இருவரும் இவனை இவ னுடைய மாமனார் வீட்டில் இறக்கிவிட்டு வாருங்கள்— என்றார்.

உடனே வண்டி புறப்பட்டது. சில நிமிஷங்களில், வண்டி சோமசுந்தரத்தின் வீட்டின் வாசலில் நின்று, அவரையும் கலியாணியையும் இறக்கி விட்டுவிட்டு, அங் கிருந்து புறப்பட்டு கலியாணசுந்தரத்தின் மாமனா ருடைய வீட்டை யடைந்து வாசலில் நின்றது.

உடனே சாரதி கீழே இறங்கி, அந்த வீட்டின் வாசற்படியண்டை போய்ப் பார்க்க, கதவு மூடப்பட்டு வெளிப்புறத்தில் ஒரு பெரிய பூட்டினால் பூட்டப்பெற் றிருந்தது.

அப்போது வண்டியில் இருந்த கோபாலன் கலியாண சுந்தரத்தின் சட்டைப் பைகளில் கையை விட்டு ஆராய்ந்து பார்த்தான். ஒரு சிறிய மணிபர்ஸும் (பணப் பையும்) ஒரு திறவு கோலும் காணப்பட்டன. அவைகளைத் தவிர வேறு எந்த வஸ்துவும் காணப்பட வில்லை.

அப்போது சாரதி திரும்பி வந்து, "கதவு பூட்டப் பட் டிருக்கிறதே! என்ன செய்கிறது?" என்றான்.

கோபாலன்:— இவருடைய சட்டைப்பையில் ஒரு திறவுகோல் இருக்கிறது. இதனால் திறந்து பார்க்கலாம்—என்று கூறியபடி திறவுகோலை மாத்திரம் சட்டைப் பையிலிருந்து எடுத்துக்கொண்டு கீழே இறங்கினான். இருவரும் கதவண்டை சென்றனர். கோபாலன் அந்தத் திறவுகோலால் பூட்டைத் திறக்க முயல, பூட்டு உடனே விலகி விட்டது. அவர்கள் கதவைத் திறந்து வைத்து விட்டு, மறுபடி வண்டிக்கு வந்து, அப்போதும் பிரக்ஞை யற்றுக்கிடந்த கலியாணசுந்தரத்தைத் தூக்கிக்கொண்டு போய் ஒரு திண்ணையில் விடுத்தனர்.

கோபாலன்:— உள்ளே விளக்கு இல்லையே! ஒரு லாந்தர் இருந்தால் நல்லது—என்றான்.

அவ்வாறு இவர்கள் பேசிக்கொண் டிருந்தபோது, அடுத்த வீட்டின் சொந்தக்காரன் தன் வீட்டின் திண்ணையில் இருந்தபடி, ஒரு மனிதனை அவர்கள் தூக்கிச் சென்றதைப் பார்த்துவிட்டு ஆச்சரிய மடைந் தவனாய் அவர்களிடம் வந்து, மயங்கிக் கிடந்த மனிதனை உற்றுப் பார்த்து, "ஓகோ! இவன் ஏன் இப்படி மயங் கிக் கிடக்கிறான்?" என்றான்.

சாரதி:—குடித்துவிட்டு மயங்கி ரஸ்தாவில் கிடந் தான். இந்த ஐயா இவனுடைய அடையாளத்தைக்

கண்டு, இவன் மேல் இரக்கம் கொண்டு இங்கே விடும் படி சொன்னார். வண்டியில் ஏற்றிக்கொண்டு வந்தோம். வீட்டில் யாரும் இல்லையே! இவனுடைய சம்சாரம் முதலியோர் எங்கே போயிருக்கிறார்கள்?

அடுத்த வீட்டுக்காரன்:—ஓகோ! குடிவெறியா! ஆம். நாற்றம் வயிற்றைக் குமட்டுகிறதே! இவனுக்கா நீங்கள் இரக்கம் காட்டினீர்கள். வண்டியை இவன்மேல் விட்டு இவனை நீங்கள் எமனுலகத்துக்கு அனுப்பி யிருந்தால் கூட அது பாவ மல்லவே!

கோபாலன்:—ஏன் அப்படிச் சொல்லுகிறீர்? இவர் பேரில் உமக்கு அவ்வளவு ஆத்திரம் என்ன?—என்றான்.

அதைக் கேட்ட அண்டை வீட்டுக்காரன் முதல் நாள் நிகழ்ந்த சம்பவம் முழுவதையும் கூறினான். கலியாணசுந்தரம் தன் மனைவியை ஏமாற்றி எல்லாச் சொத்துக்களையும் தன்மேல் எழுதி வாங்கிக்கொண்டு, மாமனார், மாமியார், மனைவி முதலியோரையும் அடித்துத் துரத்தி விட்டது முதலிய விவரங்களை யெல்லாம் கூறினான்.

அதைக் கேட்ட கோபாலன், "இவன் செய்தது ஒருவிதத்தில் நியாமானதுதானே. இவனுடைய மாமனாரும், மாமியாரும் தங்கள் வயிற்றில் பிறந்த சொந்தப் பிள்ளையை என்ன நிலைமையில் வைத்தார்கள். அதற்காகக் கடவுள் இவன் மூலம் தண்டனை நடத்தினார்போல் இருக்கிறது. வினை விதைத்தவன் வினை யறுக்கிறான். நமக்கென்ன? குடித்து மயங்கி நடுவழியில் கிடந்தான். இவனை இவனுடைய ஜாகையில் விட்டுப் போவதில் நமக்கென்ன நஷ்டம்" என்றான்.

அண்டை வீட்டுக்காரன், "சரி உங்கள் இஷ்டம் போல் செய்யுங்கள். உள்ளே மின்சார விளக்குகள்

இருக்கின்றன. கொளுத்திக் கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டுத் தன் வீட்டிற்குப் போய்விட்டான். உடனே கோபாலன் உள்ளே நுழைந்து, நடையின் கதவைத் தடவிப் பார்த்து, அங்கிருந்த விசையைக் கண்டு பிடித்து, விளக்கைக் கொளுத்திவிட்டுக் கூடத்திற்குச் சென்று அங்கிருந்த விளக்கையும் கொளுத்தினான். உடனே இருவரும் அவனைத் தூக்கிக்கொண்டு போய்க் கூடத்தில் இருந்த ஒரு கட்டிலில் படுக்க வைத்தனர்.

கோபாலன்:—சரி; நீ வண்டியை ஓட்டிக்கொண்டு போ. இவன் பிரக்ஞை யில்லாமல் இருக்கையில் வீட்டைத் திறந்து போட்டுவிட்டுப் போவது சரியல்ல. நான் கொஞ்ச நேரம் இங்கே இருந்து இவனுடைய மயக்கம் தெளிந்தபின் கதவைத் தாழிட்டுக் கொள்ளச் செய்து விட்டு வருகிறேன்—என்றான்.

சாரதி உடனே வெளியில் சென்று மோட்டார் வண்டியை ஓட்டிக்கொண்டு போய்விட்டான். வாசற் படி வரையில் வந்த கோபாலன் முன்கதவைத் தாழிட்டுக்கொண்டு உள்ளே வந்து சேர்ந்தான்.

வந்தவன் கலியாணசுந்தரத்தின் பக்கத்தில் போய் நின்றுகொண்டு, "கலியாணசுந்தரம், கலியாணசுந்தரம்" என்று இரண்டு மூன்று முறைகள் கூப்பிட்டும் பார்த்தான்.

கலியாணசுந்தரம் பிணம்போல் கிடந்தான். மோட்டார் வண்டி அவன்மேல் பலமாய் முட்டியதைக் கோபாலன் நன்றாகப் பார்த்தவனாதலால், இரத்தக்காயம் இல்லாததைக் கண்டு அவன் பெரிதும் ஆச்சரியமடைந்தான். குடிமயக்கத்தோடு அடிமயக்கமும் சேர்ந்திருக்க வேண்டுமென்று அவன் நிச்சயமாய் நம்பினான். உடம்

பின் வெளியில் காயம் இல்லாவிட்டாலும், உட்புறத்தி லாவது அடி உறைத்திருக்க வேண்டுமென்று கோபா லன் கருதினுன்.

எனவே, அவன் சற்று நேரம் எண்ணமிடலானுன். முதல் நாள் நடு இரவில் பட்டம்மாளும் அவளுடைய தாயும் சிவராமகிருஷ்ணனிடம் எதற்காக வந்தனர் என்பதும், கிழவர் எதனுல் காணுமல் போனுர் என்பதும் அவனுக்கு நன்ருக விளங்கியது. சிவராமகிருஷ்ணனுடைய தரித்திர நிலைமையில் அவனுடைய தாய் முதலியோர் வந்ததால் துன்பமும், வேதனையும் அதிகரிப்பது நிச்சயமென்று அவன் கருதினுன். அதுவன்றி, நியாயப்படி சிவராமகிருஷ்ணனைச் சேரவேண்டிய சொத்துக்களை யெல்லாம் வஞ்சகத்தினுல் கலியாணசுந்தரம் அபகரித்துக் கொண்டதும், தன் மனைவியை அவன் ஓட்டிவிட்டதும் மகா கொடிய கிராதகச் செய்கைகளாகத் தோன்றின வாதலால், அதற்காக அவனை எவ்விதம் இம்சித்தாலும், அது பாபமாகாதென்று அவன் உணர்ந்தவனுய், அவன் படுத்திருந்த கட்டில் முதலிய இடங்களை ஆராய்ந்து பார்க்கத் தொடங்கினுன். அவனுடைய தலையணையின் கீழ் ஒரு கொத்துத் திறவுகோல்கள் காணப்பட, அவன் அதை எடுத்துக்கொண்டு, அறைகளின் பூட்டுகளையும், இரும்புப் பெட்டி முதலியவைகளையும் திறந்து திறந்து பார்த்தான். கிழவர் பட்டம்மாளுக்கு எழுதிக் கொடுத்த பத்திரம், அவள் கலியாணசுந்தரத்திற்கு எழுதிக் கொடுத்த பத்திரம் இன்னம் இதர தஸ்தாவேஜுகள் முதலியவை காணப்பட்டன. இவைகளைக் கோபாலன் எடுத்துத் தன் சட்டைப் பைக்குள் வைத்துக்கொண்டான். அதுவன்றி, இரும்புப் பெட்டியில் அமிர்தம்மாளின் நகைகளும்,

பட்டம்மாளின் நகைகளும், பணமும், வெள்ளிப் பாத்திரங்களும் காணப்பட்டன. அவையன்றி, விலையுயர்ந்த சேலைகள், வேஷ்டிகள் முதலிய ஆடைகள் காணப்பட்டன. எல்லாவற்றையும் எடுத்து இரண்டு மூட்டைகளாய்க் கட்டி எடுத்துக்கொண்டு விளக்குகளை அணைத்துவிட்டுத் தெருவுக்கதவை மூடி வைத்துவிட்டுக் கோபாலன் வெளியில் போய்விட்டான்.

அப்போது அந்த வீட்டில், கட்டில், மெத்தை, பெட்டிகள், பீரோக்கள், மேஜை நாற்காலிகள் முதலிய மரச் சாமான்களும், செம்பு, குடம் முதலிய பாத்திரங்களும், சொற்ப அரிசி வகையரா சாமன்களுமே மிச்சமிருந்தன.

இராப் பொழுது கழிந்துகொண்டே இருந்தது. வீட்டின் கதவு தாழிடப்படாமல் மூடி வைக்கப்பட்டிருந்தது. கலியாணசுந்தரம் பிரக்ஞையற்றுப் பிணம் போலவே கிடந்தான். மோட்டார் வண்டியின் முன் பக்கத்தில் வழுவழுப்பாயும் சப்பையாயும் இருந்த ஒரு தகடு அவனுடைய இடுப்பில் மோதிய தாகையால் அது குத்தி இரத்தக் காயம் உண்டாகவில்லை. ஆனாலும், அதன் தாக்குதலால் ஏற்பட்ட அதிர்ச்சி அவனுடைய ஸ்பரிச நாடிகள், மூளை முதலியவற்றைக் கலகலக்க அடித்துவிட்டது. அதுவன்றி, அவன் ஏற்கனவே குடியால் மயங்கி இருந்தா னதலால், இரண்டும் சேர்ந்து அவனுடைய உடம்பை நிலை குலையச் செய்துவிட்டனவாதலால், அவனுக்கு அதற்குமேல் பிரக்ஞை திரும்பாது என்று அஞ்சும்படியான நிலைமையில் அவன் அலங்கோலமாய்ப் படுத்திருந்தான். பொழுது விடிந்த பின், நெடுநேரமாகியும், அவனுடைய நிலைமையில் மாறுதல் ஏற்படாமலேயே இருந்தது. அந்த வீட்டில் இருந்த

வேலைக்காரியையும் வேலைக்காரனையும் அவன் முதல் நாளே விலக்கி அனுப்பிவிட்டானாதலால், எவரும் அந்த வீட்டிற்குள் வரவில்லை.

பகல் சுமார் பதினொரு மணி வேளையாயிற்று. அப்போது உண்டிப்பெட்டிச் சாமியார் வழக்கப்படி காஷாய வஸ்திர மணிந்து கையில் உண்டிப்பெட்டி, விபூதிப்பை ஆகிய இரண்டு பொருள்களையும் வைத்துக் கொண்டு தனியாக ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று பண வசூல் செய்துகொண்டு வந்தார். அவருடைய மருமகனை விபூதிப்பைச் சாமியார் அவரை விட்டுப் பிரிந்து இதோபதேசச் சாமியார் ஆய்விட்டாராதலால், உண்டிப்பெட்டிச் சாமியார் தமக்கு இன்னொரு விபூதிப் பையையும் சம்பாதித்துக்கொண்டு, விபூதியின் மூலம் பழனியாண்டவருடைய அருளை வினியோகிப்பது, பெட்டியினால் ஜனங்களில் பொருளை அபகரிப்பது ஆகிய இரண்டு உத்தியோகங்களையும் ஒருங்கே பார்த்தபடி எவன் ஏமாறுவான் என்று கவனித்தபடி வீடு வீடாய் வந்து தமது காலணு, அரையணு வீதம் வசூல் செய்து கொண்டு வந்தவர் கலியாணசுந்தரம் இருந்த வீட்டை யடைந்தார்; அடைந்தவர் கதவிற்கு வெளியில் இருந்து இரண்டொரு தரம், "ஐயா அம்மா!" என்று கூப்பிட்டுப் பார்த்தார். மறுமொழி கிடைக்கவில்லை யாதலால், அவர் மெல்லக் கதவின் மேல் கையை வைக்க, அது திறந்துகொண்டது. உள்ளே எவரேனும் இருக்கலாம் என்ற நினைவினால் தூண்டப்பட்டவராய் அவர், "அருணசலம், பரமசிவம், அண்ணமலை" என்று நாம ஸ்மரணை செய்து உண்டிப்பெட்டியை உலுக்கிக் கொண்டே மெதுவாக உள்ளே நுழைந்தார். அவர் தாழ்வாரத்திற்குப் போனவுடன், கூடத்தில் கட்டிலின்

மேல் அலங்கோலமாய் ஒரு மனிதன் படுத்திருந்ததைக் கண்டுவிட்டா ராதலால், உடனே நின்று, "ஐயா, பழனியாண்டவர் மண்டபத் திருப்பணி; ஆண்டவர் துணைபுரிவர். கையால் கடைப்பட்டதை இந்த தேவ ஸ்தானப் பெட்டியில் போடுங்கள்" என்று பல தடவை கள் கூறிப் பார்த்தார். அதற்கும் மறுமொழி கிடைக்க வில்லை.

எனவே, அவர் மெதுவாகக் கட்டிலண்டை சென்று படுத்திருந்தவரை உற்றுப் பார்த்தார். பார்க்கவே, சாமி யார் திடுக்கிட்டு ஆச்சரித்தோடு மேன்மேலும் உற்று உற்றுப் பார்த்து, "என்ன விநோதம் இது! அந்த மனிதர் போலவே இருக்கிறாரே! அவர் இறந்துபோய் ஒரு வருஷ காலத்திற்குமேல் ஆய்விட்டது! அவருக்கு தலைத் திதிகூட ஆய்விட்டதே! இந்த மனிதர் அதே அச்சா யிருப்பது ஒரு பெரிய ஆச்சரியம்!" என்று தமக் குள் நினைத்துக்கொண்டு, அந்த வீட்டில் வேறு யாரா வது இருக்கிறார்களா என்று பார்க்கவேண்டு மென்னும் ஆசையினால் தூண்டப் பட்டவராய், "அருணாசலம், முருகா, முருகா, பழனியப்பா" என்று கூறி உண்டிப் பெட்டியை ஆட்டிக்கொண்டே வீடு முழுவதும் சென்று தேடிப்பார்த்தார். மனிதர் எவரும் காணப்படவில்லை. சாமியாரின் ஆச்சரியம் அபாரமாய்ப் பெருகியது. அவ ருடைய மனதில் பல மாதிரியான எண்ணங்கள் எழுந் தெழுந்து மறைந்தன.

அவர் மறுபடியும் கட்டிலண்டை வந்து, விபூதி யைக் கையில் எடுத்துக்கொண்டு, "ஐயா, நீங்கள் நோயில் படுத்திருப்பதாய்த் தெரிகிறது. பழனியாண் டவர் துணைசெய்வார். இதோ இந்தத் திருநீற்றைப் பூசிவிடுகிறேன்" என்று கூறியபடி கலியாணசுந்தரத்

தின் நெற்றியிலும் கழுத்திலும் பூசிவிட்டார். அதற்கும் அவன் அசையவில்லை. சாமியார் மெல்ல அவனுடைய சட்டைப் பையில் கையை விட்டு, நேரில் தெரிந்த மணிபர்ஸை எடுத்து, "ஐயா, பணப்பையை இப்படி வைத்துக்கொண்டு தூங்கலாமா? அயலார் எவரேனும் வந்து இதைக் கண்டால், அவருடைய கை சும்மா இருக்குமா? அதை ஜாக்கிரதையாய் வைத்துக்கொள்ளுங்கள்" என்றார். அதற்கும் அவன் அசையவில்லை. சாமியார் சுற்றுமுற்றும் பார்த்தார்; பையைத் திறந்தார். அதற்குள் பத்து ரூபாய்க் குள்பட தொகை பணமாயும் சில்லறையாயும் இருந்தன. அவைகளை அவர், "பழனியாண்டவருக்கே அர்ப்பணம்" என்று கூறியபடி தமது உண்டிப்பெட்டியின் துவாரத்தால் பெட்டிக்குள் போட்டு, காலியான பர்ஸை முன்போல் கலியாணசுந்தரத்தின் சட்டைப் பைக்குள் வைத்துவிட்டு, மெல்ல வெளியில் நடந்து விரைவாகச் சென்றார்.

சென்றவர் நேராகத் தங்கள் ஜாகையை யடைந்து, விபூதிப்பை, உண்டிப்பெட்டி முதலியவற்றை வைத்துவிட்டு, காஷாய வஸ்திரத்தை விலக்கிவிட்டு, வெள்ளை வேஷ்டி, சட்டை, குல்லா முதலியவைகளை அணிந்துகொண்டார்; உண்டிப்பெட்டியைத் திறந்து, அதிலிருந்த பணம் காசு முதலியவற்றை எடுத்துத் தமது மணிபர்ஸில் போட்டு சட்டைப் பையில் வைத்துக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டு, நேராக வண்டிப்பேட்டைக்குப் போய் இரண்டு கை வண்டிகளையும் சில கூலி ஆட்களையும் அமர்த்திக்கொண்டு நேராகக் கலியாணசுந்தரத்தின் வீட்டிற்குச் சென்றார். வண்டிக்காரர்களையும் கூலியாட்களையும் வெளியில் நிறுத்திவிட்டுத் தாம் மாத்திரம் உள்ளே போய், "ஐயா, ஐயா"

என்று கலியாணசுந்தரத்தை இரண்டு தடவைகள் கூப்பிட்டுப் பார்த்தார். கலியாணசுந்தரம் அப்போதும் பிரக்ஞையற்றுக் கிடந்தான். சாமியார் தைரியமாய்க் கிட்ட நெருங்கி கலியாணசுந்தரத்தைத் தொட்டு அசைத்துப் பார்த்தார். அப்போதும் அவனுக்கு ஸ்மரணை உண்டாகவில்லை. ஆகவே, சாமியார் அவனைத் தூக்கித் தரையில் ஒரு பக்கமாய்ப் படுக்க வைத்துவிட்டு வெளியில் வந்தார்.

அப்போது அங்கே வந்த அண்டை வீட்டுக்காரன், "மாப்பிள்ளைக்கு இப்போது மயக்கம் எப்படி இருக்கிறது?" என்றான்.

சாமியார், "கொஞ்சம் தெளிந்திருக்கிறது" என்றார்.

அண்டை வீட்டுக்காரன்:— வண்டிகள் எதற்காக வந்திருக்கின்றன?

சாமியார்:— இவர் இந்த வீட்டை விட்டு வேறு ஜாகைக்கு மாறுகிறார்—என்று கூறிவிட்டு, கூலியாட்களை அமர்த்தலாய் உள்ளே அழைக்க, அண்டை வீட்டுக்காரன், அந்த மனிதன் கலியாணசுந்தரத்தின் நெருங்கிய பந்துவா யிருக்கவேண்டுமென்று யூகித்துக்கொண்டு தன் வீட்டிற்குப் போய்விட்டான்.

உள்ளே சென்ற சாமியார் கூலியாட்களை ஏவி, கலியாணசுந்தரம் படுத்திருந்த கட்டில், பல இடங்களில் இருந்த நாற்காலிகள், இரும்புப்பெட்டி முதலிய சகலமான தட்டுமுட்டுச் சாமான்கள், பாத்திரங்கள், அரிசி பருப்பு முதலிய சமையல் சாமான்கள் ஆகிய யாவற்றையும் வெளிப்படுத்தி வண்டியில் ஏற்றிக்கொண்டு, வெளிக்கதவை மூடி வைத்து வண்டிகளை விடுத்துக் கொண்டு போய்விட்டார்.

அப்போது அந்த வீட்டில் கலியாணசுந்தரம் தன் இடுப்புத்துணி, சட்டை ஆகியவற்றேடு தரையில் படுத்திருந்தான். அவனுடைய பணப்பை வெறும் பையாயிருந்தது. அப்போது ஒரு துறும்புகூட அந்த வீட்டில் இல்லை யாதலால், அது காலிசெய்யப்பட்டது போல் காணப்பட்டது. அந்த வீட்டிற்குள் வரக்கூடிய வர் எவருமில்லை யாதலால், கலியாணசுந்தரம் கவனிப் பார் இன்றி அலங்கோலமாய் வீழ்ந்து கிடந்தான்.

அன்றைய மாலையில் அவனுடைய பிரக்ஞை சொற்பமாகத் திரும்ப ஆரம்பிக்கவே, அவன் தனது உடம்பின் வேதனையைப் பொறுமல் முக்கி முனகியபடி அப்புறம் இப்புறம் திரும்பிப் படுத்த வண்ணமாய் இருந்தான். ஆயினும் அவனது கண்கள் திறந்து கொள்ளவில்லை. தான் இன்ன நிலைமையில் படுத் திருந்தா னென்பதைப் பற்றிய நினைவே அவனுக்கு உண்டாகவில்லை. அவனது மன நிலைமை கனவின் நிலைமையைவிட மிகக் கேவலமானதா யிருந்தது.

அவ்வித நிலைமையில் அவன் தரையில் படுத்திருக்க, அன்றைய இரவும் வந்தது. விளக்கு ஏற்றப்படாமை யால் வீடு பயங்கரமாய் இருண்டு கிடந்தது. இரவு பன்னிரண்டு மணி சமயமாயிற்று. ஜனங்கள் எல்லோ ரும் தூக்கத்தில் ஆழ்ந்துபோ யிருந்தமையால், சில தெருவுகளில் நாய்கள் அழுததைத் தவிர வேறு எவ் வித ஓசையும் உண்டாகவில்லை.

அப்போது நான்கு முரட்டு மனிதர்கள் கலியாண சுந்தரம் படுத்திருந்த வீட்டின் முன்பக்கத்தில் இருந்த காமரா அறையின் ஜன்னல் கம்பிகளைப் பெயர்த்துக் கொண் டிருந்தனர். அந்த வீட்டின் முன் கதவு

தாழிடப்படாமல் மூடி வைக்கப்பட்டிருந்த தானுலும், இரவு வேளை யாதலால், கதவு உட்புறத்தில் தாழிடப் பெற்றிருக்கு மென்ற நம்பிக்கையைக் கொண்டவர்க ளாய் அவர்கள் அந்தக் கதவண்டை போகாமல் ஜன்ன லின் கம்பிகளைப் பெயர்த்தனர்.

ஒருவன்:—அன்றைய தினம் நாம் இதே வழியாகத் தான் உள்ளே போனோம் நமக்கு நல்ல வேட்டை அகப்பட்டது. உள்ளே இன்னம் ஏராளமான சாமான் கள் இருந்தன. கையில் அகப்படுவதை இன்று சுருட் டிக்கொண்டு போகலாம்—என்றான்.

இன்னொருவன்:— உள்ளே இருந்த இரண்டு பெண் பிள்ளைகள் மேலும் ஏராளமான தங்க நகைகள் இருக் கின்றன. நேராகப் போய் அவர்களுடைய கழுத்தை அறுத்துப் போட்டுவிட்டு நகைகளைக் கழற்றிக்கொண்டு போய்விடுவோம். மற்ற சாமான்கள் இன்னொரு நாளைக்கு இருக்கட்டும்—என்றான்.

அதற்குள் கம்பிகள் பெயர்க்கப்பட்டு விட்டன வாதலால், நால்வரும் ஓசை செய்யாமல் உள்ளே நுழைந்து விட்டனர் ஒருவன் தன் கையில் வைத்திருந்த மின்சாரக் கைவிளக்கைக் கொளுத்தி வெளிச்சத்தை முன்புறம் காட்டியபடி முதலில் செல்ல, மற்றவர் அவ னுக்குப் பின்னல் சென்றனர். அந்த அறை முற்றிலும் காலியா யிருந்ததைக் கண்ட திருடர்கள் பெரிதும் வியப்படைந்து கூடத்திற்குச் சென்று பார்க்க, அங்கு தரையில் ஒரு மனிதன் அலங்கோலமாய்ப் படுத்திருந் தது அவர்களுக்குத் தெரிந்தது. அவனைத் தவிர, கூடத் திலும் ஒரு சாமான்கூட காணப்படாதது திருடர்க ளுடைய ஆச்சரியத்தை அதிகப்படுத்தியது. இரண்

டொரு நிமிஷ காலத்தில் அவர்கள் அந்த வீட்டின் எல்லா பாகங்களுக்கும் சென்று ஆராய்ந்து பார்த்து, முன் தடவையில் இருந்த மனிதர்கள் வீட்டைக் காலி செய்துகொண்டு போயிருக்க வேண்டு மென்றும், காலி வீட்டில் எவனே அன்னியன் வந்து படுத்துக்கொண் டிருந்தா னென்றும் யூகித்துக் கொண்டனர்.

ஒருவன்:— நாம் பட்டபாடு வீணாய் விட்டதே! நாம் வெறுங் கையோடு வெளியில் போகிறதா?

இன்னொருவன்:— கீழே படுத்திருக்கிறவ னுடைய உடம்பில் சட்டையும், துணியும் இருக்கின்றன. அவை களை எடுத்துக்கொண்டு போவோம். அவைகளைக் கள்ளுக் கடையில் கொடுத்தால், கிராமணி எட்டணைவுக்குக் கள்ளு வார்ப்பான், நம் பிரயாசைக்கும், கள்ளுக்கும் கணக்குச் சரியாய்ப் போகும்—என்றான்.

அதை மற்றவர் ஆமோதிக்க, எல்லோரும் கலி யாண சுந்தரம் படுத்திருந்த இடத்தண்டை போய் விளக்கைக் காட்டி அவனுடைய நிலைமையைக் கவனித்த னர்; பிறகு அவனைப் பிடித்துச் சட்டையைக் கழற்ற எத் தனிக்க அவனுடைய கைகளும் கால்களும், உடம்பும் துவண்டு துவண்டு போகவே, அவன் குடிமயக்கத்தில் ஆழ்ந்து கிடக்கிறான் என்று அவர்கள் யூகித்துக் கொண்டு அவனுடைய சட்டையையும், இடுப்பு வஸ்தி ரத்தையும் எடுத்துக் கொண்டனர். அப்போது கலி யாணசுந்தரம் கோவணத்தோடு அலங்கோலமாய்க் கிடந்தான்.

சட்டைப் பையிலிருந்த மணிபர்ஸை ஆவலோடு திறந்து பார்த்த திருடர் அருவருப்படைந்தனர்.

ஒருவன்:—அடே விடியாமூஞ்சியெ! பையில் சாஸ் திரத்துக்கு ஒரு பைசாகூட இல்லாமலா மனிதன் இருப் பான்!

இன்னொருவன்:— தோல் பையை இரண்டணுவுக்கு விற்கலாம்; வெற்றிலே பாக்கு புகையிலேச் செலவுத்துக் காணும்—என்ருன்.

அவ்வாறு அவர்கள் வீட்டிற்குள் சம்பாஷித்துக் கொண்டிருந்த சமயத்தில், தெருவில் வந்த போலீஸ் ரோந்துக்காரர்கள் நால்வர் அந்த வீட்டண்டை வந்த போது, அதன் கூடத்தின் மின்சார விளக்கு அங்குமிங் கும் அசைந்ததை அறை ஜன்னலின் வழியாகப் பார்த்து விட்டு, ஜன்னலண்டை நெருங்க, கம்பிகள் பெயர்க்கப் பட்டிருந்தது உடனே அவர்களுக்குத் தெரிந்தது.

ஒரு ஜெவான்:— திருடர்கள் உள்ளே இருக்கிருர் கள். நாம் ஜாக்கிரதையாக இங்கே நிற்போம். அவர்கள் வருவார்கள் உடனே பிடித்துக் கொள்ளுவோம்.

மற்றவன்:—முன் கதவைத் திறந்துகொண்டு போனு லும் போய்விடுவார்கள். இருவர் அங்கே போய் நிற்க லாம்.

வேருெருவன்:— அது சரியல்ல. அந்தக் கதவை வெளியில் தாழிட்டு விடுவோம்—என்ருன்.

உடனே இரண்டு ஜெவான்கள் வாசற் கதவண்டை சென்று அதைத் தொட, அது உள்புறம் நகரத்தொடங் கியது. திருடர்கள் வெளியில் வரும்பொருட்டு உள் தாழ்ப்பாளை விலக்கி வைத்திருக்கலாமென்று ஜெவான் கள் நினைத்து, கதவை இழுத்து வெளித் தாழ்ப்பாளை மாட்டிவிட்டு ஜன்னலண்டை வந்து சேர்ந்தனர்.

இன்னொரு ஜெவான் :— நாம் இங்கே நிற்பது சரியல்ல. திருடர்கள் ஏற்கனவே வெளியில் போயிருந்தாலும் இருக்கலாம். உள்ளே வீட்டு மனிதர்கள் மின்சார விளக்கினால் பார்த்திருக்கலாம். இந்த ஜன்னலின் வழியாக நாம் உள்ளே போவோம்—என்றான்.

அதை மற்றவர் ஆமோதிக்க, எல்லா ஜெவான்களும் காமரா அறைக்குள் நுழைந்து கூடத்தை நோக்கிச் சென்று திருடரை வளைத்துக் கொண்டனர்.

திடீரென்று போலீஸார் வந்து வளைத்துக் கொண்டதைக் கண்ட திருடர்கள், தப்பித்துக்கொண்டு வெளியில் ஓட முயல, போலீஸார் தங்கள் தடிகளால் இரக்கமின்றி, அவர்களை அடித்துக் கீழே வீழ்த்திக் கைகளுக்கு விலங்குகள் மாட்டிவிட்டனர். இரண்டு ஜெவான்கள் அவர்களை மறித்துக்கொண்டு நிற்க, மற்ற இருவர் லாந்தர்களுடன் வீடு முழுதிலும் சென்று தேடிப் பார்த்தனர். வேறு மனிதர்களோ, பொருட்களோ இல்லாததைக் கண்டு, அவர்கள் ஆச்சரியத்தோடு கலியாணசுந்தரத்தினிடை வந்து பார்க்க, அவன் கோவணத்தோடிருந்ததையும், அவன் வேதனையைக் காட்டிய குரலில் முக்கி முனகிப் பிரக்ஞையில்லாமல் புரண்டதும் தெரியவே, திருடர்களிடமிருந்த சட்டை, துணி முதலியவற்றைக் கண்ட போலீஸார், திருடர்கள் அவனை அடித்து உடைகளைப் பிடுங்கிக்கொண்டிருக்க வேண்டுமென்று யூகித்து, அவனை ஆஸ்பத்திரிக்குத் தாங்கள் எடுத்துச் செல்லவேண்டுமென்று தீர்மானித்தனர். உடனே ஒரு ஜெவான் வெளியில் ஓடி, ஒரு குதிரை வண்டியுடன் வந்து சேர்ந்தான். கலியாணசுந்தரம் உடனே வண்டியில் ஏற்றப்பட, வண்டி ஆஸ்பத்திரிக்குப் போய்ச் சேர்ந்தது. நான்கு திருடர்களையும் இரண்டு

ஜெவான்கள் போலீஸ் ஸ்டேஷனுக்கு நடத்திக் கொண்டு போயினர். மிகுதியான ஜெவான் அந்த வீட்டின் முன்புறத்தில் காவலாக நின்றுகொண்டிருந்தான்.

அங்கு நிலைமை அப்படியிருக்க, இனி நாம் நமது உண்டிப்பெட்டிச் சாமியாரைக் கவனிப்போம். கலியாண சுந்தரத்தின் வீட்டிலிருந்த பெட்டி பேழைகள் முதலிய சாமான்களை இரண்டு வண்டிகளில் ஏற்றிக்கொண்டு போன உண்டிபெட்டிச் சாமியார் நேராகத் தங்கள் வீட்டிற்குப் போகவில்லை. வாடகைக்கு விடப்படும் என்ற விளம்பர அட்டைகள் அநேக வீடுகளில் தொங்கியதை அவர் பார்த்திருந்தாராதலால், அவைகளில் ஒரு வீட்டண்டை சென்று வண்டிகளை நிறுத்தி வைத்து விட்டு, வீட்டின் சொந்தக்காரரிடம் போய் ஒரு மாத வாடகைப் பணத்தைக் கொடுத்து வீட்டை ஒப்புக் கொண்டு, அதற்குள் சாமான்களை இறக்கச் செய்து, வண்டிக்காரர்கள் முதலியோருக்குக் கூலி கொடுத்து அனுப்பிவிட்டு, கதவை மூடித் தாழிட்டுக் கொண்டு உள்புறத்தில் இருந்து, சாமான்களையெல்லாம் ஒழுங்காக அதனதன் இடத்தில் வைத்துச் சரிப்படுத்தினர்; பின், அவர் தாம் ஒரு பெரிய மனிதர்போல் உடைகளை அணிந்து, ஓட்டலுக்குப் போய்த் தமது சாப்பாட்டை முடித்துக்கெண்டு திரும்பி வந்து அன்று முழுதும் அதே வீட்டிற்குள் இருந்து மறுநாள் காலையில் குஞ்சரி அம்மாள் இருந்த வீட்டை யடைந்தார்.

முதல் நாளைய பகலில் அந்த வீட்டை விட்டுச் சென்றவர் மாலை வரையில் வராததைக் கண்டு, குஞ்சரியம்மாளும், அவளுடைய அண்ணனை விபூதிப்பைச் சாமியாரும் அவரைப் பற்றி நிரம்பவும் கவலைகொண்டு தவித்து, அவருக்கு ஏதேனும் அபாயம் நேர்ந்திருக்

குமோ வென்று அஞ்சிச் சஞ்சல மடைந்தனர். விபூதிப் பைச் சாமியார் வெளியில் சென்று எல்லாத் தெருவுகளி லும் தேடிப் பார்த்து அலுத்துப்போய் வீட்டிற்கு வந்து சேர்ந்தார். குஞ்சரியம்மாளும், அண்ணனும் நிரம்பவும் கவலையோடு இரவைக் கழித்தனர். மறுநாள் காலையில் விபூதிப்பைச் சாமியார், தாம் மறுபடியும் போய்த் தமது மாமனைத் தேடிப் பார்த்துவிட்டு வருவதாகச் சொல்லி விட்டுப் போயிருந்த சமயத்தில், உண்டிப் பெட்டிச் சாமியார் மிக் ஆடம்பரமான உடைகளை அணிந்து உல் லாசமாக அங்கே வந்து சேர்ந்தார்.

அவரைக் கண்ட குஞ்சரியம்மாள் மிகுந்த சந்தோ ஷமும் ஆவலும் கொண்டு, "மாமா, நேற்று முழுதும் எங்கே போயிருந்தாய்? உன்னை அண்ணன் நேற்றெல் லாம் தேடினன். இப்போது மறுபடியும் தேடிக் கொண்டு போயிருக்கிறான்; சொல்லாமல் இப்படித் தானா வெளியில் இருந்து விடுகிறது?" என்றாள்.

உண்டிப்பெட்டி:—நான் குழந்தை என்கிற எண் ணமா உங்களுக்கு! நான் வெளியில் ஏதோ ஒரு முக்கிய மான காரியத்தைக் கவனித்துக்கொண் டிருக்கிறேன் என்று யூகித்துக்கொள்ள உங்களுக்கு அவ்வளவு திறமை இல்லையா?

குஞ்சரி:—பிச்சை எடுக்கும் மனிதர் முக்கியமான காரியமாய் வெளியில் இருக்கிறார் என்று நாங்கள் எப் படி நினைக்கிறது. உனக்கு ஏதாவது அபாயம் நேர்ந்து விட்டதோ என்று நாங்கள் அஞ்சித் தவித்தோம். முக் கியமான காரியம் என்றாயே! என்ன காரியம் மாமா அது?

உண்டிப்பெட்டி:—சில மனிதர்கள் பணமாய்த் தரு மம் செய்யாமல் சாமான்களாய்த் தருமம் செய்தார்கள்.

இன்னும் அநேகர் அதேபோல் கொடுக்கலாமென்று நான் எதிர்பார்த்தேன். அவைகளை யெல்லாம் கொணர்ந்து இங்கே வைக்க இந்த வீட்டில் இடமில்லை. அதற்காக நான் வேறே ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண் டிருக்கிறேன். அவைகளை மேன் மேலும் சேர்ப்பதற்கும், விற்றுப் பணமாக்குவதற்குமே எனக்குப் பொழுது சரியாயிருக்கு மாதலால், நான் இனி இங்கே வரப்போகிறதில்லை. அடிக்கடி நான் இங்கே வந்து உங்கள் செலவுக்கு ஏதாவது பணம் கொடுத்துவிட்டுப் போகப்போகிறேன். இதைச் சொல்லி விட்டுப் போகலாமென்று வந்தேன். என்னை நீங்கள் இனித் தேடவும் வேண்டாம்; என்னைப் பற்றிக் கவலை கொள்ளவும் வேண்டாம்—என்று கூறியபடி ஐந்து ரூபா பணத்தை எடுத்துக் குஞ்சரியிடம் நீட்டினன்.

குஞ்சரி:— (அபாரமான வியப்போடு) மாமா, நீ சொல்வது ஆச்சரியமா யிருக்கிறதே! ஒரு தனி வீடு முழுவதிலும் வைக்கும்படி அத்தனை சாமான்களைத் திடீரென்று உனக்கு யார் கொடுத்தார்கள் மாமா? நீ ஏதோ கெட்ட வழியில் இறங்கி இருக்கிறாய் என்னும் சந்தேகமே எனக்கு உண்டாகிறது. நிஜத்தைச் சொல் மாமா. யாருடைய வீட்டுச் சாமான்களையாவது திருடிக்கொண்டு வந்துவிட்டாயா?

உண்டிப்பெட்டி:—அடி பைத்தியமே போ; நான் தான் ஏற்கனவே சொல்லிவிட்டேனே! நம்முடைய சொத்தை யெல்லாம் ஊரான் அபகரித்தான்; நான் அயலானுடைய சொத்துக்களை அபகரிக்கக் கங்கணம் கட்டிக்கொண் டிருப்பதாய்ச் சொன்னேனே! நேற்று ஓர் ஆசாமி ஏமாந்திருந்தான்; அவனுடைய சொத்து களை யெல்லாம் வண்டிகளில் ஏற்றி ராஜ பாட்டை

யாகவே நான் கொண்டு வந்து விட்டேன். அவைகளை யெல்லாம் சரிபாதி விலைக்குவிற்ருல்கூட 250 ரூபா தேறும். நாம் எந்த ஜென்மத்தில் அவ்வளவு பெரிய தொகையைக் காணப் போகிரோம்.

குஞ்சரி:— (பெரிதும் திகில்கொண்டு) ஐயையோ. என்ன அசட்டுத் துணிவு இது! யார் அப்படி ஏமாறி இருந்தது? அவருடைய சொத்துக்களை நீ கொண்டு வந்ததை எத்தனையோ பேர்கள் பார்த்திருப்பார்களே! உனக்குத்தண்டனை கிடைக்கக் காலம் வந்துவிட்டது போலிருக்கிறதே. உடனே போய்ச் சொத்துக்காரனிடம் சொத்துக்களை கொடுத்துவிட்டு வா மாமா! இல்லாவிட்டால், நம் எல்லோருக்கும் மானபங்கம் வந்துவிடும்.

உண்டிப்பெட்டி:—அடி அசடே போ! எனக்கு ஒரு நாளும் துன்பம் வராது. நான் பழனியாண்டவனுடைய பெயரைச் சொல்லியல்லவா பொருள் சேர்க்கிறேன். **பழனியாண்டவருக்கு பழைய சாமான்கள் தர்மம்** என்று, நான் எடுத்துக்கொண்டிருக்கும் புதிய வீட்டின் வாசலில் ஒரு விளம்பரப் பலகை தொங்கவிடப் போகிறேன்! அப்படி இருக்க, நான் அவைகளைத் திருடினேனென்று யாரும் சொல்லமாட்டார்கள். அப்படி எனக்கு அபாயம் நேரும்போல் இருந்தால், சொத்துக்களை எல்லாம் போலீஸாரே பழனியாண்டவருக்கு நேரில் அனுப்பிவிடும்படி சொல்லித் தப்பித்துக் கொள்ளுவேன்—என்ருர்.

அப்போது விபூதிப்பைச் சாமியார் அங்கே வந்து சேர்ந்தார். அவர் தங்கள் மாமன் திரும்பி வந்துவிட்டதைக் கண்டு மிகுந்த சந்தோஷமடைந்தவராய், "தங்கைச்சீ, நல்ல வேளைதான் மாமன் வந்து சேர்ந்தது! இவரைத் தேடிக்கொண்டு நான் போலீஸ் ஸ்டேஷன்

வாசல் வழியாகப் போனேன். அங்கே ஏராளமான ஜனங்கள் கூடியிருப்பதைக் கண்டு, அதன் காரணத்தை விசாரித்தேன். நேற்றிரவு ஒருவருடைய வீட்டில் சில திருடர்கள் புகுந்து திருடினார்களாம். போலீஸார் அவர்களைப் பிடித்துக் கொண்டனராம். நேற்றுப் பகலில் யாரோ ஒருவர் சில வண்டிகளோடு வந்து அந்த வீட்டிலிருந்த சாமான்களை எடுத்துக்கொண்டு போனதைப் பார்த்ததாக சிலர் பேசிக்கொண்டார்கள். போலீஸார் அந்த மனிதரைத் தேடிக்கொண் டிருக்கிறார்களாம். இவைகளை யெல்லாம் உன்னிடம் சொல்லலாமென்று நான் ஓடிவந்தேன். நேற்று முழுதும் இவன் எங்கே போயிருந்தானும்?

உண்டிப்பெட்டி:— போலீஸார் அந்த மனிதரைத் தேடுகிறார்கள் என்று யார் சொன்னது?

விபூதிப்பை:—ஜனங்கள்தான் சொல்லுகிறார்கள்.

குஞ்சரி:—மாமா, நீ இப்போது பேசுவதைப் பார்த்தால் நீ கொஞ்ச நேரத்துக்கு முன் என்னிடம் சொன்ன சங்கதியின் உண்மை எனக்கு விளங்குகிறது. வீணாக நீ போலீஸாரிடம் அகப்பட்டுத் தண்டனைக்குப் போகப் போகிறாய்! நீ எடுத்துக்கொண்டு வந்த சாமான்களை மரியாதையாகத் திருப்பிக் கொடுத்துவிடு. உனக்கு பயமாயிருந்தால், நானும், அண்ணனும் போய் அவரிடம் கெஞ்சிக் கேட்டுக் கொண்டு சாமான்களைத் திருப்பிக் கொடுத்துவிடுகிறோம்.

உண்டிப்பெட்டி:— நம்மிடம் இருக்கும் சாமான்களை வாங்கிக் கொண்டும் அவர் நம்மைப் போலீஸாரிடம் ஒப்புவித்தால், நாம் என்ன செய்கிறது?

குஞ்சரி:—நாம் அவரிடம் தந்திரமாகப் பேசி அவருடைய நோக்கத்தை அறிந்து கொண்டு சங்கதியை வெளியிடுவோம். நீங்கள் இருவரும் பேசாமல் இருங்கள். நானே அவரிடம் பேசுகிறேன்—என்றாள்.

மற்றவர்கள் இருவரும் அதற்கு இணங்க மூவரும் வீட்டைப் பூட்டிக்கொண்டு வெளிப்பட்டுக் கலியாணசுந்தரம் இருந்த இடத்திற்குச் சென்றனர்.

அத்தியாயம் 5

கலியாணியை நாடாத கல்மனப் பிணியாளி

கலியாண சுந்தரத்தை விட்டு இரண்டு மூட்டைக ளுடன் வெளிப்பட்ட கோபாலன் அடுத்த தெருவி லிருந்த ஓர் ஓட்டலை அடைந்தான். அவன் அந்த ஓட்ட லில் ஓர் அறையை வாடகைக்கு எடுத்து அதில் தன் பெட்டிகள், படுக்கை முதலிய சாமான்களை வைத்துப் பூட்டியிருந்தா னுகையால், அவன் ஷை இரண்டு மூட்டைகளையும் அந்த அறைக்குள் வைத்துப் பூட்டி விட்டு நேராகக் கலியாணியின் வீட்டிற்குச் சென்றுன்.

அப்போது மணி ஒன்பதரை ஆயிருந்தது. சோம சுந்தரமும் கலியாணியும் சாப்பிடாமல் கோபால னுடைய வருகைக்காக காத்திருந்தன ராதலால், அவன் போனவுடன், எல்லோருடைய சாப்பாடும் முடிவடைந் தது. கலியாணசுந்தரத்தின் நிலைமையைப் பற்றி சோம சுந்தரம் கேட்க, கோபாலன் உண்மையைத் தெரிவிக் காமல், அவன் மயக்கமா யிருந்த நிலைமையில் அவனு டைய வீட்லில் விட்டுவிட்டு வந்ததாகத் தெரிவித்தான். பிறகு அவர்கள் படுத்துக் கொண்டனர்.

மறுநாளைய காலையில் எல்லோருக்கும் சிற்றுண்டி போஜனம் முடிந்தபின், சோமசுந்தரம் ஏதோ காரிய மாய் வெளியில் போய்விட்டார். பின்புறத்தில் வேலைக் காரி வீட்டு வேலைகளைச் செய்துகொண் டிருக்க, கோபாலன் மேன்மாடத்தில் எதைப் பற்றியோ சிந்தனை செய்தபடி உட்கார்ந்திருந்தான். அவன் இருந்த கூடத் திற்கு அடுத்த அறையில் கலியாணி தன் பீட்டில்

வாத்தியத்தை வைத்து ஒரு கீர்த்தனையைப் பாடத் தொடங்கினாள். அவள் மாதுரியமான குரல் உடையவளாதலாலும், பாட்டுகள் பாடுவதில் பல வருஷங்கள் சிட்சை பெற்றிருந்தமையாலும், அவள் பிட்டிலோடு தன் குரலை இணைத்துப் பாடியது நிரம்பவும் மனோரம்மியமாய் இருந்தது. கோபாலன் சங்கீத ரஸிகனாதலால், அவனுடைய கவனம் முழுதும் உடனே அந்த சங்கீதத்தில் திரும்பி லயித்துவிட்டது. அவன் அதைக் கேட்டுக்கொண்டிருந்தான். ஒரு பாட்டின் அநுபல்லவியை அவள் மிக சுவாரஸ்யமாகப் பாடியபோது அவன் தன்னை மறந்து, "ஸபாஷ்" என்று வாய்விட்டுக் கூறவே, அதைக் கேட்ட கலியாணி, அவர் தன்னைப் புரளி செய்கிறாரோ வென்று நினைத்து கிலேசமடைந்து உடனே வாய்ப் பாட்டையும், பிடிலில் வாசிப்பையும் நிறுத்தி விட்டாள்.

கோபாலன் சுமார் கால் நாழிகை காலம் பொறுத்துப் பார்த்தான். அவள் மறுபடி பாடவில்லை, அவன், "ஏன் நிறுத்திவிட்டாய்! நான் ஸ்தோத்திரம் செய்ததைப் பற்றி உனக்குக் கோபமா? நிறுத்த வேண்டாம். மேலே ஆகட்டும்" என்று அன்போடு கூற, உடனே கலியாணி மறுபடி பிட்டிலை வாசித்துப் பாடத் தொடங்கினாள்.

வெளியில் போயிருந்த சோமசுந்தரம் அதே சமயத்தில் மேன்மாடப் படியில் ஏறி வந்தாராதலால், கோபாலன் கலியாணியோடு பேசியதைக் கேட்டு ஓசை செய்யாமல் அப்படியே நின்றார். கோபாலனும், கலியாணியும் சம்பாஷிப்பதிலிருந்து, அவர்களது மன நிலைமை எப்படி இருந்ததென்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற கருத்துடன் அவர் அவ்வாறு ஒளிந்து நின்றார்.

கலியாணி மேலும் ஐந்து நிமிஷ காலம் பாடி அந்தப் பாட்டை முடித்துவிட்டு ஓய்ந்தாள். அப்போது கோபாலன், "கலியாணீ, இப்படி வா, நான் உன்னிடம் ஒரு முக்கியமான சங்கதி சொல்ல வேண்டும்" என்றான். உடனே கலியாணி பிட்டிலைக் கீழே வைத்துவிட்டு எழுந்து வாசற்படியண்டை வந்து நாணத்தோடு நின்று கொண்டு, "என்ன சங்கதீ சொல்லுங்கள். நான் இங் கேயே நிற்கிறேன்" என்றாள்.

கோபாலன்:—உன் கலியாண விஷயத்தில் அத்தான் ஒரே பிடிவாதமா யிருக்கிறார். உன்னை எனக்கே கட்டிக் கொடுக்க வேண்டுமென்று அவர் ஒரே உறுதியாய்ப் பேசுகிறார். நான் உலகை வெறுத்து கலியாணமே செய்துகொள்ளக் கூடாது என்னும் தீர்மானத்தோடு இருந்து வருகிறேன். அத்தான் என்னை எவ்வளவுதான் வற்புறுத்தினாலும் எண்ணம் மாறப் போகிறதில்லை. உனக்கோ வயதாய்விட்டது. உன் அத்தை உன்னை நாதமுனிக்குக் கட்டவேண்டு மென்று நிரம்பவும் ஆசைப்படுகிறாள். அவர்களுடைய பிரியம் மாறிப் போகுமுன் நாதமுனியையே நீ விவாகம் செய்துகொள் ளுவது உசிதமான காரியம். ஆகையால், இந்த விஷ யத்தை நீயே அத்தானிடம் சொல்லி, அவர் இனி என்னைக் கலியாண விஷயத்தில் வற்புறுத்தாமல் இருக் கும்படிச் செய். நான் இப்போது ஓர் அவசர காரியமாய் வெளியில் போகப்போகிறேன். திரும்பி வரப் பலதினங் கள் ஆகலாம். எனக்காக நீங்கள் இந்தக் கலியாணத்தை தாமதப்படுத்த வேண்டாம்—என்றான்.

அதைக் கேட்ட கலியாணி, "நீங்கள் அப்பாவிடம் கலியாண விஷயத்தைத் தெரிவியுங்கள். கீழே எனக்கு அவசர வேலை இருக்கிறது; நான் போகிறேன்" என்று

கூறியபடி அப்பால் போய்விட்டாள். அவளது மறு மொழி, அவன் கூறியதை அவள் மறுத்தாளா, ஏற்றுக் கொண்டாளா என்பது விளங்காதபடி இருந்தது. அது வரையில் மறைந்து நின்ற சோமசுந்தரம் மேலே ஏறி வந்தார்; வந்து, கோபாலனுக்குச் சற்று தூரத்தில் இருந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டார். அவருடைய முகம் சந்தோஷ மற்றதாய் விகாரமாய்க் காணப்பட்டது. தான் கலியாணியிடம் கூறியதை அவர் கேட்டிருக்கலா மென்ற சந்தேகம் கோபாலனுடைய மனதில் உதித்த தாகையால், அவன் கீழ்ப் பார்வையாக அவருடைய முகத்தைப் பார்த்தான்.

அவர் அவனுடன் பேசாமல் எதைப் பற்றியோ சிந்திப்பவர்போல் மௌனமாய் உட்கார்ந்திருந்தார். அதைக் கவனித்த கோபாலன், "அத்தான்; உங்களு டைய வருகைக்காகத்தான் நான் காத்திருந்தேன். என் னுடைய சிநேகிதனுடைய தகப்பனா திடீரென்று காணமல் போய்விட்டார். அவரைத் தேடிப் பார்க்க வேண்டும். நான் போய் வருகிறேன். விவாக விஷயத் தில் என் முடிவை நான் கலியாணியிடம் தெரிவித்து விட்டேன். நீங்கள் இனி எனக்காகக் காத்திருக்க வேண்டாம்" என்று கூறியபடி எழுந்தான்.

அதைக் கேட்கவே சோமசுந்தரத்தின் முகம் முன் னிலும் அதிகமாய் வாட்ட மடைந்தது. அவர் உற்சாக மற்றவராய், "சரி; உன்னுடைய பிரியப்படி செய். நான் உன்னைக் கட்டாயப் படுத்த, நீ குழந்தை யல்ல" என்றார்.

கோபாலன் கீழே குனிந்தபடி சற்று மௌனமாய் நின்றபின், "சரி; நான் போய் வருகிறேன், கலியாணிக்

கும் சொல்லி விடுங்கள்'' என்று கூறியபடி மெத்தையை விட்டுக் கீழே இறங்கி வெளியில் போய்விட்டான்.

இங்கு நாம், கோபாலன் சம்பந்தப்பட்ட இன்னொரு முக்கியமான சம்பவத்தைக் குறிப்பிடுவது அவசிய மாதலால், அதைக் கூறுவோம். அமிர்தம் மாளும், பட்டம்மாளும் கலியாணசுந்தரத்தால் துரத்தப்பட்டு, சிவராமகிருஷ்ணனுடைய வீட்டிற்குச் சென்றதற்கு மறுநாட் காலையில் பட்டம்மாள் காமாட்சியை அழைத்துக்கொண்டு வெளியில் சென்றதாக முன்னரே தெரிவித்தோ மல்லவா. பட்டம்மாள் அங்கங்கு காணப்பட்ட ஜனங்களிடம் விசாரித்துக்கொண்டு அந்த ஊரில் இருந்த சத்திரம், சாவடிகள், கோயில்கள், குளங்கள் முதலிய பல இடங்களுக்கும் காமாட்சியுடன் போய்த் தேடிப் பார்த்தாள். எங்கும் கிழவர் காணப்படவில்லை. முதல் நாளைய பகலிலிருந்து அவள் சாப்பிடாமல் பட்டினி இருந்தவ ளாதலால், நடக்க மாட்டாமல் சோர்ந்து அங்கங்கு காமாட்சியோடு உட்கார்ந்து கொள்ளுவதும், குளங்களில் தண்ணீரை அள்ளி அள்ளிக் குடிப்பது மாய்ச் சென்றதை கவனித்த காமாட்சி, "அத்தை, எங்கள் அம்மாள் சாப்பிடாமல் அடிக்கடி இப்படித்தான் தண்ணீரைக் குடித்துக்கொண்டு மயங்கி மயங்கி விழுவாள். அது போலவே, நீங்களும் செய்கிறீர்களே! நீங்கள் கூடப் பட்டினியா? நீங்கள் எனக்கு அன்றுகூட ஒரு ரூபா கொடுத்தீர்களே! நீங்கள் பணக்கார ரல்லவா. நாங்கள்தான் ஏழை. நீங்கள் ஏன் இப்படி மயங்கி விழ வேண்டும்?'' என்பாள்.

பட்டம்மாள்:—நான் பட்டினி இல்லை. நடந்து வந்தது அலுப்பா யிருந்தது; இப்போது சரியாய் விட்டது. வா போவோம் கண்ணூ—என்பாள்.

உடனே இருவரும் சிறிது தூரம் செல்வார்கள்.

காமாட்சி:—அத்தை, தாத்தாவை சத்திரம் சாவடி கோவில்களில் தேடுகிறீர்களே, அவருக்கு வீடு இல்லையோ அத்தை?

பட்டம்மாள் :— வீட்டில் இருந்து கோபித்துக் கொண்டு போய் விட்டார்கள். அதற்காக இங்கெல்லாம் தேடுகிறேன்.

காமாட்சி:—ஏன் கோபித்துக் கொண்டு போய் விட்டார்கள் அத்தை? பெரியவர்களுக்குக் கோபம் உண்டாகும்படி நீங்கள் நடந்து கொள்ளலாமா அத்தை?— என்பாள். அதற்கு மறுமொழி கூறமாட்டாமல், பட்டம்மாள் அவளுடைய கவனத்தை வேறு விஷயத்தில் திருப்பி அழைத்துக் கொண்டு செல்வாள்.

காமாட்சி:—அத்தை, அதோ பிள்ளைகள் புஸ்தகங்களுடன் பள்ளிக்கூடத்துக்குப் போகிறார்கள். நேரமாகிறது. நானும் போக வேண்டுமே, தாத்தா இன்னம் அகப்பட வில்லையே! என்ன செய்கிறது அத்தை! நான் வீட்டிற்குப் போய்ச் சாப்பிட்டு விட்டு, பள்ளிக்கூடத்துக்குப் போக நேர மிருக்காதுபோ லிருக்கிறதே!

பட்டம்மாள்:—நீ இவ்வளவு தூரம் என்னோடு வந்து அலைந்ததால், அலுத்துப்போ யிருக்கிறாய். அதோடு வீட்டில் சாதம் இருக்காது. நீ இன்று பள்ளிக்கூடத்துக்குப் போக வேண்டாம் கண்ணு!

காமாட்சி:—ஐயோ, நான் போகா விட்டால், வாத்தியார் கோபித்துக் கொள்வார் அத்தை! சாதம் இல்லா விட்டால் பரவா யில்லை. நீங்கள் குடித்த மாதிரி நானும் ஜலத்தைக் குடித்து விட்டுப் போகிறேன்.

பட்டம்மாள்:— நீ மத்தியானம் வரையில் பள்ளிக் கூடத்தில் இருந்து படிக்க வேண்டும். ஜலம் குடித் தால் அது அவ்வளவு நேரம் தாங்காது கண்ணூ.

காமாட்சி:—எனக்குக் களைப்பா யிருந்தால், கடவுளை நினைத்து, என்னைக் காப்பாற்றும்படி கேட்டுக் கொள்ளு கிறேன்! எனக்கு மயக்கம் வராமல் அவர் பார்த்துக் கொள்வார்.

பட்டம்மாள்:— (காமாட்சியைக் கட்டிப் பிடித்தபடி) அடி கண்ணூ! என்ன மூடத்தனம் இது! நீ குழந்தை யாகையால் அறியாத்தனத்திஞல், இப்படிப் பேசுகிருய். இந்த உலகத்தில் கடவுள் அந்த மாதிரி எளியவர்களை யும், பசித்து வருந்துகிறவர்களையும் பார்த்து உடனுக் குடன் காப்பாற்றுகிற தில்லை கண்ணூ. கடவுளுடைய மனசு கல் மனசு கண்ணூ. அதனல்தான், கோவில் களில் கல்லினல் சாமி செய்து வைத்திருக்கிருர்கள்.

காமாட்சி:—இல்லை அத்தை! கடவுள் பரம தயாளு. அவர்தான் ஏழை எளியவர்களைக் காப்பாற்றுகிருர் என்று அம்மா அடிக்கடி சொல்லி இருக்கிருர்களே, அம்மாளும் அறியாத குழந்தையா! **கடவுளை நம்பினேர் கைவிடப் படார்** என்று புஸ்தகத்தில் இருக்கிறதே அத்தை! அதை எழுதினவர்களும் அறியாத குழந்தை களா!—என்ருள்.

அவ்வாறு அவர்கள் சம்பாஷித்துக் கொண்டு ஒரு தெருவோடு வர, அந்தத் தெருவில் இருந்த சோமசுந் தரத்தின் வீட்டின் மேன் மாடத்தில் இருந்த கோபா லன், காமாட்சியும், பட்டம்மாளும் தெருவில் போன தைக் கண்டு, "காமாட்சீ, காமாட்சீ" என்று கைதட்டிக் கூப்பிட்டு, அவர்களை நிறகச் செய்து விட்டு, கீழே.

இறங்கித் தெருவிற்கு வந்து, "காமாட்சி! அத்தையோடு எங்கே போய் வருகிறாய்?" என்றான்.

காமாட்சி:— (சந்தோஷ முக மலர்ச்சியும், கிலேச மும் அடைந்து) எங்கள் தாத்தா கோபித்துக் கொண்டு வீட்டை விட்டுப் போய் விட்டார்களாம். தேடிப் பார்த்து விட்டு வருகிறோம்.

கோபாலன்:—தாத்தா எங்கேயும் இல்லைபோ லிருக் கிறது! வீட்டிற்குப் போகிறாயோ?

காமாட்சி:—ஆம்.

கோபாலன்:— வீட்டிலிருந்து நீ புறப்பட்டபோது, உன் அப்பா பேசிக்கொண் டிருந்தாரா?

காமாட்சி:— இல்லை. தூங்கிக்கொண் டிருந்தார் நீங்கள் ஏன் மருந்து கொடுக்காமல் வந்து விட்டீர்கள் மாமா? சீசாவில் இருக்கும் மருந்து தீர்ந்து போனால் மறுபடி யார் மருந்து வாங்கிக் கொண்டு வருவார்கள் மாமா?

கோபாலன்:— சீசாவில் இருக்கும் மருந்தோடு, அப்பாவுக்குக் குணமாய் விடும். நான் அவசர வேலை யாய் வந்து விட்டேன். அதிருக்கட்டும். அன்றைய தினம் நீ புதுப் பாவாடை கட்டி, புதுச் சட்டை போட் டிருந்தாய். இன்று, கந்தைப் பாவாடை கட்டிக் கொண் டிருக்கிறாயே! புதுப் பாவாடை சட்டை எல் லாம் எங்கே?

காமாட்சி :— (தலையைக் கீழே தொங்க விட்டுக் கொண்டு) அப்பாவுக்கு வேலை இல்லை; அவர் ஜுர மாய்ப் படுத்திருக்கிறார். அம்மாவிடம் செலவுக்குப் பணம் இல்லை. புதுப் பாவாடைகள் சட்டைகள் எல்லாவற்றையும் பக்கத்து வீட்டில் அடமானம் வைத்து

அம்மாள் எட்டணு வாங்கிக் கொண்டு வந்து அரிசி சாமான்களெல்லாம் வாங்கி சமைத்தாள்.

கோபாலன்:— அப்படியானல் சரிதான். அதிருக்கட்டும். நீ எனக்காக ஒரு காரியம் செய்ய வேண்டும். உன் அப்பாவுக்கு நான் 5 ரூபா கடன் தர வேண்டும். அதைக் கொடுக்காமல் நான் நேற்றிரவு வந்து விட்டேன். அதை இப்போது உன்னிடம் தருகிறேன். நீ அதைக் கொண்டு போய் அப்பா கையிலாவது, அம்மாள் கையிலாவது கொடுத்து, நான் கொடுத்ததாகச் சொல்.

காமாட்சி:—(அச்சத்தோடு) அப்பா, அம்மாவுடைய உத்தரவில்லாமல் நான் பணத்தை வாங்கிக்கொண்டு போனுல், அவர்கள் கோபித்துக் கொள்வார்களோ என்னவோ?

கோபாலன்:—கோபிக்க மாட்டார்கள். நீ பயப்படாமல் கொண்டுபோய்க் கொடு. வீட்டில் சாப்பாட்டுக்கு சாமான் இல்லை. பாட்டி, அத்தை எல்லாரும் வந்திருக்கிருர்கள். இந்தச் சமயத்தில் நீ இந்தப் பணத்தைக் கொண்டுபோய்க் கொடுத்தால், எல்லாரும் சந்தோஷம் கொள்வார்கள்—என்று கூறி 5 ரூபா பணத்தை எடுத்து காமாட்சியிடம் கொடுக்க, அதை அவள் வாங்கிக் கொண்டு, “நாங்கள் போய் வருகிருேம் மாமா. எனக்குப் பள்ளிக்கூடத்துக்குப் போக நேரமாகிறது. நீங்கள் மறுபடி எப்போது வருவீர்கள் மாமா? அப்பாவை நீங்கள் பார்க்க வேண்டாமா?”

கோபாலன்:—எனக்கு இங்கே கொஞ்சம் வேலை இருக்கிறது. அதைப் பார்த்துக்கொண்டு, நான் பின்னுல் வருகிறேன். நீ போ—என்றுன்.

உடனே பட்டம்மாள் காமாட்சியை அழைத்துக் கொண்டு வீட்டை நோக்கி வந்தாள். அப்போது பட்டம்மாள், "காமாட்சீ, நாம் ஒரு காரியம் செய்யலாம். வீட்டில் அரிசி முதலிய சாமான்கள் எதுவுமில்லை என்று நேற்றிரவே உன் அம்மாள் சொன்னாள். நாம் ஒரு ரூபாயை மாற்றி சமையலுக்கு வேண்டிய சாமான்களை யெல்லாம் வாங்கிக்கொண்டு போனால், உடனே சமையல் செய்யலாம். எல்லோருக்கும் சாப்பாடு சீக்கிரம் கிடைக்கும்" என்றாள்.

காமாட்சி:—ஐயோ! அப்பா கையிலாவது, அம்மா கையிலாவது பணத்தைக் கொடுக்கும்படி சொல்லி இந்த மாமா பணம் கொடுத்தார்களே. அதை மீறி நாம் பணத்தைச் செலவிடலாமா? அது தப்பான வேலை அந்த மாதிரி நாம் செய்யக்கூடாது அத்தை.

பட்டம்மாள்:—அப்படியானால், ஒரு காலணாவுக் காவது தோசை வாங்கி நீ சாப்பிடு. உனக்குக் களைப்பு அதிகமா யிருக்கிறது. நீ காலணா செலவிடுவதைப் பற்றி யாரும் உன்னைக் கோபித்துக்கொள்ள மாட்டார்கள் கண்ணூ.

காமாட்சி:—நீங்கள் எல்லோரும் பட்டினி கிடக்கையில், என் வயிறு மாத்திரம் பெரியதா! இது எனக்குக் கொடுக்கப்பட்ட பணமல்ல. ஆகையால், இதில் காலணாவை எடுத்து தோசை வாங்குவது சரியல்ல. எனக்கு வேண்டாம். வாருங்கள் சீக்கிரம் வீட்டுக்குப் போவோம். அம்மாளே செலவு செய்து, சாமான்களை வாங்கட்டும்—என்றாள்.

அதோடு அவர்களுடைய சம்மாஷணை முடிவடைந்தது. இருவரும் ஐந்து நிமிஷ காலத்தில் வீட்டிற்கு

வந்து சேர்ந்தனர். அப்போது காலையில் மணி ஒன்ப தரை ஆயிருந்தது. அமிர்தம்மாள் நடைத் திண்ணையில் படுத்து குறட்டை விட்டுத் தூங்கிக்கொண் டிருந்தாள். மங்களம் தன் இளைய குழந்தை பசியைத் தாங்கமாட் டாமல் கத்தியதாகையால், தன் கையிலிருந்த காலணு விற்கு ஒரு தோசை வாங்கி அதில் சரிபாதியை எடுத்து காமாட்சிக்காக வைத்துவிட்டு, மறுபாதியைக் கிள்ளிக் கிள்ளி குழந்தையின் வாயில் கொடுத்தபடி அதை இடுப்பில் வைத்துக்கொண்டு உள்ளே போவதும், இடையிடையில் மயங்கி சுவரில் சாய்வதும், வெளியில் வந்து நின்று, சிவராமகிருஷ்ணன் வருகிருரோவென்று பார்ப்பதுமா யிருந்தாள். அவர் எங்கே போனுரோ, என்ன செய்கிருரோ என்று நினைத்து கவலை கொண்டு தவிப்பதும், தன் மாமியார், நாத்தி முதலியோர் பசியால் வருந்துகையில், அவர்களுக்கு ஒரு வேளை சாப்பாடு கூடப் போடமுடியாதபடி தாங்கள் பரம தரித்திர நிலைமையில் இருந்ததைப் பற்றி வேதனைப்பட்டுத் தத் தளிப்பதும் தன் புருஷருக்கு எங்கும் வேலை கிடைக்கா விட்டால், தங்கள் ஜீவனத்திற்கு என்ன செய்வ தென் பதை எண்ணி எண்ணி ஏங்கிச் சோர்வதுமாய் நின்ற சமயத்தில பட்டம்மாளும், காமாட்சியும் தூரத்தில் வந்ததைக் கண்டாள்.

அவர்கள் இருவரும் மாத்திரம் வந்ததிலிருந்து, கிழவர் அகப்படவில்லை என்று மங்களம் யூகித்துக் கொண்டாள். வெளியில் சென்ற சிவராமகிருஷ்ணனை அவர்கள் சந்தித்தார்களோ இல்லையோ என்றும் அவள் சந்தேகித்தாள். ஆனல், தூரத்திலேயே காமாட்சி தன் னைக் கண்டு சந்தோஷ முகமலர்ச்சி காட்டியதைக் கான மங்களத்தின் மனம் ஆவலினல் துடித்தது. எதைப் பற்றி

காமாட்சி சந்தோஷத்தோடு வந்தாள் என்பதை யூகித்தறிய மாட்டாமல், அவள் மிகுந்த ஆவலோடு காத்திருக்க, பட்டம்மாளும், காமாட்சியும் வந்து சேர்ந்தனர்.

காமாட்சி மங்களத்தினிடம் துள்ளிக் குதித்துக் கொண் டோடிவந்து, "அம்மா, இதோ பணம்" என்று கூறியபடி ஐந்து ரூபாயை நீட்ட, அதைக் கண்டு ஆச்சரியமும், சந்தோஷமும் அடைந்த மங்களம், "ஏது கண்ணா பணம்? அப்பா கொடுத்தாரா?" என்ருள்.

காமாட்சி:— இல்லை அம்மா. அப்பாவை நான் பார்க்க வில்லையே.

பட்டம்மாள்:—அண்ணன் இங்கே யல்லவா படுத்துக் கொண் டிருந்தார். அவரை நாங்கள் எங்கே காண்கிறது?

மங்களம்:—நீங்கள் போனபின், அவர் எழுந்து, பெரியவரைத் தேடி அழைத்துக் கொண்டு வருவதாகச் சொல்லிவிட்டுப் போனுர் பட்டு.

பட்டம்மாள்:— அடெ கஷ்டமே. ஜுரமா யிருந்த அண்ணன் அப்பாவைத் தேடிக்கொண்டா போனுர்? நீங்கள் தடுக்கக்கூடாதா? நாங்கள் எல்லா இடங்களிலும் தேடினேம்; அப்பாவும் எங்கள் கண்ணில் படவில்லை; அண்ணனும் படவில்லை.

மங்களம்:—அப்படியானல், உங்களுக்கு அலைச்சல் தானு மிஞ்சியது! இந்தப் பணம் ஏது?

காமாட்சி:—அன்று எங்களுக்குப் பாவாடை யெல்லாம் வாங்கிக்கொடுத்த மாமா ஒரு வீட்டில் இருந்தார். என்னைக் கண்டவுடன் வெளியில் ஓடி வந்து, அப்பாவைப் பற்றி விசாரித்தார்; நான் ஏன் கிழிந்த பாவாடையைக் கட்டிக்கொண் டிருக்கிறேன் என்று கேட்

டார். நான் நிஜத்தைச் சொன்னேன். அப்பாவுக்கு அவர் 5 ரூபா கடன் கொடுக்க வேண்டுமென்றும், அதை அப்பா கையிலாவது, உன் கையிலாவது, கொடுக்கும்படியும் சொல்லி என்னிடம் கொடுத்தார். அவர் வருகிறதில்லையா என்று கேட்டேன். பின்னால் வருவதாகச் சொன்னார்—என்றாள்.

அதைக் கேட்ட மங்களம் திகைத்துப் பிரமித்துப் போய்ப் பட்டம்மாளின் முகத்தைப் பார்க்கமாட்டாமல் சஞ்சலத்தினால் ஒரு நிமிஷம் தவித்தபின், "ஓகோ! அப்படியா சொன்னார்; சரி, இருக்கட்டும். உள்ளே கொஞ்சம் தோசை வைத்திருக்கிறேன், அதைத் தின்று ஜலம் குடித்துவிட்டு நீ பள்ளிக்கூடத்துக்குப் போ. நேரமாகிறது" என்றாள்.

பட்டம்மாள்:—அண்ணீ, காமாட்சி அலுத்துப்போய் இருக்கிறாள். பாதித் தோசையைத் தின்றுவிட்டுப் போய் மத்தியானம் வரையில் எப்படிச் சகித்துக்கொண்டிருப்பாள். அந்தப் பணத்தில் ஒரு ரூபாயை என்னிடம் கொடு நான் கடைக்குப் போய் அரிசி முதலிய சாமான்களை வாங்கிக்கொண்டு வருகிறேன். உடனே சமையல் செய்து குழந்தைகளுக்குப் போடலாம். மற்றவரும் சாப்பிடலாம். அதற்குள் அண்ணனும் வருவார். அவருக்கும் ஏதாவது ஆகாரம் கொடுக்கலாம்.

மங்களம்:—(கவலையோடு) "என் எஜமானருடைய உத்தரவில்லாமல் இதைச் செலவிட்டால் அவர் என்ன சொல்லுவாரோ என்று அச்சமாயிருக்கிறது பட்டு."

பட்டம்மாள்:—அண்ணன் கோபிக்காமல் நான் பார்த்துக் கொள்ளுகிறேன். ஒரு ரூபாயையும், ஒரு கூடையையும் இப்படிக் கொடு—என்றாள்.

அதை மீற மாட்டாத மங்களம் அப்படியே கொடுக்க, பட்டம்மாள் உடனே கடையை நோக்கிப் போய் விட்டாள்.

காமாட்சி சாப்பிட்ட பிறகு மத்தியானத்திற்கு மேல் பள்ளிக்கூடத்திற்குப் போகலா மென்று சொல்லி அவளோடு மங்களம் உள்ளே சென்றாள்.

அரை நாழிகையில் பட்டம்மாள் சாமான்களுடன் வந்து சேர்ந்தாள். அவளும் மங்களமும் மிக விரைவில் சமையல் செய்து முடித்தனர். அமிர்தம்மாள், பட்டம் மாள், குழந்தைகள் ஆகியோருக்கு வயிறு நிறைய சாப் பாடு கிடைத்தது. மங்களம், ஜுரத்தோடு வெளியில் சென்ற தன் கணவன் வராததைப் பற்றி மிகுந்த கவலை யும் சஞ்சலமும் கொண்டவளாய், தான் சாப்பிட வேண்டுமென்பதைக் கூட நினையாமல் அடிக்கடி தெரு விற்குப் போய் வீதியின் இரண்டு பக்கங்களிலும் பார்ப் பதும், அதிகரித்த வேதனையோடு திரும்பி வருவதுமா யிருந்தாள்.

அவளை விடுத்து, இனி நாம் சிவராமகிருஷ்ணனைக் கவனிப்போம். 100 டிக்ரி ஜுரத்தோடு வெளியில் சென்ற சிவராமகிருஷ்ணன் நான்கைந்து வீடுகளுக்கப் பால் போனவுடன் அதற்குமேல் செல்லமாட்டாமல் மயங்கி அருகிலிருந்த திண்ணையில் படுத்து விட்டா னென்று முன்னரே கூறினோ மல்லவா. அவ்வாறு அவன் படுத்துக் கொண்டபோது மங்களம் முதலியோர் தம் வீட்டிற்குள் இருந்தன ராதலால், அவன் ஐந்தாவது வீட்டுத் திண்ணையில் படுத்திருந்தா னென்பதை அவர் கள் தெரிந்துகொள்ள வில்லை. பட்டம்மாளும், காமாட்சி யும் ரூபாயுடன் வந்தபோதும், அவன் அந்தத் திண்ணை யில் படுத்திருந்தானாலும், அவர்கள் தங்கள் பார்

வையை அந்தப் பக்கம் திருப்பாமல் வந்து விட்டன ராதலால், அவன் அங்கே படுத்திருந்ததை அவர்களும் கவனிக்க வில்லை. அவன் வீட்டை விட்டு வந்திருப்பா னென்று அவர்கள் எதிர்பார்த்தவர்களு மன்று. பட்டம்மாள் கடைக்குப் போன காலத்தில், தெருவின் இன்னொரு பக்கத்தால் சென்ற ளாதலால், அவள் அவனைப் பார்க்க சந்தர்ப்பம் இல்லாமல் போய் விட்டது.

எனவே, அவ்வாறு படுத்திருந்த சிவராமகிருஷ்ணன் அதற்கு நான்கு மணிக்குப் பிறகு சற்று தெளிவடைந்து விழித்துக் கொண்டு பார்த்தான். பார்க்கவே, அது தன் வீடல்ல வென்பதும், தெருவில் உள்ள ஒரு வீட்டின் திண்ணை யென்பதும், தெரிந்தன. அவனுக்கு உடனே பழைய நினைவு உண்டாயிற்று. தன் தகப்பனர் எங்கேயோ போய் விட்டார் என்பதும், தன் வீட்டில் எல்லோரும் பட்டினி கிடக்கிருர்கள் என்பதும் அவனுடைய நினைவிற்கு வரவே, அவனுடைய மனதிலும், உடம்பிலும் ஒருவித ஆவேசம் உண்டாயிற்று. தான் உடனே கோபாலனுடைய அத்தானது வீட்டிற்குச் சென்று, கோபாலனைக் கண்டு, அவனுடைய உதவியால், ஆக வேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் அவனைத் தூண்டவே, அவன் மெல்ல எழுந்து ஊன்றுகோலைப் பிடித்துக் கொண்டு நடந்து செல்லத் தொடங்கினன். அவன் தன் வீட்டை விட்டு வெளியில் வந்தபோது அவனுடைய உடம்பின் நிலைமை இருந்ததைவிட அப்போது அதிக கேவல நிலைமை ஏற்பட் டிருந்ததானலும், அவன் அதை அறியாமல் தன் மன வேகத்தினல் தூண்டப்பட்டவனய்த் தட்டித் தடுமாறிச் சென்ருன். அடிக்கடி அவனுடைய கண்கள் இருண்டு போன தாகையால், அவன் திண்ணைகளின்

பக்கமாகவே நடந்து சென்று, ஐந்து நிமிஷ காலம் நடப்பதும், பத்து நிமிஷ காலம் திண்ணையில் படுத்துக் கொள்வதுமாய்ச் செய்து, அந்தத் தெருவைக் கடந்து அடுத்த தெருவிற்குச் சென்று விட்டான். அப்போது மாலை வேளை வந்து விட்டதாயினும், அதை அவன் உணர வில்லை. ஏனெனில், இடையிடையில் அவனுடைய பிரக்ஞை மறைந்துபோன தாகையால், தான் தனது வீட்டை விட்டுச் சற்று முன்பே புறப்பட்டதாக அவன் எண்ணிக்கொண் டிருந்தான்.

அவ்வாறு பகல் முழுதும், மருந்து, ஆகாரம் முதலியவை எதுவுமின்றி அவன் தன் உடம்பிற்கும் மனதிற்கும் உழைப்பைக் கொடுக்கவே, அவனுடைய ஜுரம் அதிகரித்து விட்டது. அடுத்த தெருவில், தட்டியால் மூடப்பட் டிருந்த ஒரு திண்ணையில், அவன் படுத்துக் கொண்டான். அதற்கு மேல் அவனுடைய பிரக்ஞை திரும்பவே இல்லையாதலால், அவன் அந்தத் திண்ணையிலேயே படுத்திருந்தான். அன்றைய இரவு முழுதும் கழிய மறுநாள் காலை வேளை வந்தது. அப்போது அவனுடைய ஜுர வேகம் குறையாமலே இருந்த தாகையால், அவன் தன்னையும் உலகையும் மறந்து அந்தத் திண்ணையில் படுத்திருந்தான். அந்த வீட்டில் இருந்தவர்கள் முதல் நாள் மாலையிலேயே அவன் திண்ணையில் படுத்திருந்ததைப் பார்த்தனராயினும், யாரோ பரதேசி படுத்திருந்ததாக எண்ணி, அவனை விரட்டுவது தர்மமல்லவென்று நினைத்துக்கொண்டு, தங்கள் வேலைகளைக் கவனித்துக்கொண் டிருந்து இரவில் வெளிக் கதவை மூடித் தாழிட்டு உள்ளே படுத்துக் கொண்டனர். ஆனல் மறு நாளைய காலையில் அவர்கள் வெளியில் வந்து சிவராமகிருஷ்ணனைக் கவனிக்க, அவன்மீது அவர்களுக்கு ஒருவித இரக்கம் தோன்றலாயிற்று.

அந்த வீட்டில் இருந்தவர்களின் தலைவர் சிவராம கிருஷ்ணனுக்குப் பக்கத்தில் வந்து நின்று, "யார் ஐயா படுத்திருக்கிறது?" என்று பன்முறை கூப்பிட்டுப் பார்த்தார். அதை அவன் உணர்ந்ததாகவே தெரிய வில்லை. அவர் அடிக்கடி உள்ளே போவதும், மற்றவர் களை நோக்கி, "இந்த மனிதரை நான் அடிக்கடி பார்த் திருக்கிறேன். ஆனல் எங்கே இவரைப் பார்த்தேன் என்பது நினைவிற்கு வரமாட்டேனென்கிறது! குடித்து மயக்கமா யிருக்குமா! நேற்றிர வெல்லாம் படுத்திருந் திருக்கிறார். குடி மயக்கமா யிருந்தால், இன்னுமா தெளியாம லிருக்கும். உடம்பில் ஏதாவது நோயா யிருக்க வேண்டும்" என்று பலவாறு யூகங்கள் செய்வ தும், மறுபடி திண்ணைக்கு வந்து சிவராமகிருஷ்ணனைக் கூப்பிட்டுப் பார்ப்பது மாயிருந்தார்.

அந்த மனிதருக்கு நாட்டு வைத்தியத்தில் சிறிது பரிச்சயம் ஏற்பட் டிருந்தது. தம் குடும்பத்தில் உள்ள வர்களுக்கு ஏதேனும் வியாதி உண்டானல், அவரே மருந்துகள் கொடுத்துக் குணப்படுத்துவார். ஆகவே, அவர் சாதாரணமாய் நேரக் கூடிய வியாதிகளுக் கெல் லாம், தமது கைவசத்தில் பல மருந்துகளை வைத்துக் கொண் டிருந்தார். ஜுரத்தின் அளவைக் கண்டு பிடிப் பதற்கு உபயோகப்படுத்தப் படும் **தர்மாமீட்டர்** என் னும் கருவியும் அவரிடம் ஒன்று இருந்தது.

எனவே, அவர் அந்தக் கருவியை எடுத்து வந்து சிவராமகிருஷ்ணனுடைய அக்கிளில் சிறிது நேரம் வைத்திருந்து எடுத்துப் பார்த்தார். அவனுக்கு அப் போது 102 டிக்ரி ஜுரம் ஏற்பட் டிருந்த தென்பது தெரிந்தது. அந்த நிலைமையில் அவன் தன்னுடைய வீட்டில் இருக்காமல் அநாதரவாய் அன்னியர் வீட்டுத்

திண்ணையில் கிடந்ததை நினைத்து, அவனது விஷயத்தில் பெரிதும் இரக்கம் கொண்ட அந்த வீட்டின் தலைவர் உள்ளே சென்று, அந்த விஷயத்தை மற்றவருக்கும் தெரிவிக்க, அவர்களும் சிவராமகிருஷ்ணன் விஷயத்தில் பெரிதும் காருண்ய உணர்ச்சி கொண்டனர்.

வீட்டின் தலைவர் தமது பெட்டியில் வைத்திருந்த ஒரு செந்தூரத்தில் சிறிதளவு எடுத்து, தேனை விட்டுக் குழைத்துக் கொணர்ந்து, சிவராமகிருஷ்ணனுடைய வாயை பலவந்தமாய்த் திறந்து, மருந்தை நாவில் தடவி அது உள்ளே செல்லும்படி செய்து விட்டுச் சென்றார்.

பிறகு பகலில் அவர் மறுபடி வந்து தர்மா மீட்டரை வைத்துப் பார்த்து, ஜுரம் 100 டிக்ரிக்கு இருக்கக் கண்டு சந்தோஷ மடைந்து, "ஐயா, ஐயா" என்று கூப்பிட்டார். சிவராமகிருஷ்ணன் கண்களைத் திறந்து பார்த்து, மருள மருள விழித்து மறுபடி கண்களை மூடிக் கொண்டு, "மங்களம், தாகமா யிருக்கிறது" என்றான். அந்தக் குரல் அவனுடைய அடித் தொண்டையிலிருந்து நிரம்பவும் துர்ப்பலமாய் உண்டாயிற்று.

அப்போது அருகில் நின்ற அந்த வீட்டின் தலைவரும், அவருடைய மனைவியும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர்.

தலைவர், "மங்களம் என்பது இவருக்கு சொந்தமான யாரோ ஒரு பெண்பிள்ளையின் பெயர்போல் இருக்கிறது! இவருக்கு இன்னம் நினைவு சரியானபடி வர வில்லை" என்று கூறி மறுபடி ஒரு தரம் செந்தூரத்தைத் தேனில் குழைத்து நாவில் தடவிச் சற்று நேரத்திற்குப் பிறகு பால் கலந்த கஞ்சியில் சிறிதளவு அவன் பருகும்படி செய்து விட்டுச் சென்றார்.

அன்றைய மாலை வரையில் சிவராமகிருஷ்ணன் அதே நிலைமையில் படுத்திருக்க, அவனுடைய பிரக்ஞை திரும்பி விட்டது. அறிவும் தெளிவடைந்தது. ஆனால் உடம்பு முற்றிலும் சோர்ந்து தளர்வடைந்து செயலற்றுப் போயிருந்த தாகையால், அவன் உடம்பின் எந்த அங்கத்தையும் தன் இச்சைப்படி உபயோகப்படுத்த மாட்டாமல், அப்படியே படுத்திருந்திருந்தான்.

மாலையில் அவனுடைய நிலைமையைப் பரிசோதித்த அந்த வீட்டின் தலைவர் அவனுடைய ஜுரம் பூர்த்தியாய் விலகி விட்ட தென்பதைக் கண்டு, சந்தோஷமடைந்து, வேறொரு மருந்தைக் கொடுத்து விட்டுத் தடிப்பான கஞ்சியை அவன் குடிக்கும்படி செய்தாராதலால், அவன் சுவாரஸ்யமான தூக்கத்தில் ஆழ்ந்து போனான்.

மறுநாளைய காலையில் வீட்டின் தலைவர் வெளியில் வந்து மறுபடி அவனுடைய நிலைமையைப் பரிசோதிக்க, அப்போது பலஹீனத்தைத் தவிர, வேறு எவ்வித நோயும் இல்லையென்பது தெரிந்தது. அவன் தூக்கத்தில் இருந்து விழித்துக் கொள்பவன்போல் எழுந்து திடமாக உட்கார்ந்து கொண்டு வியப்போடு சுற்று முற்றும் பார்க்கத் தொடங்கினான். அவன் தன் வீட்டை விட்டுப் புறப்பட்டு வந்து திண்ணைகளில் படுத்துக் கொண்ட நினைவு மாத்திரம் இருந்ததே யன்றி, இடையில் நிகழ்ந்த விஷயங்கள் அவனுக்கு ஒரே இருளாயிருந்ததாகையால், அவன் எதிரிலிருந்தவரைப் பார்த்து, "ஐயா, கோபிக்க வேண்டாம். காணமல் போன என் தகப்பனரைத் தேடுவதற்காகக் கொஞ்ச நேரத்திற்குமுன் நான் என் வீட்டில் இருந்து புறப்பட்டேன். நான் ஜுரத்தில் படுத்திருந்த நிலைமையில் புறப்பட்டு

வந்தேனுகையால், மயக்கம் வந்தது, அதனால் இங்கே படுத்துக் கொண்டேன். நான் இதோ போய் விடுகிறேன்" என்று கூறியபடி திண்ணையை விட்டிறங்கினன்.

அதைக் கேட்ட வீட்டின் தலைவர் சந்தோஷ முக மலர்ச்சி காட்டி, "ஐயா, நீர் கொஞ்ச நேரத்திற்குமுன் இங்கே வந்ததாய்ச் செல்வது தப்பு. நீர் மூந்தாநாள் சாயங்காலம் இங்கே வந்து படுத்தீர், அப்போது உம்முடைய உடம்பில் 102 டிக்ரி ஜுரம் இருந்தது. நாங்கள் மருந்து கஞ்சி முதலியவைகளைக் கொடுத்து சௌக்கியப் படுத்தினேம்" என்றார்.

அதைக் கேட்ட சிவராமகிருஷ்ணன் திடுக்கிட்டு, "ஹா! அப்படியா! நீங்கள் என் உயிரைக் காப்பாற்றியதற்கு நான் என்ன கைமாறு செய்யப் போகிறேன்! நான் பரம ஏழை. என் வீட்டில் எல்லோரும் பட்டினி கிடந்ததைக் கண்டு சகியாமல் நான் வீட்டை விட்டுப் புறப்பட்டு வந்தேன். நான் மூந்தாநாள் வந்தேனென்பது நிச்சயமான செய்திதானு?" என்றான்.

வீட்டின் தலைவர், "அது நிஜமே; பொய்யல்ல" என்றார்.

சிவராமகிருஷ்ணன் பதறியபடி, "ஐயோ, வீட்டில் குழந்தைகள் முதலியோர் என்ன கதியானர்களோ தெரியவில்லையே. நான் போய்ப் பார்க்கவேண்டும். மறுபடி நான் வந்து தங்களைத் தரிசித்துக் கொள்ளுகிறேன். உத்தரவு கொடுங்கள். நமஸ்காரம்" என்று கூறி அவருக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டு எழுந்து தெருவுக்கு வந்தான்.

அப்போது அவனுக்குச் சற்றுத் தூரத்தில் வந்த கலியாணசுந்தரம் தன்னோடு வந்த இரண்டு போலீஸ் ஜெவான்களை நோக்கி, "ஆசாமி அதோ போகிறான். அவன்தான் என் மைத்துனன். என் வீட்டில் இருந்த சொத்துக்களை யெல்லாம் அவன்தான் கொண்டு போனான். பிடித்துக் கொள்ளுங்கள்" என்று கூறினான்.

அதைக் கேட்ட சிவராமகிருஷ்ணன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்க, "இரண்டு போலீஸ் ஜெவான்கள், "அப்படியே நில்" என்று உரக்கக் கூறியபடி வந்து சிவ ராமகிருஷ்ணனை இரண்டு பக்கங்களிலும் பிடித்துக் கொண்டனர்.

சிவராமகிருஷ்ணன்:-(ஜெவான்களை நோக்கி) ஏன் என்னைப் பிடிக்கிறீர்கள்? என்னப்பா கலியாணசுந்தரம், சொத்துக்களை யெல்லாம் உன்பேரில் எழுதி வாங்கிக் கொண்ட நீ மாமனார், மாமியார், சம்சாரம் எல்லோரையும் இப்படித்தானா பராரியாய் ஓட்டிவிடுகிறது! இது உனக்கு நியாயமா யிருக்கிறதா?

கலியாணசுந்தரம்:—(ஜெவான்களைப் பார்த்து) பார்த்தீர்களா? என்னிடம் இவன் எப்படிப் பேசுகிறான் என்பதைக் கவனித்தீர்க ளல்லவா! நான் யாரையும் வீட்டைவிட்டுத் துரத்தவே இல்லை. சொத்துக்களை யெல்லாம் அவர்கள் என்பேரில் எழுதிக்கொடுத்து விட்டார்கள் என்பதைத் தெரிந்துகொண்டு இவனே அவர்களுடைய மனதைக் கலைத்து என் வீட்டை விட்டுத் தன்னிடம் அழைத்துக் கொண்டு, என்மேல் மோட்டார் வண்டியைவிட்டு, எனக்கு அபாயத்தை உண்டாக்கி, என்னை வீட்டில் படுக்கவைத்துவிட்டு, வீட்டிலிருந்த சொத்துக்களை யெல்லாம் வண்டிகளில் ஏற்றிக்கொண்டு போனா

ணும். இவனை நீங்கள் விடக்கூடாது. இவனுடைய வீட்டைச் சோதித்துப் பார்க்க வேண்டும். வாருங்கள் போவோம்.

சிவராமகிருஷ்ணன்:— (வியப்பும் விசனமு மடைந்து) அடே அநியாயமே! அப்படியானால் உன்னிடம் இருந்த சொத்துக்களை யாரோ கொண்டுபோய் விட்டார்கள்போ லிருக்கிறதே! எங்களுக்கு இல்லாவிட்டாலும் உனக்காவது அவைகள் இருக்கக்கூடாதா! நீ அபாண்டமாய் என்மேல் பழி போடுகிறாயே! நான் முந்தாநாள் காலையில் ஜுரத்தோடு வீட்டை விட்டுக் கிளம்பி வந்து இந்த வீட்டுத் திண்ணையில் படுத்தவன் இந்த வீட்டுக்காரருடைய ஜீவகாருண்யத்தால் உயிர் தப்பி இப்போது தான் திரும்பிப் போகிறேன்—என்றான்.

அதுவரையில் அங்கே நிகழ்ந்த சம்பாஷணையைக் கேட்டுக்கொண் டிருந்த அந்த வீட்டின் தலைவரான நாட்டுவைத்தியர் உடனே ஜெவான்களிடம் வந்து, "ஆம், ஐயா, இந்த மனிதர் நிரபராதி. இவர் முந்தா நாள் மாலையிலிருந்து ஜுரத்தோடு இங்கேயே படுத் திருந்தார். நான்தான் மருந்து கொடுத்து குணப்படுத்தினேன்" என்றார்.

கலியாணசுந்தரம்:— இவனுக்கு வீடும், சம்சாரமும், தாயாரும், தங்கையும் இருக்கையில் ஜுரத்தோடு இங்கே படுத்திருந்தால், அவர்கள் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போகாமல் இங்கேயே விட்டிருப்பார்களா! இந்த மனிதர் சொல்வது நம்பத்தகாத கட்டுக் கதை. இவரும் இவனுக்கு இந்தத் திருட்டில் உடந்தையாயிருந்திருக்க வேண்டும். ஆகையால், இவரையும் கைதி செய்யுங்கள்—என்றான்.

ஒரு ஜெவான்:— திருடப்பட்ட சொத்து, அல்லது, சாட்சிகள் இல்லாமல், கண்டவர்களை யெல்லாம் நாங்கள் கைதி செய்வது சட்ட விரோதமான காரியம். உம்முடைய மைத்துனருடைய வீட்டில் சொத்துக்கள் இருப்பதைக் காட்டுவதாக நீர் உறுதி சொல்வதால், இவரை மாத்திரம் அழைத்துக்கொண்டு வருகிறோம். வாருங்கள் போகலாம்—என்றான்.

அதற்குமேல் பேச வகையின்றி கலியாணசுந்தரம் நடக்க, ஜெவான்கள் சிவராமகிருஷ்ணனை அழைத்துக் கொண்டு சென்றனர். அவனுடைய அப்போதைய நிலைமையை உள்ளபடி வர்ணிப்பது மிக கடினமான காரியம் என்பதை நாம் கூறவேண்டியதில்லை. அவனுடைய உடம்பும், மனதும் அப்போதிருந்த துர்ப்பலமான நிலைமையில், கலியாணசுந்தரம் சொத்துக்களை இழந்தானென்ற செய்தியும், தானே அவைகளை அபகரித்ததாக அவன் தன்மீது பழி சுமத்தியதும், ஏற்கனவே இருந்து வந்த குடும்ப சங்கடங்களுக்குத் துணையாகச் சேர்ந்து கொள்ளவே, சிவராமகிருஷ்ணன் பைத்தியம் கொண்டவன்போல் மாறி மருள மருள விழித்துக் கொண்டு ஜெவான்களோடு போய்க்கொண் டிருந்தான்.

அத்தியாயம்—6

விதவைக்குத் தாலி, வெறியனுக்கு லாலி

அப்போது அவனது வீட்டிலிருந்த மங்களத்தின் நிலைமையும் நிரம்பவும் பரிதாபகரமானதா யிருந்தது. அவள் பல தினங்களாய்ச் சரியான ஆகாரமின்றி மெலிந்து தன் புருஷன் மீதும், குழந்தைகள் மீதும் வைத்த அன்பின் பாசமான கயிற்றினால் பம்பரம்போல் ஆடி இயங்கிக்கொண் டிருந்தாள். கடைசியாகக் காமாட்சி கொணர்ந்த ஐந்து ரூபாயைப் பார்த்தவுடன் அவளுடைய மனம் சற்று தைரியமடைந்த தானாலும், ஜுரத்தோடு வெளியில் போன தன் புருஷன் வர வில்லையென்ற ஏக்கத்தினாலும் ஆவலினாலும் தடுமாறி ஆகாரத்தை நாடாமல் இரண்டு தினங்களாய்த் தெருவு தெருவாய்ப்போய் அலைந்து அலைந்து திரும்பி வந்து, "ஐயோ! அம்மா, பட்டு, வெளியில் போனவர் என்ன ஆனாரோ தெரியவில்லையே! ஜுரம் அடிக்கும்போது எழுந்து போனாரே! ஆ! தெய்வமே! அவரில்லாமல் நானும் என் குழந்தைகளும் எப்படி உயிர்வாழப் போகி றோம். இரண்டு குழந்தைகளையும் கிணற்றில் போட்டு விட்டு நானும் விழுந்து உயிரை விட்டுவிடப் போகி றேன்" என்று பலவாறு கதறிப் பிரலாபித்துக்கொண் டிருக்க, அமிர்தம்மாளும், பட்டம்மாளும் சிவராம கிருஷ்ணன் எப்படியும் வந்துவிடுவானென்று சொல்லி மங்களத்துக்குத் தைரியம் உண்டாக்கிக்கொண் டிருந் தனர்.

காமாட்சி தன் தாயிடமே இருந்து, அவளுக்கு உப சார வார்த்தைகள் சொல்வதும், "அப்பா வருகிறாரோ

வென்று நான் பார்த்துவிட்டு வருகிறேன்'' என்று கூறி விட்டு, வீதியின் இரண்டு கோடிகள் வரையில் போய் வந்து தன் தாயைத் தேற்றுவதும், தானும் தேம்பித் தேம்பி அழுவதுமாய் இருக்க, அந்த நிலைமையில், காமாட்சி உள்ளே ஓடிவந்து, "அம்மா, அப்பா அதோ வந்து விட்டார்! இரண்டு போலீஸ்காரர்கள் அவரை அழைத்துக்கொண்டு வருகிறார்கள்'' என்றாள்.

அதைக்கேட்ட மங்களம், "ஹா! வந்து விட்டாரா!'' என்று வியப்போடு கேட்டபடி துள்ளி எழுந்தாள்.

அதுபோலவே அமிர்தம்மாளும், பட்டம்மாளும் ஆச்சரியமும், சந்தோஷமும் கொண்டு கிளம்பினர். அமிர்தம்மாள், "போலீஸ்காரர்கள் எதற்காக அவனை அழைத்து வருகிறார்கள் என்பது தெரியவில்லையே!'' என்றாள்.

அடுத்த நிமிஷம் கலியாணசுந்தரம் முன்னாலும், மற்ற மூவரும் பின்னாலுமாய் அங்கே வந்து சேர்ந்தனர். அமிர்தம்மாளும், பட்டம்மாளும் கலியாண சுந்தரத்தைக் கண்டு திடுக்கிட்டு பெரிதும் திகில் கொண்டு ஒடுங்கி நின்றனர். மங்களம் கிலேசத்தினால் மறைவில் போய் நின்றாள்.

உடனே சிவராமகிருஷ்ணன் பேசத்துடங்கி, தன் தாயை நோக்கி, "அம்மா மாப்பிள்ளை மோட்டார் வண்டியால் மோதப்பட்டு பிரக்ஞை யில்லாமல் இரண்டு தினங்கள் படுத்திருந்தாராம்; அப்போது யாரோ வீட்டிற்குள் நுழைந்து சொத்துக்களை யெல்லாம் கொண்டு போய்விட்டார்களாம்! நான்தான் உங்களை அழைத்துக் கொண்டு சொத்துக்களையும் இங்கே கொண்டு வந்திருப்பதாக மாப்பிள்ளை போலீஸாரிடம் சொல்லி, இந்த

வீட்டைச் சோதனைபோட இவர்களை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறார் என்றான்.

அதைக் கேட்கவே, அங்கிருந்த மூன்று ஸ்திரீ களும் ஆச்சரியமும், விசனமும், நடுக்கமும் அடைந் தனர். உடனே அமிர்தம்மாள், "அடே அக்கிரமமே! எங்களுடைய சொத்துக்களையெல்லாம் அபகரித்துத் திரு டர்களிடம் கொடுத்துவிட்டாயா! ஐயோ! எங்கள் வயிறு பற்றி எரிகிறதே! போதாக் குறைக்கு, ஒரு பாவத்தை யும் அறியாத எங்கள் பிள்ளையின்மேல் அபாண்டப் பழியா போடுகிறாய்! நீ எங்களைத் துரத்தியது ஊராருக் கெல்லாம் தெரியுமே! கிழவர் இன்ன இடம் போனார் என்பதுகூட இன்னம் தெரியவில்லையே! அடே சதி காரப் பாவி! என்ன துர்ப்புத்தியப்பா உனக்கு!" என்றாள்.

உடனே கலியாணசுந்தரம் ஜெவான்களை நோக்கி, "இந்த அம்மாளுக்கு எப்போதும் கொஞ்சம் பைத்தியம் உண்டு. இந்த அம்மாள் சொல்வதை நீங்கள் காதில் வாங்க வேண்டாம். வீட்டைச் சோதனை போடுங்கள்" என்றான்.

ஜெவான்களில் ஒருவன் அமிர்தம்மாளை நோக்கி, "பெரிய அம்மா, இவருடைய சொத்துக்களை நீங்கள் எடுத்துக்கொண்டு வந்து இங்கே வைத்திருப்பதாக இவர் புகார் சொல்லுகிறார். அது நிஜந்தானா?" என்றான்.

அமிர்தம்மாள், "எங்கள் சொத்துக்களையெல்லாம் வஞ்சகமாய் அபகரித்துக்கொண்டு எங்களைப் பராரி யாக்கிச் சந்தியில்விட்ட படுபாவியல்லவா இவன்! இவன் எதை வேண்டுமானாலும் சொல்லுவான். நீங்கள் வீட் டிற்குள் பார்க்க வேண்டுமானால், குசாலாய்ப் பார்த்துக்

கொள்ளுங்கள். அதைப் பற்றி எங்களுக்குக் கொஞ்சமும் அச்சமோ, ஆட்சேபனையோ இல்லை'' என்றாள்.

உடனே ஒரு ஜெவான் கலியாணசுந்தரத்தை நோக்கி, "சரி; வாரும் உள்ளே போய்ப் பார்ப்போம். எங்கேயாவது உம்முடைய சொத்து இருந்தால் காட்டும்'' என்றான்.

உடனே கலியாணசுந்தரமும் இரண்டு ஜெவான் களும் வீட்டிற்குள் நுழைந்து ஓரிடம் விடாமல் ஆராய்ந்து பார்த்தனர். கலியாணசுந்தரத்தின் வசத்தில் இருந்து காணாமற்போன சொத்துக்களில் எதுவும் அந்த வீட்டில் காணப்படவில்லை. ஜெவான்கள் வெளியில் போக எத்தனிக்க, உடனே கலியாணசுந்தரம் அவர்களை நோக்கி, "இருங்கள் போக வேண்டாம். இவர்கள் வேறே எங்கேயாவது சொத்துகளை மறைத்து வைத் திருப்பார்கள். என் மைத்துனன், மாமியார், என் சம் சாரம் ஆகியவர்கள்தான் இந்தத் துணிகரமான பகற் கொள்ளையை நடத்தி இருக்க வேண்டும். இவர்கள் மூவரையும் விலங்கிட்டுப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போங்கள்'' என்றான்.

ஜெவான்களில் ஒருவன், "இந்த மனிதர் இரண்டு தினங்களாய் ஜுரத்தோடு ஒருவருடைய வீட்டுத் திண்ணையில் படுத்திருந்ததாய் அந்த வீட்டுக்காரர் சொல்லுகிறார். இவருடைய உடம்பின் நிலைமையும் அதற்கு ஒத்தபடியே மிகவும் கேவலமா யிருக்கிறது. இந்த வீட்டில் திருட்டுச் சொத்து எதுவும் காணப்பட வில்லை. ஆகையால், எவ்வித முகாந்திரமுமின்றி இவர் களை ஸ்டேஷனுக்குக் கொண்டுபோக எங்களுக்கு அதி காரமில்லை. ஆகையால், நாங்கள் போகிறோம்'' என் றான்.

கலியாணசுந்தரம்:—என் கையில் ஒரு பைசாகூட இல்லாமல் எல்லாவற்றையும் இவர்கள் கொண்டு வந்து விட்டார்கள். இந்த நிலைமையில் எனக்கு நீங்கள் உதவி செய்யாமல், விட்டுவிட்டுப் போனால், நான் சாப்பாட்டுக்கு என்ன செய்கிறது? யாரிடம் போய் யாசகம் வாங்குகிறது?—என்றான்.

அப்போதும் மறைவில் நின்ற மங்களம், சிவராம கிருஷ்ணனை நோக்கி, "உள்ளே சாப்பாடு இருக்கிறது. இங்கேயே சாப்பிடச் சொல்லுங்களேன்" என்றாள்.

சிவராமகிருஷ்ணன் உடனே தைரிய மடைந்து, "மாப்பிள்ளை, நீர் இங்கேயே சாப்பிடலாம். நீர் எங்களை விரோதிகளாய் நினைத்தாலும், நாங்கள் உம்மை அப்படி நினைக்கவில்லை. எப்படி இருந்தாலும், நீர் எங்களுடைய பட்டம்மாளின் புருஷ ரல்லவா. இவளுடைய ஆயுள் காலம் முடிய அந்த உரிமை இவளுக்கு உண்டல்லவா?" என்றான்.

உடனே அமிர்தம்மாள், "சொத்துக்களை யெல்லாம் பிடுங்கிக்கொண்டு எங்களைப் பஞ்சைக ளாக்கிவிட்டாலும், நீ உயிரோ டிருக்கையில் உன் சம்சாரத்தை விதவை ஆக்காமல் இவளை உன்னோடுகூட வைத்துக் கொள்" என்றாள்.

ஜெவான்களில் ஒருவன், "ஆம், ஐயா இனியாவது இவர்கள் சொல்வதுபோல் நடந்துகொள்ளும். இவர்களுடைய சொத்துகளை வஞ்சகமாய் நீர் அபகரித்தது கடவுளுக்கே சம்மத மில்லைபோ லிருக்கிறது. அதனால் சொத்துக்களைக் கடவுள் உம்மிட மிருந்து மாயமாய் விலக்கிவிட்டார். இனிமேலும் இவர்களுடைய வயிறு எரியும்படி நடந்து கொண்டால், உம்முடைய பேரில்

இருக்கும் வீட்டுக்கும் கடவுள் உலை வைத்துவிடுவார்" என்றான்.

கலியாணசுந்தரம்:-எனக்கு இவர்களுடைய சொத்துக்களைத் தவிர வேறு சொத்துக்கள் இல்லை என்று நினைத்தீர்களா! நான் ஏற்கனவே ஒரு பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டேன். அவளால் கிடைத்த சொத்து அபாரமாய் இருக்கிறது. இங்கு தற்சமயம் செலவுக்குக் கையில் பணம் இல்லை என்று சொன்னேனே யன்றி, வேறில்லை.

அமிர்தம்மாள்:—(ஆச்சரியத்தோடு) இந்தச் சங்கதியை எங்களுக்கு இதுவரையில் நீ சொல்லவில்லையே! அப்படியானல் அந்த மனைவி என்னவானள்? அவளுடைய ஊர் எது?

கலியாணசுந்தரம்:—அவள் இறந்து போய்விட்டாள் அவளுடைய ஊர் திண்டுக்கல்—என்றான்.

அதுவரையில் அந்த வீட்டின் நடையில் வந்து நின்று உள்ளே நிகழ்ந்த சம்பாஷணையைக் கேட்டுக் கொண் டிருந்தவர்களான குஞ்சரியம்மாளும், அவளுடைய அண்ணனும், மாமனும் சரேலென்று உள்ளே வந்தனர்.

உண்டிப்பெட்டிச் சாமியார்:—குஞ்சரீ, அதோ பார்; அந்த மனிதர் யாரைப்போல் இருக்கிறார் கவனி—என்றான்.

குஞ்சரி என்ற பெயரைக் கேட்டவுடன் கலியாணசுந்தரம் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். திடீரென்று அம்மூவரும் அங்கே வந்ததைக் கண்டு, மற்றவர்களும் திடுக்கிட்டு ஆச்சரியத்தோடு அவர்கள் மூவரையும் உற்றுப் பார்த்தனர்.

கலியாணசுந்தரத்தை அப்போதே பார்த்த குஞ்சரியம்மாள், "ஹா! அடே துரோகி! நீயா இவ்வளவு நேரம் இங்கே இருந்து பேசினாய்! உன் முதல் சம்சாரம் இறந்தா போய்விட்டாள்! இன்னம் உன் கண்கள் அவியவில்லையா! உன் வாய் பழுக்க வில்லையா! உன் தலையில் இன்னமும் இடி விழாமல் இருக்கிறதே படு பாவி" என்றாள்.

அதைக் கேட்க, அங்கிருந்தோர் அனைவரும் திடுக்கிட்டு திகைப்பிரமை கொண்டு ஸ்தம்பித்துப் புதிதாய் வந்த மூவரையும், கலியாணசுந்தரத்தையும் மாறி மாறிப் பார்த்தபடி நின்றனர்.

கலியாணசுந்தரம் சற்று நேரம் எதையும் அறியாமல் குழம்பித் தவித்தபின், தைரியமடைந்து, ஜெவான்களை அமர்த்தலாய்ப் பார்த்து, "யாரப்பா இவர்கள்! முன்பின் சம்பந்த மில்லாத மனிதர்கள் வீட்டிற்குள் புகுந்து தூஷிக்கிறார்கள். நீங்கள் பார்த்துக்கொண்டு சும்மா நிற்கிறீர்களே! நீங்கள் போலீஸ் உத்தியோகம் இப்படித்தானா செய்கிறது" என்றான்.

அதைக் கேட்ட போலீஸார் இருவரும் கலியாண சுந்தரத்தின் திமிரைப் பற்றி அவன்மீது வெறுப்பும் கோபமும் கொண்டன ராயினும், தம்மை அடக்கிக் கொண்டனர். அவர்களில் ஒருவன் குஞ்சரியம்மாளைப் பார்த்து, "ஏன் அம்மா, இவரைத் துர்ப்பாஷையாய்ப் பேசுகிறாய்! இவருக்கும் உங்களுக்கும் ஏதாவது சம்பந்த முண்டானால் சொல்லுங்கள்" என்றான்.

குஞ்சரியம்மாள்:— (கண்ணீருடன்) ஐயா, எங்கள் குடும்பத்தை அடியோடு கெடுத்த சண்டாளன் ஐயா இவன்! நான் இவனுடைய சம்சாரம் ஐயா! இவன்

உயிரோ டிருந்துகொண்டே, நான் தாலி அறுத்துத் தவிக்கும்படி செய்துவிட்டான் ஐயா—என்றாள்.

அதைக் கேட்க, அங்கிருந்தோர் அனைவரும், "ஆ! அப்படியா! இது பெரிய விநோதக் கூத்தா யிருக்கிறதே!" என்று கூறிக் கோபப் பார்வையாகக் கலியாண சுந்தரத்தின் முகத்தைப் பார்த்தனர்.

அவன் குஞ்சரியம்மாளை நோக்கி, "ஏனடீ, தேவடீயா, நான் வாட்ட சாட்டமா யிருக்கிறே னென்று, என்னை ஆசை நாயகனாய் வைத்துக் கொள்ளப் பார்க்கிறாயடி! உன் முகத்தை யாரடீ கண்டது?" என்றான்.

அதைக் கேட்ட உண்டிப்பெட்டிச் சாமியாரான குஞ்சரியின் மாமன், "போலீஸ்கார ஐயா, இந்த நாயை விலங்கிட்டுப் பிடித்துக் கொள்ளுங்கள். இவன் கொலைக் குற்றம் செய்தவன். அதற்கு நான் சாட்சிகள் விடுகிறேன்" என்றான்.

உடனே குஞ்சரியம்மாள், "மாமா, கொஞ்சம் பொறு. அவ்வளவு தூரத்திற்கு நாம் இப்போது போக வேண்டாம். இவன் மரியாதையாய் வழிக்கு வருகிறானா இல்லையா என்று பார்த்துக்கொண்டு பிறகு அதைக் கடைசி பாணமாக விடுவோம்" என்றாள்.

ஒரு போலீஸ் ஜெவான் வியப்போடு, "ஏது, புதுப் புது புதைபாணம் புறப்படுகிறதே! ஏனம்மா, இந்த மனிதன் உங்கள் குடும்பத்தை எப்படி அழித்தான் சொல்லுங்கள்" என்றான்.

குஞ்சரியம்மாள், "ஐயா, எங்களுக்குத் திண்டுக்கல்லில் ஏராளமான நிலம், வீடு, சொத்துக்கள் எல்லாம் இருந்தன. இவன் என்னைத் தூண்டிச் சொத்துக்களையெல்லாம் இவன் பேரில் எழுதி வைக்கும்படி தந்திரம்

செய்தான். அதற்குச் சில முக்கியமான காரணங்களைச் சொன்னான். என் தாய் தந்தையர் இவனுடைய பேச்சை நம்பி இவன்மேல் எழுதி வைத்துவிட்டார்கள். இவன் இரகஸியத்தில் எல்லாவற்றையும் விற்றுப் பண மாக்கி, எடுத்துக்கொண்டு, ஊரை விட்டு ஓடிப்போய் விட்டான். இவனுடைய நடத்தையினால் என் தகப்ப னார் தாயார் இருவரும் இறந்து போய்விட்டார்கள். இவர் என் அண்ணன், இவர் என் மாமன். சில மாதங் களுக்குப் பிறகு இந்த மனிதன் இறந்துபோய் விட்ட தாக பத்திரிகையில் இவனுடைய படமும் செய்தியும் வந்தன. அதில் ஒரு பிரதி தபால் மூலம் எங்களுக்கு வந்தது. நாங்கள் அதை உண்மை யென்று நம்பிவிட் டோம். என் தாலியை அறுத்துவிட்டு இவனுக்குக் கருமாதி செய்தார்கள். பிறகு நாங்கள் ஊரூராய் அலைந்து யாசகம் வாங்கி வயிறு வளர்க்கிறோம். இன்று தான் இவனை நான் மறுபடி பார்க்கிறேன். இவனுடைய பெயர் கலியாணசுந்தரம் என்பது—என்றாள்.

அதைக் கேட்ட அமிர்தம்மாள், "அடெ படுபாவி, இவன் இங்கேயும் அப்படியேசெய்திருக்கிறனே! எங்கள் பெண்ணைக் கட்டிக்கொண்டு, அவளைத் தூண்டி எங்கள் சொத்துக்களை யெல்லாம் எழுதி வாங்கிக்கொண்டு எங் களைத் துரத்தி யடித்துவிட்டானே! அடெ துரோகி" என்றாள்.

ஒரு ஜெவான் :— (கலியாணசுந்தரத்தை நோக்கி) ஐயா, இந்த ஊரில் நீர் செய்த காரியங்களிலிருந்து, ஏற் கனவே நீர் இவர்களையும் அதேபோல் வஞ்சித்திருப்பீர் என்பது நிச்சயமாய்த் தெரிகிறது, அபாண்டமாய் இவர் கள் மூவரும் உம் பேரில் சொல்லத் துணியமாட்டார் கள். இப்போது நாங்கள் மத்தியஸ்தமாக ஒரு சங்கதி

சொல்லுகிறோம். அந்த மாதிரி நீர் உடனே நடந்து கொள்ள வேண்டியது. தவறினால், உம்மை நாங்கள் கொலைக் குற்றத்திற்காக விலங்கிட்டுக் கொண்டுபோகப் போகிறோம். அதற்கு வேண்டிய சாட்சியம் இவர்களிடம் தயாராய் இருக்கின்றன. என்ன சொல்லுகிறீர்?

கலியாணசுந்தரம்:—மத்தியஸ்தமாக என்ன சொல்லப் போகிறீர்?

ஜெவான் :— நீர் இரண்டு பெண்டாட்டிகளோடு சௌக்கியமாய் இருந்து இனியாகிலும் யோக்கியராய் நடந்து கொள்ளப் போகிறீரா, இல்லாவிட்டால், கொலைக் குற்றத்திற்காகத் தூக்கு மரத்தில் தொங்கப் போகிறீரா? என்ன சொல்லுகிறீர்?

கலியாணசுந்தரம்:— இதுதான் உம்முடைய மத்தியஸ்தமா?

ஜெவான்:—ஓகோ ! அவ்வளவு சுலபத்தில் உமக்கு இரண்டு பெண்டாட்டிகள் வந்துவிடுவார்கள் என்று நினைத்துக்கொண்டீரா? சொத்தில்லாத ஏழை மனைவிகளை நீ ஏற்றுக்கொண்டால் மறுபடி அவர்களிடம் எழுதி வாங்க, ஒன்றுமிருக்காதே! ஆகையால் நீர் செய்யவேண்டிய காரியங்களைச் சொல்லுகிறேன். இந்தக் குஞ்சரியம்மாளுடைய தகப்பனுருடைய சொத்துக்கள் இப்போது எங்கே இருக்கின்றன என்பதை நீர் சொல்ல வேண்டும் அதை உடனே இந்தக் குஞ்சரியம்மாளுடைய அண்ணன்பேரில் எழுதி வைக்க வேண்டும். இந்த சொத்து விஷயத்தில் நீர் பொய் சொன்னால், அது இவர்களுக்கு நன்ருய்த் தெரியும். எப்படி என்ருல், இவர்கள் உம்பேரில் எழுதி வைத்த சொத்துக்கள் எவ்வளவு பெறுமென்பது இவர்களுக்குத் தெரியும். அந்தப் பெறுமா

னத்திற்கு கிட்டத்தட்ட சரியா யிருக்கவேண்டும் நீ இப்போது எழுதிவைக்கும் சொத்து. அந்தப் பத்திரம் முடிந்தவுடன், குஞ்சரியம்மாளுடைய கழுத்தில் நீர் மறுபடி தாலி கட்டி லாலி பாடவேண்டும். இது ஒரு பகுதி. இந்தப் பட்டம்மாளிடம் நீர் எழுதி வாங்கின வீடு, நிலங்கள், சொத்துக்கள் ஆகியவைகளை யெல்லாம் இந்த சிவராமகிருஷ்ணன் பேரில் எழுதி வைக்கவேண்டும். உடனே இன்னொரு கையால் இன்னொரு மனைவியை பிடித்துக் கொள்ளும். இரண்டு மைத்துனர்களும் உம்மை எந்த இடத்தில் வைக்கிறார்களோ அந்த இடத்தில் நீர் உம்முடைய வள்ளி தெய்வயானைகளுடன் இருக்க வேண்டியது. இதுவே எங்கள் மத்தியஸ்தம். இது மற்றவர்களுக்கும் சம்மதந்தானே—என்றான்.

அமிர்தம்மாள்:—மனப்பூர்த்தியான சம்மதமே!

குஞ்சரியம்மாள்:--இதற்கு நானும் இணங்குகிறேன்—என்றாள்.

அப்போது நடையில் இருந்தபடி, "கோபாலா. கோபாலா" என்று ஒருவர் கூப்பிட்ட குரலோசை உண்டாகவே, எல்லோருடைய கவனமும் அதில் சென்றது. அடுத்த நிமிஷம் சோமசுந்தரம் எட்டிப் பார்த்து, சிவராமகிருஷ்ணனை நோக்கி, "என்னப்பா, சிவராமகிருஷ்ணா, கோபாலன் இங்கே வந்தானா?" என்றார்

சிவராமகிருஷ்ணன், "உள்ளே வாருங்கள். கோபாலன் இங்கே வர வில்லையே; அவன் உங்கள் வீட்டில் இருந்து எப்போது போனான்?" என்றான்.

சோமசுந்தரம்:— (கூடத்திற்கு வந்து) இன்றைய காலையில்தான் போனான்; உன் தகப்பனாரைத் தேடிக் கண்டு பிடிக்க வேண்டுமென்று சொல்லி விட்டுப்

போனுன். அவர்கள் இருவரும் வந்தார்களா என்று பார்த்து விட்டுப் போகலா மென்று வந்தேன்.

சிவராமகிருஷ்ணன்:—ஓ! அப்படியா சொல்லி விட்டுப் போனுன்! அவர்கள் யாரும் இன்னம் வர வில்லையே.

சோமசுந்தரம்:—கோபாலன் வந்தால், நான் தேடிக் கொண்டு வந்து விட்டுப் போனதாகச் சொல்லி, அவனை அங்கே அனுப்பு.

சிவராமகிருஷ்ணன்:—ஓ! அவசியம் சொல்லுகிறேன்.

சோமசுந்தரம்:—(ஒரு பக்கத்தில் நின்ற கலியாண சுந்தரத்தை அப்போதே பார்த்து) ஓகோ நீரா! நீர் ஆஸ்பத்திரியிலிருந்து, வீட்டிற்குப் போய் விட்டு இந்தப் பக்கம் வந்ததாகக் கேள்விப்பட்டேன். உடம்பில் கெடுதல் எதுவும் இல்லையே?

கலியாணசுந்தரம்:—நீர் யார் என்பதே எனக்குத் தெரிய வில்லையே! என் உடம்பைப் பற்றி நீர் அக்கரையாய் விசாரிக்க வேண்டிய காரண மென்ன?

சோமசுந்தரம்:—என்ன கலியாணசுந்தரம் உம்மைத் தெரியாதவர்களும் இந்த ஊரில் இருக்கிருர்களா! சொத்துக்களை எழுதி வாங்கிக் கொண்டு, மாமனுர், மாமியார், சம்சாரம் எல்லோரையும் கழுத்தைப் பிடித்து வெளியில் தள்ளி அதனுல் பிரக்யாதி யடைந்த சூரரை அறியாதவர்களும் உண்டா? நல்ல வேளை நான் தப்பினேன். என் பெண்ணை உமக்கு விவாகம் செய்து கொடுக்கும்படி மழ மழப்பாகப் பேசி எனக்குப் பட்டுக் குல்லா தைக்கப் பார்த்தவரான கலியாணசுந்தரத்தை நான் மறப்பேனு!—என்ருர்.

அதைக் கேட்ட ஜெவான்களில் ஒருவன் "அடேடே! அடி வைக்கும் இட மெல்லாம் அம்பட்டன் குப்பையா யிருக்கிறதே! கலியாணம் செய்து அதனுல் ஏமாற்றுகிற ஆசாமி என்பதை இவருடைய தாய் தகப்பனுர் இவர் பிறந்தபோதே தெரிந்துகொண்டு இவருக்குக் கலியாணசுந்தரம் என்று பெயர் வைத்தார்களே! அதுதான் சாமர்த்தியம்" என்ருன்.

அமிர்தம்மாள்:— இவரைப் பெற்றவர்கள் இவரைவிட அதிக சாமர்த்திய சாலிகளாய் இருக்க மாட்டார்களா! அதைச் சொல்லவும் வேண்டுமா!—என்ருள்.

சோமசுந்தரம்:—பலநாளைய திருடன் ஒருநாள் அகப்பட்டுக் கொண்டு மானபங்கப் படுவது நிச்சயம் சரி; சிவராமகிருஷ்ண! நான் போய்வருகிறேன். கோபாலன் வந்தால் அனுப்பு—என்று கூறிய வண்ணம் வெளியில் போய் விட்டார்.

உடனே அமிர்தம்மாளும், ஜெவான்களும் மாறி மாறிக் கலியாணசுந்தரத்தை இகழத் தொடங்கவே, அவன் அவமானத்தினுல் குன்றிப் போய்க் கீழே குனிந்து கொண்டான்.

உடனே ஜெவான்களில் ஒருவன்வெளியில்போய்ப் பத்திரம் எழுதும் எழுத்துக் கூலிக்காரன் ஒருவனை அழைத்துவர, அவனுல் நகல் பத்திரங்கள் தயாரிக்கப் பட்டன. குஞ்சரியின் தகப்பனுருடைய சொத்துக்களை விற்றதில் 'பதினைந்தாயிரம் ரூபா தேறிய தென்றும், அதை தான் ஒரு மிராசுதாரிடம் வட்டிக்குக் கொடுத்துப் பத்திரம் எழுதி வாங்கிக்கொண் டிருப்பதாயும் கலியாண சுந்தரம் கூற, அந்தப் பணம் விபூதிப்பைச் சாமியார் பேருக்கு மாற்றப்பட்டதாய்ப் பத்திரம் எழுதப்பட்

டது. பட்டம்மாள் கலியாணசுந்தரத்தின் பேரில் எழுதி வைத்த சொத்துக்கள் யாவும் சிவராமகிருஷ்ணன் பேரில் எழுதி வைக்கப்பட்டன. அவற்றில் களவுபோன சொத்துக்கள் கிடைக்குமானல், அவைகளைச் சிவராம கிருஷ்ணனே பெற்றுக்கொள்ள உரிமை உடையவன் என்றும் எழுதப்பட்டது. இரண்டு பத்திரங்களுக்கும் தேவையான முத்திரைக் காகிதங்கள், ரிஜிஸ்டர் செலவு கள் முதலியவற்றிற்கு வேண்டிய பணத்தை உண்டிப் பெட்டிச் சாமியார் கொடுக்க, அன்றைய தினமே இரண்டு பத்திரங்களும் ரிஜிஸ்டர் செய்யப்பெற்றன. அதுவரையில் கூட இருந்து உதவி செய்த இரண்டு ஜெவான்களும் சிவராமகிருஷ்ணன் முதலியோரை அவ னுடைய தகப்பனுர் வீட்டில் கொண்டுபோய்ச் சேர்த்து விட்டு, எல்லோருடைய நன்றியறிதலையும் அன்பையும் பெற்றுக்கொண்டு போய்ச் சேர்ந்தனர்.

குஞ்சரியம்மாளும், அவளுடைய அண்ணனும், அம்மானும் தங்களோடு சில தினங்கள் இருக்கவேண்டு மென்று சிவராமகிருஷ்ணனும், மங்களமும் கேட்டுக் கொள்ள, அவர்கள் சந்தோஷத்தோடு அங்கே வந்து சேர்ந்தனர்.

தங்கள் வீட்டை அடைந்த அமிர்தம்மாளும் பட் டம்மாளும் ஒரு விதத்தில் மகிழ்ச்சி யடைந்தன ராஹு லும், வீடு அடியோடு காலிசெய்யப்பட் டிருந்ததைக் கண்டு அபாரமான விசனம் கொண்டு தவித்தனர். அது போலவே சிவராமகிருஷ்ணனும், மங்களமும் பெரிதும் வருந்தினர். மங்களம் தன்னிடம் மிகுதி இருந்த பணத்தைச் சிவராமகிருஷ்ணனிடம் கொடுக்க, அவன் அதை வைத்துக்கொண்டு எல்லோருடைய சாப்பாட் டுக்கும் தேவையான சாமான்களைத் தருவித்து எல்

லோருடைய சௌகரியத்தையும் கவனித்தான். தன் தகப்பனுருடைய நிலங்களும், வீடும் தன்பேரில் எழுதப்பட்டுப் போனதாகையால், அந்த நம்பிக்கையில் எவரும் தனக்குக் கடன் கொடுப்பார்கள் என்ற தைரியம் அவனுக்கு உண்டாகி விடவே, அவன் புத்துயிர் பெற்றவன் போல் மாறிவிட்டான்.

கலியாணசுந்தரம் தனது அவமானத்தையும் விசனத்தையும் தாங்க மாட்டாதவனுய் அந்த வீட்டில் தனியான ஓர் அறையில் தலை மறைவாக இருந்தான்.

அன்றைய தினம் மாலையில் ஒரு மனிதன் சிவராமகிருஷ்ணனிடம் வந்து ஒரு கடிதத்தை நீட்டினுன். சிவராமகிருஷ்ணன் ஆவலோடு அதைப் பிரித்துப் படிக்க, அது அடியில் வருமாறு எழுதப்பட் டிருந்தது:—

ஐயா,

கலியாணசுந்தரம் உங்களிடம் இருந்து அக்கிரமமாய் அபகரித்த சொத்துக்களில் சிலவற்றை இரண்டு வண்டிகளில் வைத்து உங்களுக்கு அனுப்பி இருக்கிறேன். இவை இப்போது உங்களுக்குச் சொந்தமாகி விட்டனவாதலால், நீங்கள் சிறிதும் அச்சமின்றி ஏற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம்:

தோன்ருத் துணைவன்

—என்று எழுதப்பட் டிருந்த கடிதத்தைப் படித்த சிவராமகிருஷ்ணன் துள்ளிக் குதித்து ஆவேசத்தோடு தன் தாயைக் கூப்பிட்டு அந்தக் கடிதத்தைப் படித்துக் காட்ட, அவளும், மற்றவர்களும் ஆச்சரியமும், ஆவலும், சந்தோஷமும் அடைந்து, "சாமான்கள் எங்கே! எங்கே!" என்றனர்.

கடிதம் கொண்டு வந்தவன், "தெருவில் வண்டிகளில் இருக்கின்றன" என்று கூற, எல்லோரும் அவனைத் தொடர்ந்து வெளியில் சென்றனர். அதற்குள் வண்டிக்காரர்கள் சாமான்களை இறக்கி எதிரில் கொண்டு வரத் தொடங்கிவிட்டனர்.

அவைகளைக் கண்ட அமிர்தம்மாளும், பட்டம்மாளும், "ஆம். எல்லாம் நம்முடைய சாமான்கள்தான்" என்று ஆநந்தப் பூரிப்போடு கூறினர்.

சிவராமகிருஷ்ணன் என்ன சொல்வதென்பதை அறியாமல் பிரமித்து நிற்க, அரை மணி நேரத்தில் இரும்புப் பெட்டி, பீரோக்கள், கட்டில்கள், மேஜை நாற்காலிகள், பாத்திரங்கள் முதலிய சாமான்கள் எல்லாம் உள்ளே வந்து அதனதன் இடத்தில் வைக்கப்பட்டுப் போயின. அவைகள் வந்த பிறகே வீட்டிற்கு ஒருவித உயிர்க்களை உண்டாகத் தொடங்கியது ஆட்கள் சாமான்களை வைத்த பிறகு சிவராமகிருஷ்ணன், "உங்களுக்குக் கூலி எவ்வளவு சேரவேண்டும்?" என்று கேட்க, கடிதம் கொண்டு வந்தவன், "நாங்கள் அங்கேயே கூலியை வாங்கிக் கொண்டோம். நீங்கள் ஒன்றும் கொடுக்க வேண்டியதில்லை" என்றான்.

சிவராமகிருஷ்ணன்:—இவைகளை யெல்லாம் அனுப்பிய ஐயா யார்? அவர் எங்கே இருக்கிறார்?

கடிதம் கொணர்ந்தவன்:— அந்தத் தகவல் எங்களுக்குத் தெரியாது. அவரே இங்கே வந்து சங்கதியை நேரில் தெரிவிப்பதாகச் சொன்னார்—என்று கூறிவிட்டு வண்டிகளோடு போய்விட்டான்.

ஷை சாமான்களை யார் அனுப்பி இருப்பார்களென்பதை நாம் சொல்வது மிகையாகும். அவ்வாறு தந்திர

மாய் அவைகளை அனுப்பியவர்களான குஞ்சரியம்மாள் முதலியோர் ஒன்றையும் அறியாதவர்கள்போல் அவர்களிடம் அதைப் பற்றி ஆச்சரியத்தோடு பேசித் தங்கள் சந்தோஷத்தை வெளிப்படுத்திக்கொண் டிருந்தனர்.

இரும்புப் பெட்டி முதலிய சாமான்களைக் கண்ட அமிர்தம்மாள் முதலியோர் அதைப் பற்றி அடைந்த சந்தோஷத்தைவிட, நகைகள், பணம், வெள்ளிப் பாத்திரங்கள் சேலை வேஷ்டிகள் முதலிய உயர்ந்த பொருள்கள் வராமல் போய்விட்டதைப் பற்றி அதிகரித்த விசனமடைந்தவர்களாய்ச் சஞ்சலத்தி லாழ்ந்திருந்தனர். இடையிடையில் சிவராமகிருஷ்ணன் வெளியில் சென்று தன் தந்தையைக் கண்டு பிடிப்பதற்கான முயற்சிகளைச் செய்துவிட்டு வந்துகொண் டிருந்தான். அவனுக்கு எவ்வித புலனும் கிடைக்கவில்லை யாதலால், அவனும் மற்றவர்களும் கிழவரைப் பற்றிப் பெரிதும் வியாகுலமடைந்து சந்தோஷ மற்றவர்களா யிருந்தனர்.

அன்றைய இரவு கழிய, மறுநாள் காலையில் எல்லோரும் எழுந்து காலைக் கடமைகளை முடித்துக்கொண் டிருந்த சமயத்தில், "சிவராமகிருஷ்ணு, சிவராம கிருஷ்ணு" என்று ஆவலோடு கூப்பிட்டுக்கொண்டு கோபாலன் வந்து சேர்ந்தான்.

அவனைக் காணவே, எல்லோருக்கும் ஒருவித ஆவல் தோன்றலாயிற்று. அவன் கிழவரைத் தேடிக்கொண்டு போனதாகச் சோமசுந்தரம் கூறியது எல்லோருக்கும் நினைவிருந்த தாகையால், அவன் ஏதேனும் சந்தோஷச் செய்தி கொண்டு வந்திருப்பானென்று எல்லோரும் எதிர்பார்த்தனர்.

சிவராமகிருஷ்ணன்:—வா அப்பா கோபாலா, பெரியவர் அகப்பட்டாரா?

கோபாலன்:— அகப்பட்டாரப்பா. அவர் இதற்கு 2 மைல் தூரத்தில் உள்ள **வேடப்பட்டியில்** சத்திரத்துத் திண்ணையில் காஷாய வஸ்திரத்தோடு இருந்தார். நான் என்னால் ஆனவரையில் கெஞ்சிக் கூப்பிட்டுப் பார்த்தேன். அவர் வர மறுத்துவிட்டார். உடனே அந்த ஊர்ப் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய், அவர் தக்க பெரிய மனிதரென்றும், அவருக்குத் திடீரென்று சித்த ஸ்வாதீனம் தவறிப் போய்விட்டதென்றும், அவரை ஊருக்கு அழைத்துக்கொண்டு போக உதவி செய்ய வேண்டுமென்றும் சொல்லிக் கேட்டுக் கொண்டேன். ஸப்-இன்ஸ்பெக்டர் இரண்டு ஜெவான்களை அனுப்பினார். அவர்கள் கிழவரை அழைத்து வந்து இந்த ஊர்ப் போலீஸ் ஸ்டேஷனில் விட்டுவிட்டுப் போயிருக்கிறார்கள். தாம் வர விரும்பவில்லை யென்று பெரியவர் பிடிவாதம் பிடிக்கிறார். போலீஸார் இங்கே நடந்த மாறுபாடுகளை யெல்லாம் எனக்கும் அவருக்கும் சொன்னார்கள். பெரியவர் அசைய மாட்டேனென்கிறார். உன் தாயாரை அழைத்துக்கொண்டு வா. கலியாணசுந்தரம் உன் பேருக்கு எழுதிக் கொடுத்திருக்கும் பத்திரத்தையும் எடுத்துக்கொண்டு வா—என்றான்.

சிவராமகிருஷ்ணன்:— சந்தோஷம்; கோபாலா, நீ செய்யும் ஒவ்வோர் உதவிக்கும் உனக்கு ஒவ்வோர் உலகத்தையே சன்மானம் வழங்கினால்கூட அது ஈடாகாது. அம்மா, வா, போய் அப்பாவை அழைத்து வரலாம். என் பேரில் இருக்கும் சொத்துக்களை அவர் பேருக்கு வேண்டுமானாலும் நான் எழுதி வைக்கிறேன். பெரியவர் திடமாயிருக்கையில் எனக்கென்ன பெரிய தனம். தலை யிருக்க வாலாடுமா?—என்றான்.

அமிர்தம்மாள்:— அப்பா, உன் விஷயத்தில் நாங்கள் இதுவரையில் செய்த அக்கிரமம்தான் எங்களை இந்த

நிலைமைக்குக் கொண்டு வந்தது. நீ சற்புரத்தின் என்பதை நான் தெரிந்துகொண்டேன். நீ எங்களைக் காப்பாற்றாமல் தள்ளமாட்டாய். சொத்துக்கள் உன் பேரிலேயே இருக்கட்டும்—என்றாள்.

உடனே அவர்கள் மூவரும் அந்த ஊர்ப் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று கிழவருக்குப் பற்பல நன்னய மொழிகள் கூறி, ஒரு பெரிய தேரை இழுத்துக்கொண்டு வந்ததுபோல் அவரை வீட்டில் கொணர்ந்து சேர்த்தனர். அவருடைய காஷாய வஸ்திரமும் பிடுங்கப் பட்டது. அவர் கலியாணசுந்தரத்தைப் பார்க்க விரும்பாமல் அவன் இருந்த இடத்திற்கு அருகிலும் செல்லாமல் தூரவே இருந்தார். சிவராமகிருஷ்ணன் மங்களம் ஆகியோரிடம் இருந்த வெறுப்பும் அவருக்குப் படிப்படியாய் விலக ஆரம்பித்து விட்டது. அடிக்கடி தாத்தா தாத்தா என்று பிரியத்தோடு அழைத்த காமாட்சியையும், அவளுடைய தம்பியையும் கிழவர் கட்டியணைத்துக் கொஞ்சவும் தொடங்கிவிட்டார்.

கோபாலன் அன்றிரவு அங்கேயே தங்கினான். அவன் வந்துவிட்ட செய்தி சோமசுந்தரத்துக்கும் எட்டவே, மறுநாளைய காலையில் அவர் சிவராமகிருஷ்ணனிடம் வந்து, கலியாணியின் பரிதாபகரமான நிலைமையைத் தெரிவித்து அவனுடைய உதவியை நாடவே, அவன் கோபாலனுக்குக் குழையடிக்கத் துடங்கினான். அந்த விஷயம் மங்களத்திற்கும் தெரியவே, அவளும் மறைவில் நின்றபடி, “ஐயோ! பாவம்! ஒரு பெண்ணின் மனம் இடிந்து போகும்படி செய்வது பெரிய பாவம். இந்தக் கலியாணத்தை எப்படியாவது நிறைவேற்றித் தான் ஆகவேண்டும்” என்றாள்.

அவளுடைய வார்த்தையே கோபாலனுடைய மனதை மாத்திரைக் கோல்போல் உடனே மாற்றிய தாகையால், அவன் கலியாணியை விவாகம் செய்து கொள்ள இணங்கினன். சோமசுந்தரம் உடனே கோபாலனை அழைத்துக்கொண்டு அந்த அபார சந்தோஷச் செய்தியைத் தன் மகளுக்குத் தெரிவிக்கும் பொருட்டு தமது வீட்டிற்குச் சென்றார்.

அன்றைய பகலில் கிழவர், அமிர்தம்மாள், பட்டம் மாள், சிவராமகிருஷ்ணன் முதலியோருடன் பேசிக் கொண் டிருந்தபோது, "ஐயோ! பல ஆயிரம் ரூபா பெறத்தக்க நகைகளும், ஆயிரம் ரூபா பணமும் போய் விட்டனவே. எல்லோரும் தொள்ளைக் காதும், தொள்ளை மூக்குமாய் மரம்போல் நிற்கிறீர்களே! வீட்டில் பட்டுச் சேலைகள் எல்லாம் போய்விட்டனவே. இனி அவைகளை யெல்லாம் வாங்க, நம்மால் ஆகவா போகிறது! நம் நிலங்களில் வரும் பணம் சாப்பாட்டுக்குத்தான் சரி யாய்ப் போகும்" என்றார்.

அப்போது பக்கத்தில் இருந்த காமாட்சி, "தாத்தா! நான் ஓர் அணு உண்டியில் போட்டவுடன், அப்பாவுக் கும் எங்களுக்கும் எவ்வளவு சொத்துக்கள் வந்துவிட் டன பார்த்தீர்களா! பழனியாண்டவர் மனசு வைத்தால், சொத்துக்கள் ஒரு நிமிஷத்தில் வந்துவிடும்" என்றாள்.

அவள் அப்படிப் பேசி வாய் மூடுவதற்கு முன் ஓர் ஆள், "ஐயா, சிவராமகிருஷ்ண ஐயா யார்?" என்று கேட்டு, அவனுக் கெதிரில் ஒரு கடிதத்தையும் இரண்டு மூட்டைகளையும் வைத்தான்.

உடனே எல்லோரும் ஆவலோடு குபீரென்று கிளம்பினார்கள். சிவராமகிருஷ்ணன் ஆவேசத்தோடு

பாய்ந்து கடிதத்தைப் பிரித்துப் படிக்க, அது அடியில் வருமாறு எழுதப்பட் டிருந்தது:—

இந்தக் கடிதத்தோடு வரும் இரண்டு மூட்டைகளில் உங்கள் சொத்துக்கள் இருக்கின்றன. இவைகளைப் பெற்று ஜாக்கிரதையாய் வைத்துக்கொள்ளவும். நான் இன்னானென்பதை வெளியிட்டால், சமயத்தில் நான் திருட்டில்கூட இறங்கக் கூடியவன் என்ற சம்சயம் சிலருக்கு உண்டாகிவிடுமாதலால், என்னைப் பற்றிய விவரத்தை நான் எழுதவில்லை. அதைப் பற்றி இந்த ஆளிடமும் கேட்க வேண்டாம்.

இங்ஙனம்:

ஒரு நண்பன்

—என்று எழுதப்பட் டிருந்த கடிதத்தைப் படித்த சிவராமகிருஷ்ணன் ஆவலோடு இரண்டு மூட்டைகளையும் ஒவ்வொன்ருய்ப் பிரிக்க, அவர்களுடைய நகைகள், பணம், வெள்ளிப் பாத்திரங்கள், சேலை வேஷ்டிகள் யாவும் அப்படியே இருந்தன; அவைகளைப் பார்த்த கிழவர், அமிர்தம்மாள், பட்டம்மாள் முதலிய எல்லோரும் ஆநந்தப் பெருக்கைத் தாங்க மாட்டாமல் அப்படியே பொங்கிப் போயினர்.

கிழவர், "கண்ணா, காமாட்சீ, உன் வாய்க்குக் கற்கண்டுதான் போடவேண்டும்" என்று கூறி அவளைப் பிடித்து ஆசையோடு அணைத்து உச்சி முகந்தார்.

உடனே சிவராமகிருஷ்ணன் அந்த ஆளை அனுப்பி விட்டு, "அம்மா, அப்பா, பொருள்களை எடுத்து பத்திரமாய் வைத்துக் கொள்ளுங்கள்" என்ருன்.

அமிர்தம்மாள், "அப்பா குழந்தை, இனி நீதான் எல்லாவற்றிற்கும் எஜமானன். நீயே எடுத்து வை" என்றாள்.

சிவராமகிருஷ்ணன், "அப்பாவுக்கு முன் நான் எப்படி எஜமான் ஆவேன். அப்பாவே எடுத்து வைக்கட்டும்" என்றான்.

கிழவர் உடனே எழுந்து சென்று, பட்டம்மாளின் நகைகளில் அரைப் பங்கு நகைகளைப் பட்டம்மாளிடம் கொடுத்தார்; ஏராளமான நகைகளை மங்களத்தினிடம் கொடுத்தார்; சிலவற்றை எடுத்து காமாட்சிக்கு அணிவித்தார். மிகுதி இருந்தவற்றை அமிர்தம்மாளிடம் கொடுத்தார். "அப்பா சிவராமகிருஷ்ணா, பணத்தை எடுத்து நீ பெட்டியில் வைத்துப் பூட்டிச் செலவுகளைக் கவனி. சேலை வேஷ்டிகள் வெள்ளிப் பாத்திரங்கள் முதலியவை அம்மாள் வசத்தில் இருக்கட்டும்" என்றார்.

அந்த உத்தரவின்படி எல்லோரும் நடந்துகொண்டனர். கையில் ஏராளமான பணத்தொகை கிடைக்கவே சிவராமகிருஷ்ணன் தேவையான சாமான்களை வரவழைத்து, விருந்தினரான குஞ்சரியம்மாளுக்கும், அவளுடைய மாமன், அண்ணன் முதலியோருக்கும், தங்களுக்கு உதவி செய்த இரண்டு போலீஸ் ஜெவான்களுக்கும் மற்றவர்களுக்கும் சிறப்பான விருந்துகள் நடத்தி வைத்தான்.

குஞ்சரியம்மாள் பேரில் எழுதி வைக்கப்பட்ட பணத்தின் வட்டி சற்றுத் தாமதமாய் வரக்கூடியதாயிருந்த தாகையால், அதுவரையில் அவர்கள் செய்ய வேண்டிய செலவுகளுக்காகச் சிவராமகிருஷ்ணன் அவர்களுக்காக 100 ரூபா கடன் கொடுத்தான். குஞ்சரியம்

மாளுடைய கழுத்தில் புதிய தாலி ஏறியது. பட்டம்மாளும் குஞ்சரியம்மாளும் மாறி மாறி கலியாணசுந்தரத்தினிடம் சென்று சென்று, அவனுக்கு உபசரணைகள் புரிந்து சந்தோஷ மூட்டத் தொடங்கினர்.

குஞ்சரியம்மாளும் அவளைச் சேர்ந்த மற்ற இருவரும் அந்த ஊரிலேயே ஒரு வீட்டை விலைக்கு வாங்கிக் கொண்டு அங்கேயே நிரந்தரமாய் இருந்து விடுவதென்று தீர்மானித்தன ராதலால், கலியாணசுந்தரம் மாறி மாறிப் பட்டம்மாள் வீட்டில் ஒரு மாதமும், குஞ்சரியம்மாள் வீட்டில் ஒரு மாதமும் இருந்து, முறையே அவர்களால் போஷிக்கப்பட வேண்டுமென்று இரண்டு மைத்துனர்களும் தீர்மானித்தனர். கலியாணசுந்தரம் இழைத்த தீங்குகளை எல்லோரும் படிப்படியாய் மறக்கவும் அவனிடம் பிரியம் கொள்ளவும் தொடங்கினர். அவனும் தனது கெட்ட குணங்களை விலக்கவும், நற்குணத்தை அநுசரிக்கவும் முயல வாரம்பித்தான்.

சில தினங்களில் கலியாணிக்கும், கோபாலனுக்கும் விவாகம் மிக ஆடம்பரமாக நடந்தேறியது. அப்போது சிவராமகிருஷ்ணனும் மங்களமுமே முன்னின்று கலியாணக் காரியங்களைச் செய்து, அதை மிகச் சிறப்பாக நடத்தி வைத்தனர்.

கோபாலன் உலக விஷயத்தில் விரக்திகொண்டிருந்தானாலும், கலியாணியின் குணாதிசயங்களும், அழகும் அவனைத் தமக்கு அடிமை யாக்கிவிடவே, அவன் புதிதாய் ஜனித்தவன் போல் மாறி யௌவன மாப்பிள்ளைக்குரிய இலக்ஷணங்களை வகிக்கத் தொடங்கினான்.

சிவராமகிருஷ்ணனும், மங்களமும், அமிர்தம்மாளை யும் கிழவரையும் பிரத்யக்ஷ தெய்வங்கள்போல் மதித்து கண்களை இமைகள் காப்பதுபோல் காத்தனர்.

உண்டிப்பெட்டிச் சாமியார், தாங்கள் எதிர்பாரா வகையில் தங்கள் சொத்தும், குஞ்சரியம்மாளுடைய புருஷனும் திரும்பவும் வந்துவிட்டதைக் கண்டு அபார மான ஆச்சரியமும் மகிழ்ச்சியும் கொண்டாராதலால், உலக விஷயத்தில் அவருக்கு ஏற்பட் டிருந்த வெறுப் பும், விரக்தியும் மாறத் தொடங்கின. கடவுளிடம் நம் பிக்கையும் திரும்பலாயிற்று. தாம் இனிக் கடவுளின் பெயரைச் சொல்லி அக்கிரமம் செய்யக்கூடாது என் னும் எண்ணமும் உண்டாகவே, அவர் மிக யோக்கிய ராய் மாறி நற்குணங்களையும் நன்னெறிகளையும் கடைப் பிடித்து ஒழுகத் தொடங்கினர்.

விபூதிப்பைச் சாமியார் அப்போதும் சாமியா ராகவே இருந்து வேதாந்த போதனை செய்து வந்தா ராதலால், கிழவர் அவரையே குருவாய் மதித்து, "ஐயா, அன்றைய தினம் உங்கள் வார்த்தை என் கண்களைத் திறந்து, என் மனதைக் கவர்ந்தன. பிறகு உங்களா லேயே, நாங்கள் எங்கள் சொத்துக்களையும் அடைந் தோம். ஆகையால் நீங்கள் இகலோகச் செல்வத்தையும், பரலோகச் செல்வத்தையும் அளித்த பரம குரு" என்று அடிக்கடி சொல்லுவார்.

விபூதிப்பைச் சாமியார், "நம்மால் ஆவது ஒன்று மில்லை. நாம் வெறும் பதுமைகள். கடவுளே ஆட்டி வைக்கும் கபட நாட்க சூத்திரதாரி" என்பார்.

அப்போது அருகிலிருக்கும் காமாட்சி, "ஆம், தாத்தா! கடவுள் எங்கும் நிறைந்திருந்து எல்லாவற்றை

யும் பார்த்துக்கொண் டிருக்கிறார். அக்கிரமம் செய்கிற வர்கள் கடவுளுக்குத் தெரியாமல் எதையும் செய்யவே முடியாது. எப்படியும் அவர் தண்டித்தே விடுவார். நல்லவருக்கு நல்லதையே செய்வார்" என்பாள்.

அந்தக் குழந்தையின் சிறந்த மொழிகளைக் கேட்டு எல்லோரும் அதைக் கொண்டாடிப் புகழ்ந்தபடி இருப் பார்கள்.

முற்றிற்று.